# நெஞ்சோடு கலந்திடு

சுபஸ்ரீ கிருஷ்ணவேணி



## நூல் விவர அட்டவணை

நூலின் பெயர் : நெஞ்சோடு கலந்திடு

ஆசிரியர் : சுபஸ்ரீ-கிருஷ்ணவேணி

உரிமை : ஆசிரியருக்கு

மொழி : தமிழ்

முதல் பதிப்பு : ஏப்ரல், 2012

தாள் : 11.6 kg. வெள்ளைத் தாள்

நூலின் அளவு : 1 x 8 கிரவுன்

அச்சு எழுத்து : 11 புள்ளி

மொத்தப் பக்கங்கள் : 256

பைண்டிங் : சாதா அட்டை

நூல் வெளியிடுவோர் : அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

**விலை: ரூ.100.00**

கணினி அச்சு : வேலன் லேசர் - 94441-01753

அச்சிட்டோர் : ஜீ.எம்.கிராபிக்ஸ்,
சென்னை-14.


## முன்னுரை

அன்பு வாசக நெஞ்சங்களே!

எங்களின் பத்தாவது படைப்பான 'நெஞ்சோடு கலந்திடு!' மூலம் உங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி! தொடர்ந்து தங்களது ஆக்கப் பூர்வமான விமர்சனங்களால் ஊக்கமும், உற்சாகமும் அளித்து வரும் அத்தனை நல்லிதயங்களுக்கும் எங்களது உளமார்ந்த நன்றியைப் பதிவு செய்கிறோம்.

**சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**

**உழந்தும் உழவே தலை**

அத்தகைய சிறந்த உழவைத் தனது தொழிலாகக் கொண்டவன் கதாநாயகன் சுதர்சன். ஆனால், இந்த உழவுத் தொழிலில் இருக்கும் நெருக்கடிகளை முன்னிறுத்தி, விவசாயிகள் வேறு இடங்களுக்கு இடம் பெயரும் நிலை வராதிருக்க, விவசாயத்திற்கு தொடர்புடைய தொழில்களும் வளர வேண்டுமென நினைப்பவன். இந்நிலையில் நகரத்து சூழ்நிலையில் வளர்ந்த கதாநாயகி மைத்ரேயியுடன் அவனுக்குத் திருமணப் பந்தம் அமைகிறது. கிராமத்துப் பழக்க வழக்கங்களையும், அதன் சூழ்நிலையையும் அனுசரித்துக் கொள்ள, தன் மனைவிக்கு எந்த வகையில் சுதர்சன் துணை நிற்கிறான் என்பதனையும்,தன் கணவனின் குறிக்கோளுக்கு உதவும் காரிகையாய் பரிமாற்றமடையும் மைத்ரேயியை

யும் மையமாகக் கொண்டு எழுதப்பட்டதே இந்த 'நெஞ்சோடு கலந்திடு' படைப்பு.

சுபஸ்ரீ மற்றும் கிருஷ்ணவேணியின் வாழ்க்கைத் துணைகளான முறையே சங்கர்கணேஷ் மற்றும் வெங்கட் அவர்களுக்கு, இந்தக் கதையைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறோம்.

குடும்ப நாவல்களை வெளியிடுவதில் பெரும்பங்கு வகிக்கும் அருணோதயம் அருணன் அவர்கள் தொடர்ந்து எங்களின் படைப்புகளையும் வெளியிட்டு ஆதரவு தருவதற்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றிகள்.

உங்களது கருத்துக்களையும், விமர்சனத்தையும் அருணோதய முகவரிக்கு அனுப்புமாறு வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறோம்.

என்றும் அன்புடன்,
**சுபஸ்ரீ-கிருஷ்ணவேணி**

# நெஞ்சோடு கலந்திடு



## 1

LENDING LIBRARY
ARYA GOWDA ROAD,
MAMBALAM, CHENNAI-33

'வாழ்க வளமுடன்!', 'பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழணும்', 'தீர்க்க சுமங்கலி பவ!' என்று விதவிதமான வாழ்த்துக்களை மனதார பதிவு செய்தனர் மணமக்களை ஆசீர்வதித்த பெரியவர்கள்.

சென்னை மாநகரத்தில் அமைந்திருந்த பிரபலமான திருமண மண்டபத்தில் நடந்து கொண்டிருந்த 'சுதர்சன் -மைத்ரேயி' நிச்சயதார்த்த விழாவிற்கே நூற்றுக்கணக்கான விருந்தினர்கள் வருகை தந்திருந்தார்கள்.

''ஜோடிப் பொருத்தம் ரொம்ப நல்லாயிருக்கு!'' - என்பது போன்ற சம்பாஷணைகள்!

''நம்ம சொந்தம் விட்டுப் போக வேண்டாம்ன்னு எவ் வளவோ சொன்னேன்; ஆனா வரலக்ஷ்மி அண்ணி தான் என் பெண்ணைப் பேசி முடிக்கலை...'' என்பது போன்ற அங்கலாய்ப்புகள்!

''பொண்ணு இன்னமும் கொஞ்சம் சதை போட்டால் அம்சமா இருப்பாள்...'' என்று இலவச யோசனைகள்!

''ஹே! நம்ம மைத்திக்கு இந்தப் பச்சை கலர் புடவை ரொம்பவே நல்லாயிருக்கு இல்ல? அவ காண்பிக்கும் போதுகூட இத்தனை அம்சமா இல்லை; ஆனால் கட்டினதுக்கு அப்புறம் ஆளு டக்கரா இருக்காடி'' என தோழியரின் கருத்துப் பரிமாற்றங்கள்.

இப்படி பலதரப்பட்ட எண்ணங்களுடன் வலம் வந்த ஜனத்திரளில் இருந்து ஒதுங்கியிருந்த தம்பதியர் தங்கள் உள்ளத்திலிருந்த அதிருப்தியை முகத்தில் காட்டா மலிருக்க சிரத்தை எடுத்துக் கொண்டிருந்தனர்.

''மகி!'' சுரேஷின் குரலிலிருந்த அக்கறை அவனது அருமை மனைவி மாதங்கிக்கு ஆறுதலைத் தந்தது.

''இப்போ என்ன பண்ணலாம்னு சொல்லு மகி. நீ இப் படி உம்முன்னு இருந்தால் எனக்கு ரொம்பவே கஷ்டமா இருக்கு...''

''எனக்கு நேற்றிலிருந்து குற்ற உணர்ச்சி ஜாஸ்தியா இருக்கு சுரேஷ். லவ் பண்ணி கல்யாணம் செய்துகிட்ட நாம சந்தோஷமா தான் இருக்கோம். ஆனால், அதனால் பாதிப் படையறது என்னுடைய தங்கச்சி மைத்ரேயின்னு நினைக் கும்போது எவ்வளவு சங்கடமா இருக்குத் தெரியுமா? விட்டால் அழுதுவிடுபவள் போலிருந்தது அவளது குரல்.

மாதங்கி இரண்டு ஆண்டுகளுக்கு முன் சுரேஷை தன் பெற்றோரின் சம்மதமின்றி காதல் திருமணம் செய்து



கொண்டவள். காதலுக்கு அவளுடைய பெற்றோர்கள் ஜாதி வித்தியாசத்தை சுட்டிக்காட்டி எதிர்ப்பு தெரிவித்த தோடு மட்டுமில்லாமல், வேறொரு இடத்தில் திருமணத் திற்கான ஏற்பாடுகளை கவனிக்கத் தொடங்கவும் வீட்டை விட்டு வெளியேறி சுரேஷின் கரம் பற்றினாள் மாதங்கி.

மூத்த மகளுடைய சுயநலப் போக்கு தாய் கங்காவை யும், தந்தை ராஜேந்திரனையும் அதிர்ச்சியில் ஆழ்த்திய தோடல்லாமல், தங்களது இளைய மகள் மைத்ரேயியின் எதிர்காலத்தைப் பற்றிய கவலையையும் அவர்களுக்குத் தந்தது.

'முன் ஏர் செல்லும் வழியில் தான் பின் ஏரும் செல் லும்' என்று சொந்தத்தில் சிலர் பேச,

தந்தை ராஜேந்திரன் தன் இளைய மகளிடம், ''மைத் ரேயி! உங்க அக்கா மாதிரியில்லாமல் நீயாவது நான் சொல்ற படி கேட்டு நடந்து என் கௌரவத்தைக் காப்பாத்தும்மா. இவ்வளவு நடந்ததுக்கு அப்புறமும் நாங்க உயிரை வைச்சுட்டு இருக்கிறது உன் எதிர்காலம் நல்லபடியா அமையத்தான்!'' என்று உணர்ச்சி வசப்பட்டு பேசி, அவ ளைச் சத்தியம் செய்து தரச் சொல்லி வற்புறுத்தினார்.

தன் சகோதரி மாதங்கியின் காதல் விவகாரம் தெரிந்த திலிருந்து வீடு குருக்ஷேத்திரமாய் உருமாறியதை உண ராதவளில்லை மைத்ரேயி.

இத்தனைக் காலம் உயிரைக் கொடுத்து வளர்த்த பெற் றோரை உதறித் தள்ளக்கூடிய அளவிற்கு சுயநலத்தை 'காதல்' அளிக்குமானால் அது தனக்குத் தேவையே யில்லை என்று பசுமரத்தாணி போல தன் ஆழ்மனதில் ஏற்கனவே பதித்து வைத்திருந்தாள்.

தனக்குக் காதல் தேவையில்லை என்று முடிவு செய் தாளே தவிர, காதல் செய்த ஒரே காரணத்திற்காகத் தன்

சகோதரியை வீட்டைவிட்டு ஒதுக்கி வைப்பதில் ஒரு சதவீதம் கூட அவளுக்கு உடன்பாடில்லை.

ஆனால் இவளுக்கு உடன்பாடில்லை என்பதற்காக மட்டும் மாதங்கியை உடனே ஏற்றுக் கொள்வார்களா என்ன?

கட்டாயம் மாட்டார்கள் தான்... ஆனாலும் சகோதரியை மீண்டும் தங்கள் வீட்டில் ஏற்றுக் கொள்ள வைக்க மைத்ரேயி இப்பொழுது அவள் வசம் ஓர் அஸ்திரம் கிடைத்திருப்பதாக எண்ணினாள்.

அதாவது தந்தை அவளிடம் சத்தியம் செய்ய சொன்னபொழுது ஓர் நிபந்தனை விதித்தாள்.

தன் திருமணம் பெற்றவர்களின் ஏற்பாட்டின் படியே நடக்கும் என்பது உறுதி. ஆனால் அப்படி நடக்கும்பொழுது மாதங்கியை தங்கள் வீட்டில் முழு மனதுடன் மீண்டும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பெற்றவரிடம் வேண்டினாள்.

மைத்ரேயியின் நியாயமான கோரிக்கை, பெற்றோர்களின் நிலைப்பாட்டின் உறுதியைத் தளர்த்தியது.

அதன்படியே இரண்டு மாதங்களுக்கு முன்பு மைத்ரேயிக்கும், சுதர்சனுக்கும் திருமணம் உறுதியாகிவிட, அவர்களது திருமணத்தில் வந்து கலந்து கொள்ளுமாறு மாதங்கி - சுரேஷ் இருவரையும் நேரில் சென்று அழைத்தனர் ராஜேந்திரனும் கங்காவும்.

பெற்றவர்களின் வருகை மாதங்கியை எல்லையில்லா மகிழ்ச்சிக் கூடலில் ஆழ்த்தி, அந்நாள் வரை அவள் மனதில் குடிகொண்டிருந்த ஏக்கத்தைப் போக்கியது. தங்கையின் திருமணத்திற்கு ஒரு வாரம் முன்பே வருகை தந்து எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டு,



உள்ளத்தில் உவகையுடன் நேற்று வரை செய்து வந்தாள்.

அதாவது... தந்தையுடைய சத்தியமும், தங்கையுடைய நிபந்தனையும் தெரியும் வரையில்!

தெரிந்த பிறகு மாதங்கியின் மனதில் மீண்டும் குற்ற உணர்வு விஸ்வரூபமெடுத்தது.

'என்னுடைய வாழ்க்கைத் துணையை நானே தேர்ந்தெடுத்தேன் என்பதற்காக என் தங்கையின் வாழ்வில் அவளது ஆசையோ, காதலோ லேசாக மொட்டுவிடக் கூட அனுமதியில்லையா?

'என்ன வகையான எமோஷனல் ப்ளாக்மெயில் அப்பா இது?' என்று சண்டையிட துடித்த மனதை, தன் தங்கையின் திருமண வீட்டில் பிரச்சனை வேண்டாம் என்ற ஒரே காரணத்திற்காக பெரும்பாடுபட்டு அடக்கினாள்.

காலத்தை கி.மு., கி.பி. என்று பிரிப்பது போல, மாதங்கியின் மனநிலையை நிபந்தனை தெரிவதற்கு முன் (நி.தெ.மு.). நிபந்தனை தெரிவதற்குப் பின் (நி.தெ.பி.) என்று பிரிக்கலாம் போல...?!

'காணும் இடங்களெல்லாம் நந்தலாலா' என்பது போல மனதில் சந்தோஷம் குடிகொண்டிருந்த போது காண்பவையெல்லாம் மகிழ்ச்சிகரமானதாய் இருந்தது. ஆனால் சஞ்சலத்தால் தவித்தபோது, அவள் காணும் கண்ணோட்டமும் மாறுபட, முன்பிருந்த அவளுடைய மனநிலை தலைகீழ் மாற்றமடைந்தது.

இதோ... அதன் பலனாக உணர்ச்சித் துடைத்த முகத்துடன் நிச்சயதார்த்த விழாவில் அமர்ந்திருந்தாள் மாதங்கி. மனைவியின் வாடிய முகத்தை சரி செய்யும் வழிவகைத் தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தான் அவளது கணவன் சுரேஷ்.

''மாப்பிள்ளை வீட்டுக்காரங்க நல்ல மாதிரின்னு அரசல் புரசலா எனக்கு காதில் விழுந்தது மகி. மைத்ரேயிக்கும் இந்தக் கல்யாணத்தில் முழுமனசு இருக்கிற மாதிரி தான் தெரியுதுடா. நீயே பார் உன் தங்கையை... சந்தோஷமா தான் இருக்கிற மாதிரி இருக்கிறாள்...''

''பாருங்க... நீங்களே சொல்றீங்களே 'மாதிரி' என்று? சந்தோஷமா இருக்கிறாள் என்று உறுதியா சொல்ல முடியலை பார்த்தீங்களா?'' கவலையில் குரல் உள்ளே சென்றது.

மாதங்கியின் பேச்சு சிறுபிள்ளைத் தனமாய் தோன்றினாலும் அதைப் பொருட்படுத்தாமல், ''ஏன்மா உனக்கு எதுக்கு தேவையில்லாத குழப்பம்? நீ நேரடியாவே கேட்டுட வேண்டியது தானே உன் தங்கைகிட்டே? இந்தக் கல்யாணம் அவளுக்குப் பிடிச்சிருக்கா... இல்லையான்னு?''

''அவகிட்டே என்ன கேட்கிறது? எனக்குத் தெரியாதா என் தங்கச்சி பற்றி...? ஸ்கூல் சம்மர் லீவில் சொந்த ஊருக்குப் போகணும்னாலே மூக்காலே அழுவாள்! ரெண்டு நாளுக்கு மேல் அவளால் இருக்க முடியாது. இதில் செந்தாமரைக்குளமாம்... சுதர்சன் இருக்கிற ஊர் பேரு. தமிழ்நாட்டு மேப்பில்கூட தேடினாலும் கிடைக்காத ஒரு கிராமம். அங்கே வாழ்நாள் முழுக்க இருக்கணும்னா அவளுக்கு எப்படிங்க பிடிக்கும்?'' தன் தங்கையின் மண வாழ்க்கைப் பற்றிய அக்கறையில் தன் மனக்குமுறலைக் கொட்டித் தீர்த்தாள் மாதங்கி.

''ஒருவேளை இப்போ உன் தங்கைக்கு கிராம வாழ்க்கைப் பிடிக்கலாம் மகி. இல்லாட்டி உங்க அப்பா இந்தக் கல்யாணத்தை உறுதி செய்திருக்க மாட்டார்னுதான் தோணுது.''



''ம்க்கும்... இவளுடைய விருப்பமெல்லாம் ரெண்டாம் பட்சமாய்தான் இருந்திருக்கும் சுரேஷ். எங்க அப்பாவைப் பொறுத்த வரை செந்தாமரைக்குளம் பெரிய வீட்டில் சம்மந்தம் வைச்சுக்கிறதுன்னா தனக்கு கிரீடம் வைச்ச மாதிரின்னு நினைச்சு இந்தக் கல்யாணத்தை உறுதி செய்திருப்பார்...'' தந்தை மீதான கோபம் அதிகமானதே தவிர குறைவதாய் இல்லை அவளுக்கு.

சுரேஷ் மௌனமாய் அமர்ந்திருக்க, ''கல்யாணத்துக்குப் புடவை எடுக்கப் போகும் போது மைத்ரேயி வேற கலரில் புடவை எடுத்திருக்கிறாள்; சுதர்சன்தான் உனக்கு இந்தப் புடவை ரொம்ப நல்லாயிருக்கும்னு சொல்லி இந்தப் பச்சைப் புடவையை செலக்ட் செய்ததாம். என் தங்கை புடவையெல்லாம் என்கிட்டே எடுத்து காண்பிக்கிறப்போ இதை எவ்வளவு பூரிப்போட சொன்னாள் தெரியுமா?'' என்றாள் மாதங்கி.

''ம்...''

''நான் ஒரு பைத்தியக்காரி. எந்த விவரமும் தெரியாமல், மாப்பிள்ளை உனக்குப் பொருத்தமா இருக்கிறதைத் தான் தேர்வு செய்திருக்கிறார்... ரசிகன் தான் என்று கிண்டல் பேசினேன். ஆனால் இப்போ என்ன தெரியுமா தோணுது? இப்படிப் புடவை விஷயத்திலேயே இவளுடையத் தேர்வை மதிக்காமல் இருக்கிறவரு... எல்லா விஷயத்திலும் அப்படித்தானே இருப்பாரு?''

மாதங்கி பேசியது நி.தெ.மு. மற்றும் நி.தெ.பி.-க்கு சின்ன எடுத்துக்காட்டு.

மனைவியிடம் சற்றே தயங்கியபடியே, ''அந்தப் புடவை நல்லா தானே இருக்கு மகி? நீ கூட அந்த மாதிரி கலரில் எடுக்கணும்னு பேசிட்டு இருந்தியேடா?'' என்று

கேட்டு அவளது நெற்றிக் கண்ணைத் திறக்க வைக்கும் முயற்சியில் இறங்கினான் சுரேஷ்.

ஆனால் மாதங்கியோ குரல் கம்ம, ''என் தங்கையுடைய வாழ்க்கை நல்லபடியா அமைய கடவுள்கிட்டே தாங்க நான் வேண்டறேன். நல்ல பொண்ணு... என்னாலே அவளுக்கு எந்தப் பாதிப்பும் வரக்கூடாது'' என்றாள் உணர்ச்சி பொங்க.

மாதங்கியின் மனதிலிருந்த சஞ்சலத்தைப் பற்றி அறியாத மைத்ரேயியோ அழகோவியமாய் சுதர்சனின் அருகில் மணப்பெண்ணுக்கே உரிய நாணத்துடனும், இத்தனைக் கூட்டத்தையும் விழாவில் ஒருங்கே காண்பதில் லேசான பதட்டத்துடனும் நின்று கொண்டிருந்தாள்.

நான்கு பேர் மட்டுமே கொண்ட குடும்பம் மைத்ரேயினுடையது. சொந்த பந்தங்களின் வீட்டு விசேஷத்திற்குச் சென்றாலும் கூட, சற்று ஒதுங்கி தன் வயதை ஒத்த கூட்டத்தோடு மட்டும் அரட்டை அடிப்பதும், கும்மாளமிடுவதும் வாடிக்கை.

இந்தச் சந்தர்ப்பத்தில் இத்தனை பெரிய கூட்டத்தில் தான் நடுநாயகமாக திகழ்வது என்பது உண்மையிலேயே அவளுக்கு மலைப்பாகத்தான் இருந்தது.

ஆனால் அருகிலிருந்த சுதர்சனோ எந்தவித மலைப்புமின்றி, புன்னகை மாறாத முகத்துடன் மேடைக்கு வந்து வாழ்த்துபவர்களை உறவு முறைச் சொல்லி அழைப்பதும், இவளிடம் அறிமுகப்படுத்துவதும், நலன் விசாரிப்பதுமாய் இருந்தான்.

மைத்ரேயிக்கோ வந்திருந்தத் தன் பக்க உறவினர்களை பாதிப் பேருக்கு மேல் தெரியவில்லை.

இவளுக்கே தெரியாதபோது எங்கிருந்து அவனுக்கு அறிமுகப்படுத்துவது? பக்கத்தில் மணப்பெண்ணின் தோழியாக நின்றிருந்த உறவுக்காரப் பெண்மணியின் உதவியுடன் சமாளித்துக் கொண்டிருந்தாள்.



உதவி கிட்டாத நேரங்களில், ''ஆன்ட்டி-அங்கிள்'' என்ற உலகப் பொதுவான வார்த்தையைப் போட்டு நிரப்பினாள்.

வாழ்த்துக்களுக்கு இடையே கிடைக்கப்பெற்ற சின்னச் சின்ன இடைவெளிகளில் எதையாவது மைத்ரேயியிடம் இயல்பாய் பேசியபடி இருந்தான் சுதர்சன்.

பெண் பேசி உறுதியான இந்த இரண்டு மாதங்களில் செல்போன் தொடர்பு என்றெல்லாம் சொல்லிக்கொள்ளும் படியாக எதுவுமில்லை. அப்படியே பேசுவதாக இருந்தாலும் அதிகபட்சம் ஐந்து நிமிடங்களுக்கு மேல் சுதர்சன் அவளிடம் பேசியதில்லை.

இப்பொழுது அவன் இயல்பாய் பேசுவது மைத்ரேயிக்கு ரொம்பவே ஆச்சரியமாகவும், பிடித்தமானதாகவும் இருக்க, அவனது அருகாமையும், பேச்சும் அவளது தயக்கத்தை உடைக்க பெரிதும் துணை புரிந்தன.

மெல்லியக் குரலில், ''இத்தனைக் கூட்டத்தையும் பார்க்க உங்களுக்கு அப்-நார்மல் உணர்வு வரலையா?'' என்று சுதர்சனிடம் வினவி, 'எனக்கு-அப்படியொரு உணர்வு இருக்கிறது' என்று கோடிட்டுக் காட்டினாள் மைத்ரேயி.

புன்னகை மாறாத முகத்துடன், ''நாளைக்கு இதே மாதிரி இரண்டு மடங்குக் கூட்டத்தை எதிர்பார்க்கலாம் மைத்ரேயி. நம்ம செந்தாமரைக்குளத்திலிருந்து வந்தவங்க இன்றைக்கு எழுநூறு பேர் தான் இருப்பாங்க'' என்று கணக்குச் சொல்லி மேலும் அவளை மலைக்க வைத்தான்.

''அந்தக் கிராமத்தில் மொத்தமே ஒரு ஆயிரம் பேர் இருப்பாங்கன்னு நினைக்கிறேன். நம்ம கல்யாணத்துக்கு எல்லாரையும் இங்கே சென்னைக்கு அழைச்சுட்டு வர்றதுக்கு நம்ம அங்கேயே கல்யாணத்தை வைச்சிருக்க லாமே சுதர்சன்?''

அவளது கேள்வி முடிந்ததும் சுற்றி முற்றிலும் பார்த்து, ''நீ மட்டும் இப்படி பேர் சொல்லி கூப்பிடறதை நம்ம ஊர்க்காரங்க யாராவது கேட்டிருந்தால் அவ்வளவுதான்...'' என்று எச்சரிக்கை செய்தவன்,

''நாம தனியா இருக்கும்போது எப்படி வேணாலும் கூப் பிட்டுக்கோ மைத்ரேயி. ஆனால்... மத்தவங்க முன்னாடி வேண்டாம் ப்ளீஸ்'' என்று கறாராகச் சொன்னாலும் 'ப்ளீஸ்' என்று சேர்த்து 'அன்புக் கட்டளையாக' மாற்றி னான்.

என்னதான் அவன் 'ப்ளீஸ்' என்று சேர்த்தாலும், ''உங்களுக்குப் பிடிக்கலை என்பதால் ஒரு காரணத்தைச் சொல்லி வைக்கறீங்களா?'' என்று விடாமல் கேட்டாள்.

ஆனால் எந்தத் தயக்கத்தையும் காட்டாமல் சின்ன முறுவலுடன், ''எனக்குப் பிடிக்கலை என்றால் எதுக்காகத் தனியா இருக்கும்போது எப்படி வேணாலும் கூப்பிட் டுக்கோ என்று சொல்றேன்?'' என்று அவளிடமே திருப் பிக் கேட்டான்.

''அதானே?'' மனதில் யோசித்த கேள்வியை வெளியே வாய் திறந்தும் கேட்டவள், சற்று நேர யோசனைக்குப் பின், ''அப்போ நான் உங்களை எப்படி தான் கூப்பிடறது?'' என்று அதிமுக்கியமான சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ள சுதர்சனின் உதவியை நாடினாள்.

''அத்தான் என்று கூப்பிட உனக்குப் பிடிக்குமா?''



''இருக்கிறது ஒரேயொரு சாய்ஸ். அப்புறம் பிடிக்கு மான்னு இதிலென்ன கேள்வி?'' தான் ஒன்றும் அவ் வளவு ஏமாளியில்லை என்று தன் கேள்வியின் மூலம் நிரூபித்தாள்.

புன்னகையைப் பெரிதாக்கிய சுதர்சன், ''பிடிக்கலைன்னா விடு. அடுத்த ஆப்ஷன் யோசிக்கலாம்'' என்று முடித்தான்.

''இல்லை... பரவாயில்லை; இதுவே இருக்கட்டும்.''

''போனா போகட்டும்னு ஒத்துக்க வேணாம். முழுமனசா பிடிச்சால் மட்டும் ஒத்துக்கோ'' என்று அவளின் உணர் வுக்கு மதிப்பளித்தான்.

''ம்... பிடிச்சால் அத்தான்! இல்லாட்டி சைத்தான்... நல்லாதான் இருக்கு'' என்று இலகுவாய் மைத்ரேயி கேலி பேச, சுதர்சனும் அவளது சிரிப்பில் இணைந்தான்.

இவர்களது சிரிப்பை படம் பிடித்துக் கொண்டிருந்த தோழியர் கூட்டம் அன்றிரவு மணமகள் அறையில் மைத் ரேயியைக் கேலி, கிண்டலென படாதபாடு படுத்திக் கொண்டிருந்தது.

அடுத்தநாள் திருமணமாகப் போகும் தோழியிடம் கேலியும், கிண்டலும் செய்யாமலிருந்தால் தானே ஆச்சரியப்பட வேண்டியிருக்கும்?!

''அதெப்படி டி? கிடைக்கிற ஒரு சின்ன சந்திலும் ரெண்டு பேரும் சேர்ந்து சிந்து பாடறீங்க?'' சுதர்சனும், மைத்ரேயியும் இடைவிடாது பேசிக் கொண்டிருந்ததைப் பற்றி கேலி செய்தாள் மைத்ரேயியின் அன்புத் தோழி பல்லவி.

தோழிகளின் கேலியில் முகம் சிவந்திருந்த மைத்ரேயி, ''ஹே! நீ வழக்கம் போல ஏதோ ஒரு பல்லவியைப் பாட ஆரம்பிச்சுட்டே... ரொம்ப சந்தோஷம்டி. இப்போ

பல்லவி பாடினதைத் தொடர்ந்து அனுபல்லவி, சரணம் எல்லாம் கச்சேரி களைக் கட்டப் போகுது...'' என்று போலியாகப் பெருமூச்சை வெளியேற்றினாள்.

நிஷா, ''காக்கா ''கா-கா''ன்னு கத்தறதால் அதுக்கு காக்கான்னு பேர் வைச்சாங்களான்னு கேட்பது மாதிரி, எப்போதும் கச்சேரியை நம்ம பல்லவி ஆரம்பிக்கிற தாலே தான் அவளுக்குப் பல்லவின்னு பேர் வைச்சாங் கப் போல...'' என தோழியின் காலை வாரினாள்.

'இதெல்லாம் சகஜமப்பா!' என்று எடுத்துக் கொண்ட பல்லவி சிரித்தாலும், ''டாபிக் இஸ் டேக்கிங் டைவர்ஷன்... செல்லாது - செல்லாது!'' என்று திருப்பிக் கொடுத்தாள்.

''ஆமாம்-ஆமாம்!'' மற்றத் தோழிகளும் பல்லவியுடன் கூட்டணி அமைத்துக் கொண்டு மைத்ரேயியை ஒரு வழி செய்தனர்.

''இன்றைக்கு உங்களுக்கு மாட்டினது நானா? என்னைப் பார்க்கப் பாவமா இல்ல?'' - சாது போன்ற பாவனையில் வினவினாள் மைத்ரேயி.

''எல்லாம் இன்றைக்கு ஒரு நாள் தான் மகளே! என்ஜாய்! அப்புறம் உன்னைக் கிண்டல் செய்யணும்னு நினைச்சால் செந்தாமரை ஆறு, குளம், குட்டை, ஏரி, கடல்... இப்படி ஏதோ ஒன்றைத் தேடி வரணுமே?!'' என மற்றொரு சிநேகிதி கண்களை உருட்டினாள்.

''ஏன்? செந்தாமரைக்குளம் என்ன வேற்று கிரகத்தி லேயா இருக்கு? இப்படி அலுத்துக்கறீங்க?'' என்றபடியே மாதங்கியும் கச்சேரியில் ஐக்கியமானாள்.

''நீங்க வேற அக்கா! செவ்வாய் கிரகத்தில் குடியேறி னால் கூட ராக்கெட் வழியா ரீச் ஆகிடலாம். ஆனால் செந்தாமரைக்குளத்தை ரீச் ஆகறது அவ்வளவு சுலப



மெல்லாம் இல்லை. தஞ்சாவூர் வரைக்கும் ட்ரெயினில் போய்... அப்புறம் மினிபஸ் பிடிச்சு இறங்கி... ஒத்தையடி பாதையில் இரண்டு மைல் தொலைவு நடந்து வந்தப் பிறகு 'செந்தாமரைக்குளம்'ன்னு சொன்னால் ஒருமணி நேரத்தில் மாட்டுவண்டியிலோ, குதிரை வண்டியிலோ கொண்டுப் போய் விட்டுடுவாங்க'' என்று இட்டுக்கட்டி கிண்டலாகப் பல்லவி பேச, அது புரியாத மாதங்கிக்கு முன்பை விட கலக்கம் அதிகமானது.

''ஏய்! ரொம்ப ஓட்றீங்க... இந்த மாதிரி அண்டப் புளுகு ஆகாசப் புளுகு எல்லாம் வேணாம்...'' என மைத்ரேயி ஆள்காட்டி விரலைக் காட்டி செல்லமாக மிரட்ட,

''சரிங்கடி... மேடம் புளுகு எல்லாம் வேணாம்னு சொல்லிட்டாங்க. அதனால் நான் சொல்லப் போற விஷயம் அக்மார்க் முத்திரை குத்திய நூறு சதவீதம் உண்மை...'' என்ற முஸ்தீபுடன் தொடங்கினாள் நிஷா.

''என்னுடைய மேரேஜ் இன்விடேஷன் அனுப்ப அட்ரஸ் வேணும்னு மைத்ரேயியின் உட்-பீ கிட்ட கேட் டேன். அதுக்கு, 'சுதர்சன், செந்தாமரைக்குளம் போஸ்ட், தஞ்சாவூர் மாவட்டம்' அப்படின்னு போட்டாலே போதும்ங்க. நீங்க அனுப்பற போஸ்ட் எங்க கைக்கு கிடைச்சுடும்னு சர்வ சாதாரணமா சொல்றார்டி நம்ம மைத்ரேயியோட ஆளு.''

''ஹே! ஆளு ரொம்ப சிம்பிளா இருந்தாலும் அந்த ஊர் அரசியல்வாதிகள் முதல் அரசு அதிகாரிகள் வரை எல்லாரும் நாளைக்கு மைத்தி கல்யாணத்தில் கலந்துக்கிற அளவுக்குப் பெரிய ஆளு தான் போல... சுதர்சன்'' - இது மற்றொருப் பெண்ணின் கருத்து.

''ஆக மொத்தத்தில் நம்ம மைத்ரேயி - இனிமேல் பெரிய வீட்டு மருமகளா - தழையத் தழையப் புடவை

கட்டிட்டு, தோள்பட்டையில் இருந்து இறங்கவே இறங்காதக் கூந்தலை இடுப்பு வரைக்கும் வளர்த்துட்டு, மல்லு வேட்டி மைனருக்கு ஏத்த குத்துவிளக்கா வலம் வர போறாங்கோ...'' என்று தண்டோரா போட்டபடிச் சொன்னாள் பல்லவி.

தோழிகளின் அரட்டை கச்சேரி தாய் கங்காவின் அதட்டலில் முடிவுக்கு வர, உள்ளம் நிறைய கனவுகளுடன் உறங்க முயன்ற தங்கையிடம் அக்கறையோடு, ''மைத்தி! நான் ஒண்ணு கேட்பேன். நீ உண்மையைச் சொல்லணும்...'' என்ற பீடிகையுடன் ஆரம்பித்தாள் மாதங்கி.

''என்னக்கா விஷயம்?'' என்றவளின் புருவ மத்தியில் முடிச்சு விழுந்தது.

''உனக்கு இந்தக் கல்யாணத்தில் முழு சம்மதம் தானே? அவரை உனக்குப் பிடிச்சிருக்கா?''

அக்காவின் கேள்வியில் வெள்ளிச் சலங்கையாய் நகைத்தவள், ''இந்தக் கேள்வி இப்போ கேட்க வேண்டியதன் அவசியம் என்னக்கா? எனக்குப் பிடிக்காமலா கல்யாணம் வரைக்கும் சம்மதிச்சிருப்பேன்...?'' எதிர்க் கேள்வி கேட்டாள்.

''இல்லை... உன் பிரண்ட்ஸ் எல்லாம் கூட இப்போ ரொம்பவே கிண்டல் செய்தாங்களே? அதனால் எதுவும் சலனம் வந்ததோன்னு பயந்தேன்...'' தான் சலனமடைந்திருப்பதை அடிப்படையாகக் கொண்டுப் பேசினாள் மாதங்கி.

''எல்லாமே ஜஸ்ட் ஃபார் ஃபன் தான்க்கா. அவங்க எல்லாம் ஒண்ணும் இல்லாத விஷயத்தை ஊதி ஊதி பெருசாக்கி கிண்டல் பண்ணுவாங்க. சுதர்சன் மாதிரி ஒருத்தர் வாழ்க்கை துணையா கிடைக்கப் போறதை



நினைச்சு வர்ற சந்தோஷம் ரொம்பவே ஆத்மார்த்தமானது அக்கா'' என்று சொல்லி அக்காவின் சலனங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தாள் மைத்ரேயி.

தங்கையின் பேச்சு மாதங்கியை மீண்டும் மகிழ்ச்சியில் திளைக்க வைத்ததில் சுரேசின் மனமும் நிறைந்தது.

'சுதர்சன் வாழ்க்கைத் துணையா கிடைக்கப் போவதை நினைத்தாலே சந்தோஷம்' என்று உருகியவளை அடுத்த நாள் சுபமுகூர்த்த சுபவேளையில், பஞ்ச பூதங்களின் சாட்சியத்துடனும், பெரியவர்களின் ஆசீர்வாதத்துடனும் திருமாங்கல்யம் சூடி மைத்ரேயியின் கைத்தலம் பற்றினான் அவள் உள்ளம்கவர் அத்தான்.

கெட்டிமேளச் சத்தத்தைத் தொடர்ந்து நாதஸ்வர இசையில் ஒலித்த தியாகராஜ கீர்த்தனை அங்கிருந்த உறவுகளின் செவியை நிறைக்க, அவர்களது உள்ளத்தையும், கண்களையும் கல்யாண வைபவங்கள் நிறைத்தன.

''சீதா கல்யாண வைபோகமே!
ராமா கல்யாண வைபோகமே!
பவனஜ ஸ்துதி பாத்ர பாவன சரித்ர...
ரவி சோம பவநேத்ர ரமணிய காத்ர!''



# 2

எப்பொழுதும் அதிகாலையில் கண் விழிக்கும் பழக்கத்தில் அன்றைக்கும் துயில் கலைந்து எழுந்த சுதர்சனுக்கு, தன் முதுகை ஒட்டிக் கொண்டு, தன் இடுப்பைச்

சுற்றி கை போட்ட படிப் படுத்திருந்த தன் புத்தம் புது மனைவியின் ஸ்பரிசம், அவன் முகத்தில் பெரிய புன்னகையை வரவழைத்தது.

நேற்று இரவில் மைத்ரேயி அவனிடம், 'இன்னமும் சில நாட்கள் கழித்து...' என்று தயங்கியது என்ன? இப்பொழுது அவளிருக்கும் நிலை என்ன?

விரிந்திருந்தப் புன்னகையில் பெருமையும் மகிழ்ச்சியும் போட்டிப் போட, மெல்ல அவளின் துயில் கலையாமல் திரும்பிப் படுத்து, ஆசையாக மனைவியின் முகம் பார்த்தவனின் மென்மையான தொடுகை அவளைக் கண் மலரச் செய்ததோ இல்லை கணவனின் சூடான மூச்சு காற்று பட்டு இமை திறந்தாளோ?

மெல்ல கண் விழித்த மைத்ரேயியின் பார்வையில் தனக்கு மிக அருகே தெரிந்த கணவனின் மூடிய விழிகளும் மெல்லிய புன்னகையும் பட, அதன் எதிரொலியாக அவளது முகத்திலும் வெட்கப் புன்முறுவலொன்று அரும்பியது.

கணவனின் கலைந்திருந்த நெற்றிக் கேசத்தை ஒதுக்கி விட்டப் பின், மெதுவாக அவனின் புருவத்தை நீவி விட்டுக் கொண்டிருந்த அவளது கரம், கணவனின் சிரிப்பைத் தாங்கிய பார்வையில் அங்கேயே தங்கியது.

மனைவியின் கண்களில் இருந்து பார்வையை அகற்றாமலே, தன் கன்னத்தில் படிந்திருந்த அவளது கரத்தை எடுத்து, அவளின் உள்ளங்கையில் இதழ் பதித்து, தன் கழுத்தைச் சுற்றிப் போட்டுக் கொண்டவன், ஒற்றை புருவத்தைக் கேள்வியாகத் தூக்கி அவளைப் பார்க்க, கீழ் வானச் சிவப்பை அவளின் முகம் பூசிக் கொண்டது.

சந்தோஷச் சிரிப்புடன் மனைவியை இழுத்து தன் மேல் போட்டுக் கொண்டவனின் எண்ணங்களும், தன் முகச் சிவப்பை மறைக்க பூ மாலையாக கணவனின் மார்பில் விழுந்தவளின் எண்ணங்களும் நேற்றைய தினத்திற்குப் போனது.



* * *

சென்னையில் திருமணத்தை முடித்து, மண்டபத்தைக் காலி செய்யவே அன்று மதியம் வரை ஆக, அன்று நாளும் கூடி வரவில்லையென, அடுத்த நாள் தான் முஹூர்த்தம் வைத்திருந்தார்கள். அதுவும் செந்தாமரைக் குளத்தில்.

தாயிடம் நேரிடையாக ஒன்றும் சொல்ல முடியாமல், அந்த உரிமையைத் தானாகவும் எடுத்துக் கொள்ள தயங்கிய மாதங்கி, தங்கையிடமே வந்து, ''ஏன்... அதுக்கும் அந்தக் குக்கிராமத்திற்குத் தான் போகணுமாமா? இங்கே, நம்ம வீடுன்னா நீ கொஞ்சம் ஃப்பரீயா ஃபீல் செய்வே இல்ல மைத்தி?'' என்று புலம்ப ஆரம்பித்தாள்.

''அதில்லைக்கா. அத்தை தான் அது பரம்பரை பரம்பரையா புழங்கற வீடு. இது வாடகை வீடு தானேன்னு கேட்டாங்களாம். அதனால... எல்லாம் அங்கே தான்னு கண்டிப்பா சொல்லிட்டாங்களாம். அம்மாவும், இதிலென்ன இருக்குன்னு சொல்லிட்டாங்க அக்கா'' என்று தமக்கைக்கு விளக்கம் கொடுத்தாள் மைத்ரேயி.

''ம்க்ஹும்!'' என்று நொடித்துவிட்டுப் போன மாதங்கி, ''என்னமோ இந்த அம்மாவும் அப்பாவும் அவங்க சொன்னதுக்கெல்லாம் ஆடறாங்க. இப்படியே போனால், உன்னை இந்தப் பக்கமே வர விடாமல் செய்துடப் போறாங்க'' என்று போகிறப் போக்கில் முணுமுணுத்து விட்டுப் போனது மைத்ரேயியை லேசாக உறுத்திக் கொண்டே இருந்தது.

சென்னையில் இருந்தபடியே தங்களுக்கு அதற்கு மேல் விடுமுறை இல்லையென்று மாதங்கி அன்றே கிளம்பிவிட, தோழிகளும் திருமணம் முடிந்தவுடனே மண்டபத்திலிருந்தே விடைபெற்றிருக்க, மைத்ரேயி தனித்து விடப்பட்டது போன்று உணர்ந்தாள்.

அவ்வப்பொழுது சுதர்சனின் பார்வை கணைகள் வேறு அவளுக்கு கூச்சத்தையும் சற்றே பயத்தையும் மூட்டிக் கொண்டிருந்தது. என்னதான் இரு மனம் ஒப்பி மணம் செய்துக் கொண்டிருந்தாலுமே, அந்த முதல் தயக்கம், பயம் எல்லாமுமே அவளுக்கும் இருந்தது.

நல்ல நேரம் பார்த்து ஒரு வழியாக செந்தாமரைக் குளம் வந்து சேர்ந்தபோது இருட்டி விட்டிருக்க, சூழ்ந்து வரும் இருட்டில், தெரு விளக்கின் வெளிச்சத்தில் தான் வாழப் போகும் கிராமத்தைப் பார்த்தவளுக்கு அத்தனை ஒன்றும் நல்லபடியாகத் தோன்றவில்லை.

தன்னருகில் இருந்த கணவனிடம், ''இதான் உங்க ஊரா?'' என்றாள் உள்ளே சென்று விட்ட குரலில்.

''ஆமாம் மைத்ரேயி. இனிமே இது நம்ம ஊரு. பிடிச்சு இருக்கா?''

ஆவலே உருவாகக் கேட்பவனிடம் என்னவென்று சொல்வாள்? அதுவும் காலடி எடுத்து வைத்த முதல் நிமிடமே? சர்வ ரோக நிவாரணியாக அப்போதைக்கு உதட்டை இழுத்துப் புன்னகைத்து வைத்தாள்.

அடிக்கடி சொந்த மண்ணுக்கு வந்து போயிருந்தால் தெரிந்திருக்கும். பெற்றவர்கள் இருவருமே வேலைப் பார்க்கும் சூழ்நிலையில், இருக்கும் விலைவாசியில், போக்குவரத்து செலவு, பள்ளி விடுமுறை, அலுவலக விடுமுறை என்று ஏகப்பட்ட காரணங்கள் அணிவகுத்து



நின்று, வீட்டிற்கு ஒருவர் தான் குடும்ப விசேஷங்களுக்கு போய் வர முடியுமெனும்போது, அவர்களும் தான் என்ன செய்வார்கள்? அதுவும் கல்லூரி, உயர் கல்வி என்று போன பின்போ கேட்கவே வேண்டாம்.

ஆரத்தி கரைத்தப் பின் தன்னுடன் சேர்ந்து உள்ளே நுழைந்தக் கணவனை, அதன் பின் வலை வீசி தான் தேட வேண்டிய நிலை மைத்ரேயிக்கு.

அன்றிரவு உணவருந்தி விட்டு தாயுடன் படுத்தவளுக்கு மின்சாரம் இல்லாமல் தூக்கமே வரவில்லை.

'இதென்னப் பழக்கம்? நாளைக்கு முஹூர்த்தம் வைச்சிருந்தால் இன்றைக்கு சுதர்சனைப் பார்க்கக் கூடாதா? பேசக் கூடாதா? ரொம்ப அராஜகமா இல்ல இருக்கு! இதில் அவனும் பெரிய இவன் மாதிரி ஒரு சின்னச் சிரிப்பு, கண் அசைவோட டாட்டா சொல்லிட்டுப் போயிட்டான்.'

''ப்ச்!'' என்று புரண்டுக் கொண்டிருந்தவளிடம், கங்கா, ''பேசாமல் படும்மா! நம்ம வீடு மாதிரி காலையில் ரொம்ப நேரம் தூங்கிட்டு இருந்தால் ஊரில் பலரும் பலவிதமா சொல்லுவாங்க'' என்றார்.

''ஃபேன் இல்லை, ஏ.சி. இல்லை. எப்படித்தான் தூங்கறதாம்?'' சிணுங்கலுடனே படுத்தவளுக்கு ஆழ்ந்த உறக்கமே இல்லை.

அடுத்த நாள் காலை ஆறரை மணிக்கு எழுந்தவளுக்கோ, அதுவே அங்கே 'ரொம்ப நேரம்' தான் என்று விளங்கியபோது, என்ன சொல்வதென்று தெரியாமல் பேந்த பேந்த விழித்தாள்.

''என்னம்மா கல்யாணப் பொண்ணு! இத்தனை மணி வரைக்கும் தூங்கறே? உங்க ஊரில் இதான் பழக்கமா?'' என்று வீட்டுக்கு வந்திருந்த ஆயிரத்தெட்டு சுற்றங்களில் ஒருவரான முதியவர் கேட்க,

சுதர்சனின் தாய் வரலக்ஷ்மி, ''புது இடமில்லையா? பாதி நேரம் கரண்ட் வேற இல்லை! அதான் பெரியம்மா அவளுக்கு நைட் சரியா தூக்கமே வந்திருக்காது'' என்று மருமகளுக்குப் பரிந்து கொண்டு வந்தார்.

''என்னமோ!? ஊரில் உலகத்தில் பெண்ணே இல்லாத மாதிரி தான்... பட்டணத்திலிருந்து கொண்டு வந்திருக்கே! இப்பவாவது சீக்கிரமா எழுந்து வரச் சொல்லு. நிறைய வேலையிருக்கு!'' என்றபடி அங்கிருந்து அகன்றார் அந்த மூதாட்டி.

''இந்தா... கஸ்தூரி! வந்து அண்ணியைக் கூப்பிட்டுட்டுப் போ!'' என்று ஆணையிட்ட வரலக்ஷ்மி, ''கஸ்தூரி கூட போம்மா. வெந்நீர் போட்டு வைக்க சொல்லியிருக்கேன். குளிச்சுட்டு வந்துடும்மா'' என்றுவிட்டுப் போனார்.

கண்களால் சுற்றும் முற்றும் பார்வையை ஓடவிட்ட மைத்ரேயியிடம் கஸ்தூரி, ''யாரை அண்ணித் தேடறீங்க?'' என்று வினவினாள்.

''சுத... வந்து அம்மா, அப்பா யாரையுமே காணோமே? அதான் பார்த்தேன்.''

''மாமா ஊர் பெரியவங்களோட பஸ் ஸ்டேண்டுக்குப் போயிட்டாங்க. அத்தை, அடுப்படியில் வேலையா இருக்காங்க. கூப்பிடணுமா?''

''இல்லை! வேண்டாம்.''

''அவங்க, அத்தானை தேடறாங்களோ என்னமோ?'' அருகிலிருந்து இன்னொரு குரல் கேட்க, யாரென்றுப் பார்த்தவளிடம்,

''என் பேரு கனகா. அத்தானுக்கு முறைப் பொண்ணு. என்னைத் தான் கட்டிக்கிறதா இருந்தாங்க அத்தான்'' என்று கழுத்தை வெட்டினாள்.



'முறைப் பொண்ணு என்றால் முறைச்சுக்கிட்டே இருக்கப் பொண்ணா? பார்த்து கழுத்து சுளுக்கிக்கப் போகுது. அத்தானாமில்ல அத்தான்... பொத்தான் வைச்சு வாயைத் தைச்சுட்டு, கண்ணு முழியை நோண்டிடறேன் பாரு' மைத்ரேயி மனதிற்குள் கருவிக் கொண்டிருக்கும் போதே, அரிசி எடுப்பதற்காக அந்தப் பக்கம் வந்த வரலக்ஷ்மி.

''கனகா! இதென்னப் பேச்சு? ஊரெல்லாம் அவனுக்கு முறைப் பொண்ணுங்க தான். பாதிப் பேரு மாமா, அத்தை முறை இருக்கும்போது வேற எப்படி இருக்கும்? இந்தப் பேச்சு வேண்டாம்னு நாங்க சொல்லி இருக்கோமில்ல?'' என்று கனகாவிடம் கடிந்தவர்,

மைத்ரேயியிடம் திரும்பி, ''இன்றைக்கு இந்த சுரிதாரம்மா போட்டுக்கப் போறே? வேண்டாம்... நாலு பேரு வருவாங்க. நல்ல புடவையா பார்த்துக் கட்டிக்கோ மைத்ரேயி. அப்படியே தம்பி இன்னமும் மாடி ரூமில்தான் இருக்கான். குளிச்சுட்டு அவனுக்கு என்ன வேணும்னு பார்த்து செய்'' என்று பணித்துவிட்டுச் சென்றார்.

குளியலறை அருகே இருந்த தனது அன்னையிடம் மனதிலிருந்ததைக் கொட்டினாள் மைத்ரேயி.

''எங்கேம்மா போனீங்க காலையிலேயே? இந்த வீட்டில் எனக்குத் தெரிஞ்சவங்களே அப்பாவும், நீங்களும் தான். ரெண்டு பேரையுமே பார்க்க முடியலை. இன்னொருத்தர் இன்னமும் பள்ளியெழுச்சியே பாடலையாமா!'' என்றாள்.

அருகிலிருந்த கஸ்தூரியிடம் பார்வையைச் செலுத்திய கங்கா, ''ஷூ! யாரு காதிலாவது விழப்போகுது. சும்மா இரு மைத்தி'' என்றார்.

''ம்க்கும்! ஆமா... இதென்ன இந்த அத்தை அப்பப்போ வர்றாங்க. ஏதோ சொல்லிட்டுப் போறாங்க. ஏன் இந்த டிரஸ்க்கு என்னவாம்? என்னை மட்டும் சீக்கிரம் எழுந்திருன்னு சொன்னீங்க? உங்க மாப்பிள்ளை மட்டும் இன்னமும் தூங்கறாரு? அவரையெல்லாம் ஒண்ணும் சொல்ல மாட்டாங்களா?''

காலையில் எழுந்ததிலிருந்து கணவனைப் பார்க்க முடியாத கோபம் அவளுக்கு! அந்தக் கோபமும் அவனைக் காணும் வரையில்தான்.

குளித்துவிட்டு அவனிருக்கும் அறைக்குச் சென்றவளின் கோபம், ஆதங்கம் எல்லாம் மந்தகாசப் புன்னகையுடன் ஒருக்களித்து படுத்திருந்தவனைப் பார்த்ததும் பறந்து போனது.

தன்னை மீறி எழுந்த கரத்தால் அவனது காதோரக் கேசத்தைக் கோதி விட்டவளை சுதர்சன் தன் மீது சடாரென்று சாய்த்துக் கொண்டான்.

''ஹே! என்னதிது? கதவு... கதவு திறந்திருக்கு! விடுங்க. உங்க வீடு முழுக்க ஆளுங்களா இருக்காங்க. யாராவது வந்துடப் போறாங்க. ப்ளீஸ் விடுங்க!'' தன்னுடைய கையைக் கணவனது பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ள போராடியபடியே கெஞ்சிக் கொண்டிருந்தாள் மைத்ரேயி.

''ரிலாக்ஸ்! நானிருக்கும்போது அம்மா மாடிப் பக்கம் யாரையும் விட மாட்டாங்க மைத்தி. எதுனாலும் எல்லாம் கீழே தான். இது முழுக்க நம்ம ராஜ்ஜியம் தான்'' என்றுவாகாக அவளைத் தன்னருகே கிடத்திக் கொண்டவன், அப்போதுதான் தலைக்குக் குளித்துவிட்டு வந்திருந்தவளின் ஈரக் கூந்தலில் வாசம் பிடித்தான்.



மெல்ல அவளின் முகத்தில் ஒற்றை விரலால் கோலம் வரைந்து கொண்டே, ''எதுக்கு நீ வர இவ்வளவு நேரம்? நீ அப்போவே வருவேன்னு எதிர்பார்த்துட்டே இருந்தேன்'' என்று அவள் காதோரம் ரகசியம் பேசினான்.

பகல் என்றதும் மைத்ரேயிக்குத் தைரியம் வந்துவிட்டதோ என்னவோ, ''நானும் தான் உங்களை நேற்று நைட் எதிர்பார்த்தேன். நீங்க தான் ஆளையே காணோம்!'' என்று வேகமாகச் சொன்னவள், எங்கே அவன் தப்பாக நினைத்துக் கொள்வானோ என்று சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டு, அவனைப் பார்த்தாள்.

உல்லாசமாகச் சிரித்து, ''எதிர்பார்க்கலைன்னாதான் தப்பு மைத்ரேயி. நேற்று நான் வந்திருந்தால்... வேற மாதிரி இருந்திருக்கும். அதான் நீ கீழே, நான் மாடியில் கண்ணம்மா'' என்றவனிடம்,

நினைவு வந்தவளாக, ''நாம ரெண்டு பேரு மட்டும் இருக்கும்போது உங்களை நான் எப்படிக் கூப்பிடறது? சுதா? தர்சன்? சுதிர்? சுதன்? சுரேன்? எது உங்களுக்குப் பிடிச்சு இருக்கு. சொல்லுங்க?'' என்று அவன் தோளில் விரலால் கீறிக் கொண்டே கேட்டாள்.

''ஹப்பாடி... என் பெயரை இப்படியெல்லாம் சுருக்க முடியுமா? நீ எப்படிக் கூப்பிட்டாலும் சரி தான். ஆமா, ஏன் உன் கண்ணெல்லாம் சிவந்திருக்கு? தூங்கலையா?'' அக்கறையாகக் கேட்டு அவள் கன்னத்தை வருடியவன், அவள் நெற்றியில் விழுந்திருந்த ஒற்றை முடியை ஊதி, மெல்ல விலக்கி விட்டான்.

''தூக்கமே வரலை, புது இடமா என்னன்னு தெரியலை.''

''எனக்குப் பழகின இடம் தான். ஆனாலும் நீயும் இங்கே தான், என் பக்கத்திலேயே இருக்கே என்ற நினைப்பே

என்னைத் தூங்க விடலை. பாரு... என் கண்ணும் சிவந்து தான் இருக்கு'' அவள் கன்னத்தோடு கன்னம் வைத்து இழைந்து சுதர்சன் கொஞ்ச, கணவனின் விழிப் பார் வையில் தன் முகத்தைப் பார்த்து மயங்கினாள் மைத்ரேயி.

''அய்யே! போதுமே!'' பெருமையில் பூரித்த முகத் துடன், ''நீங்க இவ்வளவு பேசுவீங்கன்னே எனக்குத் தெரியாது'' என்று கூறியவளின் குரல் குழைந்தது.

அவள் உதட்டைப் பெரு விரலால் மெல்ல வருடிக் கொண்டே, ''எல்லாம் போகப் போகத் தெரிஞ்சுக்கலாம். என்ன அவசரம்? நான் எதுக்கு இருக்கேன்? எல்லாம் சொல்லித் தரேன்'' என்று கிறக்கத்துடன் மனைவியின் முகம் நோக்கி ஆசையாகக் குனியவும், கீழிருந்து வரலக்ஷ்மி,

''தம்பி! ஊர்க்காரங்க உன்னைப் பார்க்க வந்திருக்காங் கப் பாரு'' என்று குரல் கொடுத்தார்.

சுவிட்ச் போட்டது போன்று, ''இதோ வந்துடறேன் அம்மா!'' என்று கூறியவன், பெருமூச்சுடன் மனைவியின் கரம் பற்றி தூக்கிவிட்டு, ''நம்ம பாடம் படிக்க இப்ப தோதுப்படாது போல. எல்லாம் மெதுவா, நிதானமா படிக் கலாம்'' என்று கண் சிமிட்டி, ''நான் குளிச்சுட்டு வந்துட றேன் மைத்தி. நீ வேணும்னா கீழே போ'' என்று அனுப்பி னான்.

கணவனின் முதுகையே ஏமாற்றத்துடன் வெறித்தவள், ''ம்க்கும்! கீழே போய் நான் என்ன செய்றது? உங்க முறை பொண்ணுங்களைத்தான் முறைச்சுப் பார்க்கணும்'' என்று சலித்தபடியே கீழே இறங்கிச் சென்றாள்.

அதன் பின்பு அன்றைய பொழுது ரெக்கைக் கட்டிப் பறந்தது மைத்ரேயிக்கு. மணமக்களை வீட்டில் பார்க்க வருபவர்களும், பெண்ணை எடை போட வருபவர் களும் என ஆட்கள் வந்த வண்ணமிருந்தனர்.



''என்ன மாமா? வீட்டிலேயே தங்க மாட்டீங்க? இன் றைக்கு என்ன இவ்வளவு நேரம் வீட்டிலேயே இருக்கீங்க?'' சுதர்சனை வந்திருந்த பெண்களுள் ஒருத்தி கேலி செய்ய.

''உலகமெங்கும் படுக்கை விரித்தும் உறங்காமல் அலைகிறவன் மாதிரிடி என் பேரன்! ஓய்வு ஒழிசலே இருக் காது. இன்றைக்குத்தான் வீட்டில் தங்கப் போறானாக் கும்?'' என்றார் சுவற்றில் சாய்ந்து வெற்றிலையைக் குதப்பிக் கொண்டிருந்தப் பாட்டி ஒருவர்.

''இந்தப் பாட்டிக்கு வேற வேலையில்லை! போங்க பாட்டி! எப்பப் பாரு ஏதாவது ஒரு விடுகதையை எடுத்துவிட வேண்டியது. அது யாரு உங்க பேரன் மாதிரி இன்னொருத்தரு?''

''ஏன்மா மைத்ரேயி? உனக்கு விடுகதைச் சொல்லத் தெரியுமா? இதுக்குப் பதிலைச் சொல்லு பார்ப்போம்'' என்று சவால் விட்டார் பாட்டி.

'இவன் தான் நைட் தூங்கவே இல்லைன்னு சொன் னானே? அதைக் கேட்டுட்டு இப்படிக் கிண்டல் செய் றாங்களே? கடவுளே!' என்ற பயத்துடன் கணவனைப் பார்த்துக் கொண்டிருந்தவளைப் போய் விடுகதைக்கு விடை சொல்லச் சொன்னால் என்ன சொல்வாள்?

மனைவியின் பார்வையின் பொருளை உணர்ந்தவ னுக்குச் சிரிப்பு தான் வந்தது.

ஊஞ்சலில் ஆடியபடியே அன்றைய செய்தித் தாளைப் படித்துக் கொண்டிருந்த சுதர்சனின் தந்தை லோகநாதன், ''டவுன் பொண்ணுகிட்ட கேட்டால் இதெல்லாம் எங்கே யிருந்து பாட்டி தெரியும்?'' என்றுவிட்டு,

மருமகளிடம், ''இவங்களை இந்தக் கிராமமே விடு கதை பாட்டின்னுதான் கூப்பிடும்மா. உலகெல்லாம்

படுக்கை விரித்தும் உறங்காமல் அலையறது கடலலை. அந்தக் கடலலை மாதிரி நிற்காமல் வேலை செய்வான் உன் புருஷன்னு சொல்றாங்கம்மா'' என்று அவள் துணைக்கு வந்தார்.

உணவருந்திவிட்டு லோகநாதனுடன் வெளியே சென்ற கணவனை, மைத்ரேயி பிறகுப் பார்த்து விளக்கு வைக்கும் நேரத்திற்குத் தான். அதற்குள் அவளை அங்கிருந்தவர்கள் ஒருவழி செய்து விட்டிருந்தனர்.

''ஏன் வரலக்ஷ்மி? உன் மருமகளை நகைக் கொண்டு வந்து காட்டச் சொல்லேன்... பார்க்கலாம். டவுனில் மாடல் எல்லாம் நல்லாயிருக்குமில்ல? என் பெண்ணுக்கும் அடுத்த மாசம் கல்யாணம் வைச்சிருக்கோம். உன் மகன் கல்யாணத்தில் தூரத்தில் இருந்து பார்த்தது. சரியா தெரியலை'' என்று சிலர் மைத்ரேயியிடம் அவள் நகைகளைக் காட்டச் சொன்னார்கள்.

வரலக்ஷ்மி அப்பொழுது தான் ஏதோ வேலையாக எழுந்துப் போக, மைத்ரேயி, ''நீங்க கல்யாணத்தில் பார்த்தது கவரிங் நகை பெரியம்மா. புடவைக்கு மேட்சிங்கா ப்யூட்டி பார்லரிடமிருந்து வாடகைக்கு வாங்கினது. நேற்றே திரும்பக் கொடுத்துட்டு தான் வந்தோம். என்னோடது இங்கே கொஞ்சம் தான் கொண்டு வந்தேன்'' வெகுளியாகக் கூறியபடி நகைகளைக் காண்பித்தாள்.

''ஓ! கவரிங் நகையா? இதெல்லாம்... அசல் தானே?'' கண்ணில் விஷமத்துடன் ஒருவர் கேட்க,

இன்னொருத்தி, ''அந்தக் கவரிங் நகையும் இரவல் தானாம் அக்கா!'' என்று கேலியாக எடுத்துக் கொடுக்க, மைத்ரேயிக்கு முகம் விழுந்துவிட்டது.

''உனக்கு, உங்க வீட்டில் எழுபத்தஞ்சு பவுன் நகை போட்டாங்கன்னு சொன்னாள் லக்ஷ்மி! எனக்கு



என்னம்மா தெரியும் இந்த டவுன் விவகாரமெல்லாம்? ஏதோ தெரியாமல் கேட்டுட்டேன்'' என்று அங்கிருந்து அகன்றவர், வரலக்ஷ்மியிடம் நேராகச் சென்று,

''என்னச் சொல்லு... உன் பெரிய மனசு யாருக்கு வரும் லக்ஷ்மி? எல்லாம் கவரிங் நகையோட மருமகளை வீட்டுக்குக் கூப்பிட்டுட்டு வந்திருக்கே?'' என்று வாழைப் பழத்தில் ஊசி ஏற்றிவிட்டுப் போனார்.

சற்று நேரம் கழித்து பின்புறம் சென்ற மைத்ரேயியின் செவியில், ''போயும் போயும் ஒண்ணும் இல்லாத வீட்டில் பொண்ணு எடுத்து இருக்காள் இந்த வரலக்ஷ்மி. என் மாப்பிள்ளைக்கு என்ன குறை? அவனைப் போய் இப்படி ஒரு பாழுங்கிணத்தில் தள்ளிட்டாங்களே இந்த லோகு அண்ணனும், லக்ஷ்மியும்'' என்று என்னமோ கிணற்றில் விழுந்தவர்களை இவர்கள் தான் வந்து காப்பாற்றுபவர்கள் மாதிரி புலம்பிவிட்டுச் சென்றது விழ, அவளுடைய கண்ணில் ஆத்திரமும் கண்ணீரும் ஒரு சேர வந்தது.

எப்படியெல்லாம் பேசுகிறார்கள்?

யாரிடமாவது சொல்லி ஆற்றிக் கொள்ளலாம் என்றாலோ யாரையும் காணோம். அப்படியே அம்மா இவள் கண்ணில் தென்பட்டாலும், ''அக்கம் பக்கம் பார்த்துப் பேசு மைத்ரேயி! அதெல்லாத்தையும் மனசில் போட்டுக்காதே!'' என்ற அறிவுரை மழை வேறு!

இந்த சுதர்சனையோ கண்ணிலேயே காணவில்லை. ஏதுடா... ஒருத்தி புதுசா கல்யாணம் செய்து கூப்பிட்டு வந்திருக்கோமே?! கூட இருப்போம் என்று அவனாவது நினைக்கணும். இல்லை இங்கே இருக்கவங்களாவது சொல்லணும்.

எதுவுமில்லை! இதோ... மூலையில் அடுக்கி வைச்ச நெல்லு, வத்தல், உளுந்து மூட்டை மாதிரியே என்னையும் போட்டுட்டு போயிட்டான். இந்த வாடை வேற மூச்சே விட முடியலை! வரட்டும் வைச்சுக்கறேன்!

பகல் பொழுதெல்லாம் இப்படியென்றால், இரவு நெருங்க நெருங்க வேறு மாதிரி தொல்லை அவளுக்கு. பள்ளியறையும் மணப்பெண்ணையும் அலங்காரம் செய்கிறோம் பேர்வழிகள் என்று மைத்ரேயியைத் தர்ம சங்கடத்திற்கு ஆளாக்கிக் கொண்டிருந்தனர்.

அவளுடையத் தோழிகள் திருமணத்தின் போது அவளைக் கேலி செய்ததெல்லாவற்றையும் நாணத்துடன் ரசித்தவளுக்கு, இங்கே அவளுக்கு முகமோ அறிமுகமோ தெரியாதவர்கள் கேலியும் கிண்டலும் செய்ததை ரசிக்க முடியவில்லை.

தன்னுடன் அக்காவோ அம்மாவோ இருந்தால் தேவலாம் போல தோன்ற, இரவை நினைத்து பயமும், கூச்சமும் சேர, ஒரு நிலைக்கு மேல் கண்ணில் துளிர்த்த நீரை யாருக்கும் தெரியாமல் அவளால் மறைக்க இயலவில்லை.

ஆனால் அதற்குமே அந்தப் பெண்கள், ''என்ன ஆனந்தக் கண்ணீரா? இல்லை பயமா? எதுக்கும் மாமாகிட்ட சொல்றோம்... கொஞ்சம் பார்த்து நடந்துக்கச் சொல்லி!'' என்று கேலி பேசிச் சிரிக்க, எல்லோரையும் அடித்து விரட்ட வேண்டும் போல இருந்தது மைத்ரேயிக்கு.

இதில் எப்பொழுதும் போல அன்றும் இரவு உடை உடுத்தப் போனால், இந்த அத்தை எல்லோரோடும் சேர்ந்துக் கொண்டு, ''புடவை கட்டு மைத்ரேயி!'' என்று வேறு படுத்தல்!

அம்மா வாயைத் திறக்கணுமே!?



இது எல்லாம் சேர்ந்து ஒரு வழியாக மைத்ரேயி சுதர்சனைச் சந்தித்தப் பொழுது, அவள் சொல்ல வேண்டுமென நினைத்திருந்தது சொல்ல முடியாமல் போக, கண்ணில் கண்ணீர் முட்டிக் கொண்டு நிற்க கணவனிடம், ''எனக்குத் தூ... தூக்கம் வருது. இன்னமும் சில நாட்கள் கழித்து...'' என்றாள் தயக்கத்துடன்.

ஒரு பக்கம் பயமிருந்தாலும், ஒன்றுமே அறியாதவள் இல்லையே மைத்ரேயி. கணவன் ஆசையுடனும் எதிர்பார்ப்புடனும் இந்த இரவை எதிர்நோக்கியிருந்தது அவளுக்கும் தெரியுமே?

காலையில் இதே மாடியறையில் தன்னுடன் சகஜமாகப் பேசிய மனைவியைச் சில கணங்கள் கூர்ந்த சுதர்சன், அவளைப் புரிந்தவனாக, மனைவியைச் சிறிது ஆசுவாசப்படுத்த எண்ணி, குரல் கனிய, ''ஒண்ணும் பிரச்சனையில்லை மைத்தி! கொஞ்சம் நேரம் பேசிட்டு இருக்கலாமா? இல்லை இப்பவே தூங்கணுமா?'' என்று வினவினான்.

கணவன் 'ஏன், என்ன எதுக்கு?' என்று கேட்டிருந்தாலும் பரவாயில்லை போல! இவன் ஏன் இப்படி இருக்கான்? அவனுக்கு கொஞ்சம் கூட ஏமாற்றமே இல்லையா? என்று அதற்கும் அவளுக்கு கோபமா ஏமாற்றமா என்று சொல்ல முடியாத வண்ணமிருந்தாள்.

''ம்ம்.'' என்று முணுமுணுத்தவளைத் தன்னருகே உட்கார வைத்துக் கொண்டு வசதியாக கட்டிலில் கால் நீட்டி சாய்ந்து கொண்டான்.

அவள் கரத்தை எடுத்து தனது இரு கரங்களுக்குள் சிறைப் பிடித்தவன், ''ம். இன்றைக்கு நீ என்னெல்லாம் செய்தே? யாரைப் பார்த்தே? என்ன சொன்னாங்க? எல்லாம் சொல்லு'' என்று பேச்சை ஆரம்பித்தான்.

எப்போதடா கொட்டலாம் என்றிருந்தவள், ''உங்களைத் தவிர இந்த ஊரில் இருக்க ஆடு, மாடு, கோழி உள்பட எல்லோரையும் பார்த்தேன்'' என்றாள்.

''ஹா ஹா! அதான் கோபமா கண்ணம்மாவிற்கு? நான் செய்றது ஆபீஸ் வேலையில்லையே. லீவ் போடறதுக்கு? இது அறுவடை காலமில்லையா? தோட்டத்தில் வேலை இருக்கேடா? நாமளே போய் பார்க்கலைன்னா எப்படி?''

''ம்க்கும்! அதுக்கு இன்றைக்கே போகணுமா? எத்தனைப் பேரு இருக்காங்க. மாமா பார்த்துக்க மாட்டாரா? எங்க அம்மா, உங்க அம்மா கூட அப்படியே ஒன்றிப் போயிட் டாங்க. அப்பா காலையில் போனவர் தான். இப்ப உங்கக் கூட தான் திரும்ப வந்தார். யாரையுமே எனக்கு இங்கே தெரியலை.''

தன் தோள் மீது சாய்ந்திருந்த மனைவியின் முதுகை வருடியபடியே, ''ரெண்டு நாள் பார்த்து, பேசினால் எல் லோரையும் தெரிஞ்சுடப் போகுது. அதுவுமில்லாமல், நான் இங்கேயே இருந்தால் நம்மைக் கிண்டல் செய்தே ஒரு வழி ஆக்கிடுவாங்க'' என்றான்.

''இல்லாட்டி மட்டும் கிண்டல் செய்யலை! எப்படி யெல்லாம் பேசறாங்க? ஆமா... அதென்ன ஊரில் பாதிப் பேரு உங்களுக்கு முறைப் பொண்ணுங்களாமா? விட் டால் என்னை முறைச்சு முறைச்சே பஸ்பம் ஆக்கிடு வாங்க போல!'' என்று இப்பொழுது அவள் கணவனைப் பஸ்பம் ஆக்கும் முயற்சியில் இறங்கினாள்.

சிரித்துவிட்டு, அவள் கன்னத்தில் தன் மூக்கை வைத்து உரசியவன், ''ஹப்பா... என்னமா கோபம் வருது உனக்கு? பிறப்பால் வந்த உறவுக்கு நான் என்ன செய்ய முடியும்டா? ஆனால் எத்தனைப் பேரு இருந்தாலும் என்னை முறைக்கிற உரிமை உனக்கு மட்டுமே'' என்றான் சமயோஜிதமாக.



கணவனின் செய்கையிலும் பேச்சிலும் சிரித்தவள், நிமிர்ந்து அவனைப் பார்த்து, ''பிழைச்சுக்குவீங்க!'' என்று அவன் மூக்கைப் பிடித்து ஆட்டினாள்.

வெண் பற்கள் பளிச்சிட சிரிக்கும் மனைவியின் சிவந்த அதரங்களையே பார்த்தவன், ''பின்னே? வாய் உள்ள பிள்ளை தான் பிழைக்கும் என்று பழமொழியே இருக்கே?'' என்று மெல்ல கிசுகிசுத்து, அந்த வாய் வேறு என்னென்ன வேலை செய்யுமென்றும், காலையில் ஆரம்பிக்கவிருந்தப் பாடத்தை இப்பொழுது அவளுக்கு செவ்வனே கற்றுக் கொடுக்கலானான்.

இமைகள் படபடக்க விழி மூடி இருந்தவளின் கன் னத்தைப் புறங்கையால் மெல்ல வருடிய சுதர்சன், அவள் முடி கோதி, நெற்றியில் முத்தமிட்டு, புன்னகையுடன் அவனுடைய மார்பில் மனைவியை இழுத்தணைத்துக் கொண்டான்.

கணவனின் மார்பில் படுத்திருந்தவள், அவன் பிடரிக் கேசத்தில் கைகளை விட்டு அளைந்தவாறே, என்ன பேசுவதென்று தெரியாமல், ''நைட்டி போட்டுட்டு வந் திருப்பேன். அத்தை தான் புடவை கட்டச் சொன்னாங்க'' என்றாள் தனக்கே கேட்காத முணுமுணுப்பான குரலில்.

சுதர்சனின் ஒரு கரம் வேறு அவளது இடையில் தான் தவழ்ந்து கொண்டிருந்தது. அந்த இனிமையான இம்சையை அனுபவித்துக் கொண்டிருந்தவளின் குரல் ஏன் குழை யாது?

மெல்ல சிரித்த சுதர்சன், ''ஃபர்ஸ்ட் நைட்டுக்கு வர்றவள் நைட்டியா போட்டுட்டு வருவாள்? சேலை தான் வசதி'' என்று கண் சிமிட்டினான்.

''ஏனாம்?'' என்று கேட்ட மைத்ரேயியின் பார்வைக் குப் பதில் சொல்லும் விதமாக, அவளது இடையிலிருந்த அவனது கரம், கணவனது உரிமையாக சில சலுகை

களையும் சுதந்திரத்தையும் தானே எடுத்துக் கொள்ள, எல்லை மீறும் அவனது கரத்தைப் பற்றி அழுத்தினாள் மைத்ரேயி.

அவள் செவி மடலில் இதழ் பதித்து கடித்தவன், ''இன்னமும் தூக்கம் வருதா? இல்லை...'' என்று மெல்ல இழுக்க,

''போயே போச்சே! இட்ஸ் கான்!'' என்ற ரகசியத்தைக் கிசுகிசுத்து சுதர்சனின் கழுத்தில் மாலையாய் கோர்த்த கரத்துடன், நாணத்தில் சிவந்த முகத்தோடு அவன் மார்பில் புதைந்தாள் அவனது இளம் மனைவி.

* * *

இப்பொழுது அதை நினைவுக் கூர்ந்தவள், கணவனின் வெற்றிச் சிரிப்பில், மேலும் முகம் சிவந்து, ''சரியான திருட்டு ராஸ்கல் நீங்க! நான் தூங்கணும் என்று சொல்லும்போதே என்னை விட்டிருக்க வேண்டியது தானே?'' என்று வழக்குத் தொடுத்தாள்.

''ஹா ஹா! நீ ஒரே பிடியில் இருந்திருக்க வேண்டியது தானே? நானா உன்னைத் தூங்க வேண்டாம்னு சொன்னேன்? நானா உன் தூக்கத்தைக் கெடுத்தேன்?'' என்றான் சல்லாபமாக.

''பின்னே? என் தூக்கத்தை வேற யாரு கெடுத்தாங்களாம்?'' என்று குழைந்து, ''செய்றதையெல்லாம் செய்துட்டுப் பேசறதைப் பாரு! இந்த வாய் தானே எல்லாத்துக்கும் காரணம்?'' என்று கொஞ்சியவள், வலிக்காமல் அவனது உதட்டைப் பிடித்துக் கிள்ளினாள்.

கிள்ளிய விரலைப் பிடித்து மெல்ல கடித்து முத்தமிட்டவனின் மார்பில் கோலம் வரைந்தவாறே, ''நான் ஒண்ணு சொன்னால் நீங்க கேட்பீங்களா?'' என மெதுவாக ஆரம்பித்தாள்.



என்னவென்று பார்த்தவனிடம், ''இல்லை... நாம சென்னை இல்லைன்னா பக்கத்தில் ஏதாவது டவுனுக்கு மூவ் செய்துடலாமா? இந்தக் கிராமம் வேண்டாமே?!'' என்றாள் தயக்கத்தோடு.

அதிர்ச்சியோடு மைத்ரேயியைப் பார்த்தவனுக்கு ஒன்றும் புரியவில்லை. இது எங்கேயிருந்து திடீரென வந்தது? வந்து ஒரு நாள் கூட ஆகவில்லை... அதற்குள் என்ன?

''என்னடா... இப்ப வந்து சொல்றாளே-ன்னு தப்பா நினைக்காதீங்க. இன்றைக்கும் நீங்க வெளியே கிளம்பிப் போயிட்டால் அப்புறம் சொல்ல நேரமாகலாம். அதான் ஞாபகம் வரும் போதே சொல்லிடறேன்.''

''ஏன்?'' உணர்ச்சியைக் காட்டாத குரலில் கேட்டவனுக்குக் குழப்பத்தையோ உள்ளே எழுந்த கோபத்தையோ குரலில் காட்டாமல் பேச பிரம்ம பிரயத்தனம் செய்ய வேண்டியிருந்தது.

கணவனின் குரல் வித்தியாசமோ இல்லை அதன் பொருளோ இன்னமும் புலப்படாத மைத்ரேயி, அவனின் எண்ணத்தைப் போலவே, ''நான் இங்கே வந்து ஒரு நாள் கூட ஆகலை. என்னைப் பற்றி என்ன தெரியும் இங்கே இருக்கவங்களுக்கு? நாகரீகமே இல்லாமல் என்னென்னமோ பேசறாங்க தெரியுமா?! நீங்களும் என்னமோ கல்யாணமாகி நூறு வருஷமான மாதிரி ஆளையே காணோம்? எனக்கு இங்கே யாரைத் தெரியும்?'' என்றவளுக்குக் குரல் சற்றே கமறியது.

இவளும் நான் நினைப்பது மாதிரியே நினைக்கிறாளே? ஆனால்...

மனம் இளக, ''ஷூ! மைத்ரேயி! நீ சொல்ற மாதிரி வந்து ஒரு நாள் தானே ஆச்சு! இன்னமும் சில நாளானால் அவங்களே உன்னைப் பற்றி புரிஞ்சுப்பாங்க. அம்மா

சொன்னாங்களா? இல்லையே? நாம எங்கே போனாலும் அது நமக்குப் புது ஊரு, புது இடமா தானே இருக்கும்? அங்கே மட்டும் யாரை நமக்குத் தெரிஞ்சு இருக்கப் போகுது?'' என்றவன்,

''அம்மா, அப்பா எல்லோரும் இங்கே இருக்கும் போது நாம எங்கே போறது?'' என்று எடுத்துச் சொன்னான்.

''அத்தை, மாமாவை நம்மளோட கூட்டிட்டுப் போயிட லாம்.''

''தோட்டம், அரிசி, மில், வீடு இது எல்லாத்தையும் யாரு பார்த்துப்பா?''

''ம்க்கும்! ஆடு மாடு எல்லாத்தையும் கூடப் பார்த் துக்க ஆளே இல்லை தான்!''

தன்னுடைய வேர் இங்கேயென்று இவளுக்கு எப்படி புரிய வைப்பது?

''நீ என்னைக் கல்யாணம் செய்ய ஒத்துக்கிட்ட போதும், நான் இதே கிராமத்தில் இருந்தவன் தானே? கல்யாணத்துக்குப் பிறகு எல்லாத்தையும் விட்டுட்டு நாம வேற எங்கேயாவது குடி போகலாமென்று சொல்லி நான் உன்னைக் கல்யாணம் செய்துக்கலையே?''

வேகமாக, ''நானும் அப்படி நினைச்சு கல்யாணத்துக் குச் சம்மதிக்கலை'' என்றவள், ''ஆனால்... இங்கே... அடிக்கடி கரண்ட் போகுது. வீட்டில் நெல்லு அதிதுன்னு போட்டு வைச்சிருக்கு. மூச்சே விட முடியலை. வீட்டில் எப்போதுமே கூட்டம் இருக்கிற மாதிரி இருக்கு.

கொஞ்சம் கூட ப்ரைவசியே இருக்கிற மாதிரி தெரிய லைங்க. நீங்களும் கூட இருக்க மாட்டேங்கறீங்க. ஹனி மூன் கூடப் போக முடியாதுன்னு முன்னாடியே சொல்லி யிருந்தீங்க'' என்று மூச்சு வாங்க முடித்தாள்.



இவளுக்கு இப்பொழுது என்ன குறை? எதுவுமே மாற்ற முடியாதது இல்லையே?

மனைவியின் முதுகை ஆறுதலாகத் தடவிக் கொடுத் தவன், ''கரண்ட் - முதல்ல ஒரு ஜெனரேட்டர் வாங்கிட லாம். மற்ற வாடை வர முடியாத மாதிரி வாசல் பார்த்து இருக்க ரூமிலோ இல்லை வேற எங்கேயாவது மூட்டை களைப் போடச் சொல்லிடறேன். எப்பவும் வீட்டில் இத்தனை கூட்டமிருக்காது. புதுசா வந்த உன்னைப் பார்க்க வந்தக் கூட்டம் பாதி. அப்புறம், என்னோடவே இருக்க முடியலைங்கறது... அது இப்ப கொஞ்சம் கஷ்டம் தான். அறுவடை சீசன் முடிஞ்ச பிறகு கொஞ்சம் டைம் கிடைக்கும். அப்போ நாம எங்கேயாவது போயிட்டு வரலாம். ஹனிமூனே வாழ்க்கைக் கிடையாதும்மா. ஆனால் நீ சொல்ற முக்கால் வாசி கஷ்டங்களும் நாம எந்த ஊருக்குப் போனாலும் நம்ம கூடவே வரும் மைத்ரேயி!'' என்றான்.

''.........''

''நமக்கு ஏற்ற படி நம்மைச் சுற்றி இருக்கிறதையும், நம்மைச் சுற்றி இருக்கிறதுக்குத் தக்கபடி நம்மையும் மாற்றி அமைச்சுக்கிட்டால் தான் சந்தோஷமா வாழ முடியும்'' என்று அதை மைத்ரேயி கிரகித்துக் கொள்ள சற்று இடைவெளி விட்டான்.

''நீங்க என்னைச் சமாதானம் செய்றதிலேயே குறியா இருக்கீங்க. அதே மாதிரி என்னுடைய மனநிலையையும் நீங்க புரிஞ்சுக்கணும்னு நினைப்பேன் இல்லையா சுதா?''

அவள் பக்கமிருக்கும் நியாயங்களையும் பார்க்காம லிருக்க முடியாது தான்! ஆனால் இந்த வீட்டிற்கு வந்த

ஒரு நாளிலேயே இப்படியொரு முடிவுக்கு வந்திருக் கிறாள் என்றால்...?

இக்கட்டான மனநிலையில், ''நான் ஒண்ணு கேட் கிறேன். பதில் சொல்லு'' என்றான்.

''கேளுங்க'' என்றவளிடம், ''இந்தக் கிராமத்தைத் தானே உனக்குப் பிடிக்கலை? என் மேல் எதுவும் வெறுப்போ இல்லை பிடித்தமில்லாமலோ இல்லையே?'' என்று தயக் கத்துடனே வினவியவனின் வாயை இறுக மூடினாள் மைத்ரேயி.

பெரிய பெரிய நகரத்தில் இருப்பவன் கூட அவள் கணவனிடம் பிச்சை வாங்க வேண்டுமே? இருவரையும் பார்த்தவர்கள் பொருத்தமான ஜோடி என்று சொல்லவில் லையா? அவன் நடை, உடை சரியில்லையா? படிப்பு இல்லையா? நாகரிகம் இல்லையா? மரியாதை தெரிய வில்லையா? இல்லை எல்லாவற்றுக்கும் மேல் அவன் குணம் தான் கேடா?

முதல் ராத்திரி மயக்கத்தில் எல்லாவற்றுக்கும் சரி யென்று தலையை ஆட்டவுமில்லை; கோபமும் பட வில்லை. இவனிடம் பிடிக்காமல் போக என்ன இருக்கிறது?

''என்ன நீங்க இப்படி எல்லாம் கேட்கறீங்க? பிடிக் காமல் தான் கல்யாணம் செய்துக்கிட்டேனா? பிடிக்காமல் தான்...''

அழுகைக் குரலில் மனைவி கேட்க, ''சாரி மைத்ரேயி. தெளிவு படுத்திக்கத்தான் கேட்டேன். அப்போ எனக்காக நீ ஒண்ணு செய்வியா?'' என்று கேட்டான்.

''சொல்லுங்க.''

''ஒரு வருஷம், ஒரே வருஷம் நீ இங்கேயிருந்து, முழு மனசோட உன்னை இந்தச் சூழலோடு பொருத்திக்கப்



பாரு. அப்புறமும் இது ஒத்து வராதுன்னு உனக்குத் தோன்றினால்... அப்புறம் இதைப் பற்றி நாம பேசலாம். எனக்காகச் செய்வியா?'' என்று மனைவியின் கண்களை ஆழ்ந்து நோக்கிக் கேட்டான் சுதர்சன்.

கணவன் ஒரே வார்த்தையில் 'முடியாது' என்று பதில் சொல்லாமல், கோபமும் படாமல் அவளுக்கு எல்லாவற் றையும் விளக்கிச் சொல்லும் போது, தான் பிடித்த முய லுக்கு மூன்றே கால் என்று அவளும் எப்படிச் சொல்வாள்?

''உங்களுக்காக இல்லை... நமக்காகச் செய்றேன். கண்டிப்பா செய்றேன் அத்தான்!'' என்றவளை நிம்மதிப் பெருமூச்சுடன் அணைத்துக் கொண்டான் சுதர்சன்.

அவனை நிமிர்ந்துப் பார்த்த மைத்ரேயி, ''இப்படிக் கேட்டேன்னு என் மேலே கோபமில்லையே?'' என மெதுவாக வினவவும், மனைவி மேல் எத்தனை கோபம் என்று விதம் விதமாக காட்டி, அவளுக்கு அடுத்த பள்ளி யறைப் பாடத்தையும் கற்றுக் கொடுக்கலானான் சுதர்சன்.



# 3

நாட்கள் செல்லச் செல்ல மைத்ரேயிக்கு செந்தாமரைக் குளத்தின் பெரிய வீடு பழக்கத்திற்கு வந்தது.

அந்த வீட்டில் சமையல் வேலை, சுற்று வேலை என்று ஏவலுக்கு வேலையாட்கள் இருந்தாலும், சோம்பியிருக்க முடியாது என்பதையும் நன்றாகவே உணர்ந்திருந்தாள் மைத்ரேயி.

கிழக்குப் பார்க்க அமைந்திருந்த அப்பெரிய வீட்டைச் சுற்றி அழகாகப் பராமரிக்கப்பட்டிருந்த பாத்திச் செடிகள் அழகுக்கு அழகு சேர்த்தன.

வீட்டின் முன்பிருந்த திறந்தவெளி சிறிய அளவிலான மைதானத்தை நினைவூட்டுவது போல் இருக்க, அந்தத் திறந்தவெளியின் ஒருபுறம் வேப்பிலை, மா மற்றும் நெல்லி மரங்கள் கண்ணுக்குக் குளிர்ச்சியாய் வருவோரை கவரும் விதமாய் வீற்றிருந்தன.

வீட்டின் காம்பவுண்ட் சுவரைத் தாண்டி பின்புறத்தில், தெற்கு நோக்கிய வாயிலுடன் ஒரு சிறு பிள்ளையார் கோவில் இருந்தது.

முற்றத்தைத் தாண்டிய வாசல் தாழ்வாரத்தில், ஓங்கி உயர்ந்து கம்பீரமாக நிற்கும் தூண்கள் வாயில் காப்பாளனை எப்பொழுதும் நினைவூட்டுவது போல இருக்கும்.

அந்தத் தாழ்வாரத்தைத் தாண்டி தெரிந்தவர் தவிர, யாரையும் அவர்கள் வீட்டு 'பைரவா' உள்ளே அண்ட விடாது.

மைத்ரேயிக்கு சின்ன வயதிலிருந்து நாய், பூனை போன்ற செல்ல வளர்ப்புப் பிராணிகள் என்றாலே அலர்ஜி. ஆனால் இங்கே செந்தாமரைக்குளம் வந்தப் பிறகு வேறு வழியில்லாமல் அவைகளுடன் வாழப் பழகிக் கொண்டாள்.

ராஜபாளைய வகையைச் சேர்ந்த அந்த நாட்டு நாயை சுதர்சன் அவளுக்கு முதன் முறை அறிமுகப்படுத்தி வைத்தபோது எழுந்தப் பயத்தில் மயக்கம் போட்டே விழுந்திருப்பாள் மைத்ரேயி.

பின்னே? நாயைக் கண்டாலே பின்னங்கால் பிடரியில் அடிக்க ஓடுபவளை, அவன் கையணைப்பில் நிறுத்தி பைரவர்க்கு அறிமுகப்படுத்தி வைக்கும்போது, அது தன் சந்தோஷத்தைக் காட்டும் வகையில் இரண்டு கால்களையும் தூக்கியபடி தோள் வரை எழும்பி அவளுக்கு முகமன் செய்தால்...?



என்னதான் சுதர்சன் அருகிலிருந்து தைரியம் சொன்னாலும் மைத்ரேயியால் எளிதில் தன் பயத்தை விட்டு விட முடியவில்லை.

அதன் பிறகு தன் வீட்டு எஜமானியைப் பார்க்கும் போதெல்லாம் பைரவா அவளதுக் காலைச் சுற்றிச் சுற்றி வருவது வழக்கமான ஒன்று தான். பைரவனின் செய்கைக்கு எதிரொலியாக அவளால் முடிந்தரை பயத்தை வெளிக்காட்டாமல், உள்ளே சென்று விடுவதும் வாடிக்கையாகி விட்டது அவளுக்கு.

அதே போன்று சென்னையில் வீட்டிலிருக்கும் பொழுது நைட்டி அணிந்து கொள்வதைத்தான் மிகவும் வசதியாகக் கருதுவாள் மைத்ரேயி. ஆனால் இங்கு செந்தாமரைக்குளத்திலோ எந்நேரமும் யாராவது ஊர்க்காரர்கள் வீட்டிற்கு வந்து போய் இருப்பதால் பகல் நேரங்களில் நைட்டி அணிந்து கொள்வது சாத்தியப்படுவதில்லை.

முதல் நான்கு நாட்கள் சிரமமாய் உணர்ந்தாலும் இப்பொழுது வீட்டிற்குள் புடவையும் சுரிதாரும் அணிந்து கொள்வதில் விருப்பம் கூட உண்டாகியது. வேறுபாடாக ஒன்றும் தோன்றவில்லை.

இயல்பிலும், உடை விஷயத்திலும் வெகு சில நாட்களில் அவளுக்கு ஏற்பட்ட மாற்றம், இட விஷயத்திலும் ஏற்பட்டால் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் இட விஷயம் தொடர்பாக நிகழும் மன மாற்றங்கள் அவளை ஜாண் ஏற்றி முழம் சறுக்கும் நிலையில் தள்ளின.

சுதர்சன் பரம்பரை பரம்பரையாக வாழும் பூர்வீக வீட்டில் வளைய வந்ததில் ஒருவித பூரண உணர்வு

அவளுக்கு ஏற்படுவதை மைத்ரேயியால் உணர முடிந்தது.

வாசல் பக்கம் வரும் வேளையில் மட்டுமல்லாது சில சமயங்களில் அந்த கம்பீரமான தூண்களைப் பார்ப்பதற் காகவே கூட தாழ்வாரத்திற்கு மைத்ரேயி வருவதுண்டு. ஏனென்றால் அவை அவளது நாயகனின் சிறு வயதுப் பிராயத்தை அவளுக்கு நினைவு படுத்தின!

''சின்ன வயதில் ஏதாவது ரொம்ப சேட்டை செய்தால் என்னை இந்த முற்றத்துத் தூணில் தான் அம்மா கட்டிப் போடுவாங்க. அய்யா அந்தத் தண்டனைக்கும் அசராமல் வற்றவங்கப் போறவங்களை தாஜா பண்ணி பிரண்ட் பிடிச்சு கயிறை அவிழ்த்து விடச் சொல்லுவேன் கண் ணம்மா'' என்று ஒருமுறை சுதர்சன் அவனிடம் சொல்லி யிருந்தான்.

மைத்ரேயியின் மனக்கண் முன், கோகுலத்தில் யசோதா வெண்ணெய் திருடும் கண்ணனை உரலில் கட்டி வைத்திருந்தது போல இந்தத் தூணில் சின்ன வயது சுதர்சனை வரலக்ஷ்மி கட்டி வைத்திருப்பதைப் போல காட்சி ஓடும்.

அத்தோடு தன்னுடைய பிள்ளையும் சேட்டை செய் யும்போது, அதே போன்று அவனையோ அவளையோ அந்தத் தூணில் கட்டி வைப்பது போல இனிய கற்பனை கூட கண் முன் விரியும் அவளுக்கு.

ஆனால் அந்தத் தாழ்வாரத்தில் அவளது கற்பனை மேலும் சில மணித்துளிகள் நீடிக்கும் முன்பே 'பைரவா' வாலையாட்டிக் கொண்டு காலைச் சுற்றி சுற்றி வர, மைத்ரேயி தன் கற்பனைக்குக் கடிவாளமிடுவதோடு, ''நம்ம குழந்தையையும் இந்த பைரவா இப்படித்தானே



பயமுறுத்தும்?'' என்று பயந்தபடியே உள்ளே செல்லு வாள்.

செந்தாமரைக்குளம் பெரிய வீட்டிலிருந்த அடை யாளங்கள் ஒவ்வொன்றுக்குப் பின்பும் ஒரு கதையிருக்க, அந்த அடையாளங்கள் சுதர்சனின் பால்யத்தை நினை வூட்டுவதாய் இருந்ததோடு அவர்களது எதிர்கால சந்ததி யின் வாழ்க்கை முறையைப் பற்றி கோடிக் காட்டியதுடன் அவளது கனவையும் வளர்த்தது.

'ஹோம் வாஸ் நாட் மேட் இன் எ டே' (Home was not made in a day) என்ற வாக்கியத்தின் முழு அர்த் தத்தையும் அந்த பூர்வீக வீட்டின் ஒவ்வொரு அங்கமும் பறைசாற்றியது.

சுதர்சன் கைக்குழந்தையாக இருந்தபோது இந்த இடத்தில் தான் தொட்டில் கட்டியிருந்தார்களாம்...

இந்த வேப்ப மரத்து நிழலில் தான் விளையாடினானாம்...

ஊஞ்சலில் ஆடும் போது விழுந்து விட்டானென்று அந்தத் தளத்தில் கட்டிய ஊஞ்சலையே எடுக்கச் சொல்லி விட்டாராம் சுதர்சனின் தாத்தா.

அந்த வீட்டை விரிவுபடுத்திய போது சுதர்சனின் சிறு பாதம் பதிந்திருந்த தரையைப் பார்க்கும் போதெல்லாம் இன்றும் இனம் புரியாத சந்தோஷம் மைத்ரேயிக்குப் பரவியது.

புத்தகங்கள் அடுக்கி வைத்திருந்த அறையில் சுதர்சன் தீட்டியிருந்த பென்சில் ஓவியங்களை இன்றளவும் புது வர்ணம் பூசாமல் வரலக்ஷ்மி வைத்திருப்பது அவளுக்கு ஆச்சரியத்தை மட்டும் அளிக்காமல், அவர்களுக்கு அந்த வீட்டுடனிருந்த உணர்வுப் பூர்வமான பிணைப்பையும் உணர வைத்தது.

இப்படித் தலைமுறைத் தலைமுறையாக வாரிசுகளின் வாழ்க்கையைத் தனக்குள் தேக்கி வைத்திருக்கும் அடையாளங்களுடன் நிமிர்ந்து நிற்கும் பெரிய வீட்டை விட்டு சுதர்சனை பிரிப்பது நியாயமில்லையோ என்று கூட சில சமயங்களில் மைத்ரேயிக்கு ஐயம் எழுந்தது.

அந்த ஐயத்தின் வெளிப்பாடாக சுதர்சனுடன் அன்று மாலை வீட்டைச் சுற்றி நடைப் பயிலும் போது, ''இந்த வீட்டில் ஒவ்வொரு விஷயமுமே ஏதாவது ஒரு விதத்தில் உங்களை ஞாபகப்படுத்துது அத்தான். கிட்டத்தட்ட உங்க வாழ்க்கையோட ஒரு அங்கமாவே இந்த வீட்டைச் சொல்லலாமில்லையா?'' என்று மெல்லிய புன்னகையை உதிர்த்தாள்.

''நீ சொல்றது கரெக்ட் தான் மைத்தி. வெளியூருக்குப் போக வேண்டியிருந்தால் கூட எப்படா வீட்டுக்கு வருவோம்ங்கற உணர்வு தான் வரும். அந்த அளவுக்கு இந்த வீடு எனக்கு நிறைவைத் தரும்.''

''அப்படியொரு வீட்டை விட்டுக் கிளம்பலாமேன்னு நான் சொல்லும்போது உங்களுக்குக் கோபம் வரலையா அத்தான்?''

அவளது கேள்வியில் அசந்தவன், சின்னதாக ஒரு புன்னகையை மட்டும் சிந்திவிட்டு, ''கோபம் வந்து...?'' என்று கேலியாகச் சீண்டினான்.

''கோபம் வந்தது - வரலை என்று சொல்றதை விட்டுட்டு இதென்ன பதில்?''

''கோபம் வந்தால் எல்லாம் சரியாகிடுமா கண்ணம்மா? சரியாகிடும்ன்னா சொல்லு, கோபப்பட்டுடறேன்'' என்று சுதர்சன் சிரிக்காமல் சொல்ல, கணவனின் பேச்சும், மனமுதிர்ச்சியும் கண்டு பூரித்தாள் மைத்ரேயி.



அவனோடு சேர்த்து இயற்கையையும் உடன் ரசித்தபடியே வந்தவளை மலரின் நறுமணம் ஈர்க்க, ''ஏதோ பூ வாசம் இங்கே வருதில்ல? ரொம்ப நல்லாயிருக்கு அத்தான். ஆனால் இங்கே எந்தச் செடியிலும்...'' என்றபடி சுற்றும் முற்றும் பார்த்தாள்.

''நம்ம வீட்டை ஒட்டின மாதிரி இருக்கிற கோவில் மரத்தில் பூக்கிற பூவுடைய வாசம் தான் இது. நாகலிங்கப் பூ'' என்ற விளக்கத்தோடு அந்தப் பூவையும் சுதர்சன் சுட்டிக் காட்டினான்.

''ஹே! இந்தப் பூ பாருங்களேன். அரளி பூவுடைய ஹைப்ரிட் மாதிரி இருக்கு. இப்போதான் முதல் தடவை பார்க்கிறேன்'' என்றாள் ஆர்வத்துடன்.

அவளது உற்சாகத்தை ரசித்தவன், ''ம்... இந்தக் கோவில் அப்பா தான் மைத்தி கட்டினாங்க. நான் பிழைக்கணும்னு வேண்டுதல்...'' என்ற கூடுதல் தகவலையும் பகிர்ந்து கொள்ள, முகம் வெளிறினாள் அவனது அருமை மனைவி.

''என்னாச்சு அத்தான்?'' வினவும் போதே மைத்ரேயியின் கண்கள் கலங்கிற்று.

''ஹே!'' என்று கோர்த்திருந்தக் கரங்களை அழுத்தி ஆறுதல் சொன்னவன்,

''விவரம் தெரியாத வயசில், தவழ்ந்துட்டு இருந்த ஸ்டேஜ்ன்னு வைச்சுக்கோயேன்... அப்போ என்னைப் பாம்பு தீண்டிடுச்சாம். அந்தச் சமயத்தில் நான் பிழைக்கணும்னு வேண்டுதல். இந்த நாகலிங்க மரம் வைச்சது கூட ஒருவிதத்தில் நன்மை தான் தெரியுமா? இந்த வாசனைக்கும், நாகதாளி மரத்துக்கும் பாம்பு இந்தப் பக்கமே வராது. அதோட நம்ம வீட்டைச் சுற்றி

வைச்சிருக்கிற பாத்தியில் துளசி, வசம்பு, பெரியா நங்கை, சிரியா நங்கை, விஷமுறிவு செடி, மூலிகைன்னு எல்லாம் பார்த்துப் பார்த்து வளர்க்கிறார் அப்பா. அரிய மூலிகை வகையெல்லாம் தெரிஞ்சு வைச்சிருப்பார். நீ அவர்கிட்டேயே கேளு'' சர்வ சாதாரணமாய் விளக்கங் கள் தந்தான் சுதர்சன்.

அவனது விளக்கத்தில் மேலும் சஞ்சலமடைந்த மைத்ரேயி, ''எனக்கு இந்த விஷயம் கேட்டதிலிருந்து ஒரு மாதிரி திக் திக்குன்னு தான் இருக்கு அத்தான். உங்க கிட்ட சொல்றதுக்கென்ன? பைரவாவைக் கண்டாலே திகிலா தானிருக்கு. ஆனால் கூடவே இப்படியொரு ஆபத்து இருக்குன்னு தெரியறப்போ...'' தோள்களை நடுங்குவது போல் குலுக்கினாள்.

அவளது உணர்வுகள் புரிய, 'இவளிடம் சொல்லாமல் இருந்திருக்கலாமோ?' என்று தோன்றினாலும் தைரிய மூட்டும் விதமாக,

''எங்கே தான் ஆபத்தில்லை கண்ணம்மா? நகரங் களையே எடுத்துக்கோ... ரோட்டில் நடந்து போனால் கூட விபத்து எந்த ரூபத்தில் வரும்னு சொல்ல முடியற தில்லை. அதுக்காக ஜாக்கிரதையா இருக்கணுமே தவிர ரோட்டையே மாத்தணும்ன்னு சொல்லுவியா?'' எடுத்துச் சொல்லி விளங்க வைத்தான் சுதர்சன்.

சில நிமிடங்கள் கனத்த மௌனம் நிலவ, ''எப் போதுமே நம்ம காலுக்கு செருப்பு ஒத்து வரலைன்னா, கால் அளவுக்குத் தகுந்த செருப்பைத்தான் மாத்தணும். செருப்புக்குத் தகுந்த மாதிரி காலை மாத்த முடியாது. புரிஞ்சுக்கோ மைத்திம்மா.''

யோசனையுடன், ''வீட்டிற்குத் திரும்பலாமா அத்தான்?'' என்றாள் கம்மிய குரலில்.



''நான் உன்னை மூட் அவுட் செய்துட்டேனா?'' மனமே ஆறவில்லை சுதர்சனுக்கு.

கணவனது குரல் மைத்ரேயியின் மனதை உருக்க வானத்தைப் பார்த்தபடி, ''நிலா ரொம்ப அழகாயிருக் கில்ல அத்தான்? நாளைக்குப் பௌர்ணமியோ?'' என்று பேச்சை மாற்றினாள்.

ஆனால் அவளது குரலில் இருந்த உணர்ச்சிக் கலவை சுதர்சனுக்கு மனைவியின் மன உளைச்சலை சொல் லாமல் சொல்லியது.

''ம். ரொம்பவே...'' என்றவனது பார்வை மனைவியை ஆசையாய் வருடிய பின், ''ஹே! மைத்ரேயி! இன் றைக்கு மூன் நைட் கொண்டாடலாமா கண்ணம்மா?'' என்றான் புன்சிரிப்புடன்.

''என்னது மூன் நைட்டா? அப்படின்னா?''

''ம். நம்ம வீட்டில் மொட்டை மாடியில் ஒரு ரூம் இருக்கு தெரியுமா? அதைப் பார்த்திருக்கியா?''

''ஓ! அங்கே ரூஃப் இல்லாமல் ஒரேயொரு ரூம் தானே இருக்கு. அதையா சொல்றீங்க? எங்க ஊரில் அதைக் குட்டிச் சுவர்ன்னு சொல்லுவோம்'' கேலி செய்தாலும் கண்களில் அவநம்பிக்கையின் சாயல் தென்பட்டது.

கணவன் ஆமோதிப்பாகத் தலையசைத்த போது கூட மறக்க முடியாத இரவாக அது அமையும் என்று மைத் ரேயி நினைத்திருக்கவில்லை.

* * *

வானில் முழுநிலவு தங்கமென ஜொலிக்க, அந்த ஒளியில் நனைந்தபடி தன் மனைவியைப் பின்புற மிருந்து அணைத்து, அவளது தோளில் தன் தாடையை வைத்து அழுத்தி, அவள் பின்னங்கழுத்தில்

முத்தமிட்டவாறே அந்த ரம்மியமான சூழலை ரசித்துக் கொண்டிருந்தான் சுதர்சன்.

நீண்டு விரிந்த வானத்தையே கூரையாகக் கொண்ட மொட்டை மாடியறையில் புதுமண ஜோடிக்கு காவலாக நிலவு வீற்றிருக்க, சிலுசிலுவென்று வீசிய தென்றல் இருவரையும் சுகமாய் வருடிச் சென்றது.

மனைவியைத் தன் கால்கள் மீது தாங்கியவாறே நடந்து சென்று, அங்கிருந்த கட்டிலில் படுத்தவன், தன் மீதே அவளையும் மாலையாகப் போட்டுக் கொண்டான்.

கணவனின் மார்பில் தலை வைத்துப் படுத்திருந்த மைத்ரேயி, தன் கேசத்தை இதமாய் வருடும் கண வனையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளது பார்வை தன் மீது நிலைத்திருப்பதைக் கண்டவன், ''என்ன மைத்ரேயி? இப்படி பார்க்கிறே? என்ன விஷயம்?'' என அன்புடன் வினவியபடி மனைவியின் வில் போன்ற புருவங்களை ரசித்தபடி மெல்ல நீவி விட்டான்.

இளநகை புரிந்தவள் அவனது மார்பில் கோலமிட்ட வாறே, ''உங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்கா?'' என ராகம் பாடினாள்.

''பிடிக்காதவங்க கூட தான் நான் இப்படியிருப் பேனா?'' என்று கண் சிமிட்டி சிரித்து, அதற்குப் பரிசாக இரண்டு கன்னத்திலும் கடியையும் வாங்கிக் கொண் டவன், மனைவியை இறுக்கக் கட்டிக் கொண்டு அவளது நெற்றியில் லேசாக இதழ் பதித்த பின், ''ஏன் திடீர்னு?'' என்றபடி அவள் மூக்குடன் தன் மூக்கை உரசினான்.

அவனது செய்கையின் மூலம் 'பிடிச்சிருக்கு' என்பதை சுதர்சன் உணர்த்தினாலும் அவளுக்குத் தேவை அதுமட்டு மில்லையே?



''நான் கேட்ட கேள்விக்கு ஆமா-இல்லைன்னு பதில் சொல்லுங்க. சும்மா பதில் கேள்வி கேட்க கூடாதாக்கும். சொல்லிட்டேன்...''

அவளது சிணுங்கலானப் பேச்சைக் கேட்டுச் சிரித்தவன் மைத்ரேயியின் தாடையைப் பிடித்தபடி, ''பதில் சொல் லலையா?'' என்று மீண்டும் கேள்வியெழுப்பினான்.

அவனது பார்வையில் நாணம் கொண்ட மைத்ரேயி, ''உங்க கையைக் காலை கட்டிப் போட்டுத் தான் இனி மேல் கேள்வி கேட்கணும்...'' என்று கிசுகிசுத்தாள்.

''என்ன சொன்னே?'' சுதர்சன் மனைவியின் இடையை வளைத்து தன் புறம் திருப்பியபடி கேட்க,

''சுரைக்காய்... இல்ல... சுரைக்காய்... அதுக்கு உப்பு இல்லன்னு சொல்லிட்டு இருந்தேன்...'' செல்லமாக நொடித்தாள் மைத்ரேயி.

''சுரைக்காய் பற்றி பேசறதுக்கு நல்ல நேரம் பார்த்தே...''

அவனது குழைவான குரலில் நெகிழ்ந்தபடியே, ''உங்க ஊரில் சுரைக்காய் பற்றி பேசறதுக்கெல்லாம் நல்ல நேரம் பார்ப்பீங்களா? அச்சச்சோ... இது தெரியாமல் போச்சே...'' சீண்டலாய் வினவினாள்.

''நம்ம ஊர்ன்னு சொல்லும்மா!'' தணிந்தக் குரலில் கூறியவன், ''அதோட இப்போ நம்ம ஊரில் எதைப் பற்றி பேச நல்ல நேரம் தெரியுமா?'' என்று வினவியபடி அவளது கை விரல்களை தன் இதழ்களால் வருடினான்.

''வெண்டைக்காய் மாதிரி மென்மையா இருக்கிற கை விரல்களைப் பற்றி...''

''இதோ... ஆளையே சொக்க வைக்கிற திராட்சை கண்களைப் பற்றி...''

"மாதுளை இதழ்கள்..."

"ஆப்பிள் கன்னங்கள்..."

அடுத்து அவன் சொல்ல வருவதற்கு முன் அவசர அவசரமாக அவனது வாயை மைத்ரேயி தன் விரல் கொண்டு மூட, "ஏய்! நீ தானே பதில் பேசலையான்னு கேட்டே...? அப்புறம் என்ன?" என்றான் அவளது வெட்கத்தை ரசித்தவாறே.

"வாழைத் தண்டு கால்கள்..."

"சில சமயங்களில் ஆக்ஷன் இஸ் லௌடர் தன் வோர்ட்ஸ். போதுமா?"

"நான் செய்கையால் உணர்த்தினால் உனக்கு வார்த்தையால் வேணும். ஆனால் நான் வார்த்தையால் பேசினால் மட்டும்... உன்னைப் புரிஞ்சுக்கவே முடியலையே மைத்ரேயி."

"உங்களுக்காப் புரியாது? கேட்ட கேள்விக்கு உங்க இஷ்டத்துக்குத் தான் பதில் சொல்லுவீங்கன்னு சுத்தி வளைச்சு, சொல்லாமல் சொன்ன அசகாய சூரனாச்சே நீங்க?"

"மறுபடியும் ஆரம்பிச்ச இடத்துக்கே வந்த சூரனுக்கு ஏத்த அசகாய சூரி... நீ தான்..." என்றுவிட்டு அவளது செவ்விதழ்களை தனதோடுப் பொருத்தினான்.

அவனது பிடரி கேசத்தில் தன் கைகளால் விளையாடியபடியே, "அத்தான்!" என்று மைத்ரேயி ஆசையாக விளிக்க,

அவளது அழைப்பில் கரைந்த சுதர்சன், "ம்... சொல்லுடா..." என்று கிறங்கினான்.

"நான் சொல்றது இருக்கட்டும். நீங்க முதலில் சொல்லுங்க. என்னை முதன் முதலா பார்க்கும் போது என்ன



நினைச்சீங்க? எனக்கு முன்னாடி எதுவும் பொண்ணு பார்த்திருக்கீங்களா?"

"நீ என்ன நினைச்சே?" - மறு கேள்வி வந்தது சுதர்சனிடத்தில்.

"நான் தானே முதலில் கேட்டேன் சுதா. நீங்க தான் சொல்லணும்."

"லேடீஸ் ஃபர்ஸ்ட் என்பதெல்லாம் கிடையாதா?" என்று பேசிய பேரம் எடுபடாமல் போகவும்,

கண்கள் மின்ன, "ரொம்பப் பிடிச்சிருந்தது மைத்ரேயி. எனக்குப் பொருத்தமானவள் நீ தான்னு மனசில் பட்டது. நீ தான் நான் பார்த்ததில் முதல் பொண்ணு. உனக்கு?" அவளது விரல்களில் சொடக்கு எடுத்தபடியே கேட்டான் சுதர்சன்.

"நீங்க தான் என்னை முதலில் பொண்ணு பார்க்க வந்தது. அப்பா வந்து 'இந்த வரன் இருந்தால் நல்லாயிருக்கும். நீ என்னம்மா சொல்றே?' என்று உங்க விவரங்களைச் சொன்னாங்க. உங்களுடைய அடர்த்தியான மீசை தான் உங்களுக்கு ப்ளஸ் அண்ட் மைனஸ் சுதா. உங்களை ரொம்ப கம்பீரமா காட்டினது ப்ளஸ். ரொம்ப முரடா இருப்பீங்களோன்னு பயத்தைக் கிளப்பினது மைனஸ்."

"ம்ஹ்ம்ம்... உன் அத்தான் முரடாவா இருக்கேன்?" சுதர்சன் மனைவியின் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டு கண் சிமிட்ட,

கணவனின் மீசை ஏற்படுத்திய குறுகுறுப்பை ரசித்தவள், "கல்யாணத்துக்கு அப்புறம் தான் நீங்க மென்மையானவர்ன்னு தெரிஞ்சதாக்கும்" மெல்லிய குரலில் மொழிந்தாள்.

"ம்... மேலே சொல்லு...." புன்னகையுடன் ஊக்கினான்.

"மீசைக்கு மேலே மூக்கு!" என்றபடி கண் சிமிட்டியவள் அடுத்த நொடி அவனது அணைப்பில் சிக்கினாள்.

"ஹே சப்பை மூக்கு!... உன்னை..." அவளது மூக்கின் நுனியை வலிக்காமல் கடித்தவன், "உனக்கு வேறெதுவும் சாய்ஸ் இல்லைன்னு தான் ஒத்துக்கிட்டியா மைத்ரேயி?" என்று ஆதங்கத்துடன் வினவினான்.

அவனது கண்களில் இருந்த எதிர்பார்ப்பு அவள் உள்ளத்தைக் குளிர்விக்க, "சாய்ஸ் இல்லைன்னு யார் சொன்னா? நாலு பேர் உடைய விவரங்கள் தந்தாங்க. ஆனால் உங்களைத்தான் அவங்களுடைய விருப்பமா சொன்னாங்க. எனக்கும் உங்களை ரொம்பப் பிடிச்சிருந்தது அத்தான். எங்க அக்கா கூட..." என்றுவிட்டுத் தன் தந்தையுடனான ஒப்பந்தத்தையும், தங்கள் திருமணத்திற்கு முன் தினம் மாதங்கியுடன் பேசிய விவரங்களையும் பகிர்ந்தாள்.

அவளது பேச்சை உள்வாங்கிக் கொண்டு, "ஒ!" என்பதைத் தவிர வேறெதுவும் சொன்னானில்லை.

அந்தக் கணத்தில் ஒன்றே ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது. மைத்ரேயியின் விருப்பம் மற்றவர்களின் தூண்டுதலால் எளிதில் மாற்றம் அடையக் கூடியது அல்ல.

தானாக உணர்ந்து அவளுடைய விருப்பத்தில் மாற்றம் இருந்தாலொழிய, மற்றவர்களின் தூண்டுதலினால் ஏற்படும் மாற்றங்கள் தற்காலிகமானது என்பது மீண்டும் சுதர்சனுக்கு உறுதியானது.



ஒரு வருட காலத்தில் அவளது விருப்பத்தில் மாற்றம் கொண்டுவர, தான் எடுக்கும் முயற்சிகள் அதற்கானப் பலனைத் தர வேண்டுமே என்றிருந்தது.

சுதர்சனின் எண்ணங்கள் இப்படியிருக்க, "என் மூக்கைப் பார்த்து சப்பை மூக்குன்னு சொல்லிட்டீங்க இல்ல? எவ்வளவு ஷார்ப் தெரியுமா?" என்றபடி அவனது கன்னத்தில் தன் மூக்கை இடமும், வலமுமாகத் தேய்த்தாள்.

"பார்த்து கண்ணம்மா! உன் ரேசர் ஷார்ப் மூக்கு என்னுடைய பட்டுக் கன்னத்தைக் கிழிச்சிடப் போகுது. அப்புறம் மூன் நைட் ஹோ கயா தான்..."

"நீங்களா 'ஹோ கயா' என்று விடற ஆளு? மூன் நைட் இல்லைன்னா பரவாயில்லை; சன் டே என்று சொல்லிட மாட்டீங்க...?" உரிமையுடன் வம்பு வளர்த்தாள்.

அவனது செய்கைகள் அடுத்தக் கட்டத்திற்கு இருவரையும் அழைத்துச் செல்ல வித்திட, "சுதா! நீங்க ரெண்டே வரியில் நான் கேள்வி கேட்டதுக்குப் பதில் சொல்லி முடிச்சுட்டீங்க. ஆனால் நான் தான் மணிக்கணக்கா பேசிட்டிருக்கேன். நீங்க அந்த அளவுக்கு எக்ஸ்ப்ரஸிவ் கிடையாது சுதா. வாயைத் திறந்து இரண்டு வார்த்தை அதிகமாப் பேசினால்தான் என்னவாம்?" என்று அவனது காதோரத்தில் கிசுகிசுத்தாள்.

"நீ கற்பூரம் ஆச்சே மைத்ரேயி? வாய் வார்த்தையில் சொன்னால் தான் ஆச்சா? என் நெஞ்சோடு கலந்திருக்கும் அன்பை சொல்ல மௌனமே போதாதா?" அவனது குரலில் தோய்ந்திருந்த காதல் சுதர்சனின் செய்கைகளிலும் வெளிப்பட, கணவனை ஆமோதிக்கும் விதமாய் அவனுக்கு இசைந்தாள் மைத்ரேயி.

# 4

''மைத்ரேயி! உன் போன் அடிக்குது பாரும்மா!''

தோசைக்கு அவர் சொல்லிக் கொடுத்திருந்த மாதிரி காரச் சட்னி அரைத்துக் கொண்டிருந்த மருமகளுக்கு வரலக்ஷ்மி குரல் கொடுக்க, உள்ளிருந்தபடியே அவருக்கு பதில் கூறினாள் மைத்ரேயி.

''நீங்களே எடுத்துப் பாருங்க அத்தை! நான் வேலை முடிச்சுட்டு வந்துடறேன்.''

''இதோட நாலைஞ்சு தடவை அடிச்சுடுச்சும்மா. என்னன்னு பாரு. நான் இங்கே பார்த்துக்கிறேன்'' என்றவர் கைப்பேசியை மைத்ரேயியிடம் கொடுத்தார்.

''என் பிரண்ட் வினீத் தான் கால் செய்திருக்கான் அத்தை. அவனை நீங்க கல்யாணத்தில் பார்த்திருக்கீங்க. ஞாபகமிருக்கா? இத்தனை தடவை அடிச்சும் போன் எடுக்கலைன்னதும் திட்டப் போறான்'' வரலக்ஷ்மியைப் பார்த்து புன்னகைத்தவள் வினீத்தை அழைத்தாள்.

வினீத் - இவனும், மைத்ரேயியும் ஒட்டிப் பிறக்காத இரட்டையர்கள் என்று அவர்கள் காலனியில் புகழ் பெற்றவர்கள். ஒருவர் இருக்குமிடத்தில் மற்றவரை தொண்ணூற்று ஒன்பது சதவிகிதம் கண்டிப்பாகப் பார்க்கலாம்.

இருவரைப் பற்றியும் சில ஜாடைப் பேச்சுக்கள் பரவியதுமுண்டு. ஆனால் எதைப் பற்றியும் கவலைப் படாமல், எதையும் சட்டை செய்யாமல் நட்பிற்கு



இலக்கணமாக இன்று வரையில் திகழ்கின்றனர் வினீத்தும், மைத்ரேயியும்.

''ஒரு ஆணும், பெண்ணும் நல்ல நண்பர்களாக இருக்க முடியாதா? இதென்ன சுத்த பத்தாம் பசலித்தனம்?'' என்று வெகுண்டு எழுந்திருக்கிறார்கள் இருவரும்.

நடுவில் சில காலம், மைத்ரேயியின் தந்தை ராஜேந்திரன் கூட இருவரைப் பற்றியும் வேறுவித அபிப்ராயம் வைத்து பயந்திருந்தார். மகள் இந்தத் திருமணத்திற்கு ஒப்புக் கொண்ட பிறகு தான் அந்தப் பயமே அவருக்குத் தெளிந்தது.

''என்கேஜ்ட் டோன் தான் வருது. அப்புறம் பேசிக்கிறேன்'' என்றவளிடம்,

வரலக்ஷ்மி, ''வினீத்-ன்னா மேடைக்கும், வாசலுக்கும் நடந்துக்கிட்டே இருந்தானே? அந்தப் பையனாமா?'' எனக் கேட்டார்.

''ஆமாம் அத்தை. அவனே தான். அவங்க அப்பா கன்ஸ்ட்ரக்ஷன் பிசினெஸ் வைச்சிருக்காங்க அத்தை. நாங்க இருக்க ஃபிளாட் கூட அவங்களோடது தான். எங்க கல்யாணத்தின் போது அவன் கிரானைட் வாங்க ஜெய்ப்பூர் போயிருந்தான். அதான் நிச்சயத்துக்குக் கூட அவனால வர முடியலை.''

''......''

''கல்யாணத்துக்குக் காலையில் தான் அய்யா வந்திறங்கினார். பாவம்... அதுவும் அவனால ஃபுல்லா அங்கே இருக்க முடியலைன்னு ரொம்ப ஃபீல் செய்தான். திரும்ப மத்தியான ஃப்ளைட்டுக்கே கிளம்ப வேண்டிய அவசியம் வேற. அதில் ரொம்ப வருத்தம் தான் அவனுக்கு. இப்படி நான் ஊரில் இல்லாத நேரமா பார்த்து உன்

கல்யாணத்தை வைச்சுக்கிட்டியேன்னு ரொம்ப கோபிச்சுக்கிட்டான்.''

''ம்....''

''அவனுக்குக் கூட கல்யாணத்துக்குப் பார்த்துக்கிட்டு இருந்தாங்க. அவங்களோட சமூகத்தில், பசங்களுக்கு சீக்கிரமாவே கல்யாணம் செய்துடுவாங்களாம் அத்தை.''

''ம்ம்.. பையனைப் பார்க்க நல்ல மாதிரி தான் தெரிஞ்சுது. நான் கூட உங்க பெரியப்பா பசங்க யாராவது இருக்குமோன்னு நினைச்சேன். என்கிட்டே கூட சில பேரு கேட்டாங்க.''

''ஹா... ஹா... இல்லை அத்தை. நானும், அவனும் ஒரே வயசு தான். என்னோட நாலே மாசம் தான் பெரியவன். எங்க அம்மா அவனை அண்ணான்னு கூப்பிடுன்னு தொந்தரவு செய்வாங்க. நாங்க ரெண்டு பேருமே அது முடியவே முடியாதுன்னு சொல்லிட்டோம்'' மைத்ரேயி சிரித்தபடியே பாத்திரங்களை ஒதுக்கிக் கொண்டிருந்தாள்.

தொடர்ந்து, ''அவன் வீட்டில் அவன் ஒத்தைப் பிள்ளை வேறயா? நான் என்றால் அவங்க அம்மாக்கு அவ்வளவு இஷ்டம். பாதி நேரம் அவன் வீட்டில் தான் இருப்பேன்'' என்றவள், திடீரென்று நினைவில் வந்தது போன்று, ''நம்ம வீடு மாதிரி தான் அத்தை. அத்தான் மாதிரியே ஒற்றைப் பிள்ளை தான். ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு!'' என்று சிரித்தாள்.

''ஹ்ம்ம்... ஆஸ்திக்கு ஒரு பையன்; ஆசைக்கு ஒரு பெண் இருக்கணும்னு எங்களுக்கும் ஆசை தான் மைத்ரேயி. நமக்கு ஆசை இருந்து மட்டும் என்ன செய்ய? கடவுள் எழுதி வைக்கலையே?'' என்று பெருமூச்சு விட்டார் வரலக்ஷ்மி.



''ஏன் அத்தை? என்னாச்சு?''

''சுதர்சனுக்குப் பிறகு எனக்கு ரெண்டு தடவை. முதல் ரெண்டு மூணு மாசத்திலேயே கரு கலைஞ்சுடுச்சும்மா. இப்ப தானே இத்தனை வசதியெல்லாம் இருக்கு. இருபத்தஞ்சு வருஷத்துக்கு முன்னாடி பக்கத்து டவுனுக்கு போறதுக்கு பஸ் வசதி கூட இப்ப இருக்க மாதிரி கிடையாது. கார் கூட இப்ப கொஞ்ச வருஷத்துக்கு முன்னாடி வாங்கினது தானே? ஆஸ்பத்திரிக்கு உடனேயும் போக முடியலை. உங்க மாமாவும் அப்போ பக்கத்திலில்லை. ரொம்பக் கஷ்டப்பட்டுட்டேன்.''

தன் கையை அழுத்தியவளைப் பார்த்த வரலக்ஷ்மி, ''அப்புறம் டாக்டரம்மா இன்னொரு தடவை இப்படி ஆனால் என் உயிருக்கே ஆபத்துன்னு சொன்னவுடன், என்னிடம் கூட சொல்லாமல் மாமாவே போய் ஆபரேஷன் செய்துட்டு வந்துட்டாங்க. அதில் சுதர்சனோட பாட்டி, தாத்தாவிற்கெல்லாம் ரொம்ப வருத்தம், கோபம் தான். எனக்கும் கூட அப்படித்தான். ஆனால் எல்லாம் முடிஞ்சப் பிறகு என்ன சொல்றது? அதுவுமில்லாமல் சுதர்சனோட ஜாதகத்தைப் பார்த்த ஜோசியர், அவனுக்குப் பிறகு குழந்தைங்க இருந்தால் அவன் நல்லாயிருக்க மாட்டான் என்று வேறு சொல்லிட்டாங்க!'' என்றார் ஆதங்கத்துடன்.

நம்பிக்கையோடு மேலும், ''ஆனால் இப்போ என் மகனுக்கும் கல்யாணமாகி, மகள் மாதிரி மருமகளும் வந்தாச்சு. இனி உங்க பிள்ளைகளைக் கொஞ்சி சீராட்டறது தான் எங்க வேலையே'' என்று புன்னகைப் பூத்தார்.

தன் அத்தை சொன்னது, மைத்ரேயியின் கற்பனையில் விரிய, வீடு நிறைய தங்கள் குழந்தைகளைக் கற்பனை செய்து பார்த்தவளுக்கு மகிழ்ச்சியில் முகம் மலர்ந்தது.

''கவலையேப் படாதீங்க அத்தை. ரெண்டு பேரன், ரெண்டு பேத்தி! கொஞ்சி சீராட்டப் போதுமா அத்தை?'' கண் சிமிட்டி சிரித்த மருமகளோடு சேர்ந்து சிரித்த வரலஷ்மிக்கு மனம் நிறைந்திருந்தது.

சொந்த பந்தம், ஜாதகம் அது இதென்று பெண் எடுத்தாகி விட்டதே! எப்படி இருக்குமோ என்று அஞ்சியது இப்பொழுது தேவையற்றதாகி விட்டிருந்தது.

வந்த புதிதில் இருந்த மாதிரியில்லாமல் இப்பொழுது மைத்ரேயி நன்றாகவே குடும்பத்துடன் பொருந்தியிருந்தாள். மகனும், மருமகளும் ஒத்திருந்தால் அதைத் தவிர வேறென்ன வேண்டும் அவர்களுக்கு?

வரலஷ்மியும் ஒரு குடும்பத்தை வழி நடத்திச் செல்ல என்னென்ன அறிந்திருக்க வேண்டுமோ அத்தனையையும் அலுக்காமல் மருமகளுக்குச் சொல்லிக் கொடுக்க, மருமகளும் அதை உடும்பு மாதிரி பிடித்துக் கொண்டாள்.

இவர்கள் இருவரின் சந்தோஷச் சூழலைக் கலைப்பதற்கென்றே வந்தது போல் வந்த கனகத்தின் அம்மா ராஜம், ''நீ நாலு பெத்துப் போடறதுக்கு முன்னாடி அதில் ஒண்ணுத்துக்காவது வழியைப் பாரும்மா! கல்யாணமாகி நாலு மாசமாயிருக்குமில்ல? வைகாசியில் கல்யாணம். இப்ப ஆவணியே முடியப் போகுது! இன்னமும் குளிச்சுட்டுத் தானே இருக்கே?'' என்றார் நாகரீகமே இல்லாமல்.

அவருக்குத் தன் பெண் கனகாவை சுதர்சனுக்குக் கொடுக்க முடியாத கோபம் இன்னமும்!

அத்தையும் தான், தனக்கு வரப் போகிற பேரக் குழந்தைகளைப் பற்றி பேசினார்... இப்படியா?

முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க இருந்த மருமகள் என்ன சொல்லியிருப்பாளோ?



அவளை முந்திக் கொண்ட வரலக்ஷ்மி, ''எல்லாம் நடக்கிறபடி நடக்கும் ராஜம். நம்ம கையில் என்ன இருக்கு? அவன் எப்போ எதுவும் நடக்கணும்னு நினைக்கிறானோ அப்போ தான் எல்லாம் நடக்கும்'' என்றார்.

''நம்ம பக்கத்துத் தெரு ஆதிரையோட பொண்ணு சித்ராவிற்கும் வைகாசியில் தான் கல்யாணம். இப்ப அவள் மூணு மாசமாச்சு குளிச்சு.''

எப்போது வாயை மூட வேண்டுமென்று தெரியாத ராஜம் இன்னமும் பேசிக் கொண்டிருக்க, அவள் சொன்னதைக் கேட்டபடி வீட்டினுள் நுழைந்தனர் சுதர்சனும், லோகநாதனும்.

மனைவியின் முகத்தை ஏறிட்ட சுதர்சன், ''குளிக்கலையா? யாரு அத்தை? நீங்களா? அதான் நீங்க பக்கத்தில் வந்தாலே, ஒரு மைல் தூரத்திற்கு வாடை அடிக்குதா?'' என்று கேலிச் சிரிப்புடன் கேட்க, ராஜத்தின் முகம் எரிச்சலைப் பூசிக் கொண்டது.

''ராமசாமி உன்னை எங்கேன்னு தேடிட்டு இருந்தான். கிளம்பு ராஜம்'' லோகநாதன் ராஜத்தைக் குச்சி வைத்து விரட்டாத குறையாகக் கிளப்ப, வேறு வழியின்றிக் கிளம்பினார் ராஜம்.

கை காலைக் கழுவிய லோகநாதன், ''குப்பையில் போட வேண்டியதை எல்லாம் குப்பையில் போட்டுட்டு, எங்களுக்கு சாப்பாடு போடும்மா! இவன் ஒருத்தன்! எதை வீட்டுக்குள்ள கொண்டு வர்றது, எதை வெளியேயே வைக்கிறதுன்னு இத்தனை வயசாகியும் தெரியலை'' என இன்னமும் வாசல்படி தாண்டாத ராஜத்தின் செவியிலும் விழுமாறு எல்லோருக்கும் சொல்ல வேண்டியதை மறைமுகமாகவே கூறினார்.

* * *

இரவு உணவு முடித்து, சமையல் கட்டை ஒழுங்கு படுத்திவிட்டு தங்களறைக்கு வந்த மைத்ரேயி, அவன் கைகளிலிருந்தப் புத்தகத்தில் மிகத் தீவிரமாக ஆழ்ந் திருந்த கணவனை நோக்கிப் பூனை நடை நடந்து வந்தாள்.

அவனுக்கும், அவன் பிடித்திருந்த புத்தகத்துக்கும் இடையில் மெல்ல புகுந்து அவன் மார்பில் தன் தாடையை வைத்து அழுத்தியவள், ''நான் வந்தது கூடத் தெரி யாமல் என்ன அப்படி ஆர்வமா படிச்சுட்டு இருக்கீங்க அத்தான்?'' என்றாள்.

புத்தகத்தைக் கீழே வைத்தவன், மனைவியைச் சுற்றி கைகளைப் படர விட்டு, ''ம்ம்ம்? அதுவா... படிக்க நீ இல்லையே? அதான் புத்தகத்தைப் படிக்கிறேன்'' என்று கண் சிமிட்டினான்.

அவன் கன்னத்தைப் பிடித்துக் கிள்ளியவள், ''படிச்சு கிழிக்கிற ஆளைப் பாரு! பிபிஓ கம்பெனியில் வேலை செய்றவங்க கூட நேரத்திற்கு வீட்டுக்கு வருவாங்க போல! அப்படியே நீங்க மனசு வந்து வந்தாலும், உடனே யாரா வது உங்களைத் தேடி வந்துடுவாங்க. திரும்ப உடனே ஓடு!'' என்றாள் சலிப்புடன்.

''என்ன செய்றது? அய்யா அவ்வளவு பிஸி! ஒரு வேலை முடிஞ்சால் அடுத்த வேலை வருது.''

''என்ன புக் அது?''

கட்டிலில் மூடி வைத்திருந்தப் புத்தகத்தை எடுத்து அவளிடம் காண்பித்த சுதர்சன்,'' 'கிராமப்புறத்தில் திட்ட மிடலும் வளர்ச்சியும் இதைத்தான் படிச்சுட்டு இருந்தேன். நமக்கு எல்லாம் தெரியும்னு நினைக்கிறது எத்தனை பெரிய முட்டாள் தனம் இல்ல மைத்ரேயி? கற்றது கை மண்ணளவு, கல்லாதது உலகளவு!'' என்று விட்டு,



''சரி, அதை விடு. உனக்குத் தான் நான் நாளைக்குக் காலை வரை, என்ன பேசணுமோ, சொல்லணுமோ எல் லாம் சொல்லு'' என்றான்.

''நீங்க தான் சொல்லணும். விடுகதைப் பாட்டி இன் றைக்கு வந்து என்னிடம் கேட்ட விடுகதைக்கு நீங்க பதில் சொல்லுங்க பார்ப்போம்...''

''விடுகதைப் போடுற நேரமாடா இது? எல்லாத் தையும் விட்டுட்டு கதைப் பேசும் நேரமாச்சே இது?''

மனைவியின் இதழோடு சுதர்சன் கதைப் பேச ஆரம் பிக்கவும், மெல்ல தன் வசமிழக்கத் தொடங்கிய மைத் ரேயி, ''ப்ளீஸ் ப்ளீஸ்! ஒண்ணே ஒண்ணு!'' என்று கண் களால் கெஞ்சினாள்.

நீண்டப் பெருமூச்சுடன் சுதர்சன் இசைய, ''உரசினால் உயிரை விடுவானாம். அவன் யார்?'' எனக் கண்கள் மின்ன புதிர் போட்டாள்.

''இது தெரியாதா உனக்கு? நான் தான்!'' என்று கூறிக் கொண்டே மனைவியை மேலும் உரசினான் சுதர்சன்.

''சும்மா விளையாடாதீங்க சுதா! சரியா சொல்லுங்க.''

''கரெக்ட்! நான் சொன்னது தப்புத்தான். நீ என்னை உரசாட்டாலும் உயிரை விட்டுடுவேன் தான்'' என்று சுதர்சன் சிரிக்க,

மைத்ரேயி, ''ஐ... இதானே வேண்டாம்ங்கிறது! தெரியலைன்னா தெரியலைன்னு சொல்லுங்க. இப்படி மழுப்பற வேலையெல்லாம் வேண்டாம்'' என்றாள் தோர ணையாக.

''ஹா ஹா! கண்டுபிடிச்சுட்டியா கள்ளி! நீயே பதிலைச் சொல்லு!'' எனக் கேட்க, ''தீக்குச்சி!'' என்று உடனேயே விடையைப் பகர்ந்தாள் மைத்ரேயி.

''என்னைப் பத்த வைக்கிற தீக்குச்சி நீயே என் பக்கத்தில் இருக்கும்போது இதையெல்லாம் நான் எங்கே தெரிஞ்சு வைச்சிருக்கப் போறேன்?''

கணவன் சரசமாகப் பேச, சிரிப்பு வந்தாலும் அதை அடக்கிக் கொண்டவளின் மெல்ல முகம் மாறக் கண்டு, ''என்னடா?'' என்று கேட்டான் சுதர்சன்.

''பற்ற வைக்கத் தான் இங்கே நிறையப் பேரு இருக் காங்களே? எப்படி அத்தான் இப்படியெல்லாம் பேச றாங்க? எதையுமே கேட்கும் முறையில்லையா?'' என்று ராஜம் மாலை கேட்டதை நினைத்து வேதனைப்பட்டாள் மைத்ரேயி.

''ஊரில் நாலு பேரு இருந்தால் நாலு விதமாகத்தான் இருப்பாங்க. எல்லாத்தையும் நினைச்சு மனசைப் போட்டு உழப்பிக்கக் கூடாது. அப்பா கூட சொல்லலையா? வீட் டுக்குள்ள எதைக் கொண்டு வரணுமோ அதை மட்டும் தான் கொண்டு வரணும்னு. அவர் சொன்னது கல்லாலும், மண்ணாலும் ஆன வீட்டை மட்டுமில்லை மைத்தி. நம்மளோட மன வீட்டையும் சேர்த்து தான்'' என்றான் அவள் தோளை ஆறுதலாகத் தடவியபடியே.

''மாமா எப்படி கனகாவோட அம்மாவை ஒன்றுமே சொல் லாமல் வெளியே கிளப்பிட்டாரு இல்ல அத்தான்?''

தன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தவாறு கேட்டவளின் புருவத்தை நீவியவாறே, ''அப்பா எப்பவும் அப்படித் தான். ரொம்பப் பேச மாட்டார். ஆனால் ஏதாவது பேசி னாலும் அப்படியே 'நச்சுன்னு' இருக்கும்'' என்றவன் அவள் மனநிலையை மாற்ற எண்ணி,

''சரி, எங்கே இன்னொரு விடுகதையை எடுத்துவிடு பார்ப்போம்'' என, அவளும் ஆர்வமாக, ''கட்டிய



சேலையை அவிழ்க்க நினைத்தால் கண்ணீரும் கம்பலை யும் தான்! அதென்ன?'' என்றாள்.

கண்களில் குறும்பு மின்ன, சுதர்சன் வேக வேகமாக, ''நீ!'' என்றான்.

''என்னது? நானா? எப்படி?''

''பின்னே? நம்ம ஃபர்ஸ்ட் நைட்டில் 'எனக்குத் தூக்கம் வருது...' என்று அழுதது யாராம்?'' என்று அவளை மாதிரியே சொல்லிக் காட்டினான்.

''ச்சீ! உங்களை! நான் ஒண்ணும் அழலை!'' அவன் புஜங் களில் குத்தி, ''புழுகறதைப் பாரு!'' என்று கண்ணை உருட்டினாள்.

இருவரும் சிரித்து முடித்து பதிலைச் சொல்லுமாறு சுதர்சன் கேட்க, மைத்ரேயி, ''வெங்காயம்'' என்றாள்.

கணவன் முறைப்பதைப் பார்த்து, ''ஹா ஹா! பதிலே அது தான்பா!'' என்று சிரித்தாள்.

''உன்னை நம்ப முடியாது! நீ மறைமுகமாக என்னைச் சொன்னாலும் சொல்லலாம்'' என்று அவளிடம் காதல் விளையாட்டை ஆரம்பிக்க, அவளது கைப்பேசி ஒலி யெழுப்பியது.

எந்தவிதப் புற ஒலியும் தங்களை எட்டாத இடத்திற்கு மெல்ல மெல்லச் சென்று கொண்டிருந்தவர்களின் செவி யில் எங்கேயோ தூரத்திலிருந்து ஒலித்தது விழ, ''போன் அடிக்குதுடா. அதை எடுத்து ஆஃப் செய்!'' என்று மனை வியின் காதில் ரகசியம் பேசிய சுதர்சன், தன் காரியத்தில் மும்முரமாக முனைந்தான்.

கணவனின் கழுத்தை வளைத்திருந்த ஒரு கையை எடுத்து கைப்பேசியை அணைக்கப் போன மைத்ரேயி, அதில் ஒளிர்ந்த வினீத்தின் பெயரைப் பார்த்து,

''அச்சோ! வினீத் நிறைய தடவை இன்றைக்கு கால் செய்திருந்தான். மறந்தே போனேன்! ப்ளீஸ் அத்தான். அவனோட பேசிட்டு வந்துடறேன்'' என்று அவன் கைகளுக்குச் சிக்காமல் நகர்ந்தாள்.

எழுந்து போன மனைவியைப் பார்த்து முறைத்து விட்டு தலையணையைக் கட்டிக் கொண்டுப் படுத்தவ னிடம், கண்களால் கெஞ்சி, இரண்டே நிமிடம் என்று சைகை செய்தாள்.

''ஹாய் வினீத்!'' என்று இவள் இந்தப் பக்கம் சொல்லி முடிப்பதற்குள்,

''ரொம்ப பெரிய ஆளாயிட்டீங்களோ? நாங்க எல்லாம் போன் செய்தால் எடுப்பீங்களா மகாராணி நீங்க?'' என்று கோபமாக ஒலித்தது வினீத்தின் குரல்.

''சாரிடா! சாரி! வெரி சாரி! வேலையா இருந்துட் டேன். அப்புறம் போன் செய்யலாம்னு நினைச்சு மறந் துட்டேன்டா! ப்ளீஸ்'' என்று நண்பனை மைத்ரேயி தாஜா செய்ய, சில நிமிட பிகுவிற்குப் பிறகு இறங்கி வந்தான் வினீத்.

''போனால் போகுது. இன்னமும் ரெண்டே நாளில் பர்த்டே கேர்ள் என்கிறதால விடறேன். பிழைச்சுப் போ! நீ ஜெய்ப்பூரில் இருந்து பாந்தினி சுரிதார் கேட்டுட்டே இருந்தே இல்ல? அதை உனக்குப் பிறந்த நாள் பரிசா அனுப்பி வைக்கிறேன். அட்ரஸ் சொல்லு'' என்றான்.

''சோ ஸ்வீட் ஆஃப் யூ. தேங்க்ஸ்டா'' என்றவள் அவர்களது முகவரியைச் சொல்லிவிட்டு மேலும் சில நிமிடங்கள் பேசிய பின், பேசியை வைத்த பொழுது இரண்டு நிமிடம் என்பது இருபது நிமிடங்கள் ஆகி யிருந்தது.



வினீத் தனக்குப் பிறந்த நாள் என்று சொன்ன பிறகு தான் அதைப் பற்றிய நினைவே வந்தவள், மறுபடியும் புத்தகத்தில் மூழ்கியிருந்த கணவனிடம் சென்று, ''சாரி அத்தான். ரொம்ப நாளாச்சா அவனோட பேசி... அதான்'' என்றாள் மன்னிப்புக் கூறும் பாவனையில்.

புத்தகத்திலிருந்து விழிகளை அகற்றாமலே அமைதி யாக இருந்தவனிடம், ''இன்றைக்கு என்ன தேதி அத் தான்?'' என்றாள் மெதுவாக.

அவளை நிமிர்ந்து பார்க்காமலே, ''ஆவணி பதினாறு'' என, ''ப்ச்! இங்கிலீஷ் காலண்டர் டேட் சொல்லுங்க'' என்றாள்.

தேதியைச் சொன்னவனிடம், ''ரெண்டு நாள் கழிச்சு?'' என கேட்க, ''ப்ச்! என்ன அடுத்த விடுகதையா? இல்லை, எனக்கு கணக்கு சரியா வருதான்னு டெஸ்ட் செய்றியா?'' என்றான் அலுப்பாக.

''எதுக்கு இப்படி கோவிச்சுக்கிறீங்க? பதிலைச் சொல் லுங்க, ப்ளீஸ்'' என்று அடம் பிடித்தவளிடம் சற்றே எரிச்ச லுடன், ''செப்டம்பர் மூணு'' என்றான்.

''அன்றைக்கு என்ன விசேஷம் சொல்லுங்க?'' என்றாள் விடாமல்.

''மைத்ரேயி! எரிச்சலை மூட்டாதே! எனக்கு நிஜ மாகவே தூக்கம் வருது. உனக்குத் தூக்கம் வந்தால் தூங்கு. இல்லைன்னாலும் சும்மா தொணப்பாமல் படு'' என்று குப்புறப் படுத்தவனை முறைப்பதைத் தவிர ஒன்றும் செய்ய முடியவில்லை அவளால்.

'நடுவில் எழுந்துப் போனதால் கோபம் போல அய்யா விற்கு! போன் வந்தால் நான் என்ன செய்ய? அதான் சாரி கேட்டுட்டேன் இல்ல?' சிணுங்கலுடன் நினைத் தவள் கோபத்தில் தான் சொல்லாமல் இழுத்தடிக்கிறான்

என நினைத்து, நாளைக்குத் திரும்பக் கேட்க வேண்டு மென்ற எண்ணத்தோடே உறங்கிப் போனாள்.

மறுநாள் காலையில் எழுந்ததுமே சுதர்சன், ''சாரிம்மா! நைட் ஏதோ மூட் ஆஃப்!'' என்று ஆரம்பிக்க, குஷியாகிப் போன மைத்ரேயியை மேலும் சந்தோஷப் படுத்த, ''ரொம்ப தேங்க்ஸ் மைத்தி! நினைவுபடுத்தியதுக்கு. நானே மறந்துட்டேன்'' என்றான்.

ஆர்வமாக, ''என்ன நினைவு வந்தது?'' என்றாள்.

''கும்பகோணத்தில் எங்க பெரியப்பா பையன் மூர்த்தி வீடு கிரகப் பிரவேசம் பண்றாங்க. அதுக்குப் போகணும்'' எனவும், பக்கத்திலிருந்த எதையாவது எடுத்து அவனை மொத்த வேண்டும் போலிருந்தது மைத்ரேயிக்கு.

'என் பிறந்த நாள் நினைவு வரலையாம்மா! ஆனால் மூ...ர்த்தி வீடு பால் காய்ச்சுறது ஞாபகம் வந்துடுச்சு! இவனை!'

தன்னைக் கண்களாலே எரித்து விட்டுப் போகும் மனைவியைப் புரியாமல் பார்த்தான் சுதர்சன். என்னாச்சு இவளுக்கு? நேற்று நான் முறுக்கிக் கொண்டதற்கு இப்பொழுது இவள் முறைக்கிறாளா?

அதன் பிறகு அந்த நாளும், அதற்கடுத்த நாளும் அவனைப் பார்க்கும் பொழுதெல்லாம் மைத்ரேயி தன்னை ஆர்வத்துடன் பார்ப்பதைக் கண்டவன் மிகவும் குழம்பிப் போனான்.

''என்னடா? என் முகத்தில் ஏதாவது திடீர்னு முளைச் சுடுச்சா? அப்படி அடிக்கடிப் பார்க்கிறே? என்னாச்சு?'' என்றான் அடுத்த நாள்.

''ம்க்கும்! பார்க்கிறதுக்கு உங்கத் தலைக்குப் பின் னால் அப்படியே ஒளி வட்டம் தெரியுது பாருங்க! நான்



என்னத்தைப் பார்க்கப் போறேன்? நாளைக்கு என்ன நாளுன்னு உங்களுக்கு நினைவிருந்தால் சரி தான்!'' என்று கடுப்புடன் சொன்னதோடு நிறுத்திக் கொண்டாள்.

அடுத்த நாள், அதாவது மைத்ரேயியின் பிறந்த நாளன்று கையில் பரிசுத் தாள் சுற்றிய பெரிய பரிசோடு கணவனைப் பார்த்தவளின் மனம் ஜிவ்வென்று மேலே பறந்தது.

இல்லை... இவன் மறக்கவில்லை.. மறந்த மாதிரி நடித்திருக்கிறான்! சரியான திருடன்!

இரண்டு நாள் கழித்து மனைவி மகிழ்ச்சியுடன் தன் முகம் பார்க்கவும், அவனும் சந்தோஷத்துடன், ''இந்தா! இதைப் பிடி! உன்னிடம் காட்டாமலே கிஃப்ட்டை Wrap பண்ணிட்டேன். சாரி. வெள்ளி குத்துவிளக்கு ரெண்டு வாங்கினேன். உனக்கு ஓகே தானே?'' என்றான்.

''வெள்ளி விக்கிற விலையில், எதுக்கு அத்தான் இவ்வளவு செலவு?'' பரிசை இப்படியும் அப்படியும் திருப்பிப் பார்த்துக்கொண்டே மைத்ரேயி கேட்டதற்கு.

''அதுக்கு என்னடா செய்றது? மூர்த்தி நம்ம கல்யாணத் துக்கு பெருசா செய்திருக்கான். பதிலுக்கு நாமளும் செய்யணுமில்ல?'' என்று சுதர்சன் பதில் சொல்ல, கோபத் திலும் ஏமாற்றத்திலும் சட்டென்று கண்ணில் துளிர்த்த நீரை மறைக்கக் குனிந்து கொண்டாள் மைத்ரேயி.

இத்தனை நேரம் நன்றாகத் தானே இருந்தாள்? திடீ ரென்று என்ன வந்துவிட்டது? மூர்த்தி வீட்டு விசேஷத்தில் மகிழ்வுடனே பங்குக் கொண்டாலும், அவ்வப்பொழுது தன் முகத்தை ஒரு எதிர்பார்ப்புடன், நினைத்தது நடக்காத ஏமாற்றத்துடன் தழுவிச் சென்றதை அவன் உணர்ந்தே இருந்தான். ஆனால் காரணம் தான் புரியவில்லை!

ஒருவேளை அங்கே யாரும் ராஜம் அத்தை மாதிரி ஏதாவது சொல்லியிருப்பார்களோ? அவனுக்கு மண்டை குடைந்தது தான் மிச்சம்!

அந்த மண்டைக் குடைச்சலுடனே படுத்து உறங்கிய வனைக் காண்கையில் ஆத்திரமும், கண்ணீரும் ஒருசேர வந்தது மைத்ரேயிக்கு.

சரி... இப்பொழுது சொல்வான்... அப்பொழுது சொல் வான் என்று இன்று நாள் முழுதும் எதிர்பார்ப்புடன் காத் திருந்து ஏமாந்தது தான் மிச்சம்!

தன் பிறந்த நாள் நினைவு இருப்பதாகத் தன்னிடம் காட்டிக் கொள்ளாமலே, சந்தோஷ ஆச்சரியமாக நேற்றிரவு பன்னிரண்டு மணிக்குத் தன்னை எழுப்பி வாழ்த்துச் சொல்வான் என்று எதிர்பார்த்ததென்ன? அதற்காகத் தூங்குவது மாதிரி நடித்தபடி கண்மூடி, தான் படுத்திருந்த தென்ன?

இன்று காலையிலாவது சொல்வானென்று ஏமாந்த தென்ன? அதெல்லாம் போனாலும் இதோ... இன்றிரவு பன்னிரண்டு மணிக்குள்ளாகவாவது ஒரு சின்ன வாழ்த் தாவது சொல்வானென்று நினைத்திருந்ததென்ன?

எல்லாம் போச்சு! இப்படி கும்பகர்ணன் மாதிரி உறங்கு வதைப் பாரு! இவளுக்கு இரண்டு தினங்களாக போன் வருகிறதே! என்னடா இவளும் மாறி மாறி, 'தேங்க்ஸ், தேங்க்ஸ்' என்று சொல்கிறாளே! எதற்காகவென்று கொஞ்சமாவது யோசிப்பானா இல்லையா?

இதேது நம் வீட்டிலென்றால் இப்படியா இருக்கும்?

இல்லை... இவனை இப்படியே விட்டால் சரி வராது!

பக்கத்தில் நன்றாக உறங்குபவனை உலுக்கி எழுப்பி னாள் மைத்ரேயி.



பதறி எழுந்த சுதர்சன், ''என்னாச்சு மைத்ரேயி? என் னம்மா?'' என்றான் பதட்டத்துடன்.

''இப்போ மணி என்ன?''

''இதென்ன விளையாட்டு? இதைக் கேட்கவா தூங் கிட்டு இருந்தவனை எழுப்பினே? பேசாமல் படு!''

திரும்பப் படுக்கப் போனவனைப் பிடித்து நிறுத்தி, ''கேட்டதுக்குப் பதில் சொல்லுங்க'' என்றாள் கறாராக.

''நைட் பன்னிரண்டரை!''

''என்ன தேதி தெரியுமா? செப்டம்பர் நாலு.''

அர்த்த ராத்திரியில் எழுந்து நேரத்தையும், நாளையும் கேட்பவளைப் பார்த்தால் சற்று பயமாகத் தான் இருந்தது அவனுக்கு.

''உன்னோட பெரிய தொல்லையாப் போச்சு! சரி... அதுக் கென்ன இப்ப...?'' என்று அவன் சொல்லி வாய் மூடு வதற்குள், அவன் கையிலும், தோளிலும் பட் பட் டென்று போட்டு, ''அதுக்கென்னவா? நேற்று என்ன நாள் தெரியுமா?'' என்று கத்தினாள்.

''ஹே! நிறுத்து! நிறுத்து மைத்ரேயி! எதுக்கு இப்படி நடந்துக்கிறே?'' என்று எரிச்சலுற்றவன்,

''இதையே தான் நீயும் நாலு நாளா கேட்கிறே? நீ நினைக்கிறப் பதிலை நான் சொல்லலைன்னா, நீயே சொல்ல வேண்டியது தானே? எதுக்கு இப்படி படுத்தறே மைத்ரேயி?'' சலிப்போடு கூறியவனின் குரல் வளையை நெரிக்கப் போய் விட்டாள் மைத்ரேயி.

அவள் கைகளைப் பிடித்துக் கொண்டவன், ''என்ன தான் ஆச்சு உனக்கு?'' என்று கேட்க, மைத்ரேயிக்குக் கண் ணீர் அணை உடைந்தது.

''நேற்று எனக்கு பர்த்டே! அது கூட உங்களுக்கு ஞாபகமில்லை! உங்களிடமிருந்து ஒரு பர்த்டே விஷ் இல்லை! ஒரு கிஃப்ட் இல்லை! ரொம்பக் காத்திருந்து காத்திருந்து ஏமாந்து போயிட்டேன் தெரியுமா? அதுவும் நம்ம கல்யாணம் முடிஞ்சு வந்த ஃபர்ஸ்ட் பர்த்டே'' தன் மார்பில் சாய்ந்து கண்ணீர் உகுப்பவளை எப்படிச் சமா தானப்படுத்துவதென்று அவனுக்குத் தெரியவில்லை.

இதற்காகவா இந்த ஆர்ப்பாட்டம்? அழுகை? கடவுளே!

மிகவும் எதிர்பார்ப்போடு காத்திருந்து ஏமாந்திருக் கிறாள்! அதைச் சொல்லியிருந்தால் தான் என்ன? இப் படிச் சொல்லாமல் தன்னையும் படுத்திக் கொண்டு, என் னையும் இப்படிப் படுத்துகிறாளே?!

இங்கே அவன் வீட்டில் இதெல்லாம் பழக்கவே இல்லை. சின்ன வயதில் பெரிதாகச் செய்வார்களோ என்னவோ? இப்பொழுது எல்லா நாளும் ஒன்று தான்! எல்லா நாளுமே புதிய நாள் தான்!

கழிவிரக்கம் மிக, ''ரொம்ப சாரிடா கண்ணம்மா! எனக்கு இதெல்லாம் பழக்கமே இல்லை. ஆனால் நீ ஒரு வார்த்தையாவது சொல்லி இருக்கலாமே? அழாதே ப்ளீஸ்! எனக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கும்மா'' என்று மென்மையாக அவள் கண்ணீரைத் துடைத்து விட்டான்.

''என் செல்ல மைத்திக்கு, என் மனம் நிறைந்த கண் ணம்மாவிற்கு, என் இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்! ப்ளீஸ்! இந்த உன்னோட அத்தானை மன்னிச்சுட்டு விட்டுடு!'' பாவம் போல் முகத்தை வைத்துக் கொண்டு கெஞ்சினால் வேறென்ன செய்வது?

இருந்தாலும், ''ஒண்ணும் வேண்டாம் போங்க!'' என்று முறுக்கிக் கொண்டாள்.



''ப்ளீஸ்! ப்ளீஸ்! என் செல்லமில்ல? என் பட்டு இல்ல?''

''இல்லை, இல்லை, இல்லவேயில்லை!'' கெஞ்சி, கொஞ்சி, மிஞ்சி மனைவியை மயக்கும் கலை தெரிந் தவன் ஒரு வழியாக அவளை மலை இறங்க வைத்தான்.

அடுத்த நாள் எழுந்ததும் தன் தாயிடம் தடபுடலாக விருந்து செய்யச் சொன்னவனின் காதை மெல்ல, ''இதையெல்லாம் எங்க வீட்டில் நேற்றே செய்திருப் பாங்க'' என்று கடித்தாள்.

சற்று நேரம் பொறுத்து, ''இதேது உங்கப்பிள்ளை யோட பிறந்த நாளுன்னா நினைவு வைச்சிருந்து இருப் பீங்க இல்ல? நான் யாரோ பெத்த பிள்ளை தானே?'' என்றாள்.

''ஒரு வாழ்த்து, ஒரு கிஃப்ட்... அட பெரி...ய குத்து விளக்கு வேண்டாம்பா. குறைந்த பட்சம் ஒரு அகல் விளக்கு கூடவா எனக்குத் தரக் கூடாது?'' என்று சண்டைப் பிடித்தாள்.

ஆனால் எல்லாம் கணவன் மட்டும் தனியாக அவளிடம் மாட்டும்போது மட்டும்தான். அந்தக் கணவ னுக்கோ மனைவியை நினைத்து சிரிப்பதா, அழுவதா என்றே தெரியவில்லை; ஒரு நிலையில் அவளைக் கண்டு பயந்து ஒளியும் தன்னைக் கண்டே சிரிப்பு வந்தது அவனுக்கு.

அன்றிரவு தனக்கு முதுகு காட்டிப் படுத்திருந்த மைத் ரேயியின் தோளைத் தொட்டுத் தன் புறம் திருப்பியவன், ''ஒண்ணும் வேண்டாம்!'' என்று அவள் சிணுங்கியதைப் பொருட்படுத்தாமல் அதுவரை மறைத்து வைத்திருந்த ஒரு சிறியப் பொருளை அவள் கைகளில் வைத்தான்.

என்னதென்று பார்த்தவளிடம், ''ஏதோ இந்தத் தஞ்சாவூர்காரனால் முடிந்த ஒரு சின்னப் பரிசு. பிரிச்சுப் பாரு!'' என்றான்.

''ஒண்ணும் வேண்டாம்! நீங்களே வைச்சுக்கோங்க. நேற்று கொடுக்கலை; இன்றைக்கு காலையிலிருந்து உங்களுக்குக் கொடுக்க நேரமில்லை; நூறு தடவை ஞாபகப்படுத்தியப் பிறகு வாங்கிக் கொடுக்கிற கிஃப்ட் எனக்கு வேண்டாம். இந்தாங்க!'' என்று திரும்ப அவனிடமே நீட்டினாள்.

''இப்படிச் சொன்னால் எப்படி மைத்தி? பிரிச்சுப் பாருடா ப்ளீஸ்!'' கணவனின் சில நிமிட கெஞ்சலுக்குப் பிறகு பிகு செய்துக்கொண்டே, ஆர்வத்தை வெளியே காட்டாமல் பரிசு பொருளைப் பிரித்தாள்.

உள்ளிருந்த தஞ்சாவூர் தலையாட்டும் பெண் பொம்மை, அவளைப் பார்த்து அழகாகச் சிரித்தது.

''ஐ! தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை! ரொம்ப தேங்க்ஸ் அத்தான்!'' அத்தனை நேரமிருந்த செல்லக் கோபமும், பிகுவும் நொடியில் மறந்து கணவனை கட்டிக் கொண்டாள் மைத்ரேயி.

அவளை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே, ''அடுத்த வருஷமும் உன்னோட பிறந்த நாளை நான் பெரும்பாலும் மறந்தாலும் மறக்கலாம். அதுக்காக நீ, ஊர்க்காவலன் படத்தில் வர்ற ராதிகா மாதிரி நட்ட நடு ராத்திரியில் என்னை எழுப்பி கிலி படுத்த வேண்டாம். நான் சின்னப் பையன். பயந்துடுவேன்!'' என்றான் கேலியாக.

''ஹே!'' என்றவளுக்கும் சிரிப்பு தான் வந்தது.

''கொஞ்சம் ஓவரா தான் போயிடுச்சு இல்ல? ஹி ஹி... சாரி!'' என்று அசடு வழிந்தவளின் நெற்றியோடு நெற்றி முட்டி,



குறும்பாக, ''Growing old is mandatory, Growing up is optional'' என்றவன், ''ஆளும் வளரணும் அறிவும் வளரணும் அது தான்டா வளர்ச்சி!'' எனச் சிரிக்க,

''ஹே! ரொம்ப ஓட்டாதீங்கப்பா! நேற்று தான் எனக்கு பர்த்டே முடிஞ்சு இருக்கு!'' என்று சிரித்தாள்.

''ஹா ஹா! நீ திருந்தவே மாட்டே! போனாப் போகுது! ரொம்பச் சின்னப் பிள்ளையா இருக்கே! உன்னோட பிறந்த நாள் பரிசா, அடுத்த வார இறுதியில் உன்னை நம்ம தோப்பு வீட்டுக்கு கூப்பிட்டுட்டுப் போறேன்.''

''நிஜமாவா? சமத்து அத்தான்!'' என்று அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டவளுக்கு ஊடலுக்குப் பிறகு வரும் கூடலின் சுகம் அன்று முதன் முதலாக முழுவதும் புரிந்தது.

# 5

காணி நிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண்டும்
அங்குத் தூணில் அழகியதாய் நன்மாடங்கள் துய்ய நிறத்தினதாய்
அந்தக் காணி நிலத்திடையே ஓர் மாளிகை கட்டித் தரவேண்டும்
அங்குக் கேணியருகினிலே தென்னைமரக் கீற்றும் இளநீரும்

பத்துப் பன்னிரண்டு தென்னைமரம் அதன் பக்கத்திலே வேணும்
நல்ல முத்துச் சுடர்போலே நிலாவொளி முன்பு வரவேணும்
அங்குக் கத்துங் குயிலோசை சற்றே வந்து காதிற் படவேணும்
என்றன் சித்தம் மகிழ்ந்திடவே நன்றாயிளந் தென்றல் வரவேணும்

பாட்டுக் கலந்திடவே அங்கே யொரு பத்தினிப் பெண்வேணும்
எங்கள் கூட்டுக் களியினிலே கவிதைகள் கொண்டு தரவேணும்
அந்தக் காட்டு வெளியினிலே அம்மா நின்றன் காவலுறவேணும்
என்றன் பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித் திடவேணும்

பாரதியார் பாடல், பாடகர் உன்னிகிருஷ்ணனின் குரலில் அந்தத் தோப்பு வீட்டில் ரம்மியமாய் ஒலித்துக் கொண்டிருக்க சுதர்சனும், மைத்ரேயியும் அதை அனுபவித்து ரசித்துக் கொண்டிருந்தனர்.

திருமணம் முடிந்த பிறகு வேலை மிகுதியால் எங்கும் வெளியூர் செல்ல முடியாமல் போக, மனைவிக்குச் சென்ற வாரம் கொடுத்த வாக்கை நிறைவேற்றும் விதமாக இரண்டு நாட்கள் ஓய்வை அவளுடன் தோப்பு வீட்டில் தனிமையில் கழிக்க விரும்பினான் சுதர்சன்.

தோப்பு வீட்டிற்குச் செல்லலாம் என்றதும் மைத்ரேயி, ''தோப்பு வீடா? அதுவும் ஆற்றோரமாகவா அத்தான்? போர் அடிக்காதில்ல...?'' என்று வித விதமாகத் தன் கணவனிடம் கேள்வியெழுப்பிக் கொண்டிருந்தாள்.

புன்னகையுடன் பதில் சொன்னவனும் ஒருநிலைக்கு மேல், ''உனக்குப் பிடிக்கலை என்றாலும் அங்கே ஒரு வருஷம் இருக்கணும்ன்னு எல்லாம் வேண்டுகோள் வைக்க மாட்டேன் மைத்ரேயி. கவலைப்படாதே! பிடிக் கலைன்னா உடனே கூடத் திரும்பிடலாம். சரியா?'' என்று மனைவியின் கேள்விகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தான்.

எந்தவித எதிர்பார்ப்புமின்றி தோப்பு வீட்டிற்கு வந்த வளுக்கு இயற்கைக் கொஞ்சி விளையாடும் சூழலும், பசுமையும், அதன் அழகும் உள்ளத்தைக் கொள்ளைக் கொள்ள, இப்பொழுது மேலும் ஒரு நாள் அந்தத் தோப்பு வீட்டிலேயே தங்கலாமா என்ற ஆசை கூட எழுந்தது.



பறவைகளுக்கு உணவிடும் தட்டில், பச்சை சோள முத்துக்களை தன் வலிமையான கரத்தினால் இலகுவாக உதிர்த்தபடியே சுதர்சன், ''கண்ணம்மா! இங்க வந்ததி லிருந்து வீட்டையே சுற்றிச் சுற்றி வந்துட்டு இருக்கே? இங்கே பிடிச்சிருக்கா...? தங்கலாமா? அல்லது நம்ம வீட்டுக்கே...'' என்று கேட்டு முடிப்பதற்குள் துரிதமாகப் பதில் தந்தாள் மைத்ரேயி.

''இங்கேயே தங்கலாம் சுதா. இந்த இடம் ரொம்ப ரொம்ப சூப்பரா இருக்கு. இன்னும் ரெண்டு நாள் அதிகமாகக் கூட இங்கேயே தங்கிட்டுப் போகலாமான்னு கேட்க நினைச்சேன்...''

''அதிசயம் ஆனால் உண்மை. நிஜமாவா சொல்றே?''

''அதிசயமெல்லாமில்லை என் செல்ல புருஷா! தோப்பு வீட்டைப் பற்றி எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் வந்தது கூட ஒருவேளை என் பிடிப்புக்குக் காரணமா இருக்கலாம்... எனக்கே தெரியலை...'' என்று உற்சாகத் தோடு தன் கணவனின் அருகில் அமர்ந்து அவனுக்கு உதவ முன்வந்தாள்.

''இங்கே பொழுது போறதுக்கு டி.வி. இல்ல... வேலை செய்றதுக்குக் கூட ஒரேயொரு பாட்டியம்மா காலையில் வந்துட்டுப் போவாங்க... அவ்வளவு தான். இன்னும் ரெண்டு நாளைக்கு என் முகத்தை மட்டுமே பார்த்து உனக்கு போர் அடிச்சாலும் அடிச்சுடும்டா. பார்த்துக்கோ...''

''ஒருவேளை உங்களுக்கு ரெண்டு நாள் என் முகத் தையே பார்த்துட்டு இருக்கிறது போர் அடிச்சுடுமோ அத்தான்...?''

மனைவியின் தலையில் வலிக்காமல் குட்டியவன், ''உன் அத்தான் என்ன உன் முகத்தை மட்டுமேவா

பார்த்துட்டு இருக்கப் போறேன்...?'' கண் சிமிட்டி குறும்பாக வினவினான்.

''உங்ககிட்டப் பேசி இந்த ஜென்மத்தில் ஜெயிக்க முடியாதுப்பா. சரியான கில்லாடி நீங்க...'' என்று அழகாக 'அழகு' காட்டினாள்.

அவளின் செய்கையை ரசித்தவன், சற்றுமுன் அவள் பேசியது நினைவில் வர யோசனை படர்ந்த முகத்துடன், ''ஒருவேளை பெரிய வீட்டிற்கு வருவதற்கு முன்னாடி நிறைய எதிர்பார்ப்புடன் இருந்தியா மைத்ரேயி? அதனால் தான் அங்கே உனக்குப் பிடிக்காமல் போச்சோ?'' என்றான் தீவிரமாக.

கணவனின் உணர்ச்சி மிகுந்த குரல் உள்ளத்தை வருத்த அவனை நெருங்கி வந்தவள், ''அப்படி சொல்ல முடியாது சுதா. இங்கே என்கூட நீங்க மட்டும்தான் இருக்கீங்க. வேற யாருமில்லை; ஆனால் நம்ம கல்யாணம் முடிஞ்சு இங்கே வந்த முதல்நாள், ஊரில் இருக்கிற எல்லா சொந்தமும் நம்ம வீட்டில்தான் இருந்தாங்க. ஆனால் நீங்க இல்லாமல் ரொம்ப மிஸ் செய்தேன். அதனால் கூட...'' என்று முடிக்காமல் இழுத்தாள்.

ஆறுதல் தரும் விதமாக மனைவியை ஒருமுறை அணைத்தவன், ''விடுடா!'' என்றான்.

''ரெண்டு நாள் உங்களால் நேரம் ஒதுக்க முடிஞ்சதை நினைச்சு இன்னுமே எனக்கு ஆச்சரியமா தான் இருக்கு. அப்படியில்லாட்டி ஏதாவது சாக்குப் போக்கு சொல்லி காலில் சக்கரத்தைக் கட்டாத குறைதான்.''

''சாக்குப் போக்கெல்லாம் சொல்றதாவா நினைக்கிறே? ம்... வந்த ஒருநாளில் கிளம்பிடலாம்னு சொல்ற பட்டிணத்தில் வளர்ந்த பொண்ணு நீ. உனக்கு விவசாயம் பற்றி தெரிஞ்சிருக்க வாய்ப்பில்லை தான்...''



அவன் சொன்னதில் மனம் வலித்தாலும் ஆர்வமாக, ''பட்டிணத்துப் பொண்ணுக்கு தெரியலைன்னா சொல்லித் தாங்களேன்! அப்படி என்னதான் அத்தான் பண்றீங்க?'' என்று வினவினாள்.

''நம்ம நாட்டுக்கு முதுகெலும்பே கிராமங்கள் தான்னு காந்தி அன்றைக்குச் சொன்னார். ஆனால் இன்றைக்கு நிலைமைக்கு எத்தனை விவசாயிகள் தற்கொலை செய்துக்கிற நிலையில் இருக்காங்கன்னு தெரியுமா மைத்ரேயி? டாக்டர், இஞ்சினியர் உடைய பசங்களும் டாக்டர், இஞ்ஜினியர் ஆகணும்னு தான் ஆசைப்படுவாங்க... ஆனால் ஒரு விவசாயி குடும்பத்தில் இருக்கிற பிள்ளை விவசாயியா வரணும்னு அந்தக் குடும்பத்தில் யாரும் விரும்ப மாட்டாங்க. ஏனா இந்த நாட்டில் விவசாயம் பண்றவங்களை மதிக்கிறதில்லைன்னுதான் சொல்லுவேன்.''

சுதர்சன் சொல்லும் விஷயங்கள் மைத்ரேயிக்குப் புதிதாகவே இருந்தது. வேளாண்மையைச் சார்ந்திருக்கும் ஊரில் வாழும் நிலையில், தன் கணவன் சொன்ன விவரங்களைக் கேட்டபோது அதன் வலியை, நிதர்சனத்தை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

இவளுமே திருமணம் உறுதி செய்திருந்த வேளையில் நட்பு வட்டாரத்தின் பார்வையில் 'அமெரிக்க மாப்பிள்ளை' எனும்போது தோன்றும் மதிப்போ, 'பன்னாட்டு நிறுவனத்தின் அதிகாரி' எனும்போது ஏற்படும் வியப்போ 'தனக்குக் கணவராக வரப் போகிறவர் விவசாயி' எனும் போது தோன்றவில்லை என்பதை அறிந்தவள் தான்!

''விவசாயம் பண்றவங்களை கோயில் கட்டி கும்பிடணும்னு சொல்லலை... குறைந்தபட்சம் அவங்க வயிற்றில் அடிக்காமலிருந்தால் கூட போதும் மைத்தி'' என்று வருந்திவிட்டு,

''நம்ம தஞ்சாவூரை ஒரு காலத்தில் நெற்களஞ்சியம்னு தான் சொல்லுவாங்க. ஆனால் இப்போதைக்கு இங்கே வளம் கொழிக்கிறதுன்னு பார்த்தால் பருப்புத் தானியங் களும், தென்னையும், வாழையும் தான் மைத்தி. அஞ் சுக்கு நாலு போகம் தேறினால் அந்த வருஷம் அமோ கமா இருக்குன்னு எடுத்துக்கலாம். அஞ்சுக்கு ரெண்டு என்றால் அரசாங்கத்துக்கிட்டே தான் உதவி கேட்டா கணும்'' என்று சுருக்கமாக விளக்கினான் சுதர்சன்.

அவனது பேச்சுப் புரிந்தது என்பது போல் தலையை ஆட்டிக் கொண்டிருந்தவள் கடிகாரம் மணி பன்னிரண்டு என்று ஓசை எழுப்ப, ''மதியம் வரைக்கும் பேசிட்டே இருந்தால் சமையல் எல்லாம் எப்போ பார்க்கிறது? நான் சென்று வேலையை ஆரம்பிக்கிறேன்'' என்றாள்.

''உனக்கு ஏதாவது செய்யத் தெரியுமா...?'' என்றபடி எழுந்தவன் சோளத் தட்டை ஒரு கையில் பிடித்துக் கொண்டு, இன்னொரு கையால் அவள் எழ உதவி செய்தான்.

அவனது கைப்பற்றி எழுந்தவள், ''ம்... நான் படிச்சது ஹோம் சைன்ஸ். எங்களுக்கு சிலபஸில் இண்டர்நேஷ னல் பதார்த்தங்கள் கூட செய்யச் சொல்லி கொடுத் திருக்காங்க. இங்கே கூட அத்தையிடம் ரெண்டு மாசமா நிறையக் கத்துக்கிட்டேன். அதெல்லாம் ஒரு கை பார்த்துடலாம்'' என்று அடுப்படிக்குச் சென்று இருக்கும் பொருட்களைத் துழாவினாள்.

''ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாதுன்னு கேள்விப் பட்டதில்லையா நீ?'' என்று வினவி மனைவியின் முறைப்பைப் பரிசாகப் பெற்றவன்,

''நீ ஒரு கை பார்க்கிறதை, என் ரெண்டு கண்ணால் பார்க்கிறேனே மைத்ரேயி?'' என்று கேலியாகச் சொன்னபடி அடுப்படி மேஜை மீது அமர்ந்து கொண்டான்.



அங்குமிங்கும் எதையோ தேடியவள், ''குக்கர் இந்த வீட்டில் இல்லையே அத்தான்? என்ன பண்றது?'' என்றாள் யோசனையாக.

''இதெல்லாம் ஹோம் சயின்ஸில் சொல்லிக் கொடுக் கலையா மைத்தி? இண்டர்நேஷனல் சமையல் சொல்லிக் கொடுத்தவங்க லோக்கல் சமையல் சொல்லிக் கொடுக் கலையா? வேறென்ன தான் சொல்லிக் கொடுத்தாங்க?''

''ம்ம்... எல்லாமே விளையாட்டு தான் உங்களுக்கு...'' என்று சிணுங்கியவள்,

''அத்தை சாதத்தை வடிக்கும் போது பார்த்திருக்கேன். ஆனால் இங்கே எப்படி நான் பண்ண போறேனோன்னு தெரியலையே...?'' என்று தனக்குள் சொல்லிக் கொள் வது போல மெல்ல முணுமுணுத்துக் கொண்டாள்.

''உனக்கு வடிக்கத் தெரியலைன்னா பரவாயில்லை மைத்தி! அம்மன் கோவிலில் கூழ் ஊத்தற மாதிரி நினைச்சு சாப்பிட்டுக்கறேன். சாரி... குடிச்சுடுறேன்'' என்று கண் சிமிட்டவும், மைத்ரேயி தன் கையிலிருந்த தக்காளியை அவன் மீது விளையாட்டாக எறிந்தாள்.

''ஹே!'' என்று தன்னை நோக்கி வந்த தக்காளியை அலேக்காக கேட்ச் பிடித்துக் கடித்தவன், ''சரி... சரி... வேலையைப் பாரு'' என அனுமதி வழங்கினான்.

மைத்ரேயி அரிசியைக் களைந்து வேக வைத்துவிட்டு காய்கறிகளை வெட்ட ஆரம்பிக்க சுதர்சன், ''நீயும், வினீத் தும் எத்தனை வருஷமா ப்ரெண்ட்ஸ் மைத்ரேயி? எப்படிப் பழக்கம்?'' என்றான் ஆர்வமாக.

மைத்ரேயி, ''சின்ன வயசிலிருந்து... நானும், அவனும் ப்ரைமரி ஸ்கூலிலிருந்து ஒண்ணா படிச்சோம். ரெண்டு பேரையும் பக்கத்துப் பக்கத்தில் ஸ்டூலில் உட்கார

வைச்சாங்க. அவன் சரியான பயந்தாங்கொள்ளியா இருந்தான். நான் அப்படியே நேரெதிர்... அதனாலேயே என்னவோ ரெண்டு பேருக்கும் ஒத்து வந்துடுச்சு'' முக மெல்லாம் பூரிப்புடன் அவளது நட்பு மலர்ந்த விதத்தை நினைவு கூர்ந்தாள்.

''அதுக்கப்புறம் நான் தெரேசா கேர்ள்ஸ் ஸ்கூல் போயிட்டேன். அவன் பாய்ஸ் ஸ்கூல் போயிட்டான். ஆனாலும் ரெண்டு பேரும் ஒரே காலனி. எதிரெதிர் வீடு என்பதால் நட்பு தொடர்ந்துச்சு. எனக்கு இஞ்சினியரிங் பண்றதில் விருப்பம் கிடையாது. ஆனால் அவனுக்கு அதில் தான் விருப்பம்...''

''ஓ!...''

அவனது 'ஓ'வில் என்ன விளங்கியதோ மைத்ரேயிக்கு? மேலும் சில விளக்கங்கள் கொடுக்க எண்ணி தொடர்ந்து பேசினாள்.

''மாதங்கி அவள் இஷ்டப்படி கல்யாணம் செய்ததும் அம்மா - அப்பா எனக்கு நிறைய கட்டுப்பாடு போட் டாங்க. வினீத் கூட பேசறதே அப்பாக்குப் பிடிக்கலைன்னு அம்மா என்கிட்டே சொன்னாங்க; ஆனால் நாங்க எங்க நிலையில் தெளிவா இருக்கும்போது எதற்கு தேவையில் லாத பயம்னு கேட்டேன்.''

பதிலுக்கு முறுவலொன்றை உதிர்த்தவன், ''உங்க அக்காவுடைய காதலுக்கு ஏன் அத்தையும், மாமாவும் முன்னாடியே ஒத்துக்கலை?'' என்று பேச்சை மாதங்கி யின் பக்கம் திசைத் திருப்பினான்.

''ஏன், எதுக்குன்னு காரணம் கேட்டால் எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை. ஆனால் ஈகோ மட்டும்தான் பெரிய தடையா இருந்திருக்க முடியும். வேறென்ன



சொல்ல?'' பெருமூச்சை வெளியேற்றியபடி சாதத்தை வடிக்கத் தொடங்கவும்.

முன்பின் பழக்கமில்லாத வேலையைக் கையாண்ட தாலோ என்னவோ சூடான பாத்திரமும், அதிலிருந்து வெளியேறிய ஆவியும் அவளது கையைப் பதம் பார்க்க, ''அம்மா...! அம்மா...!'' என்ற பெருத்த அலறலோடு பின் வாங்கினாள்.

''மைத்தி...'' என்றபடி அவளிடம் இரண்டே எட்டில் தாவி வந்த சுதர்சன் அவளின் கைகளை ஏறிட, அது சிவந்து கன்றிப் போயிருந்தது.

''பழக்கமில்லைன்னா செய்யாமல் விட வேண்டியது தானே? எதுக்கு இப்படி...?'' என்று இரைந்தவனுக்கோ கண் கலங்க நிற்பவளைப் பார்த்ததும் தொடர்ந்து பேச முடியவில்லை..

சுத்தம் செய்து களிம்பைத் தடவிவிட்டு மைத்ரேயிக்கு எரிச்சல் அடங்கிவிட்டது என்ற நிலை வரும்வரை இருவரையுமே பலத்த மௌனம் ஆட்கொண்டது.

தன்னை முறைப்பவனிடமிருந்து தன் கரத்தை மீட்டு கொண்டுவிட்டு, ''முறைச்சது போதும். நான் வேலையைக் கவனிக்கணும்'' என்றபடி எழ முயன்றாள்.

''நீங்க ஒரு 'கை' பார்த்ததெல்லாம் போதும். இனிமேல் இருக்கிற கையையும் காலையும் ஒழுங்கா பார்த்தபடி கொஞ்சம் உட்காருங்க. மீதி வேலையை நான் செய்துக் கிறேன்'' உத்தரவாகச் சொன்னான் மனைவியிடம்.

''உங்களுக்கு என்ன செய்ய தெரியும்? நானே கவனமா செய்யறேன்...'' மைத்ரேயியின் எந்த உறுதிமொழியும் சுதர்சனிடம் எடுபடாமல் போகவே அவனது வேலைகளைக் கவனித்தபடி அமர்ந்து கொண்டாள்.

மைத்ரேயியின் வழிகாட்டுதலுடன் வெற்றிகரமாக மதியம் சமையல் நடந்தது மட்டுமின்றி அன்றும், தொடர்ந்து அங்கு தங்கிய இரண்டு நாட்களும் இருவருக்கு மிடையேயான அன்பும், புரிதலும், பிணைப்பும் அதிகமாகியது.

உள்ளத்தில் நிறைவு உண்டாகும் போது நம்மைச் சுற்றியுள்ள யாவையும் நல்லவிதமாகவே கண்ணிலும், கருத்திலும் தென்படும் என்பது வரையறுக்காதக் கோட்பாடு போல! அந்தக் கோட்பாடிற்கு மைத்ரேயியும் விதி விலக்கல்ல!

மூன்று நாட்கள் சென்று அவர்கள் வீட்டிற்குத் திரும்பிய பொழுது, பைரவா, தன் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு வாலை ஆட்டியபடி குஷியுடன் அவர்கள் இருவரையும் தனக்குரிய பாணியில் வரவேற்று காலைச் சுற்றிச் சுற்றி வந்தது.

வாயில்லா ஜீவன் தனது அன்பை இத்தனை உற்சாகத்தோடு வெளிக்காட்டியது கரையாத கல் மனதையும் கரைய வைக்கும் என்றால் மைத்ரேயியின் உள்ளம் மட்டும் எம்மாத்திரம்?

இதுவரையில் அதனிடம் ஒதுக்கத்துடன் இருந்தவள், அந்தக் கணத்தில் தன் பயத்தை விலக்கி பைரவாவின் அன்பிற்கு பதிலன்பு செலுத்தினாள்.

வாஸ்தல்யத்துடன் பைரவாவின் கழுத்தைத் தடவி விட்ட மைத்ரேயி, ''இதுநாள் வரையில் இதைக் கண்டு பயங்கரமா பயந்து தான் இருந்திருக்கேன் அத்தான். ஆனால் இன்றைக்கு இந்த ஜீவன் நம்ம மேலே காட்டின அன்பு என்னை நெகிழ வைச்சுடுச்சு'' என்று தன் உணர்வுகளை கணவனிடம் பகிர்ந்தாள்.



சுதர்சனுக்கோ மைத்ரேயி இந்த ஊரைப் பற்றிய அபிப்ராயத்தை மாற்றிக் கொள்ள தன்னால் ஆன முயற்சிகளைத் துரிதமாகவே செயல்படுத்த வேண்டுமென்ற சிந்தனை ஆழப் பதிந்தது.

தன் எண்ண ஓட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தவன், ''பைரவாவை உனக்குப் பிடிக்க ஆரம்பிச்சதுக்கு, எனக்கு ட்ரீட் வேணுமே மைத்தி?'' என்று புருவங்களை உயர்த்தி இறக்கினான்.

''ஏன்? ரெண்டு நாள், மூணு நாள் ஆனது ட்ரீட் இல்லையா உங்களுக்கு?'' மெல்ல கிசுகிசுத்தாள்.

''அதெல்லாம் நார்மல் ட்ரீட்டாக்கும்; இதுக்கு ஸ்பெஷல் ட்ரீட் வேணும்...'' என்று மனைவியின் தோளில் கையைப் போட்ட அதே நேரம் வீட்டினுள்ளேயிருந்த விடுகதைப் பாட்டி, ''வந்துட்டீங்களா பேரப் பிள்ளைகளா?'' என்றபடியே வெளியே வந்தார்.

''போச்சுடா!'' என்றபடியே ஏறிட்ட மைத்ரேயியைப் பார்த்து சிநேகமாகப் புன்னகை உதிர்த்த பாட்டி, ''ஆயிரம் பேர் பார்க்க ஆத்தங்கரை ஓரத்திலே கட்டிப் பிடிக்கிறான் - கள்ளப்பயல் கன்னத்தைக் கடிக்கிறாள் - கள்ளியவள் அது என்னன்னு இவ்வளவு நாள் போட்ட புதிரை இனி மேல் போட முடியாது போலிருக்கே பேராண்டி?'' என்று உரிமையாக சுதர்சனிடம் கேலி பேசினார்.

''ஏன் பாட்டி இப்படி வந்ததும், வராததுமா விடுகதையைச் சொல்லி எங்களை பயமுறுத்துறீங்க? தாத்தா வீட்டில் இல்லையோ?''

பாட்டியின் பேச்சில் மைத்ரேயி வெட்கம் என்ற பெயரில் உள்ளே சென்றுவிட, அதைக் கண்ணுற்ற சுதர்சனோ பாட்டியை சமாளித்து அனுப்பிவிட்டு ஒருவழியாகத் தங்கள் அறைக்கு வந்து சேர்ந்தான்.

அவனுக்கு மைத்ரேயியின் மனநிலையைப் பற்றி சரியாகத் தெரியாமல் சமாதானம் செய்யவோ, சமாளிக் கவோ வழிவகை தெரியாமல் விட்ட இடத்திலிருந்து பேச்சைத் தொடங்கினான்.

''ஸ்பெஷல் ட்ரீட் பற்றி எதுவும் அக்கறையில்லையா டா?'' என்றான் ஆர்வமாக.

உணர்ச்சியற்றக் கண்களுடன் அவனை ஏறிட்டவள், ''புதுசா கல்யாணம் ஆனவங்க தானே... சின்னஞ்சிறுசுங் கன்னு நாசூக்கா போக மாட்டாங்களா சுதர்சன்? இப் படியா பேசுவாங்க?'' என்று அடக்கப்பட்ட கோபத்துடன் வினவ,

''இவங்க ஏன் இப்படியில்லை... அவங்க ஏன் அப் படின்னு கேட்டு நம்மளை நாமே வருத்தப்படுத்திக் காமல் சூழலையும், மனுஷங்களையும் அப்படியே ஏத்துக் கிறது தான் மைத்தி நமக்கு நிம்மதியைத் தரும். அது தான் நிரந்தர தீர்வும் கூட'' என்று முடிந்தவரை அவளைச் சாந்தப்படுத்த முயன்றான்.

''அதோட... தோளில் கையைப் போட்டதுக்கே நீங்க கட்டிப் பிடிச்சு, கன்னத்தைக் கிள்ளின்னு என்னன்னவோ சொன்னாங்களே...? எனக்குக் கஷ்டமா போயிடுச்சு...'' ஆறுதலாக அருகிலிருந்த கணவனின் தோளில் சாய்ந்து கொண்டாள்.

''அதையேன் குறை வைப்பானேன்? அவங்க முன் னாடி கட்டிப் பிடிச்சு... கன்னத்தைக்...'' என்றவனை மைத்ரேயி முறைக்க,

''சும்மா... சும்மா... மைத்ரேயி! இதுக்கெல்லாம் நெற்றிக்கண்ணை திறக்கக் கூடாது. ஓகே... ஓகே... சீரியஸ் தான். சீரியஸாவே பேசறேன். பாட்டி சொன்னது



நம்மளை இல்லை. அவங்க நம்ம ரொமான்டிக் லுக்கைப் பார்த்துட்டு சினிமாவை சம்பந்தப்படுத்தி ஒரு விடு கதையை எடுத்து விட்டிருப்பாங்க. அத்தோட அவங்க அதை மறந்துடுவாங்க மைத்தி. வெளியே போய் புறம் பேசறதெல்லாம் கிடையாது. கிராமத்தில் ஓரளவு வெளிப்படையா, வெள்ளந்தியா பேசற மக்கள் தான் நிறைய இருப்பாங்க கண்ணம்மா. உனக்கே பழகப் பழக புரிய ஆரம்பிக்கும். சரியா? எங்கே சிரி பார்க்கலாம்'' என்று அவன் பேச்சை முடித்தபோது அவள் முழுவது மாகவே சமாதானம் அடைந்திருந்தாள்.

''இன்னமும் என் கண்ணம்மா முழுசா சமாதானம் ஆகலை போல... கொஞ்சம்... இன்னமும் கொஞ்சம் ரெண்டு மில்லி மீட்டர் ஜாஸ்தியா சிரிச்சால் போதுமே எனக்கு. எங்கே சிரி... சிரி...'' என மைத்ரேயிக்கு சிரிப்பு மூட்ட, ''வேண்டாம் அத்தான்... கிச்சு கிச்சு மூட்டாதீங்க!! வேண்டாம்...'' என்றபடி துள்ளினாள்.

''தட்ஸ் மை செல்லப் பொண்டாட்டி!'' மூக்கைப் பிடித்துக் கொஞ்சினான் சுதர்சன்.

''அய்யே! போதுமே! சப்பை மூக்கு சப்பை மூக்குன்னு சொல்ல வேண்டியது. அப்புறம் அந்த மூக்கையே பிடிச்சு கொஞ்ச வேண்டியது...''

கூடலில் ஊடல் கொண்டவளிடம், ''ஹே! எனக்குப் பிடிச்ச மூக்கு. நான் அடிப்பேன்... அணைப்பேன்... கடிப் பேன்... அதெல்லாம் நீ கேட்கக் கூடாது. நீயேன் கேட் கிறே?'' என்றபடி அவளது மூக்கு நுனியில் ஒட்டு மூக்குத்தி போடுவது போன்று தன் இதழ்களால் ஒற்றி எடுத்தான்.

''இந்த சிப்பி முத்தம் கூச்சமா இருக்கு... விடுங்க...'' என்று தன் மனைவி சிணுங்கியதையே மீண்டும் ஒரு

முறை அதே போன்று செய்வதற்கான அனுமதியாக எடுத்துக் கொண்டான் சுதர்சன்.

கணவனின் செய்கையை ரசிக்கும்போது மைத்ரேயியின் அலைபேசியில் குறுந்தகவல் ஒன்று தோழியிடமிருந்து எட்டிப் பார்க்க, அதைப் பிரித்து படித்தவளின் இதழ்களில் புன்னகை தவழ்ந்தது.

''உங்களுக்காகவே அனுப்பியிருக்கிற எஸ்.எம்.எஸ். மாதிரி இருக்கு பாருங்களேன் அத்தான்...'' என்றபடி சுதர்சனிடம் தன் அலைபேசியை நீட்டினாள்.

''சார்! என் வைஃப் உடைய பிறந்தநாளை ஞாபகம் வைச்சுக்க ஏதாவது ஒரு வழி சொல்லுங்களேன்...'' என்று ஒரு நபர் தன் நண்பனிடம் வினவ,

''வாழ்நாளில் ஒரேயொரு முறை அந்த நாளை மறந்துடுங்க. அதுக்கப்புறம் இந்த ஜென்மத்துக்கும் மறக்கவே மாட்டீங்க...'' என்று யோசனை சொல்வது போல நகைச்சுவையாக வந்திருந்தது குறுந்தகவல்.

அதைப் படித்து முடித்தவன், ''அனுபவஸ்தன் எவனோ வசமா சிக்கி சின்னாபின்னமாகியிருப்பான் போல...'' என்று மைத்ரேயியைப் பார்த்து கண் சிமிட்டிவிட்டு, அவர்கள் அறையின் அலமாரியிலிருந்த தலையாட்டி பொம்மையின் பக்கம் திரும்பினான்.

அழகிய வடிவிலிருந்த அந்த பெண் தலையாட்டி பொம்மை மேலும், கீழுமாகத் தாளம் தப்பாமல் தலையை ஆட்டிக் கொண்டு நிற்க, நிஜ வழ்வில் அந்த பொம்மையைப் போன்று கணவன் சொல்லுக்குத் தப்பாமல் தலையை ஆட்டிக் கொண்டிருந்தாள் மைத்ரேயி.

கட்டாயத்தினால் அல்ல - முழுக்க முழுக்க அன்பின் ஆதிக்கத்தால்!

இனி வரும் நாட்களிலும் தலையாட்டல் தொடருமா?





# 6

''வாங்க! வாங்க சுதர்சன்! இப்ப தான் வர்றதா மைத்ரேயி?'' வினீத்தின் திருமண வரவேற்பிற்கு வந்திருந்த சுதர்சனையும் மைத்ரேயியையும் இன்முகத்தோடு வரவேற்றனர் வினீத்தின் பெற்றோர்கள்.

நாளை நடக்கவிருந்த வினீத்தின் திருமணத்திற்கென்று சென்னைக்கு அன்று காலையில் தான் மைத்ரேயியின் பெற்றோர்கள் வீட்டிற்கு, சுதர்சனும் மைத்ரேயியும் வந்திருந்தார்கள்.

''எப்படி இருக்கீங்க ஆன்ட்டி? காலையிலேயே வீட்டிற்கு வந்திருப்பேன் ஆன்ட்டி. அம்மா தான் இன்றைக்கு மாலை ரிசப்ஷன், நாளைக்குக் கல்யாணம்னு வீடு நிறைய ஆட்களோடு நீங்க பிசியா இருப்பீங்கன்னு சொல்லிட்டாங்க.''

.அவர்களை நலன் விசாரித்து முடித்து, பெற்றோருடனும் கணவனுடனும் மேடைக்குச் சென்ற மைத்ரேயி, ''ஹாய் கல்யாண மாப்பிள்ளை! எப்படி இருக்கீங்க?'' என்று வினீத்திடம் முகம் முழுதும் சிரிப்புடன் விரித்தவள்,

மணப்பெண் நீரஜாவிடம், ''ஹாய்! உங்க உட்-பீ எங்களை உங்களிடம் அறிமுகப்படுத்த மாட்டான் போல! நாங்களே எங்களை அறியப்படுத்திக்கிறோம். நான் மைத்ரேயி, இவர் என் கணவர் சுதர்சன். இவங்க என் அம்மா, அப்பா'' என்றாள்.

''இப்ப அறிமுகப்படுத்தலைன்னா என்ன? அதான் ஏற்கனவே வினீத் உங்களைப் பற்றி நிறைய சொல்லி யிருக்காரே!'' வினீத்தின் கைகளை அழுத்தமாகப் பற்றிக் கொண்ட நீரஜா சிரித்தபடியே கூறினாள்.

''இதோ பாருடா! அவனைச் சொன்னால் உங்களுக் குக் கோபம் வர்றதை? பார்த்தீங்களா சுதா?''

''ம்ம். பார்த்துட்டே தானே இருக்கேன். வினீத்திற்கு ஏற்ற ஜோடி! உங்க ரெண்டு பேருக்கும் எங்களுடைய மனமார்ந்த வாழ்த்துக்கள்!'' என்ற சுதர்சன் பரிசைக் கொடுத்து விட்டு சிறிது நேரத்திலேயே மாமனார், மாமி யாருடன் சென்று இருக்கையில் அமர, மைத்ரேயி மட் டும் மேடையிலேயே மணமக்களுக்குத் துணையாகத் தங்கிவிட்டாள்.

வினீத், "எங்கேடி உன்னைக் காலையிலிருந்து காணோம்? காலையில் வந்தவள் வீட்டில் எட்டியே பார்க்கலை? ஐ வாஸ் எக்ஸ்பெக்டிங் யூ!'' என்றான்.

''நீரஜா! மைத்ரேயிக்கு கால் அவள் வீட்டில் தங்கவே தங்காது. எப்பப் பாரு எங்க வீட்டில் தான் குடியிருப்பாள். சரியான சாப்பாட்டு ராமி! எனக்கு வைச்சிருக்கிறதைக் கூட முழுங்கிடுவாள். லேசுபட்ட ஆளில்லை'' என்றவன், மைத்ரேயியை ஆதுரமாகப் பார்த்து, ''மை பெஸ்ட் ப்ரெண்ட்'' என்றான்.

புருவ மத்தியில் முடிச்சுக்கள் விழ இருவரையும் சில கணங்கள் பார்த்த நீரஜா, மேலும் அவனுடன் நெருங்கி நின்றுக் கொண்டு, ''இனிமேல் உங்க பெஸ்ட் ப்ரெண்ட் நான் தான் வினீத்?'' என்று அவன் கண்களைப் பார்த்து சொன்ன பிறகும் வினீத்திற்குக் கண்கள் அந்தப் பக்கம் இந்தப் பக்கம் நகருமா என்ன?



''ம்க்கும்! ம்க்கும்!'' தொண்டையைக் கேலியாகச் செருமிக் கொண்ட மைத்ரேயி, ''நாளைக்குப் பிறகு தான் அவன் உங்களோட முழு உரிமை. அதுவரைக்கும் எங்களுக்கும் அவன் மேலே உரிமை இருக்கு நீரஜா. வினீத்! நாளைக்கு வரைக்கும் கொஞ்சம் பொறுத்துக்கோங்க சார்! இப்பவே இப்படி நீரஜா மேலே வைச்ச கண்ணை எடுக்க முடியாமல் இருக்கியேடா நீ? கொஞ்சம் சுற்றி இருக்கிற எங்களையும் பார்க்கிறது?!" எனக் கிண்டலடித்தாள்.

உதட்டையிழுத்து சிரிப்பை அப்படியே வைத்திருந் தாலும், நீரஜாவின் கண்களில் லேசாகக் கடுப்பு ஏறு வதைக் கண்ணுற்ற வினீத், ''ஹே! இதென்ன வம்பாப் போச்சு? நாளைக்குக் கல்யாணத்தை வைச்சுக்கிட்டு, இப்ப நீரஜா மேலே கண்ணு இல்லைன்னாதான் கஷ்டம். நீ குடும்பத்துக்குள் குழப்பத்தை உண்டாக்கிடுவ போல இருக்கே?'' என்றான்.

மனைவியை வீட்டிற்குப் போக அழைக்க வந்த சுதர்சனிடம், ''இதைக் கேட்காமல் போயிட்டீங்களே அத்தான்? நீங்க சொன்னது ரொம்ப சரி. ரெண்டு பேரும் ஜாடிக்கு ஏற்ற மூடி தான். கொஞ்சம் அக்கம் பக்கம் நடக்கிறதையும் பாருன்னு வினீத்கிட்ட சொன்னால், அவன் எல்லாமே என் நீரஜா தான்னு சொல்றான்'' என்று அப்பொழுது நடந்ததை விளக்கினாள் மைத்ரேயி.

''நாங்க இப்ப அக்கம் பக்கம் பார்த்தால் தான் தப்பு மைத்ரேயி. ஆனால் நீங்க அப்படியில்லை பாருங்க. நீங்க அக்கம் பக்கம் பார்க்கத் தான் வேணும்.''

சிரித்துக் கொண்டே நீரஜா சொன்னதைக் கேட்டு, அவளிடம் சில கணங்கள் ஆழமான பார்வையைச் செலுத்திய சுதர்சனுக்கு, 'நீ எடுக்கும் அதீத உரிமையும்,

பேச்சும் எனக்குப் பிடிக்கவில்லை' என்ற அவளின் ஜாடைப் பேச்சை எளிதாகப் புரிந்து கொள்ள முடிந்த தனால், ''அவங்க சொல்றது சரிதான் மைத்ரேயி! அவங்க ரெண்டு பேரும் எதுக்கு அக்கம் பக்கம் பார்க்கணும்? நாம தான் அதெல்லாம் கொஞ்சம் பார்க்கணும்... பார்த்து, புரிஞ்சு நடந்துக்கணும்'' என்று பூடகமாகவே மனைவிக்குப் பதிலும் தந்தான்.

மேலும் பேச்சை வளர்க்க விருப்பமில்லாமல், ''மாமாக்கு டயர்டாக ஆரம்பிக்குது. கிளம்பலாமா?'' என்றான்.

''உங்களைத் தனியா விட்டுட்டுப் போறேன்னு ரொம்ப கவலைப்படாதீங்க. நாளைக்குக் காலையிலேயே வந்துடறோம்'' போலியாக மிரட்டிய மைத்ரேயி அவளது குடும்பத்தினருடன் கிளம்ப,

நீரஜா, ''அங்கிள் உடம்பைப் பார்த்துக்கோங்க மைரேயி. எங்களுக்காகட் பாவம் நீங்க எதுக்குக் காலையிலேயே கிளம்பி வரணும்? ஹெல்த் ரொம்ப முக்கியமில்லையா?'' என்றாள் அக்கறைப் போல.

வீட்டிற்குச் செல்லும் வழியெல்லாம், அவர்கள் இரு வரின் ஜோடிப் பொருத்தத்தைப் பற்றியும், நீரஜாவின் அலங்காரத்தைப் பற்றியும், அவளின் அக்கறையைப் பற்றியும் ஆர்வமும், சந்தோஷமுமாகப் பேசிக் கொண்டு வந்த மைத்ரேயியைக் குறுக்கிடாமல், அமைதியாகக் காரை ஓட்டிக் கொண்டு வந்தான் சுதர்சன்.

அங்கே வரவேற்பிலோ மைத்ரேயி கிளம்பிய பிறகு கிடைத்தத் தனிமையில் வினீத், ''மைத்ரேயி கிராமத்தில் போய் எப்படி குப்பைக் கொட்டப் போறாளோ? கட் டாயப்படுத்தி அவளுக்கு சுதர்சனைக் கல்யாணம் செய்து வைச்சுட்டாங்களோன்னு பயந்துட்டு இருந்தேன்.



பார்த்தால் அப்படித் தெரியலை இல்ல நீரு? அவள் கொஞ்சம் வெகுளி வேறயா? மனசில் நினைக்கிறதை அப்பவே, அப்படியே சொல்லிடணும் அவளுக்கு'' என்றான்.

நீரஜா, ''வெகுளியா? இல்லை... வினயமா வினீத்?'' என்றாள் ஒரு மாதிரி குரலில்.

''என்ன சொல்றே?''

''ஒண்ணுமில்லை. சாதாரணமா தான் கேட்டேன். நாம நினைக்கிறதையெல்லாம் அப்படியே பேச முடியாதே வினு? அதுவுமில்லாமல் கல்யாணத்துக்கு முன்னாடி மாதிரியேவா அப்புறமும் இருப்பாங்க. மாறித்தானே ஆக ணும்?'' என்றவள் கணவனாகப் போகிறவனைப் பார்த்து,

''இப்ப என்னையே எடுத்துக்கோங்க. கல்யாணத் துக்கு முன்னாடியே உங்களுக்காக நான் எவ்வளவு மாறி இருக்கேன். நீங்களும் தானே எனக்காக மாறுவீங்க வினு?'' என்று கண்களில் மையலுடன் கூறி, பேச்சைத் தன் பக்கமாக சாதுரியத்துடன் திருப்பினாள்.

நீரஜாவிற்கு மைத்ரேயியைக் கண்ட மாத்திரத்தில் பிடிக்காமல் போய் விட்டது! தனக்குப் பிடித்தவன், அதுவும் தான் உயிராகக் கருதுபவனின் பாதிப் பேச்சு வேறு யாரையோ பற்றியதாக இருந்தால்?

அதுவும் அது, அவள் வயதையொத்த இளம் பெண் ணாக வேறு இருந்துவிட்டால்...?

அடுத்த நாள் காலை வினீத் - நீரஜா திருமண வைப வத்தில் கலந்து கொண்டு, கூடமாட உதவி செய்த சுதர் சனும் மைத்ரேயியும் சிறிது நேரம் இளைப்பாற அமர்ந் தார்கள். திருமணத்திற்கு வந்திருந்த பெரும்பாலான விருந்தினர்கள் சென்று விட்டிருக்க, நெருங்கிய

சுற்றமும், அதைவிட நெருங்கிய நட்பும் மட்டுமே மண்டபத்தில் மீதமிருந்தனர்.

ஒலிப்பெருக்கியில் ஒலித்துக் கொண்டிருந்த பாடல் களும், ஒழுங்கில்லாமலிருந்த இருக்கைகளும், தரையில் சிதறிக் கிடந்த பூவும் அட்சதையும், அங்குப் பரவி யிருந்த நறுமணமும், மேடை அலங்காரமுமே அங்கு அதிகாலையில் நடந்த திருமணத்திற்கு சாட்சியாக இருந்தது.

''கல்யாணம் நல்லபடியா நடந்து முடிஞ்சுச்சு இல்ல அத்தான்?'' மண்டபத்தைச் சுற்றி ஒட்டியப் பார்வை யுடன் கூறினாள் மைத்ரேயி.

''ஹப்பா... நின்னு நின்னு காலே வலிக்குது! நீ வேறே ஹீல்ஸ் போட்டிருக்கே நீரஜா. உனக்கு இன்ன முமே வலிக்கும். கொஞ்சம் காலை நீட்டிய மாதிரி உட் காரு'' சுதர்சன் அருகில் வந்து உட்கார்ந்த வினீத் தன் மனைவியிடம் கரிசனமாகச் சொன்னான்.

''தாங்க முடியலைடா சாமி! ரொம்ப ஓவர் அக்கறையா இருக்கே?'' - இது அங்கிருந்த நண்பர்கள் பட்டாளத் திலிருந்த வினோதினி.

''எதுக்கும் நீரஜா... நீங்க கொஞ்சம் ஜாக்கிரதையாவே இருங்க. எப்போ அந்தக் காலை அவன் இழுத்து விடு வான்னு தெரியாது'' - இது விவேக்.

''ஹே! என்ன நீங்க? புதுக் கல்யாணப் பொண்ணுக்கு பயத்தைக் காட்றீங்க? வினீத் அப்படியெல்லாம் செய்ய மாட்டான் நீரஜா. ரொம்ப நல்ல பையன்'' என்று மைத் ரேயியும்,

''ரொம்ப ஒட்டாதீங்கப்பா. என்னோட வினீத் அப்படி யெல்லாம் இல்லை. காலை இழுத்தெல்லாம் விட



மாட்டாராக்கும்'' என்று நீரஜாவும் ஒரே சமயத்தில் வினீத் திற்கு சாதகமாகப் பேச,

''உனக்கு ரெண்டு பேரு சப்போர்ட்டுக்கு இருக்கும் போது என்னடாப்பா கவலை? உன்னை நாங்க ஏதாவது சொல்ல முடியும்?'' விவேக் கேலி செய்ய, நீரஜாவின் முகத்தில் சிரிப்பு சற்றே மறைந்தது.

''காலை இழுத்து விடமாட்டான்... அமுக்கி தான் விடுவான்னு சொல்றீங்க்ளா நீரஜா?''

''மனைவி காலை கணவன் அமுக்கி விட்டாலும் தான் என்ன தப்பு? இது கூடச் செய்யலைன்னா எப்படி? உங்களுக்காக வினீத் இது மட்டுமில்லை, இன்னமும் எவ்வளவோ செய்வார் நீரஜா'' என்று சுதர்சன் கூற,

உடனே நண்பர்கள் குழு, ''அப்போ... மைத்ரேயி... உன் ஹஸ்பண்ட் உன் காலடியில் தான்னு சொல்லு!'' என்று அவர்களைக் கேலி செய்ய ஆரம்பித்தது.

சிறிது நேரத்தில் மற்றவர்கள் விடை பெற்றுச் செல்ல, சுதர்சன் தம்பதியரும் வினீத் தம்பதியர் மட்டும் இருந்தனர்.

''சொல்லணும்னு நினைச்சு மறந்துட்டேன் நீரஜா. உங்க கல்யாணச் சேலை ரொம்ப நல்லா இருக்கு. யாரு செலக்ஷன்?'' என்றாள் மைத்ரேயி.

நீரஜா, ''தேங்க்ஸ். வினீத் தான் இந்தக் கலர், டிசைன் எல்லாம் செலக்ட் செய்தார். நல்லா இருக்கு இல்ல?'' என்றாள் புடவையை அழகுப் பார்த்துக் கொண்டே.

''ஓஹ்! என் ரிசெப்ஷன் புடவை கூட என் ஹஸ்பண்ட் செலக்ஷன் தான். அவங்கவங்களுக்குப் பிடிச்சவங் களுக்கு டிரஸ் செலக்ட் செய்றதுன்னா சூப்பரா செலக்ட் செய்றாங்க இல்ல. இந்த ஆம்பளைங்க? அதுவும் வினீத்தோட செலக்ஷன் பற்றி சொல்லவே வேண்டாம்.

உங்களை செலக்ட் செய்ததில் இருந்தே தெரியலையா?'' பாராட்டாகச் சொன்ன மைத்ரேயி,

''ஹே! வினீத்! உனக்கு நேரில் சொல்லவே மறந்து போனேன் பாரு! ரொம்ப தேங்க்ஸ் வினீத்!'' என்றாள் நண்பனிடம் திரும்பி.

நீரஜா, ''எதுக்கு?'' என்று புரியாமல் வினவ,

மைத்ரேயி, ''என்னோட பர்த்டேக்கு ஒரு சூப்பர் பாந்தினி சுரிதார் வாங்கி அனுப்பியிருந்தான். அதான்'' என்றாள்.

வினீத்தின் தாய் அமிர்தம் மைத்ரேயியைக் கை காட்டி அழைக்க மனைவியின் பின்னோடே எழுந்து போனான் சுதர்சன்.

அவர்கள் அந்தப் பக்கம் போனவுடனேயே வினீத்தை முறைத்த நீரஜா, ''என்ன வினீத் இது? மைத்ரேயிக்கு சுரிதார் எல்லாம் வாங்கிக் கொடுத்து இருக்கீங்க? நீங்க யாரு அவளுக்கு டிரஸ் வாங்கிக் கொடுக்க? என்ன நடக்குது இங்கே?'' என்றாள் கோபமாக.

''ஹே நீரு! அவள் என்னோட ப்ரெண்ட் நீரஜா! இதிலென்ன இருக்கு?''

''ம்ம். மண்ணாங்கட்டி! அவள் என்னடாவென்றால் உங்களை 'டா' போட்டு பேசுறாள்? நீங்க 'டி'ன்னு சொல் நீங்க? என் முன்னாடியே உங்களை அப்படிச் சொல் றாளே? 'அவங்கவங்களுக்கு பிடிச்சவங்களுக்கு டிரஸ் செலக்ட் செய்றதுனா ஆம்பளைங்க சூப்பரா செலக்ட் செய்றாங்க'ன்னு ஜாடையா வேற சொல்றாள்? எனக்கு எப்படி இருக்கும்? அவளோட ஹஸ்பண்ட் அவளை ஒண் ணுமே சொல்ல மாட்டார் போல. மற்றவங்க சொன்ன மாதிரி அவள் காலடியிலேயே கிடப்பாரோ என்னமோ!



என்னால அப்படி இருக்க முடியாது'' எரிச்சலும் சினமு மாக வந்து விழுந்தன நீரஜாவின் வார்த்தைகள்.

''என்ன இப்படி பேசறே நீரஜா? விவேக் கூட தான் என்னை 'டா' போட்டு பேசினான். அதே மாதிரி தானே இதுவும்? ஒரு சாதாரண கிஃப்ட் தானே? நீயேன் வித்தி யாசமா பார்க்கிறே?'' மனைவியைப் புரிந்து கொள்ள வைக்கும் முயற்சியில் இறங்கியிருந்தான் வினீத்.

''ஆமா! ரெண்டும் வேற வேற தான் வினு! அதுக்காக நான் உங்களையோ மைத்ரேயியையோ சந்தேகப்பட றதா நினைக்க வேண்டாம். உங்க ரெண்டு பேரையுமே நான் முழுசா நம்பறேன். ஆனால் இது வேற! நானும் ஒண்ணும் சொல்லக் கூடாதுன்னு அமைதியா தான் இருந்து பார்த்தேன். ஆனால், மனசில் ஒன்றை வைச்சுக்கிட்டு, வெளியே ஒன்றை என்னால் சொல்ல முடியாது வினீத். அதுவும் வாழ்க்கையைத் தொடங்கப் போகும் போது, மனசில் எரிச்சலோட ஆரம்பிக்க வேண்டாமேன்னு தான் சொல்லிட்டேன். எல்லோரும் என்னையே கவனிக்க ணும்னு பேராசை எல்லாம் எனக்கு இல்லை. ஆனால் என் கணவர் என்னை மட்டுமே கவனிக்கணும்னு சுயநலம் நிறைய இருக்கு. உங்க அன்பு, பாசம் எல்லாம் எனக்கு மட்டும் தான். உரிமைன்னு எடுத்துக்கோங்க, இல்லை பொஸஸிவ்னெஸ் என்று எடுத்துக்கோங்க. எப்படி எடுத்துக்கிட்டாலும் அது தப்பில்லையே வினு?''

கண்களில் நீர் மல்க புத்தம் புது மனைவி கேட்கும் போது, அதுவும் அவன் மீது கொண்ட அன்பால் அப் படிக் கேட்கும்போது மறுத்துச் சொல்ல வினீத் முற்றும் துறந்த முனிவரா? இல்லற வாழ்வில் அன்று அடி யெடுத்து வைக்கப் போகிறவனாயிற்றே?

''சரிம்மா! எதுக்கு இப்படி கண் கலங்குறே? சாரி டா! இனிமேல் பார்த்து நடந்துக்கிறேன் நீரு! ப்ளீஸ்! அழாதே! எனக்குக் கஷ்டமா இருக்கு'' என்று மனைவியைச் சமா தானப்படுத்துவதில் முனைந்தான்.

மண்டபத் தூண் அருகிலிருந்து இவர்கள் பேசிக் கொண்டிருந்த அத்தனையும் அதன் மறைவிலிருந்த சுதர்சன் செவிகளில் விழ, அந்தத் தூண் கல்லாகவே சமைந்தான் அவன்.

வினீத்திடம், அவன் தாய் எதையோ கேட்டு வரச் சொன்னதைக் கேட்க வந்தவன் மைத்ரேயியின் பெயர் காதில் விழ, அங்கேயே சத்தம் செய்யாமல் நின்றான்.

ஒட்டுக் கேட்பவர்கள் அவர்களைப் பற்றிய நல்ல தைக் கேட்பதில்லையே! இப்பொழுதும் அதே மாதிரி தான் ஆனது. ஆனால், அதைக் கேட்டதிலும் ஒரு நன்மை இருக்கின்றதோ?

* * *

சென்னையிலிருந்து செந்தாமரைக்குளம் செல்லும் வழியில் பெரும்பாலும் சுதர்சன் அமைதியாகவே வர, மைத்ரேயி தான் அடுத்த சென்னை விஜயம் பற்றி, நடந்து முடிந்தத் திருமணத்தைப் பற்றி என பேசிக் கொண்டே வந்தாள்.

''நாம சென்னைக்கு அடுத்து வரும்போது, நீரஜாவிற கும் வினீத்திற்கும் ஹோட்டலில் ட்ரீட் வைக்கணும் அத்தான். அவங்க ரெண்டு பேரையும் நம்ம வீட்டுக்குக் கூப்பிட்டிருக்கேன். வர்றேன்னு சொல்லியிருந்தான். நம்ம வீட்டுக்குப் போனப் பிறகு திரும்ப அவனைக் கூப்பிட்டு ஞாபகப்படுத்தணும்.''



சில நொடி அமைதிக்குப் பின்னும் கணவன் ஒன்றுமே சொல்லவில்லை என்றதும் மைத்ரேயியே, ''என்ன அத் தான்? ஒண்ணும் சொல்ல மாட்டேங்கிறீங்க? அவங் களை இங்கே கூப்பிடறது உங்களுக்குப் பிடிக்கலையா என்ன? செலவுன்னு நினைக்கிறீங்களோ?'' என்றாள் கேலியாக.

என்ன சொல்வது, அதை எப்படிச் சொல்வதென்று யோசித்துக் கொண்டு வந்தவனும், அவளை ஒருமுறைப் பார்த்து, ''பிடிக்கலைன்னு சொன்னால் என்ன செய்யப் போறே மைத்ரேயி?'' என்றான் அழுத்தம் திருத்தமாக.

''எப்பப் பாரு கேலி, கிண்டல் தான் உங்களுக்கு. நான் சும்மா விளையாட்டுக்குக் கேட்டேன் அத்தான்'' என்று சிரித்தவளின் சிரிப்பு சுதர்சனின் பாறை போன்று இறுகியிருந்த முகத்தைப் பார்த்து மெல்ல மறைந்தது.

''ஆனால் நான் விளையாடலை மைத்ரேயி. சீரியஸா தான் சொல்றேன். கொஞ்சம்... இல்லை ரொம்பவே உன்னோட நட்பை நீ குறைச்சுக்கணும்'' என்றவனைப் புரியாமல் பார்த்தாள் அவன் மனைவி.

புருவங்கள் மேலேற, ''ஏன்?'' என்றாள்.

''ஏனென்றால்... எனக்குப் பிடிக்கலை. அவ்வளவுதான்.''

''உங்களுக்குப் பிடிக்கலைன்னோ இல்லை நீங்க சொல்றீங்கன்னோ எல்லாம் என்னால எதுவும் செய்ய முடியாது'' காட்டமாகச் சொன்னவள்,

''காரணம் வேணும் எனக்கு. காரணம் சொல்லுங்க. யாராவது ஏதாவது சொன்னாங்களா? அத்தை?'' என்றாள் யோசனையாக.

அவளுக்குத் தன் கணவன் இதுவரை காரணமின்றி எதையும் சொன்னதில்லையே என்ற எண்ணம்.

''யாராவது ஏதாவது சொன்னால் தானா? நானா எதுவும் சொல்லக் கூடாதா? உன்னிடம் வினீத் உரிமை எடுத்துப் பேசறதோ, இல்லை நீ அவனிடம் ரொம்ப உரிமை எடுத்துக்கிறதோ எனக்குப் பிடிக்கலை. நானே உன்னை 'டி' போட்டு சாதாரணமா பேசறது கிடையாது. அப்படிப் பேசவும் எனக்குப் பிடிக்காது. மற்றவங்க எப்படி உன்னை??''

''சந்தேகப்படறீங்களா?'' கோபத்துடன் கேட்டவளை, இந்தக் கேள்வியே அவசியமற்றது என்பது போல் எரிச்சலுடன் பார்த்தன சுதர்சனது விழிகள்.

''நமக்குக் கல்யாணமாகிக் குடும்பம் நடத்த ஆரம்பிச்சு கிட்டத்தட்ட ஆறு மாசம் முடியப் போகுது. நீ இப்ப வந்து நான் உன்னை சந்தேகப்படுறேனான்னு கேட்கிற?''

''நீங்களும் இப்பத்தானே திடீர்னு இப்படி வந்து சொல்றீங்க? நீங்க என்ன சொல்றீங்களோ அதுக்குத் தகுந்த மாதிரி தானே நானும் கேட்க முடியும்?'' மைத்ரேயியும் கேலியும் அலட்சியமுமாகவே பதில் தந்தாள்.

''திடீர்னு இல்லை. கொஞ்ச நாளா நினைச்சுட்டு இருந்தது தான். நாம சந்தோஷமா இருக்கும்போது கூட போன் வந்தால் ஓடறே. அப்பவே சொல்ல நினைச்சது தான். கோபத்தில் பேசினால் சரி வராதுன்னு தான் அப்ப சொல்லலை. அப்புறம் உனக்குப் பிறந்த நாள் அது இதுன்னு மறந்துடுச்சு. எப்ப சொல்றேன் என்கிறது முக்கியமில்லை. என்ன விஷயம் என்கிறது தான் முக்கியம்'' சாலையைப் பார்த்துக் கொண்டே வாகனத்தை ஓட்டியவனின் குரல் கண்டிப்பாக ஒலித்தது.

''சந்தேகமில்லைன்னு உங்க உதடு சொன்னாலும், உங்க மனசு அப்படிச் சொல்லலை சுதர்சன். கடைசியில்



உங்கக் கிராமத்துப் புத்தியைக் காண்பிச்சுட்டீங்க இல்ல? ஆடு மாடுங்கக் கூட பழகிப் பழகி, அது மாதிரியே ஐந்தறிவோடவே இருக்கீங்க. ஒரு ஆணும் பெண்ணும் நல்ல நண்பர்களாக மட்டும் உங்களால பார்க்க முடியறது இல்லை. அதை வெளிப்படையா சொல்லாமல், அதுக்கு என்னென்னமோ சாயம் பூசப் பார்க்கிறீங்க. இப்ப என்ன? நான் அவனோட பேசக் கூடாது? அவ்வளவுதானே? பேசலை. போதுமா?'' வெறுப்பும் கோபமுமாக வார்த்தைகளைத் துப்பியவள் பார்வையை வெளிப்புறம் திருப்பி மௌனமானாள்.

என்னைப் பற்றி இவள் தெரிந்து கொண்டது இவ்வளவு தானா?

மனைவியிடம் ஒரே ஒரு நொடிப் பார்வையைச் செலுத்தியவனின் கண்களை அவள் கவனித்திருந்தால் அடிப்பட்ட வலியும் வேதனையும் தெரிந்திருக்கும். கூடவே கோபமும்!

# 7

சென்னையிலிருந்து வந்த முதல் நாள் 'சுதர்சன் எப்படி அப்படிப் பேசலாம்?' என்ற கோபத்தில் விரைப்புடன் வளைய வந்த மைத்ரேயி தன் மீதிருக்கும் தவற்றை உணரவேயில்லை. ஆனால் கணவனது ஆழ்ந்த மௌனமும், புறக்கணிப்பும் அவள் எடுத்தெறிந்த விதமாகப் பேசியதை அவளுக்கு நினைவு படுத்தியதோடு அல்லாமல், அவளை வெகுவாக உலுக்கின.

திருமணமான நாள் முதல் அவள் தன்னுடைய எத்தனையோ விருப்பங்களை, ஆசைகளை, எண்ணங் களை அவனிடம் கோரிக்கையாக வைத்திருக்கிறாள். அதற்கு சுதர்சனும் அவளிடம் புரியும்படியாக எடுத்துச் சொல்லியோ, கால அவகாசம் கேட்டோ அல்லது நிவர்த்தி செய்தோ என்று ஏதாவது ஒரு வகையைப் பயன்படுத்தி னானே ஒழிய எந்தவிதமான கோபத்தையோ, ஒதுக்கத் தையோ அவளிடம் காட்டினானில்லை.

இப்பொழுது அவன் தனது விருப்பத்தைச் சொன்ன போது மட்டும் மைத்ரேயிக்கு ஏன் இந்தளவு ஆத்திரம்? அவனுக்கு எதையாவது புரிய வைக்க முயன்றாளா... இல்லை புரிந்து கொள்ள தான் முயன்றாளா?

அதுவும் எந்த மாதிரியான வார்த்தைகள்?

அதைச் சொன்ன பிறகும் கூட சுதர்சனே வந்து அவ ளிடம் பேச வேண்டும் என்று எதிர்பார்த்து ஒரு நாளை வீணடித்தது அவளைக் குற்ற குறுகுறுப்பில் ஆழ்த்தியது.

ஊரில் ஒரு சிலர் 'வெடுக்'கென்று எதையாவது பேசி வைக்கும் போது, 'பெரிய இவள்' போன்று 'எப்படி அத் தான் இப்படியெல்லாம் பேசறாங்க? எதையும் கேட்கும் முறையில்லையா?' என்று கிள்ளை மொழியில் கொஞ் சியது இவள் தான்!

ஆனால் இப்பொழுது இவளல்லவோ அவர்களிட மிருந்து தப்பான பாடத்தை கற்றுக் கொண்டிருக்கிறாள்!

ராஜம் பேசிய பேச்சிற்கு லோகநாதன் இரண்டு வார்த் தையில் விரட்டியடித்தார். ஆனால் இன்றோ சுதர்சன் அவனது மௌனத்தையே கேடயமாகக் கொண்டு மைத்ரேயியை அண்ட விடாமலிருக்கிறான்.

சுதர்சனிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று மைத்ரேயி அன்றிரவு வெகுநேரம் காத்திருந்ததற்கு எந்தப் பலனும் கிட்டவில்லை.



இவள் உறங்கியப் பிறகு தான் அறைக்கு வந்திருப் பான் போல... காலையிலும் இவள் எழுவதற்கு முன்பே அவன் கிளம்பி சென்று விட்டிருக்க, மைத்ரேயியின் பாடு மிகவும் திண்டாட்டமாய் போய்விட்டது.

துரிதமாக காலை கடன்களை முடித்துக் கொண்டு கீழே சென்றவளுக்கு அங்கும் ஏமாற்றமே எஞ்சியது.

வாடிய முகத்துடன் சுற்றும், முற்றும் கண்களால் துழாவிக் கொண்டிருப்பவளிடம் வரலக்ஷ்மி, ''தம்பி, இன்றைக்குக் காலையிலேயே கிளம்பிட்டானே மைத்ரேயி? சோர்வா தூங்கிட்டியா?'' என்று அன்புடன் விசாரித்தார்.

கண்களில் திரள காத்திருந்த நீரைக் கட்டுப்படுத் தியவள், ''ம். ஆமாம் அத்தை. நான்... ரெஸ்ட்...'' என்று கோர்வையாகக் கூடச் சொல்லாமல் மீண்டும் தங்களது அறையிலேயே ஐக்கியமானாள்.

ஆனால் அப்படியே ஐக்கியமாக அவளை யாரும் விட்டால் தானே?

சற்று நேரத்தில் மாடியறைக்கு வந்த வரலக்ஷ்மி, ''மைத்ரேயி! எழுந்திரும்மா. ஊரிலிருந்து வந்த ரெண்டு நாளும் உடம்புக்கு ஒண்ணும் பண்ணலைன்னு சொல் லிட்டு இப்படி சோர்ந்து சோர்ந்து படுத்திருந்தால் எப்படி?'' என்று கறாரான குரலில் அதட்டிய அதே சமயம், ''டாக் டர்கிட்டே வர்றியா?'' என்றும் பரிவுடன் வினவினார்.

''இ.. இல்லை. ஒண்ணுமில்லை...'' என்பதற்கு மேல் அவளுக்குத் தொண்டைக் குழியிலிருந்து வார்த்தையே வரவில்லை.

''பிறகென்னம்மா? ஒவ்வொரு வேளையும் சாப்பாட்டை கூட இங்கே கொடுத்தனுப்புவது நல்லாவா இருக்கு?'' என்றபடியே மருமகளின் வாடிய முகத்தில் குறிப்புத்

தேடினார். மகனுக்கும், மருமகளுக்கும் ஏதாவது பிரச்சனை இருக்குமோ என்ற கலக்கம் அவருக்கு.

''.....''

''எப்போ எப்போன்னு வேடிக்கை பார்க்கணும்னு நினைக்கறவங்களுக்கு நாம இடம் கொடுத்திடக் கூடாது மைத்ரேயி. கவனம்!'' சொல்ல வந்ததை பூடகமாகச் சொல்லிவிட்டுச் சென்றார் வரலக்ஷ்மி.

சூசகமாக மாமியார் என்ன அறிவுரைத்துவிட்டுச் சென்றார் என்று புரிய, படுக்கையிலிருந்து எழுந்தாள்.

சுதர்சன் ஒத்துழைக்கவில்லை என்பதற்காக இவள் முயற்சியே எடுக்காமல் இருக்க முடியுமா?

இப்படி ஒதுங்கியேயிருந்தால் சரிப்பட்டு வராது என்றெண்ணியபடி கீழே சென்றவள் முக பாவத்தை இயல்பாக வைத்துக் கொண்டு, ''அத்தை! இன்றைக்கு மதியம் அத்தானுக்குப் பிடிச்ச வெண்டைக்காய் பொரியல் செய்யலாமா?'' என்று அடுத்த வேலையைக் கவனிக்கலானாள்.

சற்று நேரம் கழித்து அடுப்படியில் வேலையாக இருந்தவளிடம் உறவுப் பெண்ணான கஸ்தூரி, ''அண்ணி! நம்ம ஊர் ஸ்கூல் டீச்சர் கீதா, அத்தானைத் தேடி ரெண்டு முறை வந்திட்டாங்க. நீங்க வந்து கொஞ்சம் என்ன ஏதுன்னு விவரம் கேட்டால் நல்லாயிருக்கும்னு அத்தை உங்களைக் கூப்பிட்டனுப்பினாங்க'' என்றுவிட்டுச் சென்றாள்.

நடுத்தர வயதுத் தோற்றம் கொண்ட பெண்மணியிடம் முகமன் கூறிவிட்டு விவரம் கேட்க, ''மகளிர் சுய உதவிக்குழு சார்பில் நல்ல ஒரு திட்டத்தை டெமோ பண்ணி காட்டினால் அதை கலெக்டர் மூலமா மேலிடத்தில் பரிந்துரைக்கலாம்னு சொன்னாங்க. அதுக்கு சுதர்சன் சார் கூட உதவி செய்றதா சொல்லியிருந்தாரு. அதைப் பற்றிப் பேசலாம்னுதான் அவரைப் பார்க்க வந்தேன்'' என்று சுருக்கமாகப் பகிர்ந்தார்.



''ஓ! அப்படியா? அவர் மதியம் வர்ற நேரம் தான்...'' எனும் போதே லோகநாதன் வீட்டை வந்தடைய, ''மாமா! அத்தான் வரலையா?'' என்று ஏமாற்றத்தை மறைத்தபடி வினவினாள்.

''இல்லையேம்மா. தம்பிக்கு தஞ்சாவூர் வரைக்கும் வேலையிருக்கிறதாலே பதினொரு மணிக்கே கிளம்பியாச்சே? வேலை முடிச்சு வந்ததும் நேரடியா மில்லுக்குப் போற மாதிரி இருக்கும்னு நினைக்கிறேன். இன்றைக்கு வல்லத்தில் இருந்து வந்த ஆர்டர் இருக்கும்மா'' என்று விவரம் சொன்னவர் ஆசிரிய பெண்மணியிடமும் இரண்டு வார்த்தை பேசிவிட்டு உள்ளே சென்றார்.

''அவரையே உங்களை வந்து பார்க்கச் சொல்றேன் மேடம்'' என்று வந்திருந்தவரை வழியனுப்பிவிட்டு சுதர்சனின் அலைபேசிக்கு அழைப்பு விடுத்தாள்.

முதல் அழைப்பை எடுக்காமல் விட்டாலும் இரண்டாவது அழைப்பை எடுத்தவன், ''ம்... என்ன விஷயம்?'' என்றான் மொட்டையாக.

''சாப்பிட வரலையா?''

''வேலையிருக்கு. நைட் ஆயிடும்.''

''சாப்பிட்டீங்களா?''

''கிராமத்துக்காரன் நான் ஒருவேளை சாப்பிடாமல் இருந்தால் குறைஞ்சுட மாட்டேன்.''

சுள்ளென்று வந்து விழுந்த அவனது பேச்சு கவலையைத் தந்தாலும், ''உங்களைக் கட்டிக்கிட்ட பிறகு நானும் கிராமத்துக்காரி தானே? நானும் ஒருவேளை சாப்பிடா

மல் இருந்தால் ஒண்ணும் குறைஞ்சிட மாட்டேன்'' என்றாள் கம்மிவிட்ட குரலில்.

''அடடா... நீங்க அப்படியெல்லாம் மாற வேண்டாம்மா தாயே. அப்புறம் ஐந்தறிவு ஜீவன் மாதிரியே நீங்களும் இருக்க வேண்டியதாயிடும்...''

''......''

''ஒண்ணும் சொல்றதுக்கில்லை என்றால் வைச்சுடறேன். எனக்கு நிறைய வேலையிருக்கு'' என்று முடித்துவிட்டான்.

அவனது கோபமும், அதற்கானப் பின்னணியும் மைத்ரேயியைச் சுட, சில கணங்கள் செய்வதறியாது தவித்தவள், மதிய உணவை கேரியரில் எடுத்துக்கொண்டு நேரடியாக மில்லுக்கே சென்றாள்.

திடுதிப்பென்று கண்முன் வந்து நிற்கும் மனைவியைக் கண்ட சுதர்சன் எந்த உணர்ச்சியுமின்றி, ''எதற்கு இவ்வளவு தூரம்?'' என்று கடுப்படித்தான்.

''ஐ அம் சாரி. நான் செய்த தப்புக்கு உங்களுக்கு ஏன் தண்டனை?'' என்றவள் கணவனின் முறைப்பைப் பார்த்ததும், ''என் முகத்தைப் பார்க்கப் பிடிக்காமல் தானே இன்றைக்கு சாப்பிடறதுக்குக் கூட வீட்டுக்கு வரலை?'' என்று தரையைப் பார்த்துக் கொண்டே முணுமுணுத்தாள்.

''எதுக்கு இப்போ இந்தத் தேவையில்லாத டிராமா? என்ன வேணும் உனக்கு?'' அடுத்தவருக்குக் கேட்காத வண்ணம் வினவிவிட்டு, கணக்கு அறையை நோக்கி நகர்ந்தான்.

அவன் பின்னே சென்றபடியே, ''நான் அன்றைக்குப் பேசினது தப்பு தான். கோபத்தில் என்னென்னவோ பேசிட்டேன். ஐ அம் சாரி...'' என்றாள் சமாதானமாக.



''அவ்வளவு தானே? சொல்லியாச்சு இல்லையா? நீ போகலாம்...''

''சாப்பாடு...?''

''அதை வைச்சுட்டுப் போ!''

''அத்தான்! ரெண்டு பேரும் சேர்ந்து சாப்பிடலாம்னு நினைச்சு எடுத்துட்டு வந்தேன்.''

''உனக்கு இங்கே பிடிக்காது. மில்லில் மூட்டையெல்லாம் அடுக்கி வைச்சிருக்கோம். புழுக்கமா இருக்கும். உனக்கு இந்த வாடை ஆகாது. மூச்சு முட்டும்'' என்று அவள் எப்போதோ சொன்னக் காரணங்களை இப்பொழுது பட்டியலிட்டான்.

அவனது பேச்சில் இருந்த கடினமும், ஒதுக்கமும் மைத்ரேயியின் குற்ற உணர்ச்சியை மேலும் பெரிதாக்க அதன் விளைவாக அவளது கண்களில் கண்ணீர் சுரந்தது.

எத்தனை அன்பாக இதுவரையில் அவளை நடத்தியிருப்பான்? இப்படி ஒருநாள் கூட அவன் கடிந்துப் பேசியதில்லையே?! கண்ணீரைக் காட்டி அவனைச் சமாதானம் செய்ய வேண்டாம் என்ற எண்ணத்தில் கணவனின் முகத்தைப் பாராமலேயே குனிந்த தலையோடு புறப்பட முயன்றாள்.

அவளது கால்கள் வெளியேற தயக்கம் காட்ட, என்ன நினைத்தாளோ... கண்ணிமைக்கும் நேரத்தில் தன் கணவனிடம் சரணாகதி அடைவது போல் அவனை ஆரதழுவிக் கொண்டு, ''ஐ அம் ரியலி... ரியலி... சாரி அத்தான். நான் உங்களை அப்படிப் பேசியிருக்கக் கூடாது. என்னை மன்னிச்சுடுங்க. ப்ளீஸ்... இந்த ஒருமுறை... இனிமேல் அப்படிச் செய்ய மாட்டேன்...'' என்று கேவல்களுக்கிடையே சொல்ல வந்ததை ஒருவாறு கோர்வையாகச் சொல்லி முடித்தாள்.

''ஹே! மைத்ரேயி... விடு...'' தன்னை இறுக அணைத்திருந்தவளின் கரங்களிலிருந்து விடுவிக்க முயன்றவனின் சட்டையை 'விடவே மாட்டேன்' என்பது போல் கொத்தாகப் பிடித்துக் கொண்டு சின்னக் குழந்தை மாதிரி அழுபவளிடம் கோபத்தை எப்படிக் காட்டுவது?

சமாதானம் செய்வது போல் மனைவியின் முதுகை ஆதரவாக வருடியவன், ''சரி விடு, மைத்ரேயி. எதுக்கு இப்படி என்னையும், உன்னையும் கஷ்டப்படுத்திட்டு...? பேசறதுக்கு முன்னாடி யோசிச்சு பேச வேண்டாமா?'' என்று சிறு கண்டிப்பும் கனிவுமாக எடுத்துச் சொன்னான்.

''சாரி... சாரி...'' என்பதற்கு மேல் எதுவும் கூற முடியாமலிருந்தவள் இப்பொழுது அவனது சமாதானத்தில் மேலும் கரைந்தாள்.

''இப்படியே அழுதுட்டு இருந்தால் எப்போ சாப்பிடறது? எனக்கு சாப்பாடு எடுத்து வைக்க மாட்டியா?'' பேச்சை திசைத் திருப்பும் முயற்சியில் இறங்கினான்.

''ஓ! சாரி... சாரி...'' என்று தன் தலையில் குட்டிக் கொண்ட மைத்ரேயியிடம், ''இதுக்கும் சாரியா? உனக்கு சாரி தவிர எதுவும் பேச்சே வரலைன்னு நினைக்கிறேன்'' என்று முறுவலித்தான்.

தட்டில் உணவை பரிமாறியவளுக்கு ஒரு வாய் ஊட்டிவிட்டு, ''நீயும் உட்கார். இங்கேயே சேர்ந்து சாப்பிடலாம்'' என உபசரித்தான்.

''கரிசனம் தான்...'' கண்ணைத் துடைத்துக் கொண்டு, அவனுக்கு அழகு காட்டியவள் அவனது பேச்சை மறுக்காது தனக்கும் ஒரு தட்டில் எடுத்து வைத்துக் கொண்டு உண்ணத் தொடங்கினாள்.

உரையாடல்களுக்கிடையே, ''இன்றைக்கு நம்ம ஊர் ஸ்கூல் டீச்சர் கீதா உங்களைத் தேடி வந்தாங்க. ஏதோ



மகளிர் சுய உதவிக்குழு விஷயமா உதவி செய்யறேன்னு சொல்லியிருந்தீங்களாமே? அது சம்பந்தமா பேச வந்திருந்தாங்க. என்ன விஷயம் அத்தான்?'' என்றாள் ஆர்வமாக.

''ம்! மகளிர் சுய உதவிக்குழுன்னு அரசாங்கம் நடத்தறது தெரியுமா உனக்கு? அந்த உதவிக்குழு மூலமாகவும் அரசாங்கத்துக்கு சில நல்ல திட்டங்களைப் பரிந்துரைக்கலாம் மைத்ரேயி. நம்ம விவசாய நிலத்தில் இருக்கிற மண்ணுக்கு சில டெஸ்ட் எல்லாம் எடுத்து ரிசல்ட் வாங்க அக்ரி யுனிவர்சிட்டி வரைக்கும் அன்றைக்குப் போயிருந்தேன் இல்லையா? அங்கே தான் ஒரு பேராசிரியர் வாழை மட்டை நார் பற்றி என்கிட்டே பேசிட்டே இருந்தாரு. முன்பே இதைப் பற்றி படிச்சிருக்கேன் என்றாலும் அவர் சொன்ன பிறகு எனக்கே நிறைய ஆச்சரியமான விஷயங்கள் தெரிஞ்சுது.''

''சரி... அந்த டீச்சர்? அவங்க இந்த ஊர் ஸெல்ஃப் ஹெல்ப் க்ரூப்பில் இருக்காங்களா?''

''இல்லையில்லை... அவங்க இங்கே தன்னால் முடிஞ்ச சின்ன சர்வீஸ் மாதிரி கிராமத்தில் பண்ணிட்டு இருக்காங்க. நிறைய பேருக்கு ஏதாவது வேலை அல்லது தொழில் செய்யணும்னு ஆசையிருக்கும் மைத்ரேயி. ஆனால் அதற்கான முதலடி தைரியமா எடுத்து வைக்க டீச்சர் மாதிரி ஒருத்தங்க உந்து சக்தியா தேவைப்படறாங்க. அதோட அரசாங்க அலுவலகத்தில் நடைமுறை, அணுகுமுறை இதெல்லாத்துக்கும் வழிகாட்ட டீச்சர் தான் ஹெல்ப் செய்வாங்க. இப்போ கூட அந்த வாழை நார் சம்பந்தப்பட்ட ப்ராஜெக்ட் எந்த அளவு சாத்தியம்னு தான் பேச வந்திருக்காங்கன்னு நினைக்கிறேன்.''

சுதர்சனின் பேச்சிலிருந்த ஆர்வம், அவனது சமூக அக்கறை போன்றவை மைத்ரேயியையும் தூண்ட, உற்சாகமாக, ''நானும் என்னால் முடிஞ்ச உதவியைச் செய்யவா? எனக்கும் ஆர்வமா இருக்கு'' என்று விருப்பம் தெரிவித்தாள்.

''உனக்கு வேலைக்குப் போகப் பிடிக்காதுன்னு தானே ஹோம் சயின்ஸ் எடுத்ததா சொன்னே? இப்போ இதில் முடிஞ்ச அளவு உதவின்னா... கிட்டத்தட்ட புலி வாலைப் பிடிச்ச கதை மாதிரி தான் ஆயிடும் மைத்ரேயி. இதை நான் பயமுறுத்துவதற்காகச் சொல்லவில்லை. ஆனால் இப்படியெல்லாம் இருக்கும்னு நீங்க ஏன் முன்னாடியே சொல்லலைன்னு நீ கேட்டுடக் கூடாது பாரு. அதான் சொல்றேன். அடுத்தது... அடுத்ததுன்னு உன்கிட்டே தானே வழிகாட்ட வந்து நிற்பாங்க.''

கணவனின் பேச்சைக் கவனத்துடன் உள் வாங்கியவள், ''நான் வேலைக்குப் போகப் பிடிக்காதுன்னு சொன்னேன் தான் அத்தான். இல்லைன்னு மறுக்கலை. எங்க அம்மாவும், அப்பாவும் வேலைக்குப் போனதால் நானும், எங்க அக்காவும் நிறைய விஷயங்கள் காம்ப்ரமைஸ் செய்ய வேண்டியதா இருந்தது. அந்த மாதிரியான நிலைமை என் குழந்தைகளுக்கு வேணாம்னு தான் வேலை வேணாம்னு சொன்னேன். இது ஒரு சேவை மாதிரி தானே? என்னால் முடிஞ்சதைத் தானே செய்யறேன்னு சொல்றேன்?'' தனது விளக்கத்தையும் முன் வைத்தாள்.

''ஓகே. உன் இஷ்டம் மைத்ரேயி. நம்ம ரூமில் இருக்கிற மேஜை மேலே இது சம்பந்தமா ஒரு புக் இருக்கும். அதனுடன் பேப்பர் கட்டிங்க்ஸ் எல்லாம் எடுத்து வைச்சிருப்பேன். எடுத்துப் படிச்சு பாரு. நாம இதைப் பற்றி விரிவா அப்புறம் பேசலாம்.''



உணவு எடுத்து வந்த கேரியரை அடுக்கியபடியே, ''இன்னமும் உங்களுக்கு என்மேல் இருக்கிற கோபம் குறையலை தானே அத்தான்?'' என்றாள் வருத்தம் தோய்ந்த குரலோடு.

''அப்படியில்லையே?''

''அப்புறம் என்னைக் கண்ணம்மான்னு ஒரு தடவை கூட நீங்க சொல்லலையே?'' ஏக்கமாகக் கேட்டவளிடம்,

''ஒரு தடவை கண்ணம்மான்னு சொன்னால் கோபமில்லைன்னு அர்த்தமாயிடுமா என்ன?'' எனப் புருவங்களைக் கேள்வியாக உயர்த்தினான்.

சில கணங்கள் சுதர்சனையே ஏறிட்ட மைத்ரேயி, ''கோபமிருந்தாலும், இல்லாவிட்டாலும் உங்க கண்ணம்மா நான் தான். எப்போதும் உங்களுக்கு மட்டும் தான் நான் கண்ணம்மா'' என்று அழுத்தம் தர வேண்டிய இடங்களில் அழுத்தம் கொடுத்துப் பேசினாள்.

''அது எனக்குத் தெரியாமலா நான் உன்னிடம் அந்த மாதிரி பேசினதா நினைச்சே?''

''நினைச்சியான்னு கேட்டால் என்னோட பதில் என்னன்னு உங்களுக்குத் தெரியும் அத்தான். ஆனால் இன்னமும் அப்படித் தான் நினைக்கிறேனோன்னு கேட்டால் கட்டாயம் இல்லைன்னு சொல்ல முடியும். நான் கோபப்பட்டது ரொம்பவே தப்புன்னு உணர்ந்துட்டேன். அதிலும் வாய்க்கு வந்தபடி பேசினது அதைவிட ரொம்பவே அபத்தம் தான்...'' குரல் மிகவும் குன்றிவிட்டது அவளுக்கு.

''..........''

''எல்லாத்துக்கும் சின்னதா ஒரு சாரி சொல்லிட்டால் ஆச்சான்னு நீங்க கேள்வி கேட்கலாம். ஆனால் நான்

என்ன செய்தால் உங்க வருத்தம், கோபம் எல்லாம் போக வைக்க முடியும்னு தெரியலை அத்தான். பட் ஐ அம் ரியலி சாரி.''

''.....''

சுதர்சனின் மௌனம் மைத்ரேயியின் முகத்தைக் கவலைக்குள்ளாக்க, ''இந்தச் சின்ன உரசல் நம்பிக்கை சம்பந்தப்பட்டது இல்லை. அது உணர்வு சம்பந்தப் பட்டது. இனிமேல் உங்களுக்குப் பிடிச்ச மாதிரி நடந்துக் கிறேன். குறைந்த பட்சம் அதற்கான முயற்சியாவது எடுக்கிறேனே...?'' என்ற உத்திரவாதத்தையும் தந்தாள்.

இனி தான் எனக்குப் பிடித்த மாதிரி இவள் நடந்துக் கொள்ள வேண்டுமோ என்ன? எந்த மாதிரி நடந்துக் கொண்டாலுமே இவளை எனக்குப் பிடிக்கும் என்று இவளுக்குத் தெரியவில்லையா? இவளின் கவலைத் தேவையில்லாதது என இவளுக்குப் புரியவில்லையா?

முடிந்துவிட்ட ஒன்றை மேலும் மேலும் தோண்டித் துருவ விருப்பமில்லாத சுதர்சன், அதை அப்படியே விட்டான்.

''கண்ணம்மா!'' என்ற விளிப்பில் தன் மனைவியின் கவலைகள் அனைத்தையும் விரட்டியவன், ''நீ என்னைப் புரிஞ்சுக்கலையே என்ற வேதனை தான்டா. நீ இத்தனை சொன்ன பிறகும் உன் அத்தான் சமாதானம் ஆகாமல் இருப்பேனா?'' என அவள் இரு கன்னங்களையும் தன் கரங்களில் ஏந்திக் கொண்டான்.

கணவனின் கனிவான பேச்சில் நிறைந்த மனதுடன் மைத்ரேயி வீட்டிற்கு விடைபெற்றுக் கொள்ள, கடந்த இரண்டு - மூன்று நாட்களாக அழுத்திக் கொண்டிருந்த மனபாரம் நீங்கிவிட்ட திருப்தியுடன் பணியில் ஈடுபட் டான் சுதர்சன்.



கணவனிடம் கலந்தாலோசித்ததின் எதிரொலியாக வாழைநார் பற்றி சேகரித்த விவரங்களையும், ஆய்வு கட்டுரைகளையும், புத்தகத்தையும் படித்து முடித்த வளுக்கு முன்பைவிட ஆர்வம் பன்மடங்கு அதிகமான தில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

தான் படித்ததைச் சின்னச் சின்னதாகக் குறிப்பும் எடுத்துக் கொண்டாள்.

அனைத்து வகை வாழை மரத்திலிருந்தும் நார் பிரித் தெடுக்க முடியும். அதையும் வாழைத்தண்டு பகுதியை அறுவடை செய்த நாற்பத்தெட்டு மணி நேரத்தில் செய்ய வேண்டும். வாழை தண்டிலிருந்து நீர் பிரித்தெடுக் கப்பட வெயிலிலோ, நிழலிலோ காய வைக்க வேண் டும். வாழை நார் சணல் போன்று பயன்படுத்தப்படுகிறது என்றாலும் சணலை விட பன் மடங்கு உறுதியானது.

இத்தகைய வாழை நாரிலிருந்து துணிகள் மட்டுமின்றி சாக்குப்பைகள், மிதியடிகள், தரை விரிப்புகள், வீட்டு அலங்கார விரிப்புகள், பைகள், டிஷ்யூ பேப்பர், ஃபில்டர் பேப்பர், அலங்கார பேப்பர் போன்றவை தயாரிக்கப்படு கின்றன.

ஒரு மரத்திலிருந்து முன்னூறு கிராம் வரை கிடைக் கும் வாழை நாரை பிரித்தெடுக்கும் இயந்திரத்தினால், கையினால் நார் பிரித்தெடுப்பதை விட நாற்பது சதவீதம் அதிகமாகப் பிரித்தெடுக்கலாம்.

இத்தனை விவரங்களின் அடிப்படையில் தன் கணவ னுடன் ஒன்று கூடி லாப - நஷ்டக் கணக்கீட்டைக் கூட தோராயமாகப் போட்டு வைத்தாள்.

வாழை நார்களை ஜெய்ப்பூரில் உள்ள பல நிறு வனங்கள் கொள்முதல் செய்கின்றன என்ற தகவல்

மைத்ரேயியை வினீத்திடம் இது தொடர்பாகப் பேச வைக்கத் தூண்டின என்றாலும், அது தன் கணவனுக்குப் பிடிக்காது என்ற ஒரே காரணத்திற்காக அதைத் தவிர்த்தாள்.

பேச்சுவாக்கில், ''வினீத் கூட பிஸினெஸ் விஷயமா அடிக்கடி ஜெய்ப்பூருக்குப் போவான் அத்தான். இப்படி சுய உதவிக் குழு வழியா ஏதாவது செய்யாட்டியும் கூட நாமளே இதற்கான ஆரம்ப வேலையை எடுத்துச் செய்யலாமே?'' என்று குறிப்பாய் அவனிடம் சொன்னதற்கு வெறும் தோள் குலுக்கலோடு விட்டு விட்டான்.



## 8

வீட்டில் எப்பொழுதும் சோம்பியிருக்க முடிவதில்லையென்றாலுமே பெரிதாக எடுத்துப் போட்டு செய்யவும் மைத்ரேயிக்கு வேலையில்லாமலிருந்த பொழுது, சுதர்சன் வாழை மட்டையிலிருந்து நார் பிரித்தெடுக்கும் முறையைப் பற்றி தெரிவித்ததும், அதைப் பற்றி அவள் படித்ததும் அவளை உற்சாகம் கொள்ளச் செய்தன.

அதன் தொடர்பாக அவர்கள் திரும்பப் பேசும் பொழுது சுதர்சனே, ''இதில் நீ நிஜமாகவே ரொம்ப தீவிரமா இருக்கிறதைப் பார்க்க சந்தோஷமா இருக்கு மைத்ரேயி. உனக்கு என்ன உதவி வேணும்னாலும் கேளு. என்னால் முடிந்ததைச் செய்றேன்'' என்று அவளிடம் உறுதியளித்தான்.

''ஆனால், உன்னால் முடிந்த உதவி செய்றேன்னு முதலில் சொல்லிட்டு, இப்போ நாமளே சொந்தமா



செய்யலாம்னு சொல்றியே? ஆரம்பிச்சால் எதையும் பாதியில் விட முடியாது மைத்ரேயி!'' என்று அவளைக் கூர்ந்து பார்த்தவன்,

அவளது நேர் பார்வையில், தோள்களைக் குலுக்கி, ''நல்லா யோசிச்சுகிட்டியா? இதில் நிறைய வேலை இருக்கலாம்'' என்றான் அக்கறையுடன்.

''தேங்க்ஸ் அத்தான். உங்களிடம் தான் எல்லாத்துக்கும் வந்து நிற்பேன். பார்த்துக்கோங்க'' என்று சிரித்தவள்,

''ஆமா அத்தான். முதல்ல நானும் அப்படித்தான் நினைச்சிருந்தேன். ஆனால், அதைப் பற்றி எல்லாம் படிச்சுப் பார்த்த பிறகு வாழை மரத்திலிருந்து நார் தயாரிக்கிறது ஒண்ணும் அத்தனைக் கஷ்டமான வேலை மாதிரி தெரியலை. ஒரு மெஷினோட முதலீடும் ரொம்ப குறைவு, அதே சமயம் நிறைய ஆட்களும் தேவையில்லை. அதை இயக்க மூன்று பெண்களே போதும்னு போட்டிருக்கு. அந்த நாற்பதாயிரம் முதலீடு என்பது சுய உதவிக் குழுவிற்குப் பெரிய தொகை தானே? அதுவும் அது ஒரு மெஷினோட விலை மட்டும் தான். அதான் எல்லாம் யோசிச்சுப் பார்த்தால் நாமளே செய்தால் என்னனு தோணுச்சு. உதவிக்கு நீங்களும் இருப்பீங்க. அப்புறம் என்னக் கவலை? நீங்க என்ன நினைக்கிறீங்க சுதா?'' என்று கணவனின் முகத்தை ஏறிட்டாள்.

''செய்! சுற்றுப்புறத்தையும் பாதிக்காதுன்னு வேற சொல்றாங்க. எல்லோருக்கும் நல்லதுன்னு நினைச்சுச் செய்றது நல்லதாவே நடக்கும். இதுவரைக்கும் நம்ம வாழைத் தோட்டத்திலிருக்கும் மரத்திலிருந்து குலை வெட்டிய பிறகு, மட்டைகளைச் சும்மா குப்பையாகத் தானே போட்டுட்டு வந்தோம். இப்போ அதிலிருந்தே

வருவாய். சுற்று வட்டாரத்திலிருக்கும் தோட்டத்திலிருந்தும் விலைக்கு மட்டைகளை வாங்கிக்கலாம். ஜமாய் கண்ணம்மா!'' என்று மனைவிக்கு வாழ்த்துக் கூறி தொழில் தொடங்க மேலும் என்னென்ன நடைமுறை சவால்கள், சிக்கல்கள் இருக்கின்றது, அதை எப்படிச் சமாளிப்பதென்றும் விளக்கிக் கூறினான்.

சுதர்சனின் தாய் தந்தையரிடம் இது பற்றிப் பேசியதற்கு, லோகநாதன், ''அதுக்கு என்னம்மா? தாராளமா செய்! சுதர்சன்! அம்மா பேரில் நமக்கு ஊருக்கு வெளியே கொஞ்சம் நிலமிருக்கு இல்லை? அதிலேயே தொழிலைத் தொடங்கட்டும்'' என்றார் உற்சாகமுடன்.

''தம்பி! அதை அப்படியே மருமகள் பெயருக்கு மாற்ற ஏற்பாடு செய்துடுப்பா'' வரலக்ஷ்மி சந்தோஷத்துடன் கூறவும், அவர் கைகளைப் பிடித்துக் கொண்ட மைத்ரேயி, ''உங்க ரெண்டு பேரோட ஆசீர்வாதமும், அத்தானோட துணை மட்டும் போதும் அத்தை'' என்றாள் நெகிழ்ச்சியுடன்.

பெரியவர்களின் ஆசியுடன், வாழை நார் தொடர்பான வேலையில் அதன் பிறகு சுதர்சன் தம்பதியர் இருவரும் முழு ஈடுபாட்டுடன் முனைந்தனர்.

வருவாய், தீயணைப்பு, நல்வாழ்வு, சுகாதாரம் போன்ற துறைகளிலிருந்து நோ அப்ஜெக்ஷன் சர்ட்டிபிகேட், மின்வாரியத் துறையிலிருந்து மின்னிணைப்பு, உணவு மற்றும் பொதுத் துறையிலிருந்து லைசென்ஸ், வேளாண்மைத் துறையிலிருந்து அனுமதி, நிலப்பட்டா போன்றவற்றை வாங்க என்று எல்லாவற்றுக்கும் தன் மனைவிக்கும் எல்லாம் தெரிய வேண்டுமென சுதர்சன், அவளையும் உடனழைத்துக் கொண்டே எல்லா இடங்களுக்கும் சென்று வந்தான்.



அப்படி வெளி இடங்களுக்கு அவனுடன் போனபொழுது, அரசு அலுவலகங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் அவனுக்குக் கிடைத்த மரியாதையையும் மதிப்பையும் நேரில் பார்த்தவளுக்கு பெருமையாக இருந்தது. கூடவே பிரமிப்பாகவும்!

தாங்கள் எங்கேயும் காத்திருக்க அவசியமேயில்லாமல், ''என்ன சார் இங்கே உட்கார்ந்திருக்கீங்க? உள்ளே வாங்க. இத்தனை நேரம் நீங்க காத்திருக்கணுமா? முதலிலேயே சொல்லியிருந்திருக்கலாமே? அம்மா அப்பா நல்லா இருக்காங்களா?''

''நம்ம ஆர்-டி-ஓ கூட உங்க பக்கத்தூரு நிலத் தகராறு விஷயமா உங்களைப் பார்க்க வரணும்னு சொல்லிக்கிட்டு இருந்தார். நீங்களே வந்துட்டீங்க'' போன்ற வரவேற்பையே பார்த்த வண்ணமிருந்தாள்.

சுதர்சனைத் தேடி வீட்டுக்கு வருவோர் போவோரின் எண்ணிக்கையும், கணவன் வீட்டில் அதிக நேரம் தங்காததும் அவளுக்கு சற்றே எரிச்சலைக் கிளப்பியது உண்மை தான் என்றாலும், செந்தாமரைக்குளத்தில் வீட்டுக்குள்ளேயே இவள் இருந்ததால் வெளியே அவனுக்கு எத்தனை மரியாதை என்பது முழுதும் அவளுக்குத் தெரியாமலிருந்தது.

இப்பொழுது அவளும் வெளியிடங்களுக்கு அவனுடன் செல்வதால் அவனுக்குக் கிடைக்கும் மதிப்பும் மரியாதையும் அவன் மனைவி என்பதால் அவளுக்கும் சேர்ந்தே கிடைக்க, அவளுக்கு ஆச்சரியத்தில் விழி விரிந்தது.

தங்கள் திருமணத்தின் போது அவளுடைய தோழியிடம் சுதர்சன் அவனுடைய வீட்டு முகவரிச் சொன்னதைக் கேட்டவள் அதைப் பற்றி அவனிடமே பிறகு கேலி செய்திருக்கின்றாள்.

''இவரு பெரிய ராஜா! அட்ரஸ் சொல்றதைப் பாரு! உங்க ஊரையும் பெயரையும் சொன்னவுடன் தபால் காரருக்குக் கூடத் தெரிஞ்சுடுமாக்கும். ஊரில் இருக் கிறதே ஒரே ஒரு தெரு! அதில் பத்தே பத்து வீடு! இதில் பெரிய பீத்தல் வேற உங்களுக்கு!''

சிரித்துக் கொண்டே, ''இந்த ஒரே ஒரு ராஜாவுக்கு நீ ஒரே ஒரு ராணி!'' என்று போவானே தவிர வேறு ஒன்றும் சொன்னதில்லை!

இப்பொழுது பார்த்தால் அவள் கேலி செய்தது உண்மை போன்றல்லவா இருக்கிறது? மற்றவர்கள் காட்டும் மரி யாதையும் மதிப்பும் வெறும் சொத்து சுகத்தைப் பொறுத் திருப்பது போன்று தோன்றவில்லை.

அவனுடைய குணத்திற்கும் குடும்பத்திற்கும் கொடுத்த மரியாதையாகவே தோன்றியது.

இத்தனை மரியாதைக்குரியவன் அவள் பேசியதற் கெல்லாம் எப்படி அமைதியாகவும் பொறுமையாகவும் இருந்தான்? தன்னிடம் எப்படி பொறுமையாக இருந் தானோ அதே போன்றே இந்த அலுவலகங்களிலும் அத்துமீறி அவன் எதையும் செய்யவில்லை என்பதை யும் கண்கூடாகவே அவள் பார்த்தாள்.

எல்லாமே விதிமுறைப்படி தான் நடந்தது. அதுதான் அவனது குண விசேஷமா?

இவனையா நான் ஐந்தறிவோடு இருக்கிறான் என்றேன்? எனக்குத் தான் அந்த ஐந்தறிவில் ஓரறிவு கூட இல்லாமல் போய்விட்டது!

தன் தந்தை 'பெரிய வீடு, பெரிய வீடு' என்று சொன்ன தெல்லாம் இதைத் தானா? வீட்டின் பரப்பளவை இல் லையா? வீட்டிலுள்ள மனிதர்களின் குண நலனையும் மனதளவையும் பொறுத்ததா அது?



காரில் திரும்பும் பொழுது அவன் கையிலிருந்த 'செக் லிஸ்ட்' மாதிரி குறியிட்டிருந்தத் தாளைப் பார்த்த சுதர் சன், ''இன்னமும் ஒரு டாக்குமென்ட் தான் ரெடியாகணும். அதுவும் நம்ம கைக்கு வந்துட்டால் தஞ்சாவூரில் இருக்க டிஸ்ட்ரிக்ட் இண்டஸ்ட்ரீஸ் சென்டருக்குப் போய் 'சிங்கிள் விண்டோ கமிட்டி' கிட்ட உன்னோட அப்ளிகேஷனை சப்மிட் செய்துடலாம் மைத்தி. அதுக்குப் பிறகு நாம கொஞ்சம் மூச்சு விட்டுக்கலாம்'' என்றான் புன்னகையுடன்.

''சிங்கள் விண்டோ கமிட்டியா?' அப்படினா?''

''சிறு தொழில் செய்றவங்களை ஊக்குவிக்கும் வகையில் நம்ம அரசாங்கம் இதை அமுல் செய்திருக் காங்க மைத்ரேயி. நாமளே எல்லா இடத்துக்கும் போய் அலைஞ்சு திரிஞ்சு அனுமதி வாங்கறதுக்கு பதிலா நம்ம வேலையைச் சுலபமாக்கும் வேலை, வழிமுறை'' என்று விளக்கினான்.

''அப்போ இவ்வளவு இடத்துக்கு அலைஞ்சதெல் லாம் அவசியமில்லையா?''

''அப்படியில்லை மைத்ரேயி. ஃபைனல் அப்ரூவல் கொடுக்கிறதுக்கு முன் அரசாங்க தரப்பிலிருந்தும் மேற்பார்வையிடறது உட்பட நிறைய ஃபார்மாலிட்டீஸ் இருக்கு. அதுக்குத் தான் இந்த கமிட்டி.''

''ஓ! ரொம்ப நல்ல விஷயமில்ல அத்தான்?'' என்றவள் அவனைக் குறுகுறுவென்றுப் பார்க்க, தலையைச் சாய்த்து சிரிப்புடன் என்னவென்று கேட்டான்.

அவன் புறமாக நன்றாகத் திரும்பி உட்கார்ந்தவள், ''இல்லை... நாம போன இடங்களிலெல்லாம் அப்படியே மின்னல் வேகத்தில் வேலை ஜரூரா நடந்ததே? அதுவும் உங்களுக்குன்னா ஸ்பெஷல் போல? அது எப்படி

அத்தான்? நாம போய் சேர்றதுக்குள்ள அங்கே ஆளை எதுவும் செட்-அப் செய்து வைச்சுடுவீங்களா?'' என்றாள் விழிகளில் குறும்பு கூத்தாட.

''என்னைப் பார்த்தால் ஆள் செட்-அப் செய்றவன் மாதிரி இருக்கா? கொழுப்பு தான் உனக்கு!'' என்று அவள் காதைப் பிடித்து வலிக்காமல் திருகினான்.

''ஹா ஹா! பின்னே? செந்தாமரைக்குளம் நெல்லுச் சோறுன்னா சும்மாவா?'' கண் சிமிட்டி சிரித்தவளிடம்,

''உனக்கு நிஜமாவே ரொம்பக் கொழுப்பாயிடுச்சு. நீ சரிப்பட மாட்டே. அதனால நானும் இனி நீ சொன்ன மாதிரியே எனக்கொரு ஆளை செட்-அப் செய்துட வேண்டியது தான்!'' யோசிப்பது போல அவளை வம்பிழுத்தான்.

அவன் தொடையில் நறுக்கென கிள்ளிய மைத்ரேயி, ''கொன்னுடுவேன் ராஸ்கல்! உங்களுக்குத் தான் இப்ப ரொம்பக் கொழுப்பாயிடுச்சு. களை எடுக்கிற அரிவாள் வைச்சே வெட்டிடுவேன்'' என கண்களை உருட்ட,

சுதர்சன், ''ஹா ஹா! இப்பத் தான் நீ அசல் கிராமத்துக்காரியாவே மாறிட்டே! ஐ லைக் இட் கண்ணம்மா!'' என வாய்விட்டுச் சிரித்தான்.

''வெவ்வவ்வே! நீங்க அத்தான் இல்ல... சரியான சைத்தான்!''

''அப்ப நீ? இந்தச் சைத்தானுக்கு ஏற்ற ராட்சஸியா? என் அழகான ராட்சஸி!'' என்று சுதர்சன் கண் சிமிட்டி, அவள் கன்னத்தை நிமிண்ட,

''உங்களை...'' இருந்த பொய்க் கோபத்தையும் இழுத்துப் பிடிக்க முடியாமல் அவளும் கணவனின் சிரிப்பில் இணைந்து அவன் தோளில் சாய்ந்தாள்.



''இந்தப் பொண்ணுங்க இருக்காங்களே! ராட்சஸி என்று சொன்னதும் முறைக்கிறதும், அதுவே அழகான ராட்சஸி என்று சொன்னதும் சிரிக்கிறதும்! யப்பப்பா!'' என சுதர்சன் அவளைக் கேலி செய்யவும், அவன் தோளில் சாய்த்திருந்த தலையைக் கொண்டே செல்லச் சிணுங்கலுடன் அவனை இடித்தாள் அவன் மனைவி.

* * *

அடுத்த சில நாட்கள் கழித்து, இரவு உணவு முடிந்தப் பின் அவர்களது அறைக் கட்டில் தலைமாட்டில் சாய்ந்தவாறு ஏதோ ஒரு புத்தகத்தில் சுதர்சன் ஆழ்ந்திருக்க, மைத்ரேயியோ வாழை மட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்படும் நாரை எங்கு, யாருக்கு அனுப்புவதென்று குறிப்பெடுத்துக் கொண்டிருந்தாள்.

திடீரென ஏதோ நினைவு வந்தவளாக உட்கார்ந்திருந்த நாற்காலியிலிருந்து லேசாகத் திரும்பி, ''அத்தான்! இன்றைக்கு என்னாச்சு தெரியுமா? வாழை நாரிலிருந்து ரொம்ப வருஷம் கிழியாமலிருக்கும் ரூபாய் நோட்டு தயாரிக்கலாம்னு நீங்க முதலில் எப்பவோ சொன்னதை, காலையிலே அத்தை விடுகதைப் பாட்டிகிட்ட சொல்லியிருப்பாங்க போல. அதுக்குப் பாட்டி உடனே 'அப்பன்னா உங்க புது ஃபாக்டரி பக்கத்திலேயே ரூபாய் நோட்டு தயாரிக்கிற ஃபாக்டரியையும் போடச் சொல்லு வரலக்ஷ்மி!'' என்று அத்தைகிட்ட சொல்லியிருக்காங்க. எப்படி?'' என்றாள் விரிந்த சிரிப்புடன்.

''சுத்தம்! முதலுக்கே மோசம் செய்துடுவாங்க போல இந்தப் பாட்டி! பார்த்துக்கோ மைத்ரேயி! உன்னோட யூனிட்டிலிருந்து வாழை நார் ஏதாவது காணாமல் போனால், பாட்டி வீட்டில் தான் அது இருக்கும்.''

சிரித்தபடியே திரும்பிய சுதர்சனின் பார்வையில் வைப்ரேஷன் மோடில் போட்டிருந்த மைத்ரேயியின் கைப்பேசி ஒளிர்வது பட, ''மைத்ரேயி! உன் போனைப் பாரு. கால் வருது போல'' என்றான்.

அவன் சொன்னதைக் காது கேட்காதது போல பாவித்த மனைவியை விசித்திரமாகப் பார்த்தவன், ''மைத்ரேயி! சைலென்ஸில் போட்டிருந்தால் சவுண்ட் தான் கேட்கா துன்னு பார்த்தால், உன் பக்கத்தில் பளிச்சு பளிச்சுன்னு ஆடுற போன் கூடவா கண்ணுக்குத் தெரியாமல் போயிடும்?'' என்றபடியே கட்டிலிலிருந்து எழுந்து வந்து மனைவியின் இரு தோள்களிலும் கை வைத்து குனிந்து அவளைப் பார்த்தவாறு நின்றான்.

நிமிர்ந்து கணவனைப் பார்த்தவள் அவனுக்குப் பதி லொன்றும் சொல்லாமல், மறுபடியும் தன் வேலையில் ஆழ்ந்தாள்.

''என்னாச்சு உனக்கு?'' என்றபடியே கை நீட்டி அவளது கைப்பேசியை எடுத்துப் பார்த்தவன் புருவத்தைச் சுருக்கி, ''வினீத் கால் செய்திருக்கான் மைத்தி! நாலைஞ்சு மிஸ்ட் கால்ஸ் வேற இருக்கு. பார்க்கலையா?'' எனக் கேட்டான்.

சட்டென்று மூண்ட எரிச்சலுடன் கணவனைப் பார்த்த மைத்ரேயி வாயே திறக்கவில்லை. வாயைத் திறந்தால் எங்கே ஏதாவது ஏடாகூடமாகப் பேசி விடுவோமோ என்ற பயம் அவளுக்கு!

நரம்பில்லாத நாக்கைப் பற்றி தான் தெரிந்து கொண்டு விட்டிருந்தாளே!

அவள் வாயே திறக்காவிடினும் அவளது கோபத்தின் அளவை, அவளது விழிகளில் பார்த்த சுதர்சன், ''மைத்ரேயி! நான் உன்னை வினீத் கூட பேசவே கூடாதுன்னு தடை



விதிக்கலை. கொஞ்சம் பார்த்து நடந்துக்கத் தான் சொன் னேன்'' என்றான் ஒரு பெருமூச்சுடன்.

மைத்ரேயியின் வாய் பூட்டு மெல்ல அகல, ''நீங்க பேசுன்னு சொன்னால் பேசணும். பேசக் கூடாதுன்னு சொன்னால் பேசக் கூடாது! எனக்குன்னு விருப்பு வெறுப்பு ஒண்ணும் இருக்கக் கூடாதா?'' என்றாள் அடக்கப்பட்டக் கோபத்தோடு.

மேஜையில் நகத்தை வைத்துக் கீறிக் கொண்டிருந்த வளின் தோளை அழுத்தியவாறு, ''யார் மனசும் நோகாமல் எனக்கு வேற மாதிரி சொல்லத் தெரியலை மைத்ரேயி. நீ என் மனைவி! நான் உன்னை ஒண்ணு சொல்லலாம். ஆனால் மற்றவங்க ஏதாவது சொன்னால்...?'' என்று இழுத்தவன்,

''நம்ம கோபத் தாபத்தை அப்புறம் பார்த்துக்கலாம். முதல்ல அவனோட பேசு, ப்ளீஸ்'' என்றபடியே வெளி யேறினான்.

அவனின் முதுகை வெறித்தவள் 'பெரிய துரை! சொல் லிட்டுப் போறாரு!' என்று கடுத்தாலும், வினீத் இன் னொரு முறை அழைக்க, அவனின் அழைப்பை ஏற்றாள்.

''சொல்லு வினீத்! எப்படியிருக்கே? நீரஜா எப்படி யிருக்காள்?'' சுரத்தேயின்றி ஆரம்பித்தவள், வினீத்தின் பலமுறை அழைப்புக்குப் பிறகே தான் பதில் சொன்னதற்கு அவன் தன்னைக் கடுப்படிப்பான் என்றே எதிர்பார்த்தாள்.

ஆனால் அப்படியொன்றுமில்லாமல் வினீத்தின் குரலி லும் அத்தனையொன்றும் துள்ளலுமில்லை கோபமுமில்லை.

மாறாக, ''ஹாய் மைத்ரேயி! நாங்க நல்லா இருக் கோம். நீ சுதர்சன் எல்லாம் எப்படியிருக்கீங்க?'' என்று பதிலுக்கு விசாரித்தவனின் குரலிலிருந்து மைத்ரேயி யால் ஒன்றும் கண்டுபிடிக்க இயலவில்லை.

தன் நலத்தைப் பற்றி கூறியவளிடம், ''சாரி மைத்ரேயி! எங்களை நீ உங்க ஊருக்கு விருந்துக்குக் கூப்பிட்டிருந்தே. பட், இப்ப இருக்க வேலையில் எங்களால இப் போதைக்கு அங்கே வர முடியும்னு தோன்றலை. நீங்க சென்னைக்கு வரும்போது பார்த்துக்கலாமே? நமக்குள்ள என்ன ஃபார்மாலிடீஸ்?'' என்றான்.

சுதர்சனுக்கும் தனக்கும் வந்த கருத்து பேதத்தால் மைத்ரேயியுமே வினீத்தை அதன் பிறகு விருந்துக் கென்று அழைக்கவில்லை. அவனே வருவதாகச் சொன் னால் பிறகு பார்த்துக் கொள்ளலாமென விட்டு விட்டாள்.

இப்பொழுது வினீத்தே இப்படி சொல்லவும் ஏதோ ஒரு வகையில் அவளும் நிம்மதியாகவும், கூடவே அப்படி நிம்மதி அடைந்ததற்காக வெட்கமாகவும் வேதனையாகவும் இருந்தது!

''அதனால் என்ன வினீத்? உன்னால் முடிஞ்சால் நீ வரப் போறே? நீ சொன்னது மாதிரி சென்னைக்கு வரும் போது பார்த்துக்கலாம்'' என்றவள்,

''இன்னமும் ரெண்டு வாரத்தில் நடக்க இருக்கும் எங்க கோவில் திருவிழாவிற்கு, நீரஜாவோடு இங்கே வர முடியுமான்னு பாரு'' என்று அழைப்பு விடுத்தாள்.

முடிந்தால் வரப் பார்ப்பதாகக் கூறிச் சில நொடிகள் மறுமுனையில் அமைதி காத்தவன், ''மைத்தி! கல்யாண மண்டபத்திலிருந்து நீங்க திடீர்னு கிளம்பிப் போயிட் டீங்களே... சுதர்சன் ஏதாவது சொன்னாரா...? இல்லை வேற ஏதாவது...?'' என்றான் இழுத்தான் ஏதோ சொல்ல தயங்குபவன் போல.

வினீத்தின் முகம் கைப்பேசியில் தெரிகிற மாதிரி, புருவம் சுருங்க அதனைச் சில வினாடிகள் கூர்ந்தவள், ''உன்கிட்ட சொல்லிட்டு தானே வந்தோம் வினீத்? எதுக்கு இப்ப திடீர்னு கேட்கிறே?'' எனப் புரியாமல் கேட்டாள்.



''சொல்லிட்டுத் தான் போனீங்க. இருந்தாலும்... சரி அதை விடு! சும்மாத்தான் கேட்டேன். அப்புறம், வேறென்ன விஷயம்?'' என்ற சில நிமிட பொதுவான விஷயத்திற்குப் பிறகு இருவரும் பேசியை வைத்தனர்.

தன்னுடைய கைப்பேசியை யோசனையுடன் வைத்தவளுக்கு சிந்தனை எங்கெங்கோ சென்றது.

வினீத் என்ன சொன்னான்? அல்லது என்ன சொல்ல வந்தான்? அவன் ஒன்றும் சொல்லவில்லைதான்... ஆனாலும் அவன் சொல்லாமல் சொல்லியதென்ன?

சிறிது நேரத்தில் உள்ளே நுழைந்த கணவனிடம் வினீத் வர இயலாததைக் கூறியவள், ''ஏன் நாம டக்குனு மண்டபத்திலிருந்து கிளம்பிட்டோம்னு கேட்டான். யாராவது ஏதாவது சொன்னாங்களானும் கேட்டான்'' என்று கூறி அவனின் முகத்தை ஆராய்ந்தாள்.

ஒரு 'ம்ம்' கொட்டலோடு பேச்சைச் சுருக்கிய சுதர்ச னின் உணர்ச்சியை வெளிக்காட்டாத முகத்திலிருந்து அவளால் ஒன்றும் இனம் பிரிக்க முடியவில்லை.

மேலும் அவளின் துருவல் சுவற்றில் முட்டிக் கொள்வது போன்ற பலனை அவளுக்கு அளித்தது தான் மிச்சம்!



# 9

செந்தாமரைக்குளம் முத்துமாரியம்மன் கோவில் திருவிழாவிற்கு மைத்ரேயியின் பெற்றோருக்கும்,

சகோதரிக்கும் சுதர்சன் அழைப்பு விடுக்க, மருமகனின் அழைப்பை ஏற்று கொடைக்கு முதல் நாளே கங்காவும், ராஜேந்திரனும் வருகை தந்திருந்தனர்.

வந்தவர்களை வரவேற்று உபசரித்த மைத்ரேயி, ''எங் கேம்மா அக்காவைக் காணோம்? அவளும் உங்கக்கூட வருவான்னு எதிர்பார்த்தேனே?'' என்று கொஞ்சிய படியே வினவினாள்.

''உங்க அக்காக்கு தோதுப் படலைம்மா. எல்லாம் நல்ல விஷயம் தான். டாக்டர்கிட்டே சென்று உறுதி செய்துட்டு உனக்கு போன் செய்றதா சொல்லியிருக்கா மைத்தி.''

''நிஜமாவாம்மா சொல்றீங்க? ரொம்ப ரொம்ப சந் தோஷம்மா. எப்போ டாக்டர்கிட்டே போறதா இருக்கா?''

''இந்த வாரத்தில் போவாள். உங்க அக்கா மாதிரியே நீயும் சீக்கிரமாவே எங்களுக்கு நல்ல செய்தி சொல்ல ணும்'' என்று தன் விருப்பத்தைச் சொன்னவர்,

''இந்தாம்மா, உங்க அக்கா உனக்காக ஒரு பட்டு சுரிதார் கொடுத்து அனுப்பி இருக்கா. நீ அவளிடம் இருக்கிறதைப் பார்த்துட்டு நல்லாயிருக்குன்னு சொன்னியாமே? பிடிச் சிருக்கான்னு பாரு'' என்று மகளிடம் புது ஆடையை நீட்டினார்.

அவர் கொடுத்த ஆடை பிடித்திருக்கிறது என்பதற்கு சாட்சியாக கண்கள் விரிய கண்ணாடி முன் நின்று கொண்டு இப்படியும், அப்படியுமாக திரும்பி அழகுப் பார்த்தவள், ''ரொம்ப நல்லாயிருக்கும்மா. மாதங்கிகிட்டே அப்புறம் போனில் விஷ் பண்ணும் போது சொல்லிக் கிறேன். சாப்பிட்டதும் என்கூட வாங்கம்மா. ஃபேக்டரி, தோப்புன்னு சுற்றி பார்த்துட்டு வரலாம். நீங்க தான் ஃபேக்டரி ஆரம்பிச்சப்போ கூட வரவேயில்லையே?'' என்றாள் ஆதங்கத்துடன்.



''எங்கேம்மா? வேலையில் லீவு கிடைக்கவே மாட் டேங்குது. இப்போ கூட மாப்பிள்ளை இவ்வளவு தூரம் கேட்டுகிட்டதாலேதான் உங்க அப்பா என்னையும் அழைச்சுட்டு வந்திருக்காரு. இல்லாட்டி அவர் மட்டும் தான் வர்ற மாதிரி இருந்தது.''

''ம்... பாருங்க. பெத்த பொண்ணு சொல்றதை விட மாப்பிள்ளை சொல்றதுக்குத்தான் மதிப்பாயிருக்குது. கலி முத்தி போச்சும்மா...'' என்று அன்னையிடம் கிண்டல் செய்ய,

மகளது தலையில் வலிக்காமல் குட்டு வைத்த கங்கா, ''பேச்சைப் பாரு. இப்படித்தான் இங்கே உன் வீட்டிலும் வாய் காண்பிக்கிறியா நீ?'' அக்கறையுடன் விசாரித்தார்.

''இங்கேயிருந்து தான்மா நான் வாய் காண்பிக்கவே கத்துக்கிட்டேன்'' என்று கண்ணடித்தபடியே மகள் சொல்ல, ஆள்காட்டி விரலை மிரட்டும் விதமாகக் காட்டினார் கங்கா.

உணவை முடித்த பிறகு, தோப்பிற்குப் பெற்றோர் களை அழைத்துச் சென்ற மைத்ரேயி வயல்வெளி களுக்கு நடுவில் நடக்க நேரிடும்போது மட்டும் பாதணி களைக் கையில் எடுத்துக் கொள்ள அறிவுரைத்தாள்.

''அம்மா, நம்ம சாப்பாட்டை அன்ன லக்ஷ்மியா நினைக்கிறோம் இல்லையா? அதனால் இங்கே காலில் செருப்பு போடாமல் நடக்கணும்னு அத்தான் சொல்லியிருக் கார்-ம்மா. அறுவடை அல்லது நாற்று நடும் வேலை பார்க்கும் போதும் கூட, அவர் காலில் செருப்பில்லாமல் தான்மா இருப்பார். பழகிடுச்சு போல'' என்ற விளக்கம் வேறு தந்தாள்.

எதிர்வரும் நபர்களிடம் தன் மகள் அன்புடன் குசலம் விசாரித்த விதமும், அதைத் தொடர்ந்து அவர்களிடம்

இரண்டு வார்த்தைப் பேசி விடைக்கொடுத்த விதமும் பெற்றவளை வெகுவாகக் கவர்ந்தது.

சென்னையிலிருக்கும் வரையில் யாராவது விருந்தினர்கள் அல்லது தங்களின் நண்பர்கள் வருகை தந்தால் கூட தனது அறையிலிருந்து வெளியே எட்டியே பார்க்காத மகளா இன்று இப்ப்டி அனைவரிடமும் சகஜமாகப் பேசுவது?

உண்மையிலேயே ஆச்சரியப்பட வேண்டிய விஷயம் தான்!

மூச்சுக்கு முன்னூறு முறை அவள் கணவனைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசுவது கூட எத்தனை இயல்பாக வருகிறது அவளுக்கு? அப்படிக் குறிப்பிடும் போது அனிச்சையாக அவள் முகத்தில் எழும் பூரிப்பும்!

காதல் மணம் புரிந்த தன் மூத்த மகள் மாதங்கிக்கு அவள் கணவனிடத்தில் இருக்கும் பற்று மாதிரியே, தாங்கள் முன்னின்று ஏற்பாடு திருமணம் செய்த மைத்ரேயிக்கும், அவள் கணவன் சுதர்சனிடத்தில் ஒட்டுதல் இருக்க வேண்டுமே என்ற கவலையெல்லாம் இனிமேல் அவர்கள் படத்தேவையில்லை.

தன் சிந்தனையின் விளைவாக, ''சந்தோஷமா இருக்கியா மைத்தி.? மாமனார், மாமியார் எல்லாம் எப்படி?'' என்று மெதுவாக விவரம் கேட்டார்.

''என்னைப் பார்த்தாலே உங்களுக்குத் தெரியலையா? எனக்கு இங்கே எந்தப் பிரச்சனையும் இல்லைம்மா. அப்படியே எதுவாயிருந்தாலும் அத்தான் எல்லாத்தையும் சரி கட்டிடுவார்'' என்ற முஸ்தீபுடன் தொடங்கியவள், தன் அன்னையின் திருப்திகரமான முகபாவனையைப் பார்த்ததும் நமுட்டுச் சிரிப்புடன் தொடர்ந்தாள்.



''அதுக்காக அவர் எனக்கு ரொம்ப செல்லம் கொடுக்கிறார் என்று தப்பா நினைச்சுக்காதீங்கம்மா! 'அப்படியே மனுஷங்களை ஏத்துப் பழகிக்கோ. அஞ்சு விரலும் ஒண்ணாவா இருக்கு?' அப்படி இப்படின்னு தத்துவார்த்தமா பேசி தாலாட்டுப் பாடி தூங்க வைச்சுடுவார்.''

''அடியே! உன்னை...'' என்று கங்கா மகளது காதைப் பிடித்துத் திருகினாலும், அவருடைய மனதில் மைத்ரேயியின் வாழ்வைப் பற்றி சஞ்சலம் எதுவுமில்லை.

''அம்மா! அத்தானும், மாமாவுடைய ப்ரெண்ட் ஒருத்தரும் சேர்ந்து உணவுப் பொருட்கள் ஏற்றுமதியில் இறங்கலாம்னு இருக்காங்கம்மா. இதைப் பற்றி உங்களிடம் சொன்னேனா?''

''ம். அப்பா தான் மாப்பிள்ளை சொன்னதா ஏதோ சொல்லிட்டு இருந்தார். ஏன் திடீர்னு இதில் இறங்கறாங்க?''

''திடீர்னு எல்லாம் இல்லைம்மா. ரொம்ப நாளா யோசிச்சுட்டு இருந்தது தான். அத்தானுக்கு இப்போ யாரும் விவசாயம் செய்றதுக்கு முன் வரலைன்னு ரொம்ப வருத்தமிருக்கு. அதுக்கு முக்கியமான காரணம், இந்தத் தொழிலில் இயற்கையுடைய பங்கு பெருசா இருக்கிறதாலே நினைச்ச அளவுக்கு லாபம் வரும்னு எதிர்பார்க்க முடியறதில்லை. பல சமயங்களில் அரசாங்க மானியங்களைத் தான் எதிர்பார்க்க வேண்டியதா இருக்கு. இந்த மாதிரி ஏற்றுமதியில் இறங்கினால், நிறைய பேர் விவசாயத்தில் இறங்க அதிக விருப்பம் காட்ட வாய்ப்பிருக்கு என்பதும் ஒரு காரணம்... அதே சமயம் லாபமும் கூட.''

பேசியபடியே வயல்வெளிகளையும், தோப்பையும் சுற்றிக் காண்பித்தவள், அப்படியே தான் வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கும் தொழிற்சாலைக்கும் அழைத்துச் சென்றாள்.

''பரவாயில்லையே மைத்தி! நான் கூட நீ சொல்லும் போது ஏதோ சின்னதா ஆரம்பிச்சு இருக்கேன்னு தான் நினைச்சேன். ஆனால் இங்கே வந்தால், பின்னாளில் நல்ல விஸ்தரிப்பு பண்ணுகிற மாதிரி தான் ஏற்பாடு செய்திருக்கே இல்ல?''

''ம்... ஆமாம்மா. ஆனால் எல்லாம் அத்தானும், மாமாவும் கொடுத்த முன் யோசனையும், உற்சாகமும் தான் காரணம். ஒவ்வொரு விஷயத்துக்கும் என் கூடவே துணையா இருந்தாங்கம்மா'' என்றவள் அதைத் தொடர்ந்து தன் எதிர்காலத் திட்டங்களையும் அன்னையுடன் பகிர்ந்தாள்.

* * *

முதல் நாள் இனிமைக்கு பங்கம் வரும் விதமாய் அடுத்த நாள் கோயில் திருவிழாவுக்கென்று புது பட்டு சுரிதாரை அணிந்து உற்சாகமாகத் தயாரானவளை, ''ஏன்மா மைத்தி? கோயில் திருவிழாவுக்கு நல்லதா ஒரு பட்டுப்புடவை கட்டிட்டு வரக் கூடாதா? போய் மாத்திட்டு வந்துடும்மா'' என்று பணித்தார் வரலக்ஷ்மி.

''பட்டுப்புடவையா? எனக்கு இது தான் வசதியா இருக்கும் அத்தை. அதோட கோவிலில் ஜே-ஜேன்னு கூட்டமா இருக்குமே? அங்கே கசகசன்னு புடவையை...'' என்றவாறே தன் தரப்பு வாதத்தை இழுத்தாள்.

''நம்ம ஊரில் ஒரு விசேஷத்துக்கு எப்படிப் போகணும்னு தெரியாதா மைத்தி உனக்கு?'' என்றதுடன் வரலக்ஷ்மி கை வேலையைப் பார்க்கும் பொருட்டு நகர்ந்து விட்டார்.

ஆனால் அதே இடத்தில் சில நிமிடங்கள் அசையாமல் நின்றிருந்த மைத்ரேயியின் மனதில் தான் பொருமல் அடங்க மறுத்தது.



'ஒரு உடை விஷயத்தில் கூட எனக்கு சுதந்திரம் கிடையாதா?' என்ற எண்ணம் அவளது பொருமலுக்குத் தூபம் போட்டது.

அறைக்குள் வந்த மனைவியின் உற்சாகம் வடிந்த முகத்தைப் பார்த்த சுதர்சன், ''போன மச்சான் திரும்பி வந்தான் பூ மணத்தோட...'' என்ற வரிகளை கேலிக்காக 'ஹம்' செய்ய,

மைத்ரேயி, ''வேண்டாம்...'' என எரிச்சலுடன் வார்த்தைகளை உமிழ்ந்தாள்.

''ஹே! என்னாச்சு மைத்ரேயி? ஜாலியா தானே கிளம்பினே? திடீர்னு ஏன் இப்படி மூட் அவுட்டா இருக்கே?''

அழகாய் உடுத்தியிருந்த துப்பட்டாவை அங்கிருந்த நாற்காலியில் வீசியவள், ''இந்த டிரஸ்க்கு என்ன குறைச்சல்? எனக்குப் பிடிச்ச மாதிரி போட்டுக்கக் கூடாதா? பட்டுப்புடவை தான்மா கட்டிட்டு வரணும்னு கண்டிஷன் போடறாங்க. ஊரோட ஒத்து வாழணுமாம்'' தன் மாமியாரைக் குறை சொல்லவும் பிடிக்காமல், சொல்லாமல் இருக்கவும் முடியாமல் கொதிப்பை வெளிப்படுத்தினாள்.

''நீ ஏன்டா உடை விஷயத்தை உரிமையா பார்க்கிறே? உணர்வு சம்பந்தப்பட்டதா பாரேன்?''

''....''

''கோவிலில் நம்ம ஊர்க்காரங்க வேற யாராவது உன் டிரஸ்ஸிங் பற்றி காது மூக்கு வைச்சு ஏதாவது பேசினால் என்ன செய்வே மைத்தி? நம்ம வீட்டுப் பெண் என்கிற உரிமையில் தானே சொன்னாங்க...''

''....''

''அதோட... உன் அத்தானுக்கு அவன் கண்ணம்மா புடவை கட்டினால் தான் ரொம்ப ரொம்பப் பிடிக்கும்''

என்றவாறே அவளைப் பின்புறத்திலிருந்து அணைத்து, அவள் தோளில் தன் தாடையை வைத்து மென்மையாக அழுத்தினான்.

அவனது குழைவான குரல் மைத்ரேயியை வருட, ''புடவைக் கட்டினால் மட்டும் கண்ணம்மா அப்படி என்ன ஸ்பெஷலாம்?'' எனக் கொஞ்சினாள்.

''என்ன ஸ்பெஷல்... எப்படி ஸ்பெஷல்... எல்லாம் விலாவாரியா பேசினால் கோவில் திருவிழாவுக்குப் போக முடியாதே. பரவாயில்லையா?''

அப்பொழுது தான் நினைவு வந்தவளாக, ''கடவுளே!'' என அலறியவள், ''இப்படிப் பேசிட்டு இருக்க நல்ல நேரம் பார்த்தீங்க அத்தான்!'' என்றபடி தன் புடவைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதில் அவசரம் காட்டினாள்.

''இந்த மாதிரி பேசற எல்லா நேரமும் நல்ல நேரம் தான்!'' என்று சுதர்சன் கண் சிமிட்டிவிட்டு செல்ல, புடவையை நேர்த்தியாக உடுத்திக் கொண்டு முன்பை விட உற்சாகமாய் தயாரானாள் மைத்ரேயி.

தாய் கங்காவிற்கு நடந்த விஷயம் எதுவும் தெரியாது என்பதால் சிரித்தபடியே, ''என்ன மைத்தி? ஃபேஷன் ஷோ எதுவும் நடத்திட்டு இருக்கியா? கொஞ்ச நேரத் திற்கு முன் புது சுரிதார் போட்டிருந்தே. இப்போ புடவை மாத்திட்டு வந்து நிற்கிறே?'' என்றார்.

மைத்ரேயியின் மனதில் பொருமல் இருந்த சுவடே இல்லாமல் செய்த சூட்சமத்தை சுதர்சன் எங்கிருந்துக் கற்றானோ?

முகத்தில் கூச்சம் மேலிட, ''அத்தான் தான்...'' என்ற தோடு முடித்துக் கொண்டாள்.

கோயிலில் வழிபாடு முடிந்து ஊர் பெரியவர்களுக் குப் பரிவட்டம் கட்டி பூரண கும்ப மரியாதை செய்வதும் செந்தாமரைக்குளத்தில் வழக்கம்.



லோகநாதனும், வரலக்ஷ்மியும் இம்முறை அவர்களே முன் வந்து சுதர்சனுக்கும், மைத்ரேயிக்கும் மரியாதை செய்யுமாறு சொல்ல இளையவர்களுக்கு மனதில் சங் கோஜமும், ஆனந்தமும் ஒரே சமயத்தில் குடிகொண்டது.

''மூத்தவங்க நீங்க இருக்கும்போது உங்களுக்கு செய்றது தான்பா முறை'' என்று சுதர்சன் மனம் நோகா மல் மறுக்க.

லோகநாதன், ''உங்க தாத்தா சொல்ற மாதிரி பெரிய வங்களா இளைய தலைமுறைக்கு வழிவிடறது தான்பா முறை'' என்று மூத்தவராய் வழி நடத்தினார்.

''உங்களுக்குள் எதுக்கு தேவையில்லாத தர்க்கம்? உங்க ரெண்டு பேருக்குமே மரியாதை செய்றதும் முறை தான்'' என்றபடி குருக்கள் இருவருக்குமே பரிவட்டம் கட்டினார்.

'காலையில் எத்தனை சின்ன பிள்ளைத்தனமாய் கோபம் கொண்டோம்?' என்று வருந்திய மைத்ரேயி, தன் மாமியாரின் பெருந்தன்மையை உணர்ந்துக் கொள்ள இன்னொரு சந்தர்ப்பம் வாய்த்ததாக அதை எடுத்துக் கொண்டு சிறிது நேரத்தில் தன்னையே சமாதானமும் செய்து கொண்டாள்.

கிடைத்தத் தனிமையில் கணவனிடம், ''ஏன் அத்தான் நான் எல்லாத்துக்கும் சட்டு சட்டுன்னு ரியாக்ட் ஆகிட றேன்? கொஞ்சம் நிதானமா இருந்தால் நல்லாயிருக்கு மில்ல?'' என்றாள்.

தீவிரமாக யோசிப்பது போல் பாவனை செய்தவன், ''நல்லாயிருக்காதே...!'' கண்களில் குறும்புடன் சொல்ல,

''நான் நல்லவளா இருக்கணும்னு நானே நினைச் சாலும் விட மாட்டீங்களே?'' என்று அவன் மூக்கைப் பிடித்து ஆட்டினாள்.

''அப்படியா?'' என்று அவளது இடையை விரல்களால் சுதர்சன் தீண்ட, ''ஹேய்! பேசிட்டிருக்கும் போது...'' துள்ளி அவன் மேல் விழுந்தாள்.

''பார்! இப்படி சட்டு சட்டுன்னு ரியாக்ட் ஆனால் தானே கண்ணம்மா நீ ரொம்ப நல்லவள். அப்படி இல்லாட்டி மங்குனி மாதிரி நிறுத்தி... நிதானமா...'' என்றவனை மேலே பேச விடாமல் தலையணையை எடுத்து அவனைச் செல்லமாக அடிக்கத் தொடங்கினாள் அவனது ஆசை மனைவி!



# 10

''மைத்ரேயி! அம்மா மைத்ரேயி!'' கீழே மாடிப் படியருகில் நின்றிருந்த வரலக்ஷ்மி மேலே பார்த்துக் கொண்டே குரலெடுத்து கத்துவதைக் கேட்டவாறே, குடையை மடக்கியபடி வீட்டினுள்ளே நுழைந்தான் சுதர்சன்.

''என்னம்மா ஆச்சு? எங்கே உங்க மருமகள்? தூங்கிட்டு இருக்காளா?'' என்றவாறே மடித்து வைத்திருந்த துண்டை எடுத்து லேசாக ஈரமாகியிருந்த தன் தலையைத் துவட்டினான்.

''தூங்கினால் தான் தேவலையே? நான் ஏன் அவளை எழுப்பப் போறேன்? துவைச்ச பெட்ஷீட்டை மொட்டை மாடியில் காயப் போட்டிருந்தாள். மழை வர மாதிரியிருக்கவும் அதை எடுக்கப் போனவள் தான். இன்னமும்



கீழே வரக்காணோம். சில இடத்தில் பாசி வேற பிடிச்சிருந்தது. மூட்டுவலி, படியேற முடியலை தம்பி! அதான் வழுக்கி விழுந்துட்டாளோன்னு பயந்துட்டு இங்கேயிருந்தே கூப்பிட்டுப் பார்த்தேன்'' மாடிப்படியில் ஒரு கண்ணை வைத்தவாறே மகனுக்கு பதிலளித்தார்.

''இருங்கம்மா, நான் போய் பார்த்துட்டு வரேன்'' என்றபடியே படியேறியவனிடம், ''தம்பி! இந்தாப்பா குடை கொண்டுட்டு போ!'' என்று குடையைக் கொடுத்தார்.

மொட்டை மாடிக்குச் சென்றவனுக்கு அங்கே அவன் கண்ட காட்சி சிரிப்பைத் தான் வரவழைத்தது. கையில் குடையை வைத்திருந்தவனின் சிரிப்பு மேலும் விரிய, சொட்டச் சொட்ட நனைந்திருந்த மைத்ரேயியைப் பார்த்தான்.

அவன் வீட்டுக்கு வந்து சேர்ந்த நேரத்திற்குள்ளாகவே வானம் கருத்து, காற்றும் மழையும் வலுத்திருந்தது. மாடியிலிருந்து பார்த்தால் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தான் வெளியில் ஆட்கள் தென்பட்டனர். அவர்களுமே தத்தம் வீட்டுக்கு விரைந்த வண்ணமிருந்தனர்.

ஆனால் மைத்ரேயியோ, 'பேய் மழையா? எங்கே?' என்பது போல, இரண்டு கைகளையும் விரித்தபடி, பரவசம் பொங்கும் முகத்தை வான் நோக்கி நிமிர்த்தியவாறு தட்டாமாலைச் சுற்றிக் கொண்டும், சேலையை லேசாகத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, கொலுசு அணிந்திருந்த கால்களால் மழை நீரைச் சிதறியும் விளையாடிக் கொண்டிருந்தாள்.

அவள் உடுத்தியிருந்த சேலை, குளிரால் நடுங்கிய அவளது தேகத்தில் பசைப் போட்டது போன்று ஒட்டிக் கொண்டிருக்க, அதைப் பற்றிய சிந்தனை சிறிதுமின்றி,

முகத்தில் விழுந்த சூடான மழை நீரை ரசித்து, அதை வழித்து விட்டுக் கொண்டிருந்தாளேயன்றி, கீழேயிறங்கிப் போவோம் என்ற நினைப்பு அவளுக்குத் துள்ளியும் இருப்பது போன்று தோன்றவில்லை அவளை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த அவளது கணவனுக்கு.

"வான் மேகம் பூம்பூவாய்த் தூவும்

தேகம் என்னாகும் இன்பமாக நோகும்"

மெல்ல முணுமுணுத்துக் கொண்டிருந்த மைத்ரேயியின் அருகில், குடையை விரித்தவாறே வந்த சுதர்சன்.

"இன்பமாகவெல்லாம் நோகாது கண்ணம்மா நாளைக்கு உன் உடம்பு வலியிலேயும் ஜுர வேகத்திலேயும், தான் நோகப் போகுது. அப்பத் தெரியும். போதும் விளையாடியது. வா, கீழேப் போகலாம்" என்று அவளது தோளைத் தொட்டான்.

நீர்த் திவலைகள் முகத்தில் பட்டுத் தெறிக்க, மின்னலைத் தோற்கடிக்கும் பளீர் சிரிப்போடு கணவனை நோக்கி திரும்பியவள், "குடை எனக்கா?" என்றாள்.

"முழுசும் நனைஞ்ச பிறகு முக்காடு எதுக்கு? இல்லை, குடை தான் எதுக்கு? குடை எனக்கு தான். உனக்கில்லை. உன்னோடு சேர்ந்து நானும் நனைஞ்சிட்டால்' இதையெல்லாம் இங்கே இருந்துகிட்டேதான் பேசணுமா? குளிருது! வா" என்றவாறே அவளுக்கும் சேர்த்தே குடைப் பிடித்தான்.

"ஓ! நீங்க நனையக் கூடாதா?" கையில் பிடித்திருந்த நீரை அவனது முகத்தில் தெளித்தவள் "குடைய நீட்டி யாரும் இந்த மழைய தடுக்க வேணாம்" என்றாள் சிரிப்போடு.

"ஹேய்... உன்னை..."



மைத்ரேயியின் பின்னலிலிருந்து விடுபட்ட கேச சுருள்கள், அவளது நெற்றியிலும் கன்னத்திலும் ஒட்டி உறவாடியபடி அவள் முகத்தில் நீரைச் சொட்டிக் கொண்டிருக்க, அவளது விஷமம் பொங்கும் முகமும், சிரிப்பும், அந்த அரையிருட்டும், சுதர்சனை மெல்ல மெல்ல கிறங்க வைக்க, மனைவியை ஒரு கரத்தால் தன்னை நோக்கியிழுத்து, அவளது இதழ்களில் அழுந்தத் தன் இதழ் பதித்தான்.

மழைத்துளிகள் அவன் மீது படவும் தான், தன்னுணர்வு பெற்ற சுதர்சன், ஒரு சின்னச் சிரிப்புடன் அவளை விடுவித்துவிட்டு, குடையைச் சரியாகப் பிடித்தவன், "மழை நீர் இவ்வளவு இனிப்பா இருக்கும்ன்னு இன்னைக்குத் தான்டா எனக்குத் தெரிஞ்சுது" விழிகளில் மையலுடன் ரகசியம் பேச,

"பெட்டர் லேட் தென் நெவர்!" எனக் குறும்புடன் சொன்னவளைப் பார்த்து சிரித்தவன், "கடைசியில் என்னையும் ஈரமாக்கிட்டே இல்ல?" எனப் பொய்யாகக் கோபப்பட்டான்.

"ஆளைப் பாருடா! நானா உங்களை நனையச் சொன்னேன்? நீங்க செய்றது கொஞ்சம் கூட நல்லாயில்லை அத்தான், சொல்லிட்டேன்!" என்றாள் அவளும்.

"எங்கே என்னைப் பார்த்து சொல்லு! நான் செய்தது நல்லாயில்லைன்னு?! அப்புறம் நல்லா இருக்க மாதிரி செய்துடுவோம்."

"ஐயே... வழியுது! துடைச்சுக்கோங்க!"

இருவரும் மாறி மாறி ஒருவரை ஒருவர் கேலி செய்துக் கொண்டே கீழே இறங்கி வந்தனர்.

சமையற்கட்டிலிருந்து வந்த வாலக்ஷ்மி பின் பாதியை மட்டும் கேட்டு, "உனக்கும் தான்மா மைத்ரேயி வழியுது.

முதலில் நீ நல்லா துடை'' எனவும், கணவன் மனைவி இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு வந்த சிரிப்பை அடக்கினர்.

''பாரு எப்படி நனைஞ்சுட்டு வந்திருக்கேன்னு. பெட்ஷீட் எடுக்கப் போனோமா வந்தோமான்னு இருக்கியா? போனால் போன இடம், வந்தால் வந்த இடம்! இந்தக் காலத்துப் பிள்ளைங்க இருக்கீங்களே...'' அலுத்துக் கொண்டே துண்டை எடுத்துக் கொடுத்த வரலக்ஷ்மி, ''போ... போய், நல்லா வெந்நீரில் குளிச்சுட்டு வா'' என்று மருமகளை அனுப்பி வைத்தார்.

குளித்துவிட்டு வந்தவளின் ஈரக் கூந்தலில் சாம்பிராணி புகைக் காண்பித்தவர், ''சின்னக் குழந்தையாட்டம் என்ன மைத்ரேயி இது? கடைசியில் எடுக்கப் போன பெட்ஷீட் மாடியிலேயே இருக்கு! நீ தொப்பலா நனைஞ்சுட்டு வந்திருக்கே! மழை வலுக்குதுன்னா உடனே கீழே வர வேண்டியதுதானே? இன்னமும் ஒரு வருஷம் போனால், உன் குழந்தை கூட நீயும் சேர்ந்துகிட்டு விளையாடுவே போலிருக்கே'' என்றார் கோபமாக.

அருகிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த சுதர்சன், ''நல்லா கேளுங்கம்மா, நீங்க பார்த்திருக்கணுமே! தெருவில் ஆட்டம் போடும் குழந்தைங்க தோத்துடும். என்ன ஆட்டம்? என்ன ஆட்டம்? பேப்பர் கப்பல் விடாதது ஒண்ணு தான் குறை'' என்று நமட்டுச் சிரிப்போடு அவரை இன்னமும் சிறிது ஏற்றி விட்டான்.

கணவனை முறைத்தவள், ''அங்கே சென்னையில், எங்க அபார்ட்மென்டில் மழையில் நனையணும்னா பத்து மாடி ஏறி போகணும். இல்லை பத்து மாடி கீழே இறங்கணும் அத்தை. அதான் மழையைப் பார்த்ததும் ஒரே



குஷியாகிடிச்சு எனக்கு. சாரி அத்தை'' குற்றம் செய்த பாவனையில் சொல்லும் போதே தும்மல் ஒன்று வந்தது மைத்ரேயிக்கு.

''எதுக்கு மன்னிப்பு? உனக்காகத்தான் சொல்றேன். பாரு, இப்பவே தும்மல் வருது. காய்ச்சலில் படுக்காமல் இருந்தால் சரி தான். இப்பத் தான் உங்க அம்மா அப்பா வந்துட்டுப் போயிருக்காங்க. இப்படித் தான் என் பொண்ணை நீங்க பார்த்துக்கிறீங்களான்னு என்னைக் கேட்கப் போறாங்க. இரு, சுக்கு கஷாயம் வைச்சுத் தரேன். காரமா இருக்கும். கண்ணை மூடிட்டு குடிச்சுடு'' என்று எழுந்து சென்றார்.

வரலக்ஷ்மி அந்தப் புறம் போனவுடன், மைத்ரேயியின் விரிந்திருந்த கூந்தலில் குனிந்து வாசம் பிடித்த சுதர்சன், ''பெண்களின் கூந்தலில் இயற்கையிலேயே வாசமிருக்கும் போல மைத்தி!'' என்று கண் சிமிட்ட,

அவனைத் தள்ளிவிட்டு, ''ம்க்கும்! என்ன? போட்டுக் கொடுக்கிறீங்களா? அத்தையே என்னை திட்டிட்டு இருக்காங்க. நடுவில் உங்களை யாராவது ஏதாவது கேட்டாங்களா?'' கோபப்பட்டவள், ''கஷாயம் ரொம்ப காரமா இருக்குமா? எனக்கு வேண்டாமே?'' என்று கெஞ்சலில் இறங்கினாள்.

''அம்மா... இவளுக்கு...'' சுதர்சன் கத்த ஆரம்பிக்கும் போதே அவன் வாயைப் பொத்தியவள், ''அய்யா சாமி! குடிச்சுடுறேன் சாமி! குடிச்சுடுறேன்! இதை வேற போட்டுக் கொடுக்காதீங்க. நான் குடிச்சால் நீங்களும் தான் குடிக்கணும்'' என்றாள் மிரட்டலாக.

''எனக்கெல்லாம் அது அல்வா சாப்பிடுற மாதிரி. நீ தான் டவுன்காரி. உனக்குத்தான் உள்ளேயே இறங்காது'' வேண்டுமென்றே அவனை வெறுப்பேற்றினான்.

"பார்க்கலாம். யாருக்கு குடிக்க முடியுதுன்னு" ரோஷத்துடன் மைத்ரேயி சவாலை ஏற்றுக் கொள்ளும் போதே வரலக்ஷ்மி கையில் கஷாயத்துடன் வர,

எச்சிலை விழுங்கிக் கொண்டவள், "அத்தானுக்குக் கஷாயம்...?" என கனக்காரியமாகக் கேட்க, "எல்லோருக்கும் கொண்டு வந்திருக்கேன்" என்று ஆளுக்கு ஒரு கிளாசை நீட்டினார்.

பயந்து பயந்து ஒரு மடங்குக் குடித்த மைத்ரேயி, "ஐயே! ரொம்ப கசக்குது அத்தை. எனக்கு வேண்டாம்" என்று திரும்ப நீட்டினாள்.

"இப்ப ஒழுங்கா குடிக்கப் போறியா இல்லையா? தம்பி குடிக்கலை? கருப்பட்டி போட்டுக் கொண்டு வந்திருக்கேன். குடி!" வரலக்ஷ்மி மருமகளை மிரட்டிக் கொண்டிருப்பதைக் கேட்டபடியே வந்த லோகநாதன்.

"என்ன லக்ஷ்மி? பிள்ளையை எதுக்கு மிரட்டிட்டிருக்கே?" என்றார்.

"ஆமா, எனக்கு வேண்டுதல் பாருங்க!" சிடுசிடுத்தவர் விவரத்தைச் சொல்ல,

லோகநாதனும், "குடிச்சுடும்மா. உங்க அத்தைக்குப் போடத் தெரியலை. நாளைக்கு இதை விட இனிப்பா நான் போட்டுத் தரேன். இப்பவே குடிச்சால் ரெண்டு நாளைக்கு மட்டும்தான் கஷாயம். குடிக்கலைன்னா இன்னமும் நாலு நாளைக்கு" என்று பயம் காட்டினார்.

"மாமா! அத்தையே தேவலாம் போல! கொடுங்க அத்தை" என்று அப்பொழுது மட்டுமல்ல அடுத்து இரண்டு நாட்களுக்கும் அவர்கள் செய்த நாட்டு வைத்தியத்தை ஏற்றுக் கொண்டாள்.

மூன்றாவது நாள் மைத்ரேயியின் அக்கா மாதங்கி, அவளை அழைத்து, "மைத்தி! நீ எப்படியிருக்கே? இப்படி 'தானே' புயல் போற வழியெல்லாம் எல்லாத்தையும் நாசம் செய்திருக்கே? டி.வி.யில பார்க்க ரொம்ப பயங்கரமா இருக்கு. அங்கே உங்களுக்கு ஒண்ணும் சேதமில்லையே? ரெண்டு நாளா போன் செய்யணும்னு பார்க்கிறேன். கனெக்ஷன் ஒண்ணும் சரியில்லை போல. ஒரே 'கொர்'ன்னு சத்தம் மட்டும் தான் வந்தது. இப்ப எப்படி இருக்கீங்க எல்லோரும்?" என்று விசாரித்தாள்.



ஆந்திர மாநிலத்தில் கரையைக் கடக்குமென்று எண்ணிய 'தானே' புயல், கடலூர் மாவட்டத்தில் கரையைக் கடந்து, கடலூரிலும் புதுவையிலும் பெருத்த சேதாரத்தையும் நஷ்டத்தையும் உண்டாக்கியிருந்தது. மக்கள் மின்வசதியும், குடிநீரும், பால் போன்ற மற்ற அத்தியாவசிய பொருட்களுமின்றி தவித்துக் கொண்டிருந்தனர்.

"இல்லைக்கா! எங்களுக்கு அத்தனைப் பெரிய பாதிப்பில்லை. சமாளிச்சுடலாம். பக்கத்தில் கடலூர், திருவாரூரில் தான் ரொம்ப டேமேஜ். மக்கள் ரொம்பவே கஷ்டப்படுறாங்க. பார்க்கவே ரொம்ப பாவமா இருக்கு. அத்தான் மூணு நாளா அதுக்கு தான் அலைஞ்சுகிட்டு இருக்கார். வீட்டிலிருந்த நெல்லு, பருப்பு மூட்டை எல்லாத்தையும் தேவைப்படுறவங்களுக்கு விநியோகிக்கன்னு முனிசிபல் ஆபீஸ், அதிதுன்னு போய்கிட்டு இருக்கார்."

அதைப் பற்றிய கவலையைத் தெரிவித்துக் கொண்ட பின்னர் மாதங்கி, "உன் குரல் என்ன, என்னமோ மாதிரியிருக்கு? உடம்பு சரியில்லையா?" என்றாள்.

"எனக்கொண்ணும் இல்லை. நல்லாத்தான் இருக்கேன். லேசா சளிப் பிடிச்சிருந்தது. அத்தை, எனக்கு சுக்கு கஷாயம், மிளகு ரசம், அப்புறம் என்னென்னமோ செய்து கொடுத்தாங்க."

''என்னது கஷாயமா?'' என்று கேட்க நினைத்ததைக் கேட்காமலேயே விட்டாள் மாதங்கி.

ஆனால் மைத்ரேயியோ தொடர்ந்து, ''அது கூட திப்பிலியோ என்னமோ? எல்லாம் ஒரே கசப்பு தெரியுமா? குடிக்கவே முடியலை. வேண்டாம், வேண்டாம்னு சொன்னாலும், எனக்காக எல்லோரும் சேர்ந்து அதைக் குடிப்பாங்களே தவிர, யாரும் என்னை விடறதாயில்லை. அழ அழ மருந்து ஊத்துற மாதிரி அமுக்கிப் பிடிச்சு வாயில் ஊற்றாதது ஒண்ணுதான் குறை.''

சாதாரணமாக நடந்ததை நடந்தபடி மைத்ரேயி அவளிடம் சொல்லப் போக, தங்கையை ஒருவர் பலவந்தம் செய்வதா என்ற கோபம் எழுந்தது மாதங்கிக்கு.

இதில் மட்டும்தான் பலவந்தமா? இல்லை எல்லாவற்றிலுமா?

''டாக்டர்கிட்ட கேட்டு மருந்து வாங்கித் தர வேண்டியது தானே? சுதர்சனுக்கு ஊரெல்லாம் அலைய நேரமிருக்கும். உன்னை டாக்டர்கிட்ட கூப்பிட்டுட்டுப் போக மட்டும் நேரமில்லையாமா? மழை நேரமா வேற இருக்கு. ஏதாவது இன்ஃபெக்ஷன் வந்துட்டால்?'' என ஒரேயடியாக புலம்ப ஆரம்பித்து விட்டாள்.

இதென்ன இவள் இப்படிப் பேசுகிறாள்? அதுதான் சுதர்சன் வேலையாக அலைந்து கொண்டிருக்கான் என்று சொல்கிறேனே? அப்படியே அவன் வீட்டிலிருந்தாலும் இவள் எப்படி அவனைக் குறை சொல்லலாம்?

''அக்கா! ஸ்டாப் ஸ்டாப்! இப்ப எதுக்கு இப்படிப் புலம்பறே? நீயும் குழம்பி என்னையும் எதுக்குக்கா குழப்பறே? மழையில் நனைஞ்சதால் வந்த சாதாரண சளி, இருமல். இதுக்கு, நீ எதையும் எதையும் முடிச்சு போடறே? ரொம்ப டேஞ்சரான ஆளுக்கா நீ!''



''பின்னே? அங்கே உன் இஷ்டத்திற்கு உன்னை யாரும் விடமாட்டாங்க போலிருக்கே? புலம்பாமல் என்ன செய்யச் சொல்றே?''

''எல்லாத்தையும் நான் சமாளிச்சுக்குவேன். நீ தேவையில்லாமல் கவலைப்பட்டு உன் உடம்பை கெடுத்துக்காதே.''

''அதுக்கில்லை மைத்தி, உனக்குத் தான் இதெல்லாம் பழக்கமில்லையே? இங்கிலீஷ் மருந்து சாப்பிட வேண்டியதுதானே?''

''ரொம்ப சீரியஸ், தேவைன்னா நான் சொல்லாமலே எல்லோருமே என்னை டாக்டர்கிட்ட கூப்பிட்டுட்டுப் போய் மருந்து வாங்கித் தருவாங்க தான். அத்தை கொடுக்கிறதைச் சாப்பிட எனக்கொண்ணும் அத்தனைக் கஷ்டமாயில்லை. அப்படியே கஷ்டமாயிருந்தாலும் உடனேயே எனக்கு ரிலீஃப் தெரியுது.''

''இருந்தாலும்...''

''அக்கா! நல்லதுன்னா அதை எடுத்துக்கிறதில் தப்பொன்றும் இல்லையே? நமக்கு உடம்பு முடியாமல் ஜூரம் வந்தால், அதில் என்னென்ன கலவை இருக்குன்னு தெரியாமலே பேராசெட்டமால் எடுக்கத் தயங்கறதில்லை. ஆனால் கஷாயம் குடிக்க மட்டும் தயக்கமா?''

''உன் நல்லதுக்காகத்தான் சொன்னேன் மைத்தி.''

மற்றவருக்கு எப்படி பொருள் படுமென்று எதையும் யோசித்துப் பேச வேண்டும் போல என்றெண்ணியவள், ''எனக்குப் புரியுதுக்கா. ஆனால் அதே சமயம் உனக்கும் ஒரு சில விஷயங்களைப் புரிய வைக்கணும்னுதான் முயற்சி பண்றேன்'' என்றாள்.

''என்னவோ மைத்தி. நீயும் கொஞ்சம் கொஞ்சமா பக்கா பட்டிக்காடா மாறிட்டு வர்றே'' என்று விட்டு

தங்கை அடுத்த சொற்பொழிவு ஆற்றும் முன் பேசியை வைத்து விட்டாள்.

ஹப்பா... 'தானே' புயல் அலைபேசியில் அடித்து ஓய்ந்தது போன்றிருந்தது மைத்ரேயிக்கு. சிறிது நேரம் தொலைபேசியை முறைத்தபடி நின்றவள், 'நான் பட்டிக்காடா மாறினாதான் என்ன தப்பிருக்கு? அதொன்றும் பெரிய குற்றமில்லையே? 'பீ எ ரோமன் வைல் இன் ரோம்' இல்லையா? இடத்திற்குத் தக்கபடி மாற வேண்டியது தானே?' என்று தன் மனதிற்குள்ளேயே வாதம் செய்து கொண்டாள்.



## 11

மாதங்கியிடம் பேசிய பிறகு தொடர்ந்த இரண்டு நாட்களும் மைத்ரேயிக்கு உள்ளத்தின் பொருமல் அடங்க மறுக்க, அதைப் பற்றி சுதர்சனிடத்திலும் மனம்விட்டுப் பேச அவளுக்கு வாய்ப்பு அமையாமல் போனது.

அன்று மாலை வெளிவேலைகளை முடித்துக் கொண்டு சற்று சீக்கிரமாகவே வீட்டிற்குத் திரும்பியிருந்த சுதர்சனுக்கு தேநீர் கொடுத்து உபசரித்தவள் ஆர்வமுடன், ''அத்தான்! நாம ரெண்டு பேரும் ஆத்தங்கரை வரைக்கும் காலாற நடந்து போயிட்டு வரலாமா?'' என்றாள்.

''ம்! போலாமே! ஒரு வாரமா பயங்கர அலைச்சலா போச்சு. உன்கூட சரியா பேசக் கூட நேரமில்லை. முகம், கை கால் சுத்தம் செய்துட்டு வர்றேன்'' என்று ஆயத்தமானான்.



தன் கணவனுடன் கைக்கோர்த்துக் கொண்டு அந்தி வானத்தை ரசித்தபடி, ''உங்களை ரெஸ்ட் கூட எடுக்க விடாமல் நான் கூப்பிட்டு வந்துட்டேனா?''

''ரெஸ்ட் எடுக்கிறதை விட உன் கூடப் பேசினால் இரண்டு மடங்கு புத்துணர்ச்சி கிடைக்காதா, என்ன மைத்தி?''

''ம்ஹ்ம்ம்...'' பெருமூச்சை வெளியேற்றியவள், ''நான் புலம்பற மூடில் தான் சுதா இருக்கேன். எனக்கே நீங்க தான் புத்துணர்ச்சி கொடுக்கணுமாக்கும்...'' என்று அலுத்துக் கொண்டாள்.

''ஏன் மைத்தி? புருஷனுக்கு இன்னமும் ரெண்டு நாள் ஓயாத வேலை இருந்தால் தேவலாம்னு புலம்பப் போறியா?'' எனக் கண் சிமிட்டினான்.

''ம்ஹூம்...'' செல்லமாக சிணுங்கியவள், ''அதெல்லாமில்லை. அன்றைக்கு அக்கா கூட பேசினேன் இல்லையா? அதிலிருந்து கொஞ்சம் மூட் அவுட்'' என்று முணுமுணுத்தாள்.

''ஏன்? நீ சொன்ன கலர் ஷேடில் புடவை கிடைக்கலைன்னு சொல்லிட்டாங்களா?''

''நடு ரோட்டில் உங்களை அடிக்க முடியாதுன்னு தைரியத்தில் தானே இப்படிப் பேசறீங்க?''

''ஹா ஹா... கள்ளி!'' என்று அவளது கன்னத்தில் இடித்தவன் மனைவியின் முகத்திலிருந்த தீவிரத்தைப் பார்த்ததும், ''ம். ஓகே சீரியஸ்... சொல்லு. மூட் அவுட் ஆகிற அளவுக்கு என்ன சொன்னாங்க?'' என்றான் யோசனையாக.

மாதங்கியுடன் நடந்த உரையாடலை ஒன்று விடாமல் அவனிடம் பகிர்ந்தவள், ''என்னைப் பார்த்து பட்டிக்காடுன்னு சொல்லிட்டாள் அத்தான். அப்படி நான் பட்டிக்

காடா ஆனால் தான் என்ன தப்பாம்?'' என நியாயம் கேட்டாள்.

''நீ உங்க அக்காக்கிட்டேயே கேட்க வேண்டியது தானே?''

''கேட்கிறதுக்குள் போனை வைச்சுட்டாள். ஆனால் அவகிட்டே கேட்டால் மட்டும் ஒழுங்காவா பதில் வந்துடப் போகுது. வெள்ளி மூக்கு குதிரைக்குத் தெரியுமா கற்பூர வாசனைன்னு போக வேண்டியதுதான்'' என்றாள் சலிப்புடன்.

சுதர்சனுக்குத் தன் மனைவியின் பேச்சைக் கேட்டு சிரிப்பு தான் வந்தது. திருமணம் முடிந்த மறுநாளே இந்த ஊர் பிடிக்கவில்லை என்று அழுததென்ன... இப்பொழுது இந்த ஊரின் அருமைத் தெரியாதவர்களைச் சாடுவதென்ன?

''என்ன எதுவும் பேசாமல் யோசனையாய் வர்றீங்க?''

'''வெள்ளி மூக்கு' குதிரையோட தங்கச்சியை என்ன வகையில் சேர்க்கிறதுன்னு தான்...'' என்று சிரிக்காமல் சுதர்சன் சொல்ல, செல்ல ஊடல் கொண்டு கணவனுடன் கோர்த்திருந்தக் கரத்தை விடுவித்துக் கொண்டாள்.

''ஹேய்! இதுக்கெல்லாம் யாராவது சின்னப் பிள்ளை மாதிரி கோபப்படுவாங்களா மைத்தி?'' என்றவன், அவளது கரத்தை முன்னைவிட அழுத்தமாகப் பற்றிக் கொண்டான்.

உண்மையில் சுதர்சனின் உள்ளத்தில் மனைவியின் பேச்சைக் கேட்டு மகிழ்ச்சிப் பெருக்கெடுத்தது. எங்கே அதை வெளிப்படுத்தினால் அவனே ஒரு வருட கால அவகாசத்தைத் தன் மனைவிக்கு ஞாபகப்படுத்தி விட வேண்டியதாய் ஆகிவிடுமோ என்ற எண்ணமும் உடன் எழுந்தது.



மைத்ரேயியே தீவிரமான குரலில், ''நானும் ஒரு காலத்தில் பட்டிக்காடுன்னு ரொம்ப அலட்சியமா நினைச்சவள் தான். இல்லைன்னு சொல்ல வரலை. ஆனால் இங்கே வந்து, இருக்கும்போது தான் இங்கேயிருக்க நல்லது கெட்டது தெரிய வருது.''

''ம்...''

''அதெல்லாம் புரிஞ்சுக்கிறதுக்கும் ஒரு திறந்த மனசு வேணும் அத்தான். அது இல்லாட்டிப் புரிய வைக்கிறதும் கஷ்டம்தான்.''

''சரி மைத்தி. கொஞ்சம் ரிலாக்ஸ் ஆகு. ரொம்பவும் எமோஷனல் ஆகாதே'' என்று அவளை சாந்தப்படுத்தியவன் ஆற்றோரத்துப் படிக்கட்டில் கால்களை மட்டும் நீர் நனைக்கும்படி அமர்ந்தான்.

தன் புடவை நனையாத வண்ணம் கால்களை நீரில் படுமாறு அமர்ந்த மைத்ரேயிக்கு அந்த அனுபவம் புதுமையாக இருந்தது.

சில்லென்ற நீரோட்டம் அவளது மனதிலிருந்த கோபத்தை வெகுவாகக் குறைக்க, ஆற்றிலிருந்த மீன்கள் அவளது கால்களைத் தீண்டியது அவளுக்குக் குறுகுறுப்பை ஏற்படுத்திப் புன்னகையை வரவழைத்தது.

கால்களை ஆட்டிக்கொண்டு, ''உங்களை மீன் கடிக்கலையா அத்தான்?''

அவளது காலசைவில் எழுந்த கொலுசொலியையும், நீர் சலசலப்பையும் ரசித்த சுதர்சன், ''எனக்குப் பழகிடுச்சும்மா. உனக்குப் பிடிச்சிருக்கா?'' என்றான் காதலுடன்.

''ம். ரொம்ப...''

''தோப்பு வீட்டிலிருக்கும்போது ஆற்றில் குளிக்கவான்னு கூப்பிட்டதுக்குப் பிகு பண்ணிட்டு பழக்கமில்லைன்னு சொன்ன மகாராணிக்கு இப்போ கால் நனைக்கிறது மட்டும் ரொம்ப பிடிச்சிருக்காக்கும்?''

''ஆமாம்!'' தன்னிடம் வம்பு செய்பவனிடம் 'தலையாட்டி' பொம்மை போல் பாவனை செய்து சிரித்தாள்.

இயற்கை அழகோடு கணவனின் அருகாமையையும் கேலியையும் மனநிறைவோடு ரசித்தவள், ''இப்பத்தான் கொஞ்சம் தேவலாமா இருக்கு. தேங்க்ஸ்!'' என்றாள்.

''பேச்சை எப்படித் தொடங்குவது?'' என்றிருந்த சுதர்சன் முடிவில், ''இங்கே கிராமத்தில் இருக்கிறதாலே உனக்கு எதுவும் குறையா இருக்குதா மைத்தி?'' எனத் தயங்கித் தயங்கி ஒருவாறு கேட்டு வைத்தான்.

''இப்போ எதுக்கு சுதா இதைக் கேட்கறீங்க?''

''இல்லைம்மா, இங்கே இருக்கிறதாலே நல்லதும் இருக்கு; கெட்டதும் இருக்குன்னு சொன்னியே... அதான் கேட்கிறேன்.''

''குறைபாடுன்னு கேட்டால்...?'' என்றபடி அவள் யோசிக்க,

''மைத்ரேயி! ஒரு நாள் போதுமா - குறை சொல்ல இன்றொரு நாள் போதுமான்னு பாடிடப் போறே?'' என்றான் பயத்துடன்.

''இங்கே இருக்கிற பழக்க வழக்கங்களில் நிறைய மாற்றங்கள் கட்டாயம் தேவைப்படுது அத்தான். ஒரு சிலரைத் தவிர இங்கிருக்கிறவங்களுக்குத் தங்கள் கவலையைவிட அடுத்தவங்க கவலைதான் முக்கியமா இருக்கு. அதுவும் நல்ல நோக்கில் கிடையாது.''

''இந்தக் குணம் கிராமத்தில் இருக்கிறவங்களுக்கு மட்டும் தான் இருக்குதுன்னு நினைக்கிறியா?''

''அப்படிச் சொல்ல முடியாதுதான். ஆனால் சதவீதக் கணக்கு பார்த்தால் டவுன் அல்லது சிட்டியில் இருக்கிறவங்களை விட இங்கே புறம் பேசறவங்க ஜாஸ்தி. ஒருவேளை இங்கே கிராமத்தில் குறைவான மக்கள்



இருக்கிறதாலே எல்லோரையும் எல்லோருக்கும் தெரியறது ஒரு வகையில் காரணமா இருக்கலாம்.''

''.......''

''அதோட இல்லாமல் இங்கே வெளியே வேலைக்குப் போகிற பெண்கள் ரொம்பக் குறைவு. தோட்டம், வயல், வீட்டு வேலை முடிச்சுட்டால் பொழுது போகணுமே?! கரண்ட் இருந்தாலாவது சீரியல் அது இதுன்னு பார்ப்பாங்களா இருக்கும்'' மைத்ரேயியின் பேச்சில் முன்பை விட தெளிவும், முதிர்ச்சியும் வெளிப்பட்டது.

''இங்கே ஏதாவது லைப்ரரி தொடங்கி மக்களுக்கு வாசிக்கும் பழக்கத்தை எல்லாருக்கும் ஏற்படுத்தினால் எப்படி இருக்கும் மைத்தி? அது சரியா வருமா?''

''லைப்ரரி தொடங்கினால் அங்கே வந்து காஸிப் (Gossip) பண்ணப் போறாங்க அத்தான். நம்ம காது பட பேசறதையும் சரி, நமக்குப் பின்னாடி பேசறதையும் சரி... எல்லாத்தையும் லைட்டா எடுத்துக்கணும்.''

'தகப்பன் சாமி' போல் அவனுக்கே பாடம் சொல்லிக் கொடுக்கும் அவன் மனைவியின் மாற்றம் உண்மையிலேயே சுதர்சனுக்கு மலைப்பாக இருந்தது.

''ம்... அப்புறம் அத்தான் இங்கே ஆண் குழந்தை - பெண் குழந்தை என்ற பாகுபாடு ரொம்ப அதிகமா இருக்குது. இதே எண்ணத்தை அடுத்த தலைமுறைக்கும் விதைக்கிறாங்க. அது ரொம்பவே வருத்தப்பட வேண்டிய விஷயம்.''

''புரியுது மைத்தி. அம்மா கூட அடிக்கடி சொல்றது தான். ஒத்த பிள்ளையானாலும் ஆம்பிளை பிள்ளையா போனதாலே பரவாயில்லைன்னு ஊர்க்காரங்க நிறைய பேரு அவங்களையே பேசி இருக்காங்க'' என்று...'' சுதர்சனின் குரலில் சுருதி குறைந்து ஒலித்தது.

''எங்க வீட்டில் ரெண்டு பேரும் பெண் பிள்ளைங்க தான். ஆனால் இது வரைக்கும் அதை ஒரு குறையாவே தெரிஞ்சதில்லை அத்தான். ஆனால் இங்கே வந்த ஒரு வாரத்தில் பத்து பேராவது அதை பெரிய குறையா பேசி இருக்காங்க'' சாதாரணம் போல் இப்பொழுது விளக்கி னாள் மைத்ரேயி. ஆனால் சுதர்சனுக்கு அவளது உணர்வு களைப் புரிந்து கொள்ள முடிந்தது.

''நாம எத்தனை மைத்ரேயி பெத்துக்கலாம்?'' இது தான் சாக்கென்று 'கொக்கி' போட்டான் அன்பு கணவன்.

''அரை டஜன் என்று அத்தைக்கிட்டே சொல்லியிருக் கேன்'' என்று முறுவலித்தவளிடம், ''அரை டஜனா? அப்படின்னா எத்தனைன்னு உனக்குத் தெரியுமா?'' என நம்ப முடியாமல் கேட்டான்.

''இது கூடத் தெரியாதா? எழு தானே?'' எனக் குறும் புடன் கண் சிமிட்டினாள்.

தன் இரண்டு கைகளையும் கோர்த்தபடி தலையில் வைத்தவன், ''ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகின்றது. அப்படின்னு தான் பாடணும் போல மைத்தி'' என்று புரியாத பாவனையைத் தொடர்ந்தான்.

''பார்த்துங்க அத்தான்... கரண்ட் போயிடப் போகுது!''

சலங்கையாய் சிரித்தவளின் காதருகில் குனிந்து, ''கரண்ட் போனால்...'' என்று சுதர்சன் தொடங்க, ''போதுமே...!'' என அவனது வாயைத் தன் விரல்கொண்டு அவசரமாக மூடினாள்.

''சொல்ல விட மாட்டியே?'' போலியாக அலுத்தவன், ''சரி... சரி இருட்டறதுக்கு முன்னாடி வீட்டுக்குப் போக லாம். வா...'' என்றபடியே மனைவியின் கரம் பற்றி எழுப்பி விட்டான்.



வீட்டிற்குத் திரும்பும் வழியில், ''ம். இன்னொண்ணு அத்தான்...'' என்று மைத்ரேயி பேச்சை விட்ட இடத்தி லிருந்து தொடங்க,

''ஏற்கனவே அரை டஜன் என்று ஆரம்பிச்சு ஏழுன்னு கணக்கு சொல்லி இப்போ இன்னும் ஒண்ணா?'' என்று அதிர்வது போல் பாசாங்கு செய்தவன்,

''தாங்காது கண்ணம்மா! தாங்காது... இந்த பூமி பாரம் தாங்கவே தாங்காது...!'' நாடகப் பாணியில் உணர்ச்சி வசப்பட்டான்.

''ம்க்கும்! கொக்குக்கு ஒண்ணே மதின்னு சொல்ற மாதிரி இன்னும் நீங்க கவுண்டிங்கை விடாமல் பிடிச் சுட்டு இருங்க. நான் ட்ராபேக் பற்றி பேச ஆரம்பிச் சேன்...'' என்று பல்லைக் கடித்தாள்.

''ம்... அப்படி விவரமா சொல்லு. ஒரு நிமிஷத்தில் நான் அப்படியே ஆடிப் போயிட்டேன்.''

''அடுத்தவங்க விஷயத்தில் ரைட் ராயலா நுழைஞ்சு பஞ்சாயத்து பண்ணுவாங்க. இப்போ நம்ம ரெண்டு பேரும் பேசிட்டிருந்ததை யாராவது யதேச்சையா கேட் டாங்கன்னு வைங்க... அவ்வளவு தான். புருஷன் - பொண்டாட்டின்னு கூட தயங்க மாட்டாங்க... ஈஸியா நடுவில் அவங்களுடைய கருத்தையும் சொல்லுவாங்க.''

எதையோ விளக்கம் சொல்ல வந்தவனை முந்திக் கொண்டு, ''அதுக்கு என்ன காரணம் தெரியுமா அத்தான்? நம்ம ஊர்க்காரங்க, நம்ம ஜனம் என்ற எண்ணம் அவங்க மனசில் இருக்கிறது தான் முக்கிய காரணம். நீ யாரோ... எப்படியோ போ என்று அவங்களாலே போக முடியாது'' என மைத்ரேயி விளக்கினாள்.

''மைத்தி! எப்படியிருந்த நீ இப்படி ஆகிட்டே அப் படின்னு தான் டயலாக் சொல்லணும் போல?!

ஜெனரேட்டர், அரிசி மூட்டை, ஜே-ஜே-ன்னு இருக்கிற மக்கள் கூட்டம் அப்படி இப்படின்னு காரணம் அடுக்கின மைத்ரேயி இப்போ இந்த அளவுக்கு மெச்சூர்டா அடிப் படை காரணிகளைக் கூட எடுத்துச் சொல்லி விளக்கம் கொடுக்கிறியே டா! உன் மாற்றத்தைப் பார்க்க எவ் வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?''

அவன் மகிழ்ச்சியை வார்த்தைகளில் பிரகடனப் படுத்தியதை விட, சுதர்சன் கண்கள் விரிந்ததில், அவன் அகத்தின் நிறைவில் சூரியனைக் கண்ட தாமரையாய் மலர்ந்த அவன் முகப் பாவனையில் வெளிப்பட்ட சந்தோஷம் மைத்ரேயியை மிகவும் வசீகரித்தது.

அவளது கவனம் சிதறியதில், சாலையோரத்தில் கிடந்த முள் மரத்திலிருந்து முறிந்து கீழே விழுந்த கிளையொன்று மைத்ரேயியின் பாதத்தைப் பதம் பார்க்க வலியில், ''ஆ...!'' என்று துடித்தாள்.

அவளது கால் மேல் சதையில் ஒட்டியிருந்த முள்ளை விலக்கிய சுதர்சன், ''கொஞ்சம் கவனமா வந்திருக்கக் கூடாதா மைத்ரேயி?'' கரிசனத்துடன் வினவியபடியே மனைவியைத் தோளில் தாங்கினான்.

வீட்டையடைந்த போது அவளது பாதத்தில் கசிந்த ரத்தம் உறைந்திருக்க, காயத்தைப் பஞ்சால் துடைத்து சுத்தப்படுத்திய சுதர்சன் உடனே மருத்துவமனைக்குச் சென்று 'டெட்டானஸ்' ஊசி போட்டுக் கொள்ளும் பொருட்டு மைத்ரேயியை வற்புறுத்தி அழைத்துச் சென்றான்.

செந்தாமரைக்குளத்திலிருந்த ஆரம்ப சுகாதார மைய மருத்துவமனையில் மருத்துவர் வரவில்லை என்பதால் பக்கத்து ஊரிலிருக்கும் தனியார் ப்ராக்டிஷனர் செழிய னிடம் சென்று ஊசி போட்டுக் கொண்டு திரும்பினர்.



மாலை நேரத்து குதூகலம் சுதர்சனிடத்தில் காணாமல் போகவும், ''ஏன் அத்தான் இப்படி அப்செட் ஆகிட்டீங்க? சின்ன காயம் தானே? டேக் இட் ஈஸி சுதா'' என்று தேற்றினாள்.

''நான் ஓரத்தில் வந்து உன்னை ரோடுப் பக்கம் கூப்பிட்டு வந்திருக்கணும். தப்புப் பண்ணிட்டேன்'' என்று மனமே ஆறாமல் சொன்னான்.

''ரொம்ப ஓவரா தெரியலை அத்தான் உங்களுக்கு? இப்படி ஒரு கீறலுக்கு இவ்வளவு ஃபீல் காண்பிக்கறீங்க?''

''ப்ச்! எல்லாமே விளையாட்டா போச்சு உனக்கு. நான் ஃபீல் பண்றது கூட. எல்லாத்தையும் நிறைகுறை களோட ஏத்துக்கப் பழகிக்கறதா நீ இன்னைக்கு சாயந்திரம் பேசினதைக் கேட்டு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? என் கண்ணே பட்டுடுச்சு போல. அதான் இப்படி...''

''அதுக்காக இப்படி சோக கீதம் வாசிக்கணுமாக்கும்? எல்லாம் நன்மைக்கேன்னு எடுத்துக்கலாமே கண்ணா?'' என்று எவ்வளவு தேற்றினாலும் சுதர்சனின் பழைய உற்சாகம் மீளவேயில்லை.

இரவு நேர தனிமையில் தன் பாதங்களைத் தாங்கி அமர்ந்தபடியிருந்த கணவனை உற்சாகப்படுத்த எண்ணியவள் இனிய குரலில் பாடினாள்.

''அத்தான் ! என்னத்தான் அவர் என்னைத்தான்...

எப்படி சொல்வேனடி!

அவர் கையைத்தான் கொண்டு மெல்லத்தான்

வந்து கண்ணைத்தான் எப்படிச் சொல்வேனடி!''

மைத்ரேயியின் பாதத்தில் மெல்லிய முத்தமொன் றைப் பதித்தவன், அவளைப் பார்த்து ஆசையாய் முறுவ லொன்றை உதிர்க்க, உற்சாகத்துடன் மெல்லிய குரலில் தொடர்ந்தாள்.

''ஏனத்தான் என்னைப் பாரத்தான்
கேளத்தான் என்று சொல்லித்தான்
சென்ற பெண்ணைத் தான்
கண்டு துடித்தான் அழைத்தான் சிரித்தான்
அணைத்தான்... எப்படி சொல்வேனடி!''

தன் காதோரத்து கேசச் சுருளை ஒதுக்கியவனின் கண்களோடு கலந்து, ''ஐ லவ் யூ சோ மச் சுதா!'' என்று காதலுடன் அவள் சொன்ன அடுத்த கணம் சுதர்சனின் இறுகிய கையணைப்பிலிருந்தாள்.

அவள் நெற்றியைத் தன் இதழ்களால் ஒற்றியவன், ''ஐ லவ் யூ கண்ணம்மா!'' என்றான் உணர்ச்சி மயமான குரலில்.

''மொட்டுத் தான் கன்னி சிட்டுத்தான்
முத்துத்தான் உடல் பட்டுத்தான்
என்று தொட்டுத்தான் கையில் இணைத்தான்
வளைத்தான் சிரித்தான் அணைத்தான்...
எப்படிச் சொல்வேனடி!''



# 12

இரண்டு நாட்கள் வழக்கமாய் சென்றதைத் தொடர்ந்து, ''அண்ணா, அண்ணா! அவங்க எல்லாம் வந்துட்டாங் கண்ணா! அண்ணா எங்கே பெரியப்பா?'' என்று வீட்டிற் குள் ஓட்டமாக ஓடி வந்த கஸ்தூரி மூச்சிரைக்க லோக நாதனிடம் விசாரித்தாள்.



''யாருடி வந்திருக்காங்க?'' வெற்றிலையைக் குதப்பிக் கொண்டிருந்த விடுகதைப் பாட்டி வினவ,

''உங்களுக்கு ஒண்ணுமே தெரியாது பாட்டி! ஊரே அல்லோலப்படுது. நீங்க ஆற அமர கேளுங்க! 'காந்தி செத்துட்டாரான்னு?''' கஸ்தூரி நொடிக்க,

''எனக்குக் காது சரியா கேட்க மாட்டேங்குதடி. இல் லைன்னா உங்களை எதுக்கு கேட்கப் போறேன்? எனக் கென்ன உங்களை மாதிரி சின்ன வயசா? இப்ப நீ என்ன சொன்னே? காந்தி செத்துட்டாரா?'' ஆர்வக் கோளாறில் பாட்டி விடாமல் துருவினார்.

''ம்க்ஹூம்! அடப் போங்க பாட்டி! உங்களுக்குப் பதில் சொல்ல முடியாது'' அலுத்துக் கொண்டவள், ''அண்ணா! சீக்கிரம் வாங்க. 'பிரசிடென்ட் கண்ணாயிரம் மாமா வீட்டில் இருக்காங்க எல்லோரும்'' என்று உள்ளே தென்பட்ட சுதர்சனை அவசரப்படுத்தினாள்.

''இங்கே ஒருத்தி நான் கேட்டுக்கிட்டே இருக்கேன். யாராவது காதுலயாவது வாங்குறீங்களா? இந்தாம்மா மைத்ரேயி! நீயாவது சொல்லிட்டுப் போ.''

அப்பொழுது தான் அவளுடைய வாழை நார் யூனிட்டிலிருந்து திரும்பிய மைத்ரேயியை நிறுத்தி வைத்து பாட்டி கேள்வி கேட்க, ''அதான் பாட்டி, சினிமா ஷூட்டிங் நடத்தறதுக்காக சினிமாக்காரங்க எல்லாம் நம்ம ஊருக்கு வர்றதாய் இருந்தாங்களே? அவங்க தான் வந்திருக்காங்களோ என்னமோ? அதைத் தானே கஸ்தூரி சொல்றே?'' என்றாள்.

''அதுக்குத் தான் என்னமோ இவளே அந்தப் படத்தில் நடிக்கிறவளாட்டம், இந்த ஆட்டம் ஆடுறாளா இவள்?''

தன்னுடைய மனைவியைப் பார்த்த லோகநாதன், ''நீங்க வேற பாட்டி! அங்கே பாருங்க லக்ஷ்மியை!

எப்படிச் சீவி சிங்காரிச்சுட்டு கிளம்பியிருக்காள், பார்த் தீங்களா? இந்த வயசுக்கு இவளே இப்படியிருக்கும் போது, சின்ன வயசுப் பொண்ணு கஸ்தூரி ஆட்டம் போடறதில் என்ன தப்புங்கறேன்?'' என வம்பு செய்ய விளையவும்,

கஸ்தூரி, ''அப்படிச் சொல்லுங்கப் பெரியப்பா!'' என்றாள் சலுகையுடன்.

''அதென்ன மாமா அப்படிச் சொல்லிட்டீங்க? அத் தைக்கு என்ன அப்படி வயசாயிடுச்சு? மிஞ்சி மிஞ்சிப் போனால் அவங்களுக்கு ஒரு நாற்பது தான் சொல்ல முடியும்'' என மைத்ரேயி அவளுடைய அத்தையைத் தாங்கிப் பேச, வரலட்சுமி பெருமையிலும் வெட்கத் திலும் ஜொலித்த முகத்தைத் திருப்பி கணவனை ஒரு வெட்டு வெட்டினார்.

''ஹா ஹா! போச்சு போ! ரெண்டு பேருமா சேர்ந்து கிட்டீங்களா? இனி என் பாடு திண்டாட்டம் தான்.''

''உங்களுக்கென்ன மாமா? நீங்களும் அத்தானும் காலையில் வெளியே போனால் ராத்திரி தான் வீடு திரும்புறீங்க. நானும் அத்தையும் இல்ல வீட்டில் நிறைய நேரம் சேர்ந்திருக்கணும். அப்பப்போ இப்படி இல்லாத தையும் பொல்லாததையும் சொல்றதுதான்'' மைத்ரேயி கண் சிமிட்ட,

பெருங்குரலெடுத்துச் சிரித்த லோகநாதன், ''கேட் டுக்கோ லக்ஷ்மி! இல்லாததைத் தான் உன் மருமகள் சொல்றாளாமா'' என்றார்.

வரலக்ஷ்மி, ''அப்படியே பார்த்தாலும் என் மருமகள் இல்லாததைத் தானே சொல்றாள், பொல்லாததை ஒண்ணும் சொல்லலையே? அதில் ஒண்ணும் தப்பில்லை.



உங்களை மாதிரி பொல்லாததைச் சொல்றது தான் தப்பு'' என்றார் மருமகளை விட்டுக் கொடுக்காமல்.

லோகநாதன் இரு கைகளையும் சிரிப்புடன் உயர்த்தி, ''ஜமாய்ங்க! மாமியார், மருமகள் கூட்டணி வெற்றி பெறட்டும்!'' என சரணாகதியானார்.

''ம்ம். எப்படியோ கிழவியும் குமரியும் கிளம்பியாச்சு! சினிமாக்காரங்களைப் பார்க்க நீ போகலையா மைத்ரேயி?''

''பாட்டி, ஒரு சூர்யாவோ இல்லை ஒரு ஆர்யாவோ வந்திருந்தால் மைத்ரேயி இங்கே தானிருப்பாளாக்கும்? எல்லோருக்கும் முந்தி கிளம்பியிருக்க மாட்டா? என்ன மைத்ரேயி நான் சொல்றது?'' கிளம்பி வந்த சுதர்சன் அவளைக் கேலி செய்தான்.

''ச்சே... ச்சே... நீங்களா அப்படியெல்லாம் என்னைப் பற்றி தப்பா நினைச்சுக்கக் கூடாது அத்தான்.''

முகத்தைச் சாதாரணமாக வைத்துக் கொண்ட மைத்ரேயி தொடர்ந்து, ''ஆனால் பாருங்க... எனக்கு பார்க்கிற இட மெல்லாம் சூர்யா தான் தெரியறான். அதான் வீட்டி லேயே இருந்துக்கலாம்ன்னு முடிவு செய்துட்டேன்'' என்று கண் சிமிட்டிச் சிரித்தாள்.

''அடிப்பாவி! கட்டின புருஷன் முன்னாடியே இப் படியா? இதெல்லாம் ரொம்பவே ஓவரு!''

''அண்ணா! போதும் உங்க செல்லச் சண்டையெல் லாம், நீங்க படப்பிடிப்பு நடக்கிற இடத்தில் இல்லா தப்போ நான் அங்கேயெல்லாம் போகக் கூடாதுன்னு அம்மாவோட கண்டிப்பான உத்தரவு. இப்ப வர்றீங்களா இல்லையா?''

கஸ்தூரி முடுக்கிவிட எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு கிளம்பியவனிடம், ''சுதர்சன்! என்ன படம்

எடுக்கப் போறாங்களாமா? நாட்டாமை மாதிரியா, சின்னக் கவுண்டர் மாதிரியா, இல்லை இப்ப வந்த கள வாணி மாதிரியா? நல்ல படமா எடுக்கச் சொல்லுடாப்பா'' என்றார் பாட்டி.

அதைக் கேட்டு மூக்கின் மேல் விரலை வைத்த வரலக்ஷ்மி, ''அம்மாடியோவ்! காது கேட்காது, காது கேட்காதுன்னு சொல்லி சொல்லியே எல்லாத்தையும் விரல் நுனியில் வைச்சிருக்காங்க பாரேன்டா இந்தப் பாட்டி!'' என்று வியப்பில் ஆழ்ந்தார்.

வாய்விட்டு சிரித்த சுதர்சன், ''கண்டிப்பா கேட்டுட்டு வந்து சொல்றேன் பாட்டி'' என்றுவிட்டு சென்றான்.

''சிரிச்சுட்டுப் போறான் பாரு உன் புருஷன்! என்னைப் பற்றி தெரியலை அவனுக்கு! சின்னக் கவுண்டர் படத் தில் மனோரமா மாதிரி எனக்கும்தான் நடிக்க வரும்! அவங்க விடுகதை சொல்ற மாதிரி நானும் வெளுத்து வாங்கிடுவேன்னு உன் புருஷன்கிட்ட சொல்லி, டைரக்டர் கிட்ட சொல்லச் சொல்லு மைத்ரேயி!''

''அது 'டைரக்டர்' இல்லை பாட்டி! டைரக்டர்!''

''ஹான்... என்னமோ ஒண்ணு. மறக்காமல் சொல்லிடு'' என்றபடியே பாட்டி நடையைக் கட்ட, அங்கிருந்தவர் களின் சிரிப்பு சப்தம் அவரைத் தொடர்ந்தது.

செந்தாமரைக்குளம் பிரெசிடென்ட் கண்ணாயிரத்தின் மச்சினன் முத்துராமன் சினிமாவில் துணை இயக்குனர். அவனை விடாமல் தொந்தரவு செய்து, தங்கள் ஊரில் ஏதாவது ஒரு படப்பிடிப்பை நடத்துமாறு தொல்லை செய்து கொண்டிருந்தார் கண்ணாயிரம்.

எல்லாம் கூடி வரும் போலிருக்கையில், அவரின் மக ளுக்குப் பிரசவம் நெருங்கியிருக்க, அவர் மனைவியுடன்



அமெரிக்காவிலிருக்கும் மகளிடம் போக வேண்டிய கட்டாயம்.

ஆனால் போகும் முன், தன் வீடு, தோட்டம் முதலிய வற்றை சுதர்சனிடம் ஒப்படைத்து படப்பிடிப்பைப் பற்றிய விவரமெல்லாம் கூறிவிட்டே சென்றிருந்தார்.

இப்பொழுது செந்தாமரைக்குளத்தில் வந்து இறங்கி யிருக்கும் படப்பிடிப்புக் குழுவினர் ஊர் பிரெசிடென்ட் வீட்டில் தங்குவதாகத்தான் ஏற்பாடு. வந்தவர்களை வரவேற்று, உபசரித்து வேண்டியவற்றைச் செய்யும் பொறுப்பை ஏற்றிருக்கும் சுதர்சன், அவனுடைய கட மையைச் செவ்வனே செய்தான்.

''வேற உதவி ஏதாவது வேணும்னாலும் தயங்காமல் கேளுங்க. வீட்டுக்கு மேல் வேலைக்கு, சமைக்க ஆள் சொல்லியிருக்க. வந்துடுவாங்க. அவங்களிடமும் சொல்லி வைச்சிருக்கேன். நீங்களே சொன்னாலும் செய்து தரு வாங்க'' வீட்டிற்குத் திரும்ப கிளம்ப ஆயத்தமானவ னுடன் மனமேயின்றி கிளம்பினாள் கஸ்தூரி.

அந்தப் படத்தில் நடிக்கும் கதாநாயகி இதற்கு முன் இரண்டு படங்களில் நடித்த, வளர்ந்து வரும் இளம் நடிகை ஆஷா. அவளின் பார்ப்பவரைக் கவரும் அழகும் ஆற்றலும் இளைய தலைமுறையினரை அவள் புறம் கவர்ந்திழுத்துக் கொண்டிருந்தது.

கதாநாயகன் - புதுமுகம் தருண். இருந்தாலும் அவனைச் சுற்றியும் கூட்டமிருந்தது. ஒருவேளை அவன் பிற்காலத்தில் பெரிய ஹீரோவாக வந்துவிட்டால்? இப்பொழுதே அவனுடன் புகைப்படமும் கையெழுத்தும் வாங்கி வைத்தால்தானே!? கஸ்தூரி மட்டும் இதற்கு விதிவிலக்கா என்ன?

கஸ்தூரிக்குத் தக்கபடி ஆஷாவும், ''மிஸ்டர். சுதர்சன்! இன்னமும் கொஞ்ச நேரம் இங்கே இருந்துட்டுப் போங்களேன். ஐ ஃபீல் சோ போர்ட்! நாளைக்கு ஷூட்டிங் ஆரம்பிச்சுட்டால் ரொம்ப பிசியா ஆகிடுவோம்' என்று கிள்ளைக் குரலில் கொஞ்சினாள்.

சுதர்சன் தயங்குவது மாதிரி தெரிய, ''இந்த ஊரைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன் மிஸ்டர். சுதர்சன். திஸ் பிளேஸ் லுக்ஸ் பியூட்டிஃபுல்! ப்ளீஸ்!'' என அரைக் குறை தமிழும் ஆங்கிலமும் எனக் கலந்தடித்தாள்.

ஊரைப் பற்றிக் கேட்டவுடன் தயக்கத்தை உதறி, மேலும் சில நிமிடங்கள் தாமதித்தே வீட்டிற்குக் கிளம்பியவனை, நாளை படப்பிடிப்பு பார்க்கக் கட்டாயம் வந்துவிட வேண்டுமென்ற கோரிக்கை விடுத்தே அனுப்பினாள் ஆஷா.

* * *

அடுத்த நாள் காலையில் சுதர்சன் மில்லுக்குப் போகாமல் படப்பிடிப்பிற்குக் கிளம்பிக் கொண்டிருக்கையிலேயே கஸ்தூரி அங்கு வர, மைத்ரேயி, ''காலேஜ் லீவ் விட்டாலும் விட்டாங்க. உனக்குக் கொண்டாட்டம் தான் போ. ஷூட்டிங் பார்க்க கிளம்பிட்டியா?'' என்றாள் கேலியாக.

''ஆமா அண்ணி. வீட்டிலிருந்து என்ன செய்யப் போறேன்? நீங்களும் வர்றீங்களா? ஜாலியா இருக்கும்.''

''நம்ம வீட்டிலிருந்து தான் அவங்களுக்கு இன்றைக்கு மதிய சாப்பாடு. அப்போ வர்றேன். அப்புறம், எப்படி யிருந்தாங்க ஹீரோயின், ஹீரோ? எல்லாம் சொல்லு.''

அடுத்த சில மணித்துளிகளுக்குக் கதாநாயகியின் அருமை பெருமைகளைப் பற்றி கஸ்தூரி வானளாவ புகழ்ந்து தள்ளினாள்.



''எங்களை விடவே மனசில்லை அண்ணி அவங்களுக்கு. 'இருங்களேன்... இருங்களேன்'-ன்னு சொல்லிகிட்டே இருந்தாங்க. அண்ணா தான் ரொம்ப லேட் ஆச்சுன்னு கிளம்பிட்டாங்க.'' முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு கஸ்தூரி சொல்ல,

ஏற்கனவே நேற்று இரவு நேரம் கழித்து வந்ததற்காக மைத்ரேயிடம் பாட்டு வாங்கியிருந்த சுதர்சன், ''நேற்று விட்டுப் போன குறைபாட்டை ஞாபகப்படுத்த வந்துட்டாள்'' என முணுமுணுத்துக் கொண்டான்.

''இந்த ஊரைப் பற்றி ரொம்ப இன்ட்ரெஸ்ட் காண்பிச்சாங்க, தெரியுமா அண்ணி? ரொம்ப அழகா இருக்காமாம் நம்ம ஊரு.''

''நல்ல அமாவாசை இருட்டில் பார்த்தே நம்ம ஊரு அழகா இருக்குன்னு சொல்லிட்டாங்களே. அவங்களுக்குள்ளும் ஏதோ இருந்திருக்கு பாரேன்! ஒருவேளை ஆஷா... நைட் விஷன் கண்ணாடி எதுவும் போட்டிருப்பாங்களோ கஸ்தூரி?'' மைத்ரேயி சிரிக்காமல் சொல்ல,

''ஹா ஹா! ஆனால் அமாவாசை இருட்டில் இருந்தால் கூட அவங்க நல்லா தெரிவாங்க அண்ணி. அவ்வ்வ்வளவு கலர்! கிள்ளினால் ரத்தம் வரும் போல!'' தன்னுடைய தற்போதைய அபிமான கதாநாயகியைப் பற்றி நிறுத்தாமல் சொல்லிக் கொண்டே போனாள் கஸ்தூரி.

''அவங்களுக்கு ரத்தம் வருதோ இல்லையோ, எனக்கு காதில் நல்லா ரத்தம் வருது கஸ்தூரி. போதும் நிறுத்து! அப்புறம் நான் அழுதுடுவேன்'' பாதி உண்மையும் பாதி கிண்டலுமாகக் கூறிய மைத்ரேயி, அவள் சொன்னதைக் கேட்டு சிரித்தபடி செல்பவர்களையே சிறிது நேரம் பார்த்த வண்ணமிருந்தாள்.

* * *

அன்று மதியம் படப்பிடிப்பு நடக்கும் இடத்திற்கு வேலையாள் தொடர உணவு எடுத்துக் கொண்டு வந்த மைத்ரேயி, கூட்டத்தை விலக்கிக் கொண்டு தான் போக வேண்டியிருந்தது.

ஹீரோ வயலில் இறங்கி நடித்துக் கொண்டிருந்ததை கஸ்தூரி வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க, பலாப் பழத்தைச் சுற்றிலும் மொய்க்கும் ஈக்கள் போன்று தன்னைச் சுற்றிலுமிருந்த ரசிகர் கூட்டத்தின் நடுவில் தாரகையாய் ஜொலித்தாள் ஆஷா.

கஸ்தூரி சொன்னது உண்மைதான். போட்டிருந்த மேக்-அப் சிறிது கூட கலையாமல் சிரிப்பு மாறாத முகத்தோடு எப்படி ஜொலிக்கிறாள் இவள் என்று ஆஷாவைப் பற்றி நல்லவிதமாக மைத்ரேயி நினைத்துக் கொண்டிருக்கும் பொழுதே, ஆஷாவின் இடது கரம் சுதர்சனின் வலது கரத்தோடு இணைந்திருந்தது அவள் பார்வையில் பட்டு, அவள் புருவ மத்தியில் லேசான முடிச்சுக்கள் விழ வைத்து, அவளது நடையின் வேகத்தையும் குறைத்தது.

மைத்ரேயி வருவதைப் பார்த்த சுதர்சன் அவளை நோக்கி வந்தான்.

''நல்லவேளை... சரியான நேரத்தில் வந்துட்டே! நம்ம வீட்டு சாப்பாட்டைப் பற்றி அப்படியே அளந்து விட்டிருந்தேனா... எல்லாரும் எங்கே எங்கேன்னு கேட்டுகிட்டேயிருந்தாங்க. இன்னமும் கொஞ்ச நேரம் போயிருந்தால் என்னையே சாப்பிட்டிருப்பாங்க.''

இலகுவாக பேசியபடியே மைத்ரேயியை இயக்குனரிடம் அறிமுகப்படுத்திவிட்டு, அவள் தோளை அணைத்தவாறே ரசிகர் கூட்டத்திடமிருந்து தனியாகச் சென்று அமர்ந்திருந்த ஆஷாவிடம் அழைத்துச் சென்றான்.



''மிஸ். ஆஷா! இவங்கதான் மை பெட்டர் ஹாஃப் மைத்ரேயி! இவங்க தான் ஆஷா, வளர்ந்து வரும் திறமை வாய்ந்த நடிகை.''

நலம் விசாரித்துக் கொண்ட இருவரையும் சம்பிரதாயமாக ஒருவருக்கு ஒருவர் அறிமுகப்படுத்தி வைத்தான்.

சுதர்சனின் கையில் லேசாகச் செல்லமாக அடித்த ஆஷா, ''ஓ! தர்ஷன்! யூ ஆர் சோ ஸ்வீட்! என்னை ரொம்பப் புகழ்றீங்க நீங்க!'' எனவும், மைத்ரேயியின் நெரித்த புருவங்கள் கிட்டத்தட்ட வானையே தொடும் அளவிற்கு உயர்ந்தது.

'தர்ஷனா? இது எப்பொழுதிலிருந்து?' சுதர்சன் என்ன சொல்கிறான் என்று மைத்ரேயி கீழ் கண்ணால் அவனைப் பார்க்க, அவன் முகத்தில் தெரிந்த அப்பட்டமான ஆச்சரியத்தைத் தான் அவளால் காண முடிந்தது.

மனைவியிடத்தில் ஒரு அவசரப் பார்வையைச் செலுத்திய சுதர்சன், ''மிஸ். ஆஷா...'' என்று ஏதோ சொல்ல ஆரம்பிக்க,

அவனை இடைவெட்டிய ஆஷா, ''என்னை மட்டும் சொல்றாரே உங்க ஹஸ்பெண்ட்? ஹி இஸ் எ வெரி டேலன்ட்டட் அண்ட் நாலேட்ஜபில் பெர்சன் யூ நோ?'' என்றாள்.

'ஆமா.. எனக்கு தெரியாது பாரு! சொல்ல வந்துட்டாள்!?'

''தர்ஷன் மட்டும் பேச்சுத் துணைக்கு இன்றைக்கு என்கூட இல்லைன்னா எனக்கு ரொம்ப போர் அடிச்சிருக்கும். யூ ஸேவ்ட் மீ ஃப்ரம் போரடம் தர்ஷன்!''

'இவள் பஞ்சாபிலிருந்து நடிக்க வந்தாளா இல்லை என் புருஷனோட பேச வந்தாளா? இதுக்குத் தான்

இவளுக்குச் சம்பளம் கொடுக்கிறாங்களா? எங்கே போனாள் இந்த கஸ்தூரி?'

சிறிது சிறிதாக மைத்ரேயியின் கோபம் ஏறிக் கொண்டே போனது. நாலு பேரு இருக்குமிடத்தில் நாவடக்கம் வேண்டுமென நினைத்தால்... இவள் ரொம்ப இல்ல ஃபிலிம் காட்டுகிறாள்!

''உங்களைக் காப்பாத்தினேன்னு சொல்லிட்டு, என்னை நீங்க இப்படி சாகடிக்கப் பாக்கறீங்களே!'' சுதர்சன் சொன்னது மைத்ரேயிக்கு. அவளின் காதுகளின் இரைச்சலில், மனதின் குமுறலில் அவள் செவிகளில் விழாமலே போக, ஆஷா தான் கலகலத்துச் சிரித்தாள்.

''நீங்க நிறைய பேசுவீங்கன்னு ஹர்ஷா சொன்னார். ஆனால் நீங்க ரொம்ப அமைதியா இருக்கீங்க மைத்ரேயி!''

''அது யாரு ஹர்ஷா... நம்மைப் பற்றிச் சொன்னது?' என ஒரு நிமிடத்திற்கும் குறைவாகப் புரியாமல் யோசித்த மைத்ரேயி, ''ஹர்ஷாவா?'' என்றாள்.

''ம்ம். 'சு-த-ர்-ச-ன்' என்று எத்தனை நேரம் நீட்டி முழக்கிக் கூப்பிடறது? அதான், அவரோட பெயர் நடுவிலிருந்து சில இங்கிலீஷ் எழுத்துக்களை உருவி, ஷார்ட்டா வைச்சுட்டேன். ஸ்வீட்டா இருக்கு இல்ல?''

தன் நாய் குட்டிக்குச் செல்லப் பெயர் வைத்தது போன்று ஆஷா குதூகலித்துச் சொல்ல, மெல்ல மெல்ல ஏறிக் கொண்டிருந்த மைத்ரேயியின் கோபம், எரிமலையைப் போன்று உச்ச நிலையை அடைந்து, உடைத்து வெளி வந்தது.

'என்ன தைரியம் இவளுக்கு? யாரோட புருஷனுக்கு யாரு பெயர் வைக்கிறது? ஆஷாவிடம் வந்த கோபத்தை முடிந்த மட்டும் கட்டுப்படுத்திய மைத்ரேயி, சுதர்சனின் முழங்கையை அவனுக்கு வலிக்கு மட்டும் இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.



காது வரை இழுத்து பிடித்த இதழோடு, ''அச்சோ! உங்க இத்தனைப் பெரிய்ய்யய முயற்சி எல்லாம் வீணாயிடுச்சே. மிஸ். ஆஷா! என்னோட கணவருக்கு அவரோட பெயர் என்னைத் தவிர யாரும் சுருக்கிக் கூப்பிட்டாலே பிடிக்காது. என் கணவர் அதையெல்லாம் ரொம்பவே பார்ப்பார். என் கணவரோட அம்மா அப்பாவே என் கணவரைத் 'தம்பி' என்று தான் கூப்பிடுவாங்க. அதே மாதிரி நீங்க வேணும்னாலும் என் கணவரை, 'தம்பி' என்றோ இல்லை 'அண்ணா' என்று கூப்பிடுங்களேன்.''

சாது போன்று முகத்தை வைத்துக் கொண்டு அவள் சொன்ன மூன்றே மூன்று வாக்கியத்தில் முன்னூறு முறை 'என் கணவர்', 'என் கணவர்' என அவளின் உரிமையை அழுத்தமாக நிலை நாட்டினாள்.

தன்னைக் கிட்டத்தட்ட அணைத்தாற் போன்று நின்றிருந்த மனைவியின் பேச்சில் வந்தச் சிரிப்பை இருமலாக மாற்றியவனை அலட்சியப்படுத்தியவள், ''அதோட, வேற இன்னொரு முக்கிய காரணமும் இருக்கு நீங்க அவர் பெயரைச் சுருக்கிக் கூப்பிடக் கூடாததுக்கு'' என்று தனது முழு உயரத்திற்கும் நிமிர்ந்து நின்று, அதுவரை உதட்டளவிலிருந்த புன்னகையும் போய், கம்பீரமும் அழுத்தமும் நிறைந்த பார்வையோடு,

''என் கணவரை வேறு யாரும் அவங்க இஷ்டத்திற்குப் பெயர் சொல்லிக் கூப்பிடறது எனக்கு சுத்தமா பிடிக்காது. யூ பெட்டர் கால் ஹிம் மிஸ்டர். சுதர்சன்! ஆர் இட் இஸ் ஈவன் பெட்டர் இஃப் யூ டூ நாட் கால் ஹிம் அட் ஆல்! குட் லக் மிஸ். ஆஷா!'' என்றாள் கடின குரலில்.

போகும் பொழுது உக்கிரம் நிறைந்தப் பார்வைக் கணை ஒன்றினை அவளுடைய கணவனிடத்திலும், வீசியவள், அவன் அழைத்தது காதிலேயே வாங்காமல் திரும்பிச் சென்றாள்.

சிறிது நேரத்திலேயே மைத்ரேயியின் பின்னோடே வீட்டிற்கு வந்த சுதர்சனை சிறிதும் உஷ்ணம் குறையாமலே அவர்களது அறையில் சந்தித்தவள், கைக்குக் கிடைத்தப் பொருட்களை எடுத்து அவன் மீது வீசலானாள்.

''ஹொவ் டேர் யூ? அவளென்னமோ உங்களுக்குப் பேரு வைச்சதே அவள் தான் என்கிற மாதிரி உங்களைக் கொஞ்சிக்கிட்டே 'தர்ஷன்' என்கிறாள்! 'ஹர்ஷா' என்கிறாள்! நீங்க வாயே திறக்காமல் இருக்கீங்க. இப்போ நான் காட்டறேன் உங்களுக்கு தர்ஷன்! 'காளி தர்ஷன்' காண்பிச்சு, உங்களைக் காலி ஆக்கிடறேன் பாருங்க!'' என்று ருத்திர தாண்டவம் ஆடினாள்.

''ஹே நிறுத்து மைத்ரேயி! நான் சொல்றதைக் கேளு!'' லாவகமாக தன் மீது வந்து விழும் பொருட்களைத் தவிர்த்தவன் மனைவியை நோக்கி மெல்ல முன்னேறினான்.

''மாட்டேன்! நீங்க சொல்றதை எல்லாம் அங்கேயே கேட்டாச்சு! பட்டிக்காட்டான் மிட்டாய் கடையைப் பார்த்த மாதிரி, நல்லா 'ஈஈஈ'ன்னு இளிச்சுக்கிட்டு அவள் சொல்றதைக் கேட்டுக்கிட்டா இருக்கீங்க? உங்களை...'' சுற்றும் முற்றும் பார்த்தவள், அங்கே கிடந்த தடிமனானப் புத்தகத்தை அவன் மீது எறிந்தாள்.

புத்தகத்தைத் தடுக்கக் குனிந்தவன், ஒரே எட்டில் மைத்ரேயியை நெருங்கி, அவனைப் பதம் பார்க்கும் அவளது கரங்களைப் பின்னோக்கி வளைத்து, அவளைத் தன்னோடு இறுக்கி, ''ஹே! இது ரொம்ப அநியாயம்! அவள் சொன்னதுக்கு நான் என்ன செய்வேன்?'' என்றான் சிரிப்போடு.



''செய்றதையும் செய்துட்டு சிரிக்கவா செய்றீங்க? உங்களை...'' என்று அவன் அணைப்பில் திமிறியவளை அடக்கியவன்,

''நீ சொல்ற மாதிரி நான் தான் பட்டிக்காடா போயிட்டேன். ஆனால் நீ தான் பெரிய்ய்ய சிட்டி கேர்ள் ஆச்சே! ஒரு ஆணும் பெண்ணும் எப்படிப் பேசினாலும் அதைச் சாதாரணமா எடுத்துட்டுப் போறவளாச்சே! அதுக்கு இந்தக் குதி குதிக்கிறே? நல்ல நண்பர்களாக மட்டும் பார்க்க வேண்டியது தானே?'' என்றான் குறும்போடு புருவத்தை உயர்த்தி.

அவனை வேற்று கிரக மனிதனைப் போன்று விழி விரித்துப் பார்த்தவளின் மூக்கைப் பிடித்து ஆட்டி, ''ஒரு வேளை ஆறறிவு உள்ள உங்க சிட்டியில் எல்லோரும் இப்படித் தான் காளி அவதாரம் எடுத்து ஆளைக் காலி செய்வீங்க போலே! நாங்கப் பட்டிக்காடு பாரு! என்ன செய்றது, ஐந்தறிவு தானே இருக்கு? அதனால எல்லாத்தையும் பொறுமையா தான் விளக்குவோம்'' என்றான் அவளுக்கு எதையோ உணர்த்தி விடுபவன் போன்று.

அது அவன் எதிரில் நின்றவளுக்கும் மண்டையில் அடித்தது போன்று புரிய, அவளின் அகன்ற விழிகளில் ஆச்சரியமும் அதிர்ச்சியும் ஒருங்கே தோன்றியது.

வினீத்தின் திருமணம் முடிந்து ஊருக்குத் திரும்புகையில், சுதர்சனை, 'ஆடு மாடு மாதிரி ஐந்தறிவு தானே? கிராமத்துப் புத்தி!' என்று அவள் சொன்னது நினைவு வர, விழிகள் தானாக பொல பொலவென கண்ணீர் உகுத்தன.

அந்த நிகழ்வின்போது, சுதர்சன் அவளிடம் இரண்டு நாட்கள் பாராமுகம் காட்டியது மட்டுமே தன்னைப் பாதித்ததோ? கணவனைத் தன்னுடன் பேச வைக்கும் முயற்சியாகத் தான் ஒருவேளை அவளது மன்னிப்பு வேண்டும் படலம் அமைந்ததோ?

மன்னிப்புக் கேட்ட பொழுதும் தவறு என்று முழு மனதோடு உணர்ந்து மன்னிப்பு வேண்டவில்லையோ?

தான் பேசியது தவறு என உணர்ந்திருந்தால் அடுத்த நாளாவது மன்னிப்பு வேண்டியிருக்க மாட்டேனா?

அவனது மௌனம் அவளை எந்தளவிற்குக் கஷ்டப் படுத்தியதோ, அதே அளவு வருத்தம் அவனை அப்படிப் பேசியது குறித்து அவளுக்கு இருக்கவில்லை என்பதும் கூட இப்பொழுது அவளை நெருஞ்சியாய் குத்தியது.

பட்டிக்காடு என்றால் என்ன? பட்டணம் என்றால் என்ன? எங்கு இருந்தாலும் அங்கு இருக்கும் மனிதர்களுக்கு உணர்வு என்பது ஒன்று தானே?

இன்று ஆஷா தன் கணவனிடம் நெருக்கமாக இருப்பதைப் பார்த்ததும் தனக்கு எரிந்ததைப் போன்று தானே சுதர்சனுக்கும் அன்று இருந்திருக்கும்! நீரஜாவிற்கு எப்படி இருந்திருக்கும்?

சுதர்சன் மேல் நம்பிக்கை இல்லாமலா இன்று இப்படி நடந்து கொண்டாள்? இல்லையே!

பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் வினீத்திடம் தான் செலுத்தும் நட்பையும், இரண்டு நாட்களுக்கு முன் அறிமுகமான ஆஷாவுடைய அறிமுகத்தையும் ஒரே மாதிரி எடைப்போட முடியாதென்றாலும், தன் மனைவி, தன் கணவன் என்ற உரிமை உணர்வு அனைவருக்கும் பொது தானே?



இது எதுவுமே தெரியாமல் இருந்த நான் ஐந்தறிவு பிராணியா இல்லை சுதர்சனா?

சுதர்சன் நிமிர்த்த நிமிர்த்த நிமிராமல் அவன் மார்பில் சாய்ந்து, மாலை மாலையாகக் கண்ணீர் உகுத்தவள், ''சாரி அத்தான்! சாரி அத்தான்! என்னை மன்னிச்சுடுங்க'' என்றே திரும்பத் திரும்ப புலம்பிக் கொண்டிருந்தாள்.

''ஹே மைத்தி! கண்ணம்மா! எதுக்கு இப்போ இப்படி அழறே? எல்லாமே எக்ஸ்ட்ரீம்ஸ் தான் உனக்கு. ப்ச்! இங்கே என்னை நிமிர்ந்து பாரு!'' அவள் தாடையைப் பிடித்து வலுக்கட்டாயமாக உயர்த்தியவன், ''இப்போ அழுதால் அடி தான் விழும் உனக்கு. கண்ணைத் துடை முதலில்'' என்றான்.

கண்களை மெல்லத் துடைத்தவள், ''அப்போவே என்னை அறைஞ்சு இருக்க வேண்டியது தானே? எப்படி அறையாமல் விட்டீங்க?'' என்றாள் உள்ளே போய்விட்ட குரலில்.

யோசிப்பது போன்று பாவனை செய்தவன், ''ம்ம்... அறைந்திருப்பேன். ஆனால் கார் ஓட்டிக்கிட்டு இருக்கும் போது அடிக்கிறது அத்தனை வசதி படலை'' என்றான் கண் சிமிட்டலோடு.

மெல்ல மைத்ரேயியின் முகத்திலும் சிரிப்பு எட்டிப் பார்க்க, ''இதுக்கு எனக்கு அடி இல்ல விழும்னு நினைச் சேன்'' என, அவள் முகத்தில் சிரிப்பு மேலும் சில மில்லி மீட்டர் விரிந்தது.

''ம்ம். இதான் நல்லா இருக்கு'' என்றவன், ''உன்னை அழ வைக்கிறதுக்காக இப்போ நான் இதைச் சொல்ல வரலை மைத்ரேயி. நீ இன்றைக்குக் கோபப்பட்டது எந்தளவு சரியோ, அதே அளவு நான் அன்றைக்கு வருத்தப் பட்டதும் சரின்னு சொல்லத்தான். மனுஷங்க இருக்க

இடத்திற்கு தகுந்தபடி மாறினாலும், அவங்களோட அடிப்படை உணர்வும் மாறுவது இல்லை டா'' என்றான்.

சமாதானமெல்லாம் முடிந்தப் பிறகு அவன் தோளில் சாய்ந்திருந்த மைத்ரேயி, ''சப்ஜெக்டை மாற்றி நீங்க தப்பிச்சுடலாம் என்று நினைக்காதீங்க. ஷூட்டிங்கில் நடந்ததுக்கு உங்களுக்கு மொத்து காத்திட்டு இருக்கு'' என அவன் நெஞ்சிலேயே ஒரு அடி வைக்க,

சுதர்சன், ''ஸ்ஸ்... ஆ! ராட்சஸி! காரியத்திலேயே கண்ணா இரு! தன்னுடைய கணவனிடம் வேற ஒருத்தி உரிமை எடுத்துக்கிட்டால் ஒரு மனைவி எப்படி ரியாக்ட் செய்வாள் என்று உன்னை வைச்சு டெஸ்ட் செய்திருக்காள். அடுத்த படமாம். எனக்கும் அதற்கும் சம்பந்தமே இல்லை. ஆளை விடு தாயே!'' என்றான்.

''அச்சோ! இப்படி ஷேம் ஷேமா போச்சே?''

''இதெல்லாம் புதுசா மைத்தி? விடு விடு...'' என்று சமாதானப்படுத்தும் சாக்கில் விளையாடினான்.

அவன் விளையாட்டில் பங்கேற்றவள் திடீரென நினைவு வந்தவளாய், ''அப்போ அவள் உங்க கையைப் பிடிச்சிருந்தது?'' என்றாள்.

''அது அவளோட ஹீல்ஸ் ஸ்லிப் ஆகி அவள் கீழே விழப் போக, பக்கத்திலிருந்த என்கையைப் பிடிச்சுக்கிட்டாள்.''

''ஓ!''

''ஆமா! ஓ தான்! இப்போ ஏதோ மொத்து இருக்குன்னு சொன்னியே? அதை அப்படியே உன் கையாலே கொடுக்காமல், எங்கே.. உன் செப்பு வாயால் கொடு பார்ப்போம். ஏற்கனவே நீ கையால் அடிச்ச இடமெல்லாம் வலிக்குது'' என சண்டை, சமாதானம் எல்லாம் முடிந்து அவளுடன் சரசத்தில் இறங்கினான்.





# 13

கணவனுக்கும், தனக்குமிடையில் விவாதப் பொருளாய் அமைந்திருந்த வினீத்தின் நட்பு சற்று தெளிவு பெற்றதாக உணர்ந்தாள் மைத்ரேயி.

அதுவே அவளை வினீத்தின் திருமணத்தன்று நீரஜாவின் மனநிலை எப்படி இருந்திருக்குமோ என்று எண்ண வைத்தது. கடைசி முறை வினீத்துடனான உரையாடல் தாமரை இலை தண்ணீர் போல பட்டும் படாமல் இருந்ததன் உண்மையும் விளங்கிற்று.

சிறு வயதிலிருந்து வினீத்தும், இவளும் நட்பு பாராட்டினாலும் அந்த நட்பு, இருவரின் திருமண பந்தத்திற்கும் பிறகும் சுமூகமாய் தொடர, இவர்களின் வாழ்க்கைத் துணைகளின் பங்களிப்பும், மனநிலையும் முக்கியமானது; தேவையானதும் கூட!

அதே சமயம் இவர்களது நிலையைத் தங்களின் துணைக்குத் தெளிவாக விளங்க வைக்க வேண்டிய பொறுப்பும் இருவருக்குமே இருக்கிறது என்பதனையும் உணர்ந்தாள்.

தன் நண்பனிடம் பேசி வெகுநாட்கள் ஆனது போலிருக்க வினீத்தின் வீட்டுத் தொலைபேசிக்கு அழைத்தாள்.

மறுமுனையில் வினீத்தின் குரலைக் கேட்டவள், ''ஹாய் வினீத்! நான் மைத்ரேயி பேசறேன். எப்படி இருக்கே? நீரஜாகிட்டே பேச முடியுமா?'' என்றாள் எடுத்த எடுப்பிலேயே.

தோழியின் குரலைக் கேட்டதும் மகிழ்ச்சி அடைந்தவன், அவளது பேச்சில் கடைசி முறை மாதிரியே இம்முறையும் தவிர்க்கப்பட்டிருந்த 'டா' அடைமொழியைக் கவனிக்கவில்லை.

''நான் நல்லாயிருக்கேன்டி. நீ எப்படி இருக்கே? சுதர்சன் எப்படி இருக்கார்?''

நண்பனின் 'டி' குறிப்பு இப்பொழுது மைத்ரேயிக்கே உறுத்தினாலும், பேச வந்த விஷயத்தை மறக்காமல் இதைப் பற்றி பிறகு வினீத்திடம் பேசலாமென நினைத்து, ''விசாரிப்பெல்லாம் அப்புறமிருக்கட்டும். இப்ப நான் நீரஜா கிட்டே பேசணும் வினீத்'' என்று நச்சரித்தாள்.

''ஏன்?''

''ஏன் - எதுக்கு - எப்படி எல்லாம் கேட்டு விசாரிச்சப் பிறகு தான் போனை கொடுப்பியா? ரொம்ப மாறிட்டே வினீத் நீ. திஸ் இஸ் டூ மச்'' என்று அலுத்தவளிடம்,

''மாறிட்டேன்னு நீ சொல்றே. என்னை மாற்றவே முடியாதுன்னு நீரு சண்டைப் போடறாள். அவள் இங்கே இருந்தால் தானே கொடுக்கிறது மைத்தி?'' என்றான் வினீத் வருத்தம் தோய்ந்த குரலில்.

நண்பன் கொடுத்த தகவல் மைத்ரேயியை அதிர்ச்சிக்குள்ளாக்க, ''ஹேய்! என்ன சொல்றே நீ? கல்யாணம் ஆகி இன்னமும் நாலு மாசம் கூட ஆகலையே? அதுக்குள்ள...?'' என வார்த்தைகளைத் தேடித் தோற்றாள் அவள்.

''....''

''ஹேய்! ஏன் எதுவும் பேச மாட்டேங்கறே?'' என்றவளுக்கு என்ன தோன்றியதோ, ''என்னால் எதுவும் பிரச்சனையா?'' என மெதுவாக வினவினாள்.

''உன்னாலா?'' என்றவன் அவசரமாக, ''சுதர்சன் எதுவும் சொன்னாரா?'' என்றான்.



மைத்ரேயிக்கு வினீத்தின் கேள்வி விஷயத்தை ஓரளவு கோடிட்டுக் காட்ட, ''அன்றைக்கும் இதையே தான் கேட்டே. இன்றைக்கும் இப்படி தான் கேட்கிறே? என்ன விஷயம்? சுதர்சன் என்கிட்டே என்ன சொல்லணும்?'' என்று தோண்டித் துருவினாள்.

அவளின் நச்சரிப்பில் வினீத்தின் தயக்கம் தோற்க, ''உன்கிட்டே சொல்றதுக்கு என்ன மைத்ரேயி? எல்லாமே தலைகீழா இவள் இஷ்டத்துக்கு மாத்தணும்னு நினைச்சால் என்ன செய்ய முடியும்? கல்யாணம் செய்துட்டு வந்த ஒரு வாரத்தில் டெல்லி மாதிரி சென்னை இல்லைன்னு ஒரே அலுப்பு. இவளுக்குத் தெரிஞ்சு தானே என்னை கல்யாணம் செய்துக்கிட்டா?''

''....''

''நான் எந்த பொண்ணுகிட்டேயும் க்ளோசா பேசிடக் கூடாது. உடனே பொஸஸிவ்ன்னு சொல்ல வேண்டியது. ஆனால் அவள் யாரிடமாவது பேசினால் அது ப்ரெண்ட்ஷிப். 'ஐ நோ மை லிமிட்ஸ்' என்று சொல்வாள். எனக்கு ஒரு நியாயம் - அவளுக்கு ஒரு நியாயம்...''

''இதைக் கூட ஓரளவுக்கு பல்லைக் கடிச்சுட்டு அட்ஜஸ்ட் செய்துக்கலாம். ஆனால் ஒரு சில விஷயங்களில்... அப்பப்பா... ரொம்பக் கஷ்டம். ஒரு மணி நேரத்துக்கு ஒரு தடவையாவது போன் பண்ணுவாள். மீட்டிங்கில் இருந்தால் கூட எடுக்கணும். ஹச்சுன்னு தும்மல் வந்ததை ஞாபகம் வைச்சு அவகிட்டே விசாரிச்சால் தான் அவ மேலே அக்கறை காட்றதா அர்த்தம்.''

''......''

''இதெல்லாம் ஜஸ்ட் ஒரு சின்ன ட்ரைலர் தான். முழு படமும் ஓடினால் ஆளை விடுடா சாமி என்று ஓடிடுவே.

சாரி! என் புலம்பலை எல்லாம் உன்கிட்டே சொல்லி போர் அடிச்சுட்டு இருக்கேன் பார். டெல் மீ ஹவ் ஆர் யூ?'' என்று சமாதானக் குரலில் வினவினான்.

''இன்னமும் என்னுடைய கேள்விக்கு நீ பதில் சொல்லலை வினீத்!'' மைத்ரேயி கறாராய் கேட்க,

கல்யாண வீட்டில் நடந்த விஷயத்தைக் கூறியவன், ''அன்றைக்கு சுதர்சன் நாங்க பேசினதைக் கேட்டிருப் பாரோ என்று ஒரு சின்ன சந்தேகம் எனக்கு. அதான்...'' என சங்கோஜத்துடன் இழுத்தான்.

''எதை வைச்சு சொல்றே?''

''கிளம்பும்போது கூட என்னுடைய முகத்தையோ, நீரஜாவின் முகத்தையோ பார்க்காத மாதிரி இருந்தார். அவருடைய பாடி லாங்க்வேஜ்ஜில் கூட அதுவரை தென்படாத ஒரு விலகலைப் பார்க்க முடிஞ்சுது. அதான் கேட்டேன்.''

''ஓ...! தெரிஞ்சிருக்கலாம். ஆனால் என்னிடம் கூட இதுவரை தெரிஞ்சதா காண்பிச்சுக்கலையே தவிர, ஒருமுறை 'யாரும் எதுவும் சொல்ற மாதிரி நடந்துக்காதே'ன்னு என்கிட்டே சொன்னார். இப்போ தான் அதற்கான முழு அர்த்தமும் புரியுது.''

''நைஸ் ஜென்டில் மேன்!'' என்றவனிடம், ''கேன் ஐ ஆஸ்க் யூ சம்திங்?'' என அனுமதி வேண்டியவள்,

அவனிடமிருந்து சம்மதம் பெற்றவுடன், ''இந்தக் குறையெல்லாம் விட்டுடு. நீரஜாவை நீ இன்னமும் விரும்புகிறாயா?'' எனக் கேட்டாள்.

''இந்தக் கேள்விக்கே அவசியமில்லை. ஐ ஆல்வேஸ் லவ் ஹெர். அவள் கிளம்பி ரெண்டு நாள் ஆச்சு. எந்த வேலையுமே ஓடவேயில்லை. அப்படியே பித்து பிடிச்ச



மாதிரி இருக்கேன். இதெல்லாம் அவளுக்கு எங்கே புரியப் போகுது? புரிஞ்சிருந்தால் தான் பிரச்சனையே இல்லையே?'' என்று புலம்பலாக முடித்தான்.

''பிரச்சனை அவகிட்டே மட்டுமில்லை வினீத். உன் கிட்டேயும் தான் இருக்கு. அதை முதலில் ஏத்துக்க கத்துக்கோ. உன்னுடைய நிலையில் எத்தனை நியாயங்கள் இருக்கோ, அத்தனை நியாயங்கள் அவளுடைய நிலை யிலும் இருக்கும்ன்னு முதலில் நினை. இதையெல்லாம் என் கல்யாண வாழ்க்கையிலிருந்து நாளை கத்துக் கிட்டது. அதைத் தான் நான் உனக்கு சொல்றேன்.''

''தத்துவார்த்தமா பேசறது ரொம்பவே சுலபம் மைத்தி.''

''அப்படியில்லை வினீத். உன் நீரஜா உன்கிட்டே சென்னைப் பற்றி கம்ப்ளைன்ட் பண்ண ஒரு வாரம் எடுத்துக்கிட்டாள். ஆனால் நான் இங்கே செந்தாமரைக் குளத்தைப் பற்றி கம்ப்ளைன்ட் பண்ண ஒரே ஒரு நாள் தான் எடுத்துக்கிட்டேன், தெரியுமா? ஒவ்வொரு தடவை நீ வெளியூர் பிஸினெஸ் ட்ரிப் போயிட்டு வரும்போதும், 'சென்னைக்கு எப்படா வருவோம்'-னு ஆகிடுச்சுன்னு டயலாக் சொல்லியிருக்கே? எல்லாம் மறந்துடுச்சா?''

''அப்போ நீரு ஆசைப்படற மாதிரி அவளை டெல்லி யில் இருக்கச் சொல்லவா?''

''இது விதண்டாவாதம். நான் அப்படிச் சொல்லலை. அவளுக்குச் சென்னை பழகறதுக்கு நீ தான் ஹெல்ப் செய்யணும். எடுத்தவுடனே நீயும் கோபப்பட்டால் நஷ்டம் ரெண்டு பேருக்கும் தான் வினீத். ப்ளீஸ் அதைப் புரிஞ்சுக்கோ. நான் இந்த ஊரைப் பற்றி சொன்ன புகாரை யெல்லாம் சுதர்சன் நிவர்த்தி செய்றதா எனக்கு நம்பிக் கைக் கொடுத்தார். அதுவே பெரிய பலம் இல்லையா?

ஆனால் இப்போ எல்லாமே எனக்குப் பழகிடுச்சு. எனக்கு அந்தப் புகார் எதுவும் பெருசா தெரியலை. இவ்வளவுக் கும் முன்பிருந்த நிலையில் எந்தவித மாற்றமும் பெருசா இல்லை. எல்லாமே என் கண்ணோட்டத்தில்... மனசில் ஏற்பட்ட மாற்றங்கள் தான் வினீத். அந்த மாற்றங்கள் ஏற்பட கொஞ்சம் அவகாசம் தேவைப்படும். அதை நீ தான் புரிஞ்சுக்கணும்.''

''ம்...'' என்பதைத் தவிர வினீத் மறுப்பாக எதுவும் சொல்லவில்லை.

''அவன் டெல்லி போய் ரெண்டு நாளாச்சு. வேலையே ஓடலைன்னு என்கிட்டே சொல்றியே? நீரஜாகிட்டே இதைச் சொன்னியா? நானும், நீயும் பிரண்ட்ஸ். சின்ன வயசிலிருந்து நமக்குள் இருக்கிற நட்பை கல்யாணம் ஆன அன்றைக்கே உன் நீரஜாவோ, என் சுதர்சனோ புரிஞ்சுக்கணும்ன்னு நாம நினைக்க முடியாதே வினீத்?''

''....''

''நீரஜா தான் உனக்கு பிரதானம்ன்னு அவளுக்கு நீ உணர்த்து. அதற்கான நம்பிக்கையை அவளுக்குக் கொடு. அதுக்கப்புறம் உன்னிடமுள்ள குறைகளெல்லாம் எதுவுமே உன் மனைவிக்குத் தெரியாது.''

''ம். எனக்குப் புரியுது மைத்தி. அவள் கேட்கும் போது கோபப்படறேன்... குறைப்பட்டுக்கிறேன். இனிமேல் அந்த மாதிரி இல்லாமல் இருக்கக் கட்டாயம் ட்ரை பண்றேன். தேங்க்ஸ்டி...'' என்று விட்டு,

''ஓ! ஐ அம் சாரி. உன்னை 'டி' போட்டால் நீருவுக்குப் பிடிக்காது. சோ தேங்க்ஸ் மட்டும்தான்...'' என்று புன்னகைத்தான்.

''அது இப்போ தான் உனக்கு ஞாபகம் வருதாக்கும்?'' என்றவள், ''இப்படிக் கூப்பிடறது சுதர்சனுக்குமே பிடிக்காது'' என்று தெரிவித்தாள்.



''ஒரு தடவை சொன்னவுடனே நீ விட்டுட்டே! ஆனால் எனக்குத்தான் பழக்கதோஷம் விடறதுக்குக் கொஞ்சம் டைம் எடுக்குது. என்ன பண்றது?''

''அதனால் தான் உன்னை மாற்றவே முடியாதுன்னு நீரஜா புலம்பினா போல?!'' என்று நீண்ட பெருமூச்சு மைத்ரேயி சொல்வதைக் கேட்டு சிரித்தான் வினீத்.

''அம்மா! தாயே! தெய்வமே! இனிமேல் சர்வ ஜாக்கிரதையா நடந்துக்கிறேன்.''

நண்பனோடு இணைந்து சிரித்தவள், ''அப்படிப் போடு வினீத்! ஏஸ் சிம்பிள் ஏஸ் தட்'' என்று ஒத்துப் பேசினாள்.

''ஹே! நீ ஏன் எடுத்தவுடனே நீரஜாகிட்டே பேசணும்னு சொன்னே?''

''நத்திங் ஸ்பெஷல்! சும்மா ரெண்டு வார்த்தை உன்னைப் பற்றி நல்ல விதமா பேசலாம்னு தான்.''

''என்னைப் பற்றி... நல்ல விதமா... நீ...?'' வினீத் ஒவ்வொரு வார்த்தைக்கும் இடையில் இடைவெளி விட்டு ஏற்ற இறக்கத்துடன் வினவ,

''என்னையே கிண்டல் பண்றியா? இரு இரு... அந்த 'ஜில் ஜில் சிகாமணி' பற்றி போட்டுக் கொடுக்கிறேன்...'' என மைத்ரேயி நண்பனின் பழைய வண்டவாளத்தில் ஏதோ 'ஒன்றை' குறிப்பிட்டு மிரட்டினாள்.

''அச்சச்சோ... மைத்ரேயி... ப்ளீஸ்... ப்ளீஸ்... நீ என் பிரண்ட் - வெல் விஷர் - குருஜி - தெய்வம்! அந்த ஜில் - ஜில் மேட்டர் மட்டும் நோ - நோ ப்ளீஸ்'' என்று கெஞ்சினான்.

''முடியாது!'' என்று மைத்ரேயி பிகு செய்ய வினீத், ''பிசாசு! குட்டி பிசாசு! சொன்னால் கேளேன்'' என்று

விட்டு. "உனக்கு அடுத்த தடவை ட்ரீட் தரேன் மைத்தி" என பேரம் பேசினான்.

"லஞ்சம் கொடுக்கிறியா? அதெல்லாம் முடியாது."

"முடியாதா? அப்போ சொல்லிக்கோ. சாட்சிக்காரன் காலில் விழறதுக்கு சண்டைக்காரன் காலில் விழலாம்!" என்ற தத்துவத்தோடு 'பஞ்ச்' வைத்தான்.

"காலில் விழும்போது மீசையில் மண் ஒட்டாமல் பார்த்துக்கோ."

"சரி சரி! உன் அப்பாவி புருஷன்... சுதர்சன் எங்கே?"

"ம். இப்போ மட்டும் அவர் அப்பாவியா தெரிவாரே உனக்கு? இன்னைக்கு நாங்க தஞ்சாவூர் கோவிலுக்குப் போயிட்டு வரலாம்னு இருக்கோம். அதனாலே வயலிலும், மில்லிலும் மேற்பார்வைக்கு சிலர்கிட்டே சொல்லிட்டு வர்றதா வெளியில் போயிருக்கார். வந்ததும் சொல்றேன்."

"ஓ! என்ஜாய் யுவர் டே!" என்ற வாழ்த்தோடு பேச்சை முடித்தான் வினீத்.

## 14

சுதர்சன் - மைத்ரேயி இருவரும் காலை உணவை முடித்துக் கொண்டு தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்றழைக்கப்படும் தஞ்சையைச் சுற்றிப் பார்க்க கிளம்பினர்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலான பழமை வாய்ந்த நகரமாய் கருதப்படும் இந்தத் தஞ்சாவூர், ஒரு காலத்தில் சோழர்களின் தலைநகரமாய் விளங்கியது.



சிவகங்கை பூங்கா, தஞ்சை அரண்மனை, உலகப் புகழ்பெற்ற சரஸ்வதி மகால் நூலகம் மற்றும் பெரிய கோவில் என்றழைக்கக் கூடிய பிரகதீஸ்வரர் கோவில் ஆகிய வரலாற்று சிறப்புமிக்க முக்கிய அம்சங்களைத் தன்னுள் அடக்கிய வளமையான நகரம்.

பிரகதீஸ்வரர் கோவில் நுழைவு வாயில் அருகே நின்றிருந்த மைத்ரேயி, "எனக்கு தஞ்சாவூர் கோவில் என்றாலே பிரம்மாண்டம் என்ற வார்த்தை தான் தோணும் அத்தான். அதுக்கு தகுந்த மாதிரி பெரிய கோவில்னு கூட பேர் வைச்சிருக்காங்க போல. முதல் தடவை அப்பா கூட வந்த போது இவ்வளவு பெரிய மதில் சுவரையும், மதிலை சுற்றி இருந்த அகழியையும் பார்த்து மலைச்சிருக்கேன். இப்போ கூட அந்த அகழியைப் பார்க்கும் போது வயிற்றில் புளியைக் கரைக்குது" என்றாள்.

"இராஜ ராஜ சோழன் இந்தக் கோவிலை கட்டணும்னு ஆசைப்பட்டதற்கான முக்கிய காரணமே தமிழர்களின் கட்டடக் கலையை இந்த உலகுக்கு பிரம்மாண்டமா பறைசாற்றணும்னு தான்" தனது கேமராவைக் கொண்டு புகைப்படங்கள் எடுத்தபடியே சுதர்சன் கூற,

மைத்ரேயி, "ம். நான் இங்கே வந்து பத்து வருஷத்துக்கு மேலேயே இருக்கும்னு நினைக்கிறேன். ஸ்கூல் படிக்கும்போது சம்மர் லீவில் ஒருமுறை கூப்பிட்டு வந்திருக்காங்க. அப்போ எப்படிப் பார்த்தேனோ... இப்பவும் இந்தக் கோயில் அப்படியே இருக்கிற மாதிரி தான் இருக்கு அத்தான்" என வானளாவிய விமானத்தை அண்ணாந்து பார்த்து வியந்தபடியே சொன்னாள்.

"ம். ஆயிரம் வருஷத்துக்கு முன்னாடி இதைச் சோழன் கட்டி முடிச்ச போது கூட இந்த விமானமும், கோவிலும் இப்படியேதான் இருந்திருக்கும் மைத்தி."

''ம்க்கும்! உங்களுக்குத் தெரியுமாக்கும்? ஏதோ சின்னப்பிள்ளை கூட வருது... அப்படியே இலவசமா இரண்டாவது தடவை காது குத்திடுவோம்னு சொல் நீங்களா?'' கேலியாக வினவினாள்.

ஒருமுறை அவளது கேலி புரியாமல் விழித்தவன் நீண்ட பெருமூச்சுடன், ''யாரும்மா அது சின்னப் பிள்ளை... என் கூட வர்றது?'' என்று சுற்றும் முற்றும் பார்த்தான்.

''வாயில் விரல் வைச்சால் கடிக்கக் கூட தெரியாத பச்சைப் பிள்ள... சின்னப்பிள்ள எல்லா பிள்ளையும் சாட்சாத் நானே தான்!'' என மைத்ரேயி தம்பட்டம் பேச,

''விரல் ருசியா இல்லைன்னு போனா போகுதுன்னு விட்டுடுவியா இருக்கும்'' என்றபடி அவளை நோக்கி கண் சிமிட்ட, அவனைப் பார்த்து முறைக்க முயன்றுத் தோற்றாள் மைத்ரேயி.

ஏதோ பேச முயன்றவளைக் குறுக்கிட்டு, ''சரி சரி, இந்தச் சின்னப் பிள்ளை சோதனையை அப்புறம் நம்ம ஊரில் தனியா வைச்சுக்கலாம்'' என்றவன், ''நான் சொல் றதையெல்லாம் நீ நம்பினாலும், நம்பாவிட்டாலும் முழுக்க முழுக்க இது உண்மைதான்'' என வாக்கு மூலம் தந்தான்.

''அதெப்படி?''

''இந்த விமானத்தைக் கட்டப் பயன்படுத்தியிருக் கிறது முழுக்க முழுக்க கிரானைட். அதுவும் ஒரே மாதிரி யான வகையைச் சேர்ந்தது. ஒரு சின்ன இணைப்பு (Joint) கூட இல்லாமல் முழுக்க முழுக்க எண்பது டன் எடையுள்ள கல்லால் இதை எழுப்பியிருக்காங்க'' சுதர் சனின் குரலில் சோழனின் சாதனையை எடுத்துரைக்கும் பெருமை இருந்தது.



கிட்டத்தட்ட இருநூறு அடிவரை உயர்ந்திருக்கும் விமானத்தைக் கண் குளிர கண்ட மைத்ரேயியால் இன்னமும் சுதர்சன் சொல்லிய விஷயத்தைக் கிரகித்துக் கொள்ள முடியவில்லை.

''ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால் என்றால்? அப்போ இந்த அளவுக்கு டெக்னாலஜி கூட வளர்ந்திருக் காதே? எண்பது டன் எடையுள்ள கல்லை எப்படி...? நம்பவே முடியலை...''

''ஆனால் நம்பித்தானே ஆகணும். வேற வழி யில்லை'' என்று முறுவலித்தான்.

''இந்த கோபுரத்தில் பரத முனி குறிப்பிட்ட நூத்தி யெட்டு நாட்டிய முத்திரைகளை சிவபெருமானே ஆடி காண்பிப்பது போல செதுக்க நினைச்சாங்களாம். ஆனால் எண்பத்தியொண்ணு தான் இருக்குன்னு அம்மா சொல்லிக் கேள்விப்பட்டிருக்கேன்.''

''முதலில் கோபுரத்துக்கும், விமானத்துக்கும் இருக்கிற வித்தியாசத்தைப் புரிஞ்சுக்கணும் மைத்தி. பிரமிட் மாதிரி இருக்கிறதாலே இதுக்குப் பேரு விமானம். எகிப்தியர்களி டையே கட்டட கலையில்தான் பிரமிட் மாதிரி கட்டு வாங்க. ஆர்கிடெக்சர் என்பதை நீ தொடக்கக் காலத்தி லிருந்து கவனிச்சுப் பார்த்தால் புதுமை என்பது தொன் மையான விஷயங்களைத் தழுவிய மாதிரி தான் கொண்டு வருவாங்க.''

மைத்ரேயி தன் கணவனின் பேச்சை மும்முரமாகக் கவனித்தாள்.

''டைம் கிடைக்கும் போது நம்ம வீட்டில் 'இந்தியன் ஆர்கிடெக்சர்' அப்படின்னு ஒரு புக் இருக்கும். அதைப் படிச்சுப் பாரு. நிறைய தகவல்கள் கிடைக்கும். கஜு ராஹோ கோவில் அமைப்பும், இதோ இங்கே இருக்கிற

பெரிய கோவில் விமான அமைப்பும் நிறைய ஒத்துப் போகும். ஆனாலும் ரெண்டையும் யாரும் ரெப்லிகா-ன்னு சொல்ல மாட்டாங்க.''

''இதுவும் மற்றதைப் போல தான் ஆனாலும் தனித் தன்மை வாய்ந்தது (It is absolutely unique just like every-thing else) என்று சொல்ற மாதிரி...''

''ம்... அப்படிக் கூட சொல்லலாம். கட்டிடம் என்பது வெறும் கல்லும், மண்ணும் சம்பந்தப்பட்டதில்லை மைத்தி. அது ஒரு ரெப்ரசண்டேஷன். அழகியல், நடைமுறை வாழ்க்கை, மனிதர்கள், மரம், செடி, கொடி என்று எல்லா அம்சங்களையும் குறிக்கிற குறியீடு. அப்படித் தான் ஒவ்வொரு கால கட்டத்திலும் இருந்திட்டு வந்திருக்கு.''

''கிரேக்க, ரோமானிய கட்டட கலையில் ஒவ்வொரு விஷயத்திலும் அவர்களுடைய பாரம்பரியமும், தொன்மையும் கலந்திருக்கும். நம்ம நாட்டிலேயே மொகலாயர்களுடைய கட்டடக் கலைகளுக்கு உதாரணமா தாஜ்மகாலையும், குதுப்மினாரையும் பெருமையா சொல்லலாம். ஆனால் இப்போ வர்ற மாடர்ன் ஆர்கிடெக்ட் எல்லாம் தொன்மைக்கும், புதுமைக்கும் பலம் அமைக்காமல் உயரமான கட்டடங்களை மட்டும் எழுப்பறது வருத்தம் தரக்கூடிய விஷயம் தான் மைத்தி'' அதுவரையில் உற்சாகமாக ஒலித்த குரல் இப்பொழுது சுருதி குறைந்து ஒலித்தது.

''நம்முடைய விஷயங்களை நாம் பெருமையா உணரணும். அப்போ தான் அதைப்பற்றிய நுணுக்கங்களையும், விஷயங்களையும் கத்துக்க ஆர்வம் காண்பிப்போம் அத்தான். இது வரையில் பெரிய கோயில் என்றால் வழிபாட்டுத் தலமா மட்டும் தான் நினைச்சேன்.



என்ன பண்றது? இத்தனை விஷயங்களையும் எடுத்துச் சொல்ல, என் பக்கத்தில் நீங்க இல்லையே?''

''எடுத்துச் சொன்னால் மட்டும் என்ன? காதில் பூ வைக்காதீங்க... காது குத்தாதீங்கன்னு வியாக்யானம் பேசப் போறே. அப்படித்தானே?''

''அச்சோ, என்னோட தப்புத்தான். மன்னிச்சிடுங்க வாத்யாரே!'' மைத்ரேயி அவனுக்கு ஸ்டைலாக ஒரு சல்யூட் வைக்க.

''பரவாயில்லையே?! சின்னப் பிள்ளை... பச்சைப் பிள்ளை... மன்னிப்பெல்லாம் கேட்கத் தெரியுது'' என பதிலுக்கு அவளைச் சீண்டினான்.

கணவனைப் பார்த்து செல்லமாய் அழகுக் காட்டியவள், சிற்ப வேலைப்பாடுகளை தன் கையிலிருந்த கேமரா மூலம் 'ஜூம்' (Zoom) செய்து ரசித்தவாறு, ''இந்தக் கோவில் கட்டி ஆயிரம் வருஷம் என்றால் கிட்டத்தட்ட பதினோராம் நூற்றாண்டில் கட்டி முடிச்சுருக்காங்க. இல்லையா?'' என்று வியந்தாள்.

''ம். ஆமாம். ஆனால் அந்தக் காலத்திலேயே மழை நீர் சேமிப்போட முக்கியத்துவம் உணர்ந்து அதை நடைமுறைப்படுத்தியிருக்காங்க. அரசியல் நிர்வாகம், செல்வ வளத்தை கையாளும் விவரங்கள் எல்லாம் அடிப்படையிலிருந்து கத்துக்க இங்கிருக்கிற கல்வெட்டுகளில் இருக்கிற செய்திகளே போதும்.''

''தமிழன்னு சொல்லிக்க பெருமைப்பட வேண்டிய விஷயங்கள் உண்மையிலேயே இங்கே நிறைய இருக்கு. எனக்கு சேர, சோழ, பாண்டியர்கள் மூவேந்தர்கள் ஆட்சி செய்தாங்கன்னு வரையில் தான் தெரியும்'' என்ற அவளது ஆசையையும், நிதர்சனத்தையும் கணவனிடத்தில் சொன்னாள்.

''ம். தமிழன்னு சொல்லிட்டு இங்கிலீஷ்-ல் பேசறதைத் தான் பெருமையா நினைக்கிறேம். நமக்குண்டான சாபம் அப்படி...''

சுதர்சன் அலுப்புடன் சொன்னது மைத்ரேயிக்கு நன்றாகவே உரைத்தது.

தமிழ் தெரிந்த தோழியுடன் கூட ஆங்கிலத்தில் பேசுவது வலுக்கட்டாயமாகவா அல்லது இயல்பாகவா என்று தெரியவில்லை. ஆனால் தன் திருமணத்தின் போது இவளது தோழிகள் ஆங்கிலத்தில் ஏதாவது உரையாடினால் கூட சுதர்சன் கூடுமான வரையில் தமிழிலேயே உரையாடியது இப்பொழுது நினைவில் வந்தது.

சிந்தனையிலிருந்து மீண்டவள், ''நீங்க என்ன மேஜர் எடுத்தீங்க அத்தான்?'' எனத் தயங்கித் தயங்கி வினவ, அவளை ஆழ்ந்து நோக்கியவன், ''உனக்கு நிஜமாகவே தெரியாதா மைத்தி?'' என்று எதிர்கேள்வி கேட்டான்.

'தெரியாது' என்பதைச் சொல்ல சங்கடப்பட்டு நின்றவளைப் பார்த்து வருத்த புன்னகையொன்றை உதிர்த்தவன்,

''விவசாயம் பார்க்கிறவன் என்ன பெருசா படிச்சிருக்கப் போறான்னு கேட்டுக்கலையா? தேவையில்லைன்னு நினைச்சியா? இல்லை அலட்சியமா? அதுகூடத் தெரியாமலா மைத்ரேயி என்னைக் கல்யாணம் செய்துக்கிட்டே?'' ஆதங்கமும், ஆர்வமும் சரிபாதியாக வெளிப்பட்டது அவன் குரலில்.

''இல்லை அத்தான்... அப்படியில்லை. கேட்கணும்னு தோணலை.''

''இப்போ மட்டும் ஏன் திடீர்னு கேட்கணும்னு தோணுது?''

கணவனின் முகம் வாடுவதைக் கண்டு, ''ஐ அம் சாரி சுதா'' என்றாள் கம்மிய குரலில்.



''பரவாயில்லை... விடு! இப்போவாவது கேட்பதற்கான சந்தர்ப்பம் வந்ததே? அதுவே சந்தோஷம்தான். நான் பி.ஏ. ஆங்கில இலக்கியம் படிச்சேன். தாய்மொழி மேலே ஆர்வம் இருந்தால் எல்லா மொழி மேலேயும் ஒரு ஈர்ப்பு வரும் என்பது என் விஷயத்தில் நூறு சதவீதம் உண்மை. விவசாயம் அனுபவப்பாடம் தான்'' என்ற விவரங்கள் தந்தான்.

ஒரு மனிதனின் வேலை, தொழில், வாழும் இடம், புறத்தோற்றம், மொழி, படிப்பு போன்ற காரணிகளின் அடிப்படையில் 'இப்படித்தான்' என்று அனுமானம் செய்யும் பழக்கம் அவளுக்கு வடிகட்டிய முட்டாள்தனமாய் பட்டது. வாழ்க்கை எனும் அனுபவக் கல்வியில் மிக முக்கியமானதொரு பாடத்தை அன்று கற்றாள்.

மூலவரை வணங்கி வெளியே வந்தவர்களுக்கு மனதில் நிறைவும், கண்களின் பிரமிப்பும் நீண்ட நேரம் அகலாமலேயே இருந்தன.

பிரகாரத்து நிழலில் அமர்ந்த சுதர்சன், ''அவ்வளவு பெரிய லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்ய மிகவும் சிரமப்பட்டார்களாம் மைத்தி. எல்லா சிவனடியார்களும் முயற்சி செய்து கூட கஷ்டமாய் இருந்ததாம். அப்போ சோழனிடம் ஒரு அசரீரி குரல் கருவூரார் எனும் சிவனடியார் வந்தால்தான் உன்னால் பிரதிஷ்டை செய்ய முடியும்னு ஒலித்ததாம். கருவூராரை எங்கே தேடுவதுன்னு தெரியாமல் இந்தச் செய்தியை முரசு தட்ட, அடுத்த பத்தாவது நிமிடத்தில் கருவூரார் வந்திருக்கிறார். அவரும் ஒரு கையால் தைலம் பூசியதும் எளிதாக லிங்கத்தை வைச்சுட்டாங்களாம். அதனால் தான் இங்கே, கோவிலில் கருவூராருக்கு தனியா சன்னதி வைச்சிருக்காங்க'' என்று தனக்குத் தெரிந்த விவரங்களை அவளிடம் பகிர்ந்தான்.

''ம். எங்க வீட்டு பக்கத்தில் ஒருத்தர் அவருடைய பையனுக்கு பொன்னியின் செல்வன் படிச்சுட்டு 'இராஜ ராஜ சோழன்' அப்படின்னு பேர் வைச்சார். அவ்வளவு அபிமானமான்னு கூட நினைச்சிருக்கேன். நீங்க இத்தனை விவரங்கள் இந்தக் கோவில் பற்றி சொல்லும் போது அவர் உண்மையிலேயே உயர்ந்தவராகத்தான் தெரிகிறார் அத்தான்.''

''சரி! அடுத்து எங்கே போகலாம்?''

''தஞ்சாவூர் ஓவியங்கள் கிடைக்கிற இடத்துக்கு அழைச்சுட்டுப் போறீங்களா? நம்ம வீட்டுக்கு ரெண்டு பெயிண்டிங்க்ஸ் வாங்கணும். அப்புறம் அக்கா, அம்மா, வினீத் எல்லாருக்கும் தலையாட்டிப் பொம்மை வாங்கணும்'' என்று மைத்ரேயி பட்டியலிட்ட, அவ்விருப்பங்களை நிறைவேற்றிய பின் இருவரும் வீட்டிற்குத் திரும்பினார்கள்.



## 15

தஞ்சையையும் தஞ்சை பெரிய கோவிலையும் கணவனுடன் சென்று சுற்றிப் பார்த்துவிட்டு வந்த மைத்ரேயி, வந்ததும் வராததுமாக வரலக்ஷ்மியிடம் தாங்கள் வாங்கி வந்த புகழ் பெற்ற தஞ்சாவூர் ஓவியத்தைக் காண்பித்தாள்.

''இந்தக் கிருஷ்ணர் ஓவியம் எவ்வளவு தத்ரூபமா இருக்கு இல்ல அத்தை? சும்மாவா இது உலகப் புகழ்



பெற்றிருக்கு?'' என்றாள் இன்னமும் அந்த ஓவியங்களின் பிரமிப்பு மாறாத குரலில்.

''இந்த விநாயகர் படமும் ரொம்ப நல்லா இருக்கு மைத்ரேயி. ஹ்ம்ம்... இத்தனை வருஷமா தஞ்சாவூரில் இருக்கோம்ன்னு தான் பெயர். நீ வந்து தான் இதை வாங்கி நம்ம வீட்டில் மாட்டணும்ன்னு இருந்திருக்கு. எங்க யாருக்காவது இதை வாங்கணும்ன்னு தோன்றியிருக்கா?'' சுதர்சன் சரியான இடம் பார்த்து ஓவியத்தைச் சுவற்றில் மாட்டுவதைச் சரிப்பார்த்தவாறே சொன்னார் வரலக்ஷ்மி.

''எதுவுமே தன்னிடம் இருக்க வரைக்கும் அதனோட மதிப்பும் மரியாதையும் தெரியாது அத்தை. யாராவது வந்து எடுத்துச் சொல்லணும். வெளியிலிருந்துப் பார்க்கிறவங்களுக்குத் தான் அதோட அருமையும் பெருமையும் புரியும். இது ஒரு நபர், இடம், பொருள் எல்லாத்துக்குமே பொருந்தும். இல்லையா அத்தை?''

''ரொம்ப சரிங்க பாட்டி. செவிக்கு உணவு கொடுத்துட்டே. இப்ப வயிற்றுக்கும் கொஞ்சம் கொடு. ரொம்ப பசிக்குது'' என்று மனைவியைக் கேலி செய்தவன் படத்தை மாட்டிவிட்டு கை கழுவச் சென்றான்.

முகம் கழுவிட்டு வந்தவனின் முகம் ஆயிரம் வோல்ட்ஸ் பல்ப் போன்று பிரகாசித்தது.

என்னவென்று பார்த்தவர்களிடம், ''அம்மா! வெளியிலிருந்து பார்க்கிறவங்களுக்குத் தான் ஒரு இடத்திலிருக்கவங்களோட அருமை பெருமை எல்லாம் தெரியும்னு சொன்னாளே உங்க மருமகள்...? இப்போ அவளோட பெருமையை ஊருக்கெல்லாம் எடுத்துச் சொல்ல ஆள் வர்றாங்க!'' என்றான் முகத்தில் பெருமையும் சந்தோஷமும் போட்டி போட.

மருமகளிடத்தில் புரியாதப் பார்வையைச் செலுத்திய வரலக்ஷ்மி, ''என்ன தம்பி சொல்றே? கொஞ்சம் புரியும் படி சொல்லுப்பா. யாரைப் பார்க்க, யாரு வர்றாங்க?'' என வினவினார்.

''மகளிர் வார இதழிலிருந்து 'வளர்ந்து வரும் இளம் பெண் தொழில் அதிபர்கள்' என்ற கட்டுரைக்கு நம்ம மாவட்டத்திலிருந்து நாலைந்துப் பேரை இன்டர்வியூ எடுக்கிறாங்களாம். அதில் உங்க மருமகளைப் பேட்டிக் காணவும் நாளை மறுநாள் வரப் போறாங்களாம்'' என்று சந்தோஷித்தவன்,

மைத்ரேயியிடம் திரும்பி, ''கங்க்ராட்ஸ் மைத்தி! கையைக் கொடுங்க மேடம்! பெரிய ஆளாயிட்டீங்க. எங்களையும் கொஞ்சம் ஞாபகம் வைச்சுக்கோங்க மேடம்'' என்று கேலியாகக் கூறி நம்ப முடியாத முகப் பாவத்தோடு இருந்தவளைத் தோளோடு அணைத்துத் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டான்.

''ரொம்ப சந்தோஷமாவும் கர்வமாவும் இருக்குடா! ரொம்ப்ப்ப ரொம்ப்ப்ப சந்தோஷம்!'' என்றவன், லோக நாதனுக்கும், சென்னைக்கும் இந்தச் சந்தோஷகரமான விஷயத்தைப் பகிர்ந்து, தன்னுடைய மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கினான்.

* * *

எல்லோரும் எதிர்பார்த்த தினமும் வர, மகளிர் வார இதழிலிருந்து பேட்டி மற்றும் புகைப்படம் எடுப்பவர் களும் வந்து சேர, சம்பிரதாயங்கள் எல்லாம் முடிந்து பேட்டியும் தொடங்கியது.

தங்கள் வீட்டுத் தோட்டத்தின் பின்னணியில், அடர் நீல நிற உடலில் இளம் பச்சை நிறப் பூக்கள் போட்ட பருத்தி சேலையிலும், எளிமையான ஒப்பனையிலும்



கம்பீரமாக வீற்றிருந்த மைத்ரேயியிடம், ''வணக்கம் மேடம்! 'வளர்ந்து வரும் இளம் பெண் தொழில் அதிபர் கள்' என்ற பகுதிக்கு உங்களைப் பேட்டி எடுக்கிறதில் ரொம்ப சந்தோஷம்'' என்று தன் வாழ்த்துக்களைத் தெரி வித்த நிருபர் கபிலன் பேட்டிக்கான தன் கேள்விகளைத் தொடங்கினார்.

''உங்களுக்கு இந்தத் தொழிலை ஆரம்பிக்கணும்னு தோன்ற மூலக் காரணம் என்னன்னு முதலில் சொல்ல முடியுமா?''

''இதில் கட்டாயமா என் கணவருக்குத்தான் முக்கியப் பங்கு இருக்கு. விவசாயமும், அதைச் சார்ந்த தொழில் களும் வளரணும்னு விரும்பறவர் அவர். அப்படி அவர் ஊக்குவித்ததிலும், வழிகாட்டுதலிலும் தொடங்கியது தான் இந்தத் தொழிற்சாலை. இதற்கு மட்டுமில்லை, என்னுடைய எல்லா முயற்சிகளுக்கும், அந்த முயற்சிகள் வெற்றியா மாறுவதற்கும் அவருடைய பங்களிப்பு அதிகம்.''

''பெண்கள் ஏதாவது துறையில் வெற்றிகரமா சாதிக் கணும் என்றால் குடும்பத்தினரின் ஒத்துழைப்பும், முக் கியமா கணவனுடைய ஒத்துழைப்பு தேவைப்படுதுன்னு நினைக்கறீங்களா?''

கேள்வியை முழுவதுமாக உள்வாங்கியவள் புன்னகை யுடனே, ''இந்தக் கேள்வியை நீங்கள் பெண்களுக்கு மட்டும் பொருத்த முடியாதே?'' என்று கேட்டுவிட்டு,

''ஆணோ, பெண்ணோ - தனிப்பட்ட யாருடைய வெற்றிக்கும் அவர்களின் குடும்பம், சமூகம், நட்பு, வட் டாரம், இப்படி ஒவ்வொருவருடைய உற்சாகமும், ஒத் துழைப்பும் அவசியப்படுதுன்னு நினைக்கிறேன்'' என்றாள்.

''ஹோம் சயின்ஸ் பட்டதாரியான உங்களுக்கு எப்படி விவசாயத்தைச் சார்ந்த சூழலிலும், தொழிலிலும் ஆர்வம் வந்தது?''

''கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு முன் விவசாயத்தைப் பற்றிய அடிப்படை எதுவுமே தெரியாமல் பட்டணத்திலிருந்து இந்தக் கிராமத்துக்கு வந்தவள் நான். கிராமம், அதன் சுற்றுப்புறம், வாழ்க்கை முறை, மக்கள் இப்படி கொஞ்சம் கொஞ்சமா தெரிஞ்சுக்கும் போது விவசாயத்தைப் பற்றியும் கற்பித்தவர் என் கணவர்.'' என அவளருகிலிருந்த சுதர்சனின் கரத்தை அழுத்தி, அவனை அன்பும் நேசமுமாகப் பார்த்தவள் தொடர்ந்து, வாழை நார் தொழிலை ஆரம்பித்தது, அது வளர்ந்தது என்று எல்லாவற்றையும் தெளிவாக விவரித்தாள்.

''பெண்களுக்கான வளர்ச்சியை மையமா வைச்சு தொடங்கினதாலேதான் அவர்களையே பிரதானமா வைச்சு இந்தத் தொழிற்சாலையை இயக்குறீங்களா?''

''ஆமாம். உண்மைதான். வீடும் நாடும் நல்லா இருக்கணும்ன்னா, அங்கே பெண்களுக்குச் சுதந்திரம் வேண்டும். கருத்து சுதந்திரம் எப்போ வரும்? எப்போ தன் தேவைகளுக்காகப் பிறர் கையை எதிர்பார்க்கும் நிலை இல்லையோ, அப்போ தான் அவங்களோட கருத்துக்கும் சுதந்திரம் இருக்கும். அதை எங்களால முடிந்த வரை செயல்படுத்தும் சின்ன முயற்சி தான் இது.''

''கூடுதல் வரிச்சலுகை அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும், பெண்களுக்குக் குறைவான ஊதியம் தந்தால் போதும் என்பதும் இதில் அடக்கம் தானே?''

'இந்தக் கேள்வி மைத்ரேயியைக் கோபப்படுத்தாமல் இருக்க வேண்டுமே?' என்ற சுதர்சனின் எண்ணத்திற்கு எதிர்மறையாய் புன்னகைத்த மைத்ரேயி, ''இன்னொரு முறை தெளிவுப்படுத்த விரும்பறேன். லாபத்தை மட்டும் முன்னிறுத்தி, இந்தத் தொழிலை நாங்கத் தொடங்கலை. சொல்லப் போனால் லாபத்தில் வரும் குறிப்பிட்ட சதவீதத்தை அங்கே பணி புரிபவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கிறோம்'' என்று சாதாரணமாகவே பதிலளித்தாள்.



''கிராமங்களிலிருந்து நிறைய மக்கள் நகரத்தை நோக்கி இடம் பெயரும் இந்தச் சூழலில் தொடர்ந்து தொழிற்சாலையை எதிர் காலத்தில் உங்களால் வெற்றிகரமாக இயக்க முடியுமா?''

''இத்தகைய இடப்பெயர் நடப்பது ஒரு வருந்தத்தக்க விஷயம். நம்முடைய விவசாயம் இயற்கையை மட்டுமே நம்பி நடக்கிற தொழில்'' என்றவள்,

''இப்போதைய சூழ்நிலைக்கு அப்படி மட்டுமே சொல்லிட முடியாது...! பக்கத்து மாநிலத்தையும் நம்பித்தான் விவசாயமும், விவசாயிகளும் இருக்க வேண்டியதா இருக்கு!'' என்றாள் வருத்தத்துடன்.

தொடர்ந்து, ''தங்களுடைய வாழ்வாதாரத்திற்காகத் தான் இப்படி ஒரு அவலநிலைக்கு கிராம மக்கள் தள்ளப்படறாங்க. வருமானத்தைப் பெருக்கிக்க முடியும்ங்கற நம்பிக்கையில் நகரத்தைத் தேடிப் போறாங்க. அதனாலேயே கிராமங்களில் விவசாயம் மட்டுமில்லாது, அதை சார்ந்த தொழில்களும் பெருக வேண்டியது அவசியமா இருக்கு. இருக்கும் இடத்தில் தன்னிறைவு அடையும் போது குடும்பம் குடும்பமா எல்லோரும் நகரத்திற்குப் போக மாட்டாங்க இல்லையா?'' எனக் கேள்வி எழுப்பினாள்.

''கிராமங்கள் தன்னிறைவு அடைய வைக்கும் நோக்கில் தான் சிறப்புப் பொருளாதார மையங்கள் செயல்பட

றாங்க. அதோட சுய உதவிக் குழுக்களும் கூட தொடங்க வாய்ப்பிருக்கே? இங்கே உங்க ஊரில் எப்படி?''

''சரியான நேரத்தில் தான் இந்தக் கேள்வியைக் கேட்டீங்க. இவங்க எங்க ஊர் ஸ்கூல் டீச்சர் கீதா. சமூக சேவையில் ரொம்ப ஈடுபாடு உடையவங்க'' என கீதாவை கபிலனுக்குப் பெருமையுடன் அறிமுகப்படுத்தியவள்,

''இவர்களுடைய வழிகாட்டுதலின் அடிப்படையில் செந்தாமரைக்குளத்தில் சுய உதவிக்குழுக்கள் வெற்றிகரமா நடந்துட்டு இருக்கு. தென்னை மரங்கள் தமிழ்நாட்டில் கோவைக்குப் பிறகு தஞ்சையில் தான் அதிகம். அதன் பயன்பாட்டின் அடிப்படையில்தான் அந்தக் குழுக்கள் செயல்படுது. அதோட சிறு தொழில், குடிசைத் தொழில் ஆரம்பிக்கிறதுக்கான முயற்சியிலே தான் இப்போ இருக்காங்க. நானும் இவங்களுடைய முயற்சிகளுக்குத் துணையா இருக்கேன்'' என விவரங்களைத் தந்தாள்.

''கிராமங்களையும், விவசாயத்தையும் முன்னேற்ற விவசாயத்தைச் சார்ந்தத் தொழில்களை வளர்த்தால் தான் முடியும்னு சொல்றீங்களா?'' என்று வெயிலுக்கு இதமாக இளநீர் அருந்தியபடியே பேட்டியைத் தொடர்ந்தார் கபிலன்.

''அத்தகைய வளர்ச்சி ஏற்படும் போது விவசாயத்தின் மூலம் நிலையான வருமானம் கிடைக்க வாய்ப்புகள் அதிகம்'' என்றவளின் குரலில் நம்பிக்கைப் பிரதிபலித்தது.

''விவசாயிகளின் வருமானம் உயரணும் என்பதைக் கருத்தில் கொண்டு தானே மன்னியுங்கள், தள்ளுபடி விலையில் உரம் என்று ஏராளமான சலுகைகளை அரசாங்கம் கொண்டு வந்திருக்காங்க?''

மைத்ரேயி, ''உதாரணத்திற்கு ஒரு விஷயம் சொல்றேன். இந்த வருஷம் நிலச் சந்தை அதிகரிக்கும்



'பொட்டாஷ்' - இன் விலை அதிகரிச்சு இருக்கு. ஆனால் நம்ம அரசாங்கத்தோடத் தள்ளுபடியில் இந்த வருஷத்துக்கு எந்த மாற்றமும் இருக்காதுன்னு சொல்றாங்க. இதனால ஒரு விவசாயிக்கு மட்டும் ஒரு ஏக்கருக்குப் பத்தாயிரம் ரூபாய் அதிகச் செலவு இருக்கு. வரவு அப்படியே இருக்கும் போது செலவு மட்டும் அதிகமானால் நாங்களும் தான் என்ன செய்றது?'' என்றாள் வேகத்துடன்.

''நம்ம அரசாங்கம் விவசாயிகளுக்காக இலவச மின்சாரம், சப்ஸிடைஸ்ட் உரம், விதைன்னு எத்தனை எத்தனை சலுகைகள் கொடுக்கிறாங்க. இதனால் நம்ம நாட்டு பட்ஜெட்டில் எவ்வளவு ஒத்துக்கிறாங்க தெரியுமா? நீங்க என்ன இப்படிச் சொல்றீங்க மேடம்?''

''விவசாயிகளுக்குக் கொடுக்கிறதைப் பற்றி மட்டுமே பேசறீங்களே? ஆங்கிலம் கலக்காத தமிழ் பெயர் திரைப்படத் தலைப்பாக வைத்தால் வரிச்சலுகை, ஆபாசமில்லாமல் எடுக்கப்பட்டால் வரிச்சலுகைன்னு திரைப்படம் எடுக்கிறவங்களுக்கு கன்செக்ஷன் கொடுக்கிறாங்களே? ஏற்கனவே கோடியில் சம்பாதிக்கிறவங்களுக்கு அது தேவையா? அவசியமா? அதெல்லாம் உங்க கண்ணுக்குத் தெரியாதா?''

''....''

''கன்செக்ஷன் கொடுப்பதால் அந்தச் சினிமாவில் வருகிற லாபத்தில் எங்களுக்கும் ஒரு பங்கு கொடுக்கணும் என்று அரசாங்கம் சொல்லுதா? இல்லை டிக்கெட் விலையை நாங்கள்தான் நிர்ணயிப்போம் என்று சட்டம் பேசுதா?''

''........''

''ஆனால், விவசாயப் பொருட்களின் விலையை அரசாங்கம் தானே தீர்மானிக்குது!?''

''.......''

''இலவச மின்சாரம் என்று சொல்றீங்களே... ஆனால் குறைந்தது ஐந்து மணிநேரம் மின்வெட்டு இருக்கு என்பது தெரியவே மாட்டேங்குது சார்.''

அவள் சொல்வதைக் குறிப்பெடுத்துக் கொண்டிருந்த கபிலனிடம் மேலும், ''அப்படியே பார்த்தாலும் அடிமட்டத்திலிருக்கிற விவசாயிக்கு இந்த சப்ஸிடைஸ்ட் விலை அப்படியே போய் சேர்வதில்லை. நடுவில் இருக்கும் கம்பெனிகளும், இடைத் தரகர்களும் தான் இதனால் அதிக அளவில் லாபம் அடையறாங்க. இதையெல்லாம் சரிப்படுத்துகிற கடமையும் பொறுப்பும் அரசாங்கத்துக்குத் தான் இருக்கு'' என்றாள் ஆதங்கத்துடன்.

அவளுடைய நிலைப்பாடு புரிந்தாலும், தொடர்ந்து தன்னுடைய நிருபர் வேலையைத் திறம்பட செய்த கபிலன், ''நம்ம அரசாங்கம் எண்ணற்ற புதுமையான திட்டங்களையும், சீர்திருத்தங்களையும் கொண்டு வந்ததெல்லாம் நீங்க பயனில்லைன்னு சொல்ற மாதிரி இருக்கே?'' என்றார்.

''கொண்டு வந்திருக்கு. இல்லைன்னு சொல்லலை. ஆனால் இன்னொரு 'விதர்பா' உருவாகாமல் தடுக்கணும் என்றால், இன்னமும் நிறைய சீர்திருத்தங்கள் செய்யணும். அதுவும், அதெல்லாம் சீனா போன்ற நாடுகள் மாதிரி அடிமட்டத்திலிருந்து தொடங்கணும். அப்போ தான் அது ஒரு முழுமையான மாற்றமா இருக்கும்.''

''ம்...''

''நம்ம அரசாங்கம் கொண்டு வரும் விவசாயிகளுக்கான சீர்திருத்தங்களும், புதுத் திட்டங்களும் மேம்போக்காக இல்லாமல் அடிமட்டத்திலிருக்கிற ஒவ்வொரு



விவசாயியையும் முழுமையா போய் சேர்ந்தால் மட்டுமே அவர்களது வாழ்க்கைத் தரம் உயர வாய்ப்பிருக்கு. நோய் வந்த பின் குணப்படுத்துவது தற்காலிகமான தீர்வாதான் இருக்கும். ஆனால் அது வருவதற்கான காரணங்களைக் கண்டறிந்து, வருமுன் தடுப்பது மட்டுமே நிலையான தீர்வா இருக்க முடியும், இல்லையா?''

''விவசாயி கடனைத் தள்ளுபடி செய்தால் மட்டும் பத்தாது. அந்தக் கடனை அவனையே அடைக்க வழி செய்துக் கொடுக்கணும் என்று சொல்றீங்க'' என்று சிரித்தார் கபிலன்.

''கரெக்ட்! அதே தான்! அவங்கக் கடனை ஏன் அவங்களால அடைக்க முடியலைன்னு யோசிக்கணும். தேர்தல் வரும் போதெல்லாம் கடனைத் தள்ளுபடி செய்றதில் மட்டும் என்ன லாபம்? அந்த நிலையில் விவசாயிகளை வைச்சிருக்கோம் என்பதே பரிதாபமில்லையா?''

''....''

''அப்படி அறிவிக்கும்போது கூட, விவசாயி அல்லாத யார் யாரோ இடையில் புகுந்து விவசாயின்னு சொல்லிட்டு அவர்களுடையக் கடனைத் தள்ளுபடி செய்து கொண்டு நாட்டுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துவதும் நடக்குது.''

கபிலன், ''உங்களிடம் பேசிய பிறகு நானும் கூட வேற கோணத்திலிருந்து பிரச்சனைகளைப் பார்க்கிறேன் மேடம். நிறைய விஷயங்களைத் தெரிஞ்சு வைச்சிருக்கீங்க'' என்றார் பாராட்டும் விதமாக.

''அச்சோ! நீங்க வேற சார்! என் கணவர் அடிக்கடி சொல்வார். 'கற்றது கை மண்ணளவு; கல்லாதது உலகளவு'

என்று. நான் உங்களிடம் சொன்னதெல்லாம் இங்கே இருப்பவர்களின் ஆதங்கம், கவலை, நம்பிக்கை எல்லாம் சேர்த்துதான். நானா எதுவும் சொல்லலை. அதுவும் நீங்க சொன்ன மாதிரி இது ஒரு கோணம் மட்டுமே. இதைப் பற்றி படிக்கப் படிக்கத் தலைச்சுற்றல் தான். இது செயின் ரியாக்ஷன் மாதிரி. ஒரு இடத்தில் தொட்டால், இன்னொரு இடத்தில் வலி தெரியும். பெரிய பெரிய அறிவாளிகள் எல்லாம் எப்படி சீர்திருத்தங்கள் செய்தால் நல்லா இருக்கும்ன்னு ஆராய்ச்சியும், அடிப் படை ஆய்வும் செய்துட்டு இருக்காங்க'' என்றாள் அடக்கமாக.

''உங்களைப் போன்ற இளைய தலைமுறையினருக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்பறீங்க?''

''விடா முயற்சியும், தன்னம்பிக்கையும், எதுவும் முடியும் என்ற உத்வேகமும் இருந்தால் போதும். சாதிக் கணும் என்ற வெறி தன்னாலே வேர் விட ஆரம்பிக்கும்.''

''உங்க தொழில் மென்மேலும் வளர எங்களின் உள மார்ந்த வாழ்த்துக்கள்'' என வாழ்த்திய கபிலன், அவ ளுடைய வருங்காலக் கனவு பற்றி கேட்க,

மைத்ரேயி நன்றி தெரிவிக்கும் விதமாக, ''உங்களுடன் பேசியதில் ரொம்ப மகிழ்ச்சி. உலகப் புகழ்பெற்ற 'லிஜ்ஜட் பாப்பட்' என்ற அப்பள கம்பெனி ஐந்து வருடங்களுக்கு முன்பு ஏழே ஏழு பெண்களால், அவங்க வீட்டு மொட்டை மாடியில் மும்பையில் ஆரம்பிக்கப்பட்டது. அத்தனைப் படிப்பறிவில்லாத பெண்களால், வெறும் எண்பது ரூபாய்க்கு தொடங்கப்பட்ட கம்பெனியின் வளர்ச்சி இன் றைக்கு நம்மை பிரமிக்க வைக்குது. அதே போல ஒரு பிரமிப்புடன் எங்க செந்தாமரைக்குளத்தைப் பற்றியும்



பேச வைக்கணும்'' என்று கூறியவளின் விழிகளில் கனவு மிதந்தது.

கபிலனும் பேட்டி எடுக்க வந்தவர்களும் கீதாவும் மன நிறைவோடு விடைப்பெற்ற பின், பெருமையும் சந் தோஷமும் போட்டிப் போட மனைவியைத் தூக்கி தட்டாமாலைச் சுற்றிய சுதர்சன், ''எனக்குப் பெருமை யில் நெஞ்சே வெடிச்சுடும் போல இருக்குடா கண் ணம்மா!'' என்றான் நெஞ்சு கொள்ளா பூரிப்புடன்.

''அச்சோ விடுங்க அத்தான்! ரொம்ப பெருமை பீத் திக்கிறான் என்று எல்லோரும் சிரிக்கப் போறாங்க.''

''சிரிச்சால் சிரிச்சுட்டுப் போறாங்க. அவங்களுக் கென்ன? என் வீடு, என் மனைவி நான் என்ன வேணும் னாலும் செய்வேன். ஐ அம் சோ ப்ரௌட் ஆஃப் யூ! என்னம்மா பேசறே? போ! என் கண்ணே பட்டுடும் போலிருக்கு.''

பேட்டியைக் கேட்டுக் கொண்டிருந்த வரலக்ஷ்மி கையில் மிளகாயும் உப்புமாக வந்து, ''உன் கண்ணு மட்டுமா? ஊரு கண்ணே என் மருமகள் மேலே தான் இருக்கும். நீயும் சேர்ந்து நில்லு!'' என்று பெருமையாகச் சொல்லி, மகனையும் மருமகளையும் சேர்த்து நிறக வைத்து திருஷ்டிக் கழித்தார்.

சங்கோஜத்துடன் சிரித்த மருமகளை ஆசீர்வதிப்பது மாதிரி அவள் தலையைக் கோதிய லோகநாதன், ''நீயும் சேர்ந்து நில்லு லக்ஷ்மி! நான் உங்க மூணு பேருக்கும் திருஷ்டிக் கழிக்கிறேன்'' மீசையைப் பெருமிதமாகத் தடவி விட்டு சிரிப்புடன் சொல்ல, அங்கே அன்பும் பாசமும் நிறைந்து வழிந்தது.



# 16

வார இதழில் வெளியாகியிருந்த மைத்ரேயியின் பேட்டியை வாசிக்கச் சொல்லி கேட்ட விடுகதைப் பாட்டி, ''போட்டா கூட போட்டிருக்காங்களா? இப்படிக் கொடு!'' என்று தன் கையில் வாங்கி படங்களை உற்றுப் பார்த்தார்.

''ஏன்மா மைத்ரேயி? கொஞ்சம் கலர் கம்மியா இருக்க மாதிரி இருக்கு. போட்டா எடுக்கும்போது லேசா பவுடர் போட்டிருந்திருக்கலாமில்ல?''

தன் கையிலிருந்தப் படத்தை இப்படியும், அப்படியுமாகத் திருப்பி அழகு பார்த்துக் கொண்டிருந்தவரிடம், மைத்ரேயி போட்டோவில் அத்தானுக்குப் பொருத்தமா இருக்கணுமே பாட்டி?'' என வம்பு பேசிச் சிரித்தாள்.

''ஆங்! அவன் எப்போதுமே ராஜா தான்!'' பாட்டி தன் விரல்களை சொடுக்கி திருஷ்டி கழிக்க, ''என்ன பாட்டி? உங்க பேராண்டியை மட்டும் உசத்தியா பேசறீங்க?'' என செல்லச் சண்டைக்கு வந்தாள் இளையவள்.

''நீயும் ராஜாக்கு ஏத்த பட்டத்து ராணி தான்!''

இருவருக்கும் பூத்தப் புன்னகை மறைவதற்குள், ''இதெல்லாம் கேட்டு வாங்கக் கூடாது. அவங்களா சொல்லணும்..'' என்று நொடித்தபடி வந்தார் கனகாவின் அம்மா, ராஜம்.

'எங்கிருந்து தான் மூக்கு வியர்க்குமோ?' என்றெண்ணிய மைத்ரேயி, ''பாட்டிக்கும், பேத்திக்கும் நடுவில்



ஆயிரம் கொடுக்கல் வாங்கலிருக்கும். இதில் உங்க சட்டமெல்லாம் செல்லாது.'' என சாதாரணம் போல் பதில் தந்தாள்.

''அப்படிச் சொல்லு பட்டத்து ராணி!'' என்று கூட்டணி அமைத்ததுடன் தன் கையிலிருந்த இதழைக் காண்பித்து மைத்ரேயியைப் பற்றிய பெருமை பேசினார் மூதாட்டி.

சிடுசிடு முகத்துடன் அதைப் பார்த்த ராஜம், ''எல்லாம் வரலக்ஷ்மி அண்ணியும், லோகு அண்ணனும் கொடுக்கிற இடம். அதனால் தானே குடும்பப் பொண்ணா வீட்டோட இருக்காமல் இப்படி போட்டா பேப்பரில் வர்ற அளவுக்கு வளர்ந்து நிற்கிறே?'' என்று நொடித்தார்.

'அச்சோ! இந்நேரம் பார்த்தா பாட்டியை என் துணைக்காக வைத்துவிட்டு அத்தையும், மாமாவும் விசேஷ வீட்டிற்குச் செல்ல வேண்டும்? இந்த வம்பு பெண்மணியிடம் தனியாக வாயைக் கொடுத்தால் நிச்சயம் கூச்சலில் தான் போய் முடியும்' என்ற எண்ணம் ஓட மைத்ரேயி செய்வதறியாது ஸ்தம்பித்தாள்.

''அப்படியென்ன பேப்பரில் தப்பா வந்துடுச்சு? இதென்ன நீ புது பஞ்சாயத்தைக் கூட்டறே?'' என்ற பாட்டி தொடர்ந்து,

''அந்த காலத்திலிருந்தே 'மாமியார் உழைச்சால் மண்ணுக்கு உரம்; மருமகள் உழைச்சால் பொன்னுக்கு உரம்'ன்னு வழக்கத்தில் இருக்கிறதுதானே?'' என்றார்.

''........''

''நாளைக்கு உன் வீட்டில் நல்லது கெட்டதுன்னா லோகு முன்னிருந்து செய்யணுமில்ல? உன் பொண்ணு இருக்க வேண்டிய இடத்திலே இவள் வந்துட்டாளேன்னு ஆங்காரமிருந்தால் யாருக்கு நஷ்டம்? உன்னைப்

பெரியவளா மதிச்சு எதிர்த்துப் பேசாமல் இருக்கிறது இந்தப் பெரிய வீட்டுக்கானப் பெருந்தன்மை.''

மூத்தவராய் பாட்டி எடுத்துரைக்க, அவரின் அதட்டலான குரலிலும், அறிவுரையிலும் தலையைத் தாழ்த்திய ராஜம், ''இதையெல்லாம் பெருசு பண்ணிடாதீங்க...!'' என்று பொதுவாகச் சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தார்.

''பாவம் பாட்டி! பெரியம்மா ரொம்ப பயந்துப் போயிட்டாங்க...'' என்று ராஜத்துக்காகப் பரிதாபப்பட்ட மைத்ரேயி, ''அத்தையும், மாமாவும் இருந்திருந்தால் எதையாவது சொல்லி அவங்களைக் கிளப்புவாங்களேன்னு நினைச்சேன். ஆனால் நீங்க இப்படி வெட்டு ஒண்ணு-துண்டு ரெண்டுன்னு நேரடியா பேசிட்டீங்கப் பாட்டி.''

''அவளுக்கா புரியணும்னு நினைச்சால், அது இந்த ஜென்மத்தில் நடக்கிற கதை மாதிரி தெரியலை மைத்ரேயி. அதான் கொஞ்சம் குரலை உயர்த்திப் பேசிட்டேன்.''

''பாட்டி! உங்களுக்கு விடுகதை மட்டும்தான் தெரியும்னு நினைச்சேன். இப்படி நிலைமைக்குத் தக்கப் பழமொழியை எல்லாம் மாற்றி கூட சொல்லுவீங்களா நீங்க?''

''நான் சொன்னது தான் சரியானது மைத்ரேயி. அந்தக் காலத்தில் வீட்டு ஆண்களுக்கு விவசாய மண்ணிலும் பெண்கள் உழைச்சு கைக்கொடுக்கணும் என்ற அர்த்தத்தில் இருக்கும். அப்படியே நாளடைவில் வாய்மொழியில் மருவி, 'மாமியார் உடைச்சால் மண் குடம்; மருமகள் உடைச்சால் பொன் குடம்'ன்னு மாறி வந்துடுச்சு.''



''இந்தப் பழமொழியையெல்லாம் எழுத்து வடிவில் இல்லாமல் வழி வழியா காது வழியா சொல்றது தானே பாட்டி? ஏதோ சொல்றதுக்குப் பொருத்தமா எதுகை - மோனையோட அர்த்தமும் வந்தால், அதையே வழக்கமாக்கிடறோம்.''

''அப்படி வழக்கத்தில் மட்டும் வர்றதினாலே சில வாய்மொழியில் அர்த்தமே அனர்த்தமா ஆகிடுது. அப்படித்தான் 'பந்திக்கு முந்தும்.. படைக்குப் பிந்தும்... அதென்ன'ன்னு போடற ஒரு விடுகதையையே, வாய்மொழியில் இப்போவெல்லாம் 'பந்திக்கு முந்து - படைக்குப் பிந்து' என்று வேற மாதிரி சொல்லிட்டு இருக்காங்க.

''என்னது? அது விடுகதையா?''

''ஆமாம் மைத்ரேயி! வலது கையை எடுத்துகிட்டால் பந்தியில் சாப்பிடுவதற்காக முன் பக்கம் செல்லும்; அதே கை, போர் படையில் ஈட்டி எறியும் போதும், அம்பு தொடுக்கும் போது நாணை பின் பக்கம் இழுப்பதற்காகவும் பின் பக்கம் செல்லும். இப்படி வலது கைக்காகப் போடற விடுகதைத் தான் 'பந்திக்கு முந்தும்.. படைக்குப் பிந்தும்... அதென்ன' அப்படின்னு...''

''ஓ! சூப்பர் பாட்டி.''

''எங்களுக்கெல்லாம் கேள்வி ஞானம் மட்டும் தான். எழுதப் படிக்கத் தெரியாது. அதனாலேயே பல விஷயங்கள் கேள்வி ஞானத்தில் தப்புத் தப்பா அர்த்தமாகிடுது.'' என்று பாட்டி காரணம் காட்டியபோது வீட்டுத் தொலைபேசி ஒலித்தது.

எடுத்துப் பேசிவிட்டு வந்தவள் சோர்ந்த முகத்துடன், ''நம்ம வையாபுரி சித்தப்பாவிற்கு நெஞ்சுவலின்னு

டவுன் ஆஸ்பத்திரிக்குக் கூப்பிட்டுட்டுப் போயிருக்காங்களாம் பாட்டி. அதனால் அத்தான் வர்றதுக்கு தாமதமாகுமாம்'' என்றாள் கவலையுடன்.

''அடக் கடவுளே! இன்னமும் அவன் பிள்ளைக்குக் கல்யாண-காட்சி கூட செய்து வைச்சு பார்க்கலையே...?'' என்று தன் மனவேதனையில் புலம்பினார் பாட்டி.

''இப்போ எதுக்குப் பாட்டி தேவையில்லாமல் கற்பனை செய்துட்டு? நல்லபடியா குணமாகி வரணும்னு நினைப்போமே?''

''எங்கே மைத்ரேயி? இந்த மாதிரி நிலைமையில் போன வருஷம் கூட ரெண்டு பேர் பிழைக்கலை. இங்கிருக்கிற ஆஸ்பத்திரியில் ஆபத்தான கேஸ் எல்லாம் பார்க்க மாட்டாங்க. டவுனுக்குத்தான் கூப்பிட்டுப் போகணும். அங்கே டாக்டருங்க பத்து நிமிஷத்துக்கு முன்னாடி வந்திருந்தால் பிழைச்சிருக்கலாம் என்றும் சொல்லியிருக்காங்க.. போகும் போதே கூட உயிர் போகிற சூழ்நிலையும் வந்திருக்கு.''

''அப்போ இங்கே இருக்கிற ஆஸ்பத்திரி?''

''அவசர ஆத்திரத்துக்கு ஆஸ்பத்திரி தேவைன்னு தான் லோகு முயற்சியில் அரசாங்கத்துக்கிட்டே மனு கொடுத்து இங்கே ஒரு ஆரம்ப சுகாதார மையம் ஆரம்பிச்சாங்க. ஆனால் இங்கே வர அரசாங்க டாக்டர் உடனே வேற ஏதாவது டவுனுக்கு மாற்றல் கேட்டுப் போயிடறாங்க. மருத்துவக் கல்லூரி மாணவர்களை ஒரு வருஷம் கட்டாயக் கிராம சேவைக்கு ஒத்துக்க வைக்கணும்னு பேசினதைக் கூட போராட்டம் அதிதுன்னு கிடப்பில் போட்டுட்டாங்க.''



''ம்...'' என்றவளுக்குத் தொண்டைக்குழியில் அடைத்தது.

''நம்ம கிராம மக்களா சேர்ந்து டவுனில் இருக்கிற டாக்டர் யாரையாவது பார்த்து வருஷத்துக்கு இவ்வளவு சம்பளம் தர்றோம்னு அழைச்சுட்டு வந்தால்...'' யோசனையோடு இழுத்தவள் இரவு தாமதமாக வந்து சேர்ந்த கணவனிடம் இது குறித்துப் பேசினாள்.

''எத்தனை தூரம் இது பாசிபிலிட்டின்னு நினைக்கிறே? வாழ்க்கைத் தரம், பொருளாதாரம், குடும்பத்தின் எதிர்காலம் எல்லாத்தையும் மனதில் வைச்சு தானே எல்லோரும் செயல்படுவாங்க. ஃபாரீன் என்றால் கிளம்பி வர்றதுக்கு உடனே சரின்னு சொல்லிடுவாங்க கண்ணம்மா. ஆனால் இங்கே... கொஞ்சம் கஷ்டம் தான்.'' எனத் தாடையைத் தடவியபடியே நம்பிக்கையின்றி இழுத்தான்.

''ஏன் இப்படி நெகடிவ்வா பேசறீங்க? பக்கத்து ஊரில் இருக்கிறாரே டாக்டர் செழியன்? அந்த மாதிரி சேவை உள்ளத்திலும் நிறைய பேர் இருப்பாங்க சுதா.''

''ஹ்ம்ம்...'' பெருமூச்சை வெளியேற்றிய சுதர்ஷன், ''உனக்கு விஷயமே தெரியாதில்ல? வையாபுரி மாமாவிற்கு ஏற்கனவே சில நாட்களுக்கு முன் நெஞ்சு வலி வந்திருக்கு. அதை உடனே அங்கே செழியன் கிட்டே தான் காண்பிச்சிருக்கிறார். வாய்வுப் பிடிப்புன்னு மாத்திரை எழுதி கொடுத்திருக்கான் அந்த ஏமாத்துக்காரன்..'' என்ற அதிர்ச்சியான தகவலைத் தெரிவித்தான்.

'''என்னது...? ஏமாத்துக்காரனா?''

''ஆமாம் மைத்தி. அவன் ஒரு போலி டாக்டர்ன்னு நேற்றைக்கு சாயந்திரம் தான் கைது பண்ணி இருக்காங்க.''

''அடக் கடவுளே! என்னால் நம்பவே முடியலை...!'' இமைக்கவும் மறந்து 'திக்' பிரமை பிடித்தவள் போன்று நாற்காலியில் அமர்ந்திருந்தாள் மைத்ரேயி.

''ம்...'' என்று ஆமோதித்த சுதர்சன் தன் மனைவியின் சில்லிட்ட உள்ளங்கைகளைப் பற்றிக் கொண்டு வருத்தமான குரலில்,

''ஆஸ்பத்திரிக்கு இங்கிருந்து போகும் போது வேகமா காரை ஓட்டுவதில் தான் கவனம் செலுத்தணும்ன்னு மூளைக்கு உத்தரவுப் போட்டாலும், மனசில் உணர்ச்சி வசப்படாமல் என்னால் இருக்கவே முடியலை மைத்தி. அத்தை விஷயம் கேள்விப்பட்டதுமே அப்படியே மயங்கிட்டாங்க. ரெண்டு பிள்ளைகளும் அம்மா - அப்பாக்கு என்ன ஆகுமோன்னு தெரியாமல் கதறின கதறல்...''

அவனது வார்த்தைகளில் குமுறிய வேதனையை விட, சுதர்சனின் கண்களில் பிரதிபலித்த வருத்தமும், ஆற்றாமையும் மைத்ரேயியின் நெஞ்சத்தை வெகுவாகப் பாதித்தன.

கணவனின் கேசத்தை ஆதரவாகக் கோதியவளிடம், ''வையாபுரி மாமாக்கு அது சின்னதா வந்த மைல்ட் அட்டாக், அது சரியா கவனிக்கப்படாமல் போனதால் தான் மாஸிவ் அட்டாக் வந்திருக்குன்னு டாக்டர் இன்றைக்கு சொன்னார் மைத்ரேயி. பயப்படுவதற்கு ஒன்றுமில்லைன்னு சொல்கிறவரை அங்கிருந்த எங்களில் யாருக்குமே சோறு, தண்ணி இறங்கலை...'' என்றான்.

சுதர்சன் தன் பாரத்தை இறக்கி வைப்பதில் கவனம் செலுத்தியதினாலோ என்னவோ மைத்ரேயியின் யோசனைப் படர்ந்த முகத்திலும், அதில் குடியேறிய



கலக்கத்திலும் அவன் எந்த குறிப்பையும் உணரவில்லை.

அதை உணராததாலோ என்னவோ தொடர்ந்து அன்று அனுபவித்த வேதனையை விவரித்துக் கொண்டிருந்தான்.

கணவன் பேசியதனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த மைத்ரேயி, ''எல்லாம் சரிதான் அத்தான். ஆனால் நம்ம ஊரில் மறுபடியும் இந்த மாதிரி ஒரு சம்பவம் நடக்காமல் இருக்கணும்னா என்ன செய்யறது?'' எனக் கேட்டாள்.

''நீ சொன்ன மாதிரியான ஒரு விஷயத்தை முயற்சி செய்யணும் மைத்ரேயி. அப்படி ஒரு டாக்டர் எல்லா நேரத்திலும் இல்லையென்றாலும் கூட ஷிஃப்ட் முறையில் பணி நேரம் அமைச்சு கொடுக்கிற மாதிரி ஏதாவது யோசிக்கணும்.''

''.......''

''அதற்கு நிறைய செலவு ஆகும் பட்சத்தில் ஊர் மக்கள் கட்டாயம் ஒத்துழைப்பு தருவது என்பது கேள்விக்குறி தான். ஊர் ப்ரெஸிடென்ட் வேற ஊரில் இல்லை. இப்போ இருக்கிற ஸ்ட்ரெஸ்ஸில் ஒழுங்கா யோசிக்க முடியலை கண்ணம்மா...'' என்று விட்டு உறங்கிவிட்டான்.

ஏதேதோ சிந்தனையில் உழன்றவளும் சற்று நேரத்திற்கெல்லாம் உறங்கினாள்.

அடுத்த நாள் தினசரியில், 'தஞ்சை மற்றும் நாகை மாவட்டத்தில் பன்னிரண்டு போலி டாக்டர்கள் கைது!' என்ற தலைப்பில் வெளி வந்திருந்த செய்தியை

முழுவதுமாக வாசித்தவளுக்கு மேலும் அதிர்ச்சியாகவே இருந்தது.

அதிலும் கிராமப்புறங்களில் இருக்கும் மருத்துவ வசதியின்மையையும், அறியாமையையும் பயன்படுத்தி வலம் வரும் போலி மருத்துவர்களின் எண்ணிக்கைக் கடந்த சில வருடங்களாக அதிகரித்திருப்பதாக புள்ளி விவரங்களின் தகவல்களைப் படித்தவளின் மனதில் சஞ்சலம் குடிக்கொள்ள, சின்னதாய் துளிர்விட்டக் கவலையைச் சுற்றியே அவளது எண்ணங்கள் யாவும் வலம் வந்தன.

'ஆசைக்கு ஒரு பெண்; ஆஸ்திக்கு ஒரு பையன்' என்ற வரம் கிடைக்கப் பெறாததால் அத்தை வரலக்ஷ்மிக்கு இப்பொழுது கூட எழும் ஏக்க பெருமூச்சு அவள் மனக்கண் முன் வந்து சென்றது.

சின்ன வயதில் சுதர்சனைப் பாம்பு தீண்டியதால் ஏற்பட்ட கலக்கத்திற்குச் சான்றாக எழுப்பப்பட்டிருக்கும் கோவிலும், வீட்டைச் சுற்றியிருக்கும் மூலிகைச் செடிகளும் நினைவில் ஆடின.

அன்று காலில் குத்திய முள் ஏற்படுத்திய வலியை விட, ஒரு போலி மருத்துவரிடம் செல்ல வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளான கொடுமை இப்பொழுதும் அவளை திகிலடையச் செய்தன.

சின்னக் காயம் என்பதால் சரி... இதுவே வேறு மாதிரியான இக்கட்டு என்றால்...? மைத்ரேயியால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை.

'பத்து நிமிடங்களுக்கு முன்னால் வந்தால் பிழைத்திருந்திருக்கலாம்; போகும் வழியிலேயே கூட உயிர் போக வாய்ப்பிருக்கு' என்ற பேச்சுக்கள் அவள் காதில் எதிரொலித்தபடியே இருந்தது.



இத்தனைக்கும் முடிவில் முணுமுணுப்பாக, ''இந்த லட்சணத்தில் அரை டஜன் குழந்தைகள் வேண்டும் என்று ஆசை, கேலி வேற?'' என்று சலித்துக் கொண்டு தலையை உலுக்கினாள்.

இத்தகைய வாழ்க்கை முறையில் வாழ்வது கடினம் தானோ என்ற எண்ணம் மீண்டும் அவளறியாமலேயே அவளுக்குத் துளிர்க்கத் தொடங்கியது.

இன்றியமையாதத் தேவையான மருத்துவ வசதியை இவள் சமரசம் செய்தாக வேண்டியக் கட்டாயம் தான் என்ன வந்தது?

சண்டித்தனம் செய்த மனதுடன் போராடிக் கொண்டிருந்தவளிடம் சுதர்சன், ''கண்ணம்மா! என்ன கண்ணைத் திறந்து வைச்சே கனவா?'' என்று அவள் முகத்திற்கு முன் கையசைக்க,

''கனவெல்லாமில்லை.. ஏதேதோ கற்பனையில் போச்சு...'' என்று சுரத்தேயின்றி பதில் தந்தாள்.

''நீ இப்படி எனர்ஜியே இல்லாமல் பேசறதைப் பார்த்தால் தேவையில்லாத கற்பனை போல..?''

'கணவனிடமே கலந்து பேசினால் என்ன' என்ற முடிவுடன், ''தேவையில்லாததுன்னு நீங்க எப்படி சொல்லுவீங்க? எல்லாம் அவசியமான கற்பனை தான்...'' என்று இழுத்தவள்,

''நம்ம குழந்தைகள் பற்றிய கற்பனைதான்...'' என்றாள் மெல்லிய குரலில்.

சுற்றும் முற்றும் பார்த்தவன் கிசுகிசுப்பான குரலில், ''ஹை! இப்படி முக்கியமான விஷயத்திலெல்லாம் நீ மட்டும் தனியா இறங்கக்கூடாது கண்ணம்மா.. அந்த அடிப்படையே தெரியாமல்...'' என்று புன்னகையுடன் புருவத்தை உயர்த்தினான்.

''நானே ரொம்ப குழப்பத்தில் இருக்கேன். இதில் நீங்க வேற...'' பெருமூச்சுடன் அலுத்துக் கொண்டாள்.

''என்னாச்சு மைத்ரேயி? என்ன விஷயம்?''

''நேற்றைக்கு நீங்க செழியன் பற்றி சொன்ன விஷயம் தான் அத்தான். இன்றைக்குப் பேப்பரில் பார்த்தால் நம்ம மாவட்டத்திலும், நாகையிலும் மட்டும் பன்னிரண்டு போலி டாக்டர்ஸை கைது செய்திருக் காங்களாம்...''

அதுவரையிருந்த உற்சாகம் வடிந்து, ''சரி... அதுக்கும், உன் கற்பனைக்கும் என்ன சம்பந்தம்?'' என்றான் தீவிரமான குரலில்.

''என்ன சம்பந்தமா? நாளைக்கு நமக்கு குழந்தைன்னு வரும் போது இந்த மாதிரி சூழ்நிலையில் எப்படின்னு தான்...'' விவரங்களின் அடிப்படையில் எழுந்த விபரீத மானக் கற்பனையைப் பற்றி சொல்ல முடியாமல் இழுத் தாள்.

''ஏன் மைத்தி இப்படி மொட்டைத் தாத்தாக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப் போடறே?''

''வரும்முன் காப்போம்ன்னு சொல்றதில்லையா?''

''ம்ஹ்ம்ம்...'' விரக்திப் புன்னகை ஒன்றை உதிர்த் தவன் அலட்சியக் குரலில், ''பழைய குருடி கதவைத் திறடின்னு ஆரம்பிச்சுட்டியா?'' என வினவினான்.



பொறுமையை முற்றிலும் இழந்துவிட, ''அப்படின்னா என்ன சொல்ல வர்றீங்க?'' என்றாள் சினத்துடன்.

''சொல்ல வேண்டியதையெல்லாம் ஏற்கனவே கிளிப் பிள்ளைக்கு சொல்றது மாதிரி சொல்லிப் புரியவைச் சாச்சு. இன்னமும் என்ன சொல்றதுக்குப் பாக்கின்னு தெரியலை.''

''உங்க வாயிலிருந்தே தான் கிளிப்பிள்ளைன்னு வந்துடுச்சே? நீங்க சொன்னதையே திருப்பி சொல்ல வைக்காமல் விட்டுடுவீங்களா?''

''உன் விருப்பத்திற்கு நான் என்றைக்காவது மதிப்பு கொடுக்காமல் இருந்திருக்கேனா மைத்ரேயி?''

சுதர்சனின் கேள்விக்கு மறுப்பாகப் பதில் சொல்ல இயலாது என்ற உண்மை உரைக்க அமைதியாக இருந் தாள் மைத்ரேயி. ஆனால் மனைவியின் மௌனம் சுதர்சனைக் கொல்லாமல் கொன்றதென்னவோ நிஜம்.

மௌனமாக இருக்க வேண்டிய நேரத்தில் பலமான வார்த்தைகளைப் பிரயோகித்து வாதம் செய்த இருவரும் இப்பொழுது பேச வேண்டிய நேரத்தில் ஊமையானது துரதிர்ஷ்டவசமானதே!

இருவரின் பார்வையும் நேர்கோட்டில் ஒன்றை யொன்று சந்திக்க முடியாமல் தவித்தது சில நொடிகள் தான். 'ஆபத்பாண்டவன்' போன்று மைத்ரேயியின் அலைபேசிக்கு அழைப்பு வந்த அதே தருணம், சுதர்சனைத் தேடியும் வீட்டிற்கு ஆள் வந்தது.

மாதங்கியின் பெயர் அலைபேசியில் ஒளிர, இருக்கும் மனநிலையில் சகோதரியிடம் பேச பிடிக்காமல் அழைப்பை எடுக்காமலேயே விட்டாள்.

ஐந்து நிமிட இடைவெளியில் இன்னொரு முறை அழைப்பு வர, ஏதோ முக்கியமான விஷயமிருக்குமோ என்ற நினைப்பில் எடுத்து, ''சொல்லுக்கா... என்ன விஷயம்?'' என்றாள்.

''என்ன மைத்தி? குரல் டல்லா இருக்கு.. ஏதாவது பிரச்சனையா?''

''பிரச்சனையெல்லாமில்லைக்கா... காலையிலிருந்து ஒண்ணு மாத்தி ஒண்ணு ஏதாவது வேலை இருந்துட்டே இருக்கு. என்ன விஷயம்? நீ எப்படி இருக்கே? செக் அப் எல்லாம் ஒழுங்கா போறியா? மாமா உன்னை நல்லா கவனிச்சுக்கிறாரா?'' என அடுக்கடுக்காகக் கேள்விகளை அடுக்கினாள்.

''ஏய்! ஏய்! போதும் மைத்தி. கொஞ்சம் மூச்சு விட்டுட்டு கேள்வியைக் கேளும்மா.'' என்ற மாதங்கி,

''நான் நல்லாயிருக்கேன். சுரேஷ் என்னை ரொம்ப நல்லா கவனிச்சுக்கிறார். செக்-அப் போயிட்டு இருக்கேன். என் செல்லத் தங்கச்சி எப்படி இருக்கான்னு கேட்கத் தான் போன் செய்தேன்.''

''அச்சச்சோ! இப்படிச்-செல்லத் தங்கச்சின்னு எல்லாம் சொல்லி இடியுடன் கூடிய மழையைக் கொண்டு வந்துடுவே போல..? பூமி தாங்காதுக்கா... தாங்காது!'' என உற்சாகத்தை வரவழைக்க முயன்று ஓரளவு வெற்றியும் கண்டாள்.

''இந்தக் கிண்டல் தானே வேண்டாம்ங்கறது? சொன்னாலும், சொல்லலைன்னாலும் நீ எனக்கு எப்போதுமே செல்லம் தான் மைத்தி.'' என்று மனதாரத் தெரிவித்தாள் மூத்த சகோதரி.



''ஹ...ச்..!'' போலியாகத் தும்மிய போதும் அக்கறையுடன், ''ஜூனியர் எப்படியிருக்காங்க? வேளாவேளைக்குச் சாப்பிடறியா?'' என்று விசாரித்தாள்.

''எல்லாம் சுகமே!'' என்றவள், ''இங்கே சென்னைக்கு வந்து ஒருவாரம் என் கூட இருந்துட்டு போயேன் மைத்தி. வினீத் கல்யாணத்திற்குச் சென்னை வந்த போது கூட என் வீட்டுக்கு நீங்க ரெண்டு பேரும் வரவேயில்லை...''

''ஆங்! நீ தான் அப்போ அஃபிஷியல் ட்ரிப்ன்னு பெங்களூரில் இருந்தே...''

''ம்... சரி.. மை மிஸ்டேக். அப்போ பெங்களூர் ட்ரிப்பை தவிர்க்க முடியலை. அதான் இப்போ கேட்கிறேன் மைத்தி. நமக்குக் கல்யாணம் ஆனதிலிருந்து நாம ரெண்டு பேரும் சேர்ந்து நேரம் செலவழிக்க முடியறதில்லைன்னு ரொம்ப ஏக்கமா இருக்கு எனக்கு.''

''மை ஸ்வீட் அக்கா! ஏன் இவ்வளவு சென்ட்டி (SENTI) ஆகிறே? கூல்.. கூல்...''

''சுரேஷ் என்னடான்னா... செந்தாமரைக்குளத்துக்கு இந்த நேரத்தில் தனியா என்னை அனுப்ப முடியாதுன்னு சொல்லிட்டார். அதான் நீ இங்கே வரலாமேன்னு கேட்கிறேன்.''

''ம். அத்தான் வரட்டும் அக்கா. கேட்கிறேன்'' என்று தங்கை இழுக்க,

''ஏய்! என்னடி நீ? பிள்ளைத்தாய்ச்சி ஆசைப்பட்டுக் கேட்கிறேன். பிள்ளைத்தாய்ச்சி எதுக்காவது ஏங்கி ஆசைப்பட்டு, அது நடக்கலைன்னா வயித்து பிள்ளைக்குக் காதில் சீழ் வடியுமாம்.'' என்று தங்கைக்குப் பயம்

காட்டியவள், ''நீ என்னடான்னா.. இதுக்குக் கூட அத்தானை கேட்கணும்னு இழுக்கறே?'' எனத் தன் உரிமையை நிலை நாட்டினாள்.

''அப்படியில்லைக்கா..'' என்று சில கணங்கள் யோசித்தவள், ''சரி.. நான் ரெண்டு-மூணு நாளைக்கு வந்து சென்னையில் தங்கறேன். எப்போ வர்றேன் என்று அத்தான்கிட்டே பேசி, முடிவு பண்ணிட்டு சொல்றேன். சரியா?''

''ம். இது நல்லப்பிள்ளைக்கு அடையாளம். சுதர்சனிடமும் சொல்லு.''

''டென்ஷன் ஆகாதேக்கா! ஜூனியரை நல்லபடியா பார்த்துக்கோ. சரி... அப்புறம் பேசலாம்'' என்று முடித்தாள்.

இது குறித்து கணவனிடத்தில் கலந்து பேசிய போது, ''உன் அக்கா உன்கூட நேரம் செலவழிக்க ஆசைப்பட்டுத்தான் கூப்பிடறாங்க. நான் வந்தால் உங்களால் ஃப்ரீயா இருக்க முடியாது. நீ மட்டும் போயிட்டு வா,'' என்றான்.

''நீங்களும் வந்தால் நல்லாயிருக்குமே?''

''எனக்கும் இங்கே வேலையிருக்கும்மா.''

''........''

'சொல்ல வந்ததை எப்படிச் சொல்வது?' என்று சில நொடிகள் தயங்கிய சுதர்சன், ''இதுவரையில் உன் இஷ்டத்தைச் சொல்றதுக்கான ஸ்பேஸ் உனக்கு நான் கொடுத்திருக்கேன் மைத்ரேயி. எப்போதுமே கொடுப்பேன். எதுவாக இருந்தாலும் வெளிப்படையா பேசி ஒரு முடிவுக்கு வரலாம். யோசிச்சு சொல்லு,'' என ஜீவனற்ற குரலில் ஒப்பித்தான்.



# 17

தனக்குத் தெரிந்த நம்பிக்கையான டிரைவருடன் மைத்ரேயியைத் தங்கள் வண்டியிலேயே சென்னைக்கு வழி அனுப்பிவைத்த சுதர்சன், கார் கண்ணிலிருந்து மறையும் வரை வாசலிலேயே நின்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மனமேயின்றி மெல்ல வீட்டினுள் செல்லத் திரும்பியவனுக்கு, காரிலிருந்து திரும்பித் திரும்பித் தன்னைப் பார்த்த மனைவியின் முகமே கண் முன் தோன்றியது.

மாதங்கியின் அழைப்பு வந்த தினத்தில் தங்களுக்குப் பிறக்கப் போகும் குழந்தைகள் பற்றியும் இங்கிருக்கும் மருத்துவ வசதி பற்றியும் பேசியது. அது நடந்து முடிந்து, ஆயிற்று இரண்டு தினங்கள்!

மற்றவரை மேலும் புண்படுத்திவிட்டால் என்ன செய்வதென்ற பயமும், தயக்கமும் இருவரின் நாவையும் கட்டிப் போட்டிருக்க, அதன் பிறகு அதைப் பற்றி பேசவேயில்லை.

'யோசித்து சொல்!' என்றவனுக்கு அப்படிச் சொன்னப் பொழுதும் சரி, இதோ... இப்பொழுது வண்டி மறைந்து, புழுதிப் படலம் மட்டும் தெரியும் இந்த வினாடியிலும் சரி, நெஞ்சின் ஒரு மூலையில் ஆசை தான்; நம்பிக்கை

தான். 'இல்லை... நான் தான் ஏதேதோ எண்ணி குழப்பிக் கொண்டேன்' என மைத்ரேயி சொல்வாளென்று!

ஆனால், அந்தப் புழுதி அடங்கினப் பிறகும் அவனது ஆசையும் நம்பிக்கையும் ஏனோ அடங்க மாட்டே னென்று சத்யாகிரகம் செய்ய, அவனுக்கு அவன் மேலேயே கோபம் எழுந்தது. கூடவே பயமும்!

ஒருவேளை மைத்ரேயியின் யோசனையின் பலன் எதிர்மறையாக அமைந்துவிட்டால்? தன்னால் வேறு இடத்திற்கு இடம் பெயர இயலுமா? அது மைத்ரேயிக் காக என்றாலும் கூட?!

இல்லை அவள் அப்படிச் சொன்னால் அதைத் தன் னால் தாங்கித் தான் கொள்ள முடியுமா?

தோட்டத்தில் பம்ப் செட்டை இயக்கிவிட்டவன் தலையை உலுக்கிக் கொண்டு தன்னையே நிந்தித்துக் கொண்டான்.

மைத்ரேயி இல்லாமல் லூசு தான் பிடிச்சுடுச்சு சுதர் சன் உனக்கு! கல்யாணமாகி வந்த புதிதில் வேண்டு மென்றால் அவள் அப்படி முடிவெடுக்கலாம். ஆனால்... இப்பொழுது?

சத்தியமாக அதற்கு ஒரு சதவிகித வாய்ப்பு கூட இல்லை! பாவம்! அவளே குழம்பியிருக்கிறாள். அவள் மனக் கலக்கத்தைத் தீர்க்காமல், நீயும் கோபப்பட்டு.. குழம்பி?! சுத்த மடையன்டா நீ!

ம்ம்ம்.. இரண்டு நாட்கள் அக்காவும் தங்கையும் சந் தோஷமாக இருக்கட்டும். அவளும் யோசிக்கட்டும். அப்புறம் போய் அவளைக் குண்டுக்கட்டா கட்டித் தூக் கிட்டு வந்துடறேன் என்று நினைத்தவனுக்கு நிம்மதி பெருமூச்சும் சின்னச் சிரிப்பும் ஒருங்கே வந்தது.



சுதர்சன் செந்தாமரைக்குளத்தில் குழப்பம் தெளிந்து, நிம்மதி பெருமூச்சு விட்ட அதே நேரத்தில் மைத்ரேயி யின் நெஞ்சில் ஏக்கம், குழப்பம். வேதனையென எல் லாம் கலந்த பெருமூச்சு எழுந்தது.

வழியெல்லாம் ஏதேதோ குருட்டு யோசனையில் போகாத ஊருக்கு வழியைத் தேடிக் கொண்டிருந்தவள், மாதங்கியையும் சுரேஷையும் கண்டப் பிறகும் தெளிந்தப் பாடில்லை.

குழப்பத்தை மறைத்து, சிரித்த முகமாக இருவரிடமும் நலம் விசாரித்து தங்கள் நலத்தையும் கூறியவள், டிரைவருக்கு மதிய உணவளித்து அவரை செந்தாமரைக் குளம் திரும்ப அனுப்பி வைத்தாள்.

''இரு அக்கா! நான் வந்து சேர்ந்ததை அத்தானுக்குச் சொல்லிட்டு வந்துடறேன்'' என்று தனக்காக மாதங்கி ஒதுக்கிக் கொடுத்திருந்த அறைக்குச் சென்றவள் சுதர் சனின் அலைபேசிக்கு அழைத்தாள்.

''ஹலோ, மைத்ரேயி! நல்லபடியா சென்னை போய் சேர்ந்தாச்சா?'' என வரலக்ஷ்மியின் குரல் அந்தப் பக்கத் திலிருந்து கேட்கவும் ஒரு நொடி ஒன்றும் புரியாமல் விழித்தவள், ''அத்தை! வந்து சேர்ந்துட்டேன் அத்தை. அத்தான் எங்கே அத்தை? அவரோட போனுக்குத் தானே கூப்பிட்டேன்?'' எனக் குழம்பினாள்.

''தம்பி நீ கிளம்பினப் பிறகு தோட்டத்துக்குப் போன வன் தான். இன்னமும் வீட்டுக்கு வரலை. அவனோட போனும் இங்கே தான் இருந்தது. போனில் இப்ப உன் னோட போட்டோவை பார்த்துட்டுத் தான் நானே எடுத் தேன்.'' என்றவர் அவளுடனும் மாதங்கியுடனும் சில நிமிடங்கள் பேச,

அவரிடம், ''அத்தானைப் பேசச் சொல்லுங்க அத்தை. நான் திரும்ப அப்புறம் கூப்பிடறேன்'' என்றுவிட்டு பேசியை வைத்தாள் மைத்ரேயி.

சுதர்சனுடன் பேச முடியாத கவலை ஒருபுறமும், அவள் மீது கணவனுக்கு கோபமோ? அதனால் தான் அவள் அழைப்பாள் என எதிர்பார்த்து பேசியை வீட்டி லேயே வைத்துவிட்டு போய்விட்டானோ என்ற பயம் மற்றொரு புறமும் மைத்ரேயியை அழுத்த, அடுத்தது காட்டும் பளிங்கு போன்ற அவளது முகத்திலிருந்தே தங்கையின் மனதைப் படித்த மாதங்கி, அதற்கான காரணத்தைத் தானே கற்பித்துக் கொண்டாள்.

''செந்தாமரைக்குளத்திலிருந்து கிளம்பி நாலு மணி நேரம் கூட ஆகியிருக்காது. அதுக்குள்ள இத்தனை ஃபீலிங்க்ஸா மைத்ரேயி? திஸ் இஸ் டூ மச்!'' தங் கையைக் கேலி செய்த மாதங்கி,

கணவனிடம், ''சுரேஷ்! பாருங்க ஹஸ்பண்டைப் பிரிஞ்சு வந்தால் இப்படி சோகமா இருக்கணும்,'' என்று சிரித்தாள்.

''மகி! அதை நீ என்னைப் பார்த்து சொல்லக் கூடாது. உன்னிடமே தான் நீ சொல்லிக்கணும். பார்க்கலாம்! பிரசவத்திற்கு என்னை விட்டுவிட்டு நீ உங்க அம்மா வீடு போகும் போது, நீ எப்படி உருகுறேன்னு...'' மனை வியைப் பதிலுக்குக் கிண்டல் செய்த சுரேஷ்,

''ஹ்ம்ம்... இருந்தாலும் உன் தங்கை அளவுக்கு வேண்டாம்டா. பாரு! நம்ம ஜூனியரைப் பற்றிக் கூட விசாரிக்காமல்... நீ சொன்னது கரெக்ட் தான் மகி! திஸ் இஸ் டூ மச்!'' என மைத்ரேயியின் கவனத்தைத் திருப்ப சோகம் போன்று சொன்னான்.



''அச்சோ மாமா! அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை. நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து என்னை ஓட்டாதீங்க. சொல்லுக்கா! 'செக்-அப்'புக்கு எல்லாம் ஒழுங்கா போறியா? என்ன குழந்தைன்னு கேட்டீங்களா? பேரு என்ன செலக்ட் செய்திருக்கீங்க ரெண்டு பேரும்?''

இத்தனை நேரமாகக் கேட்காததற்கும் சேர்த்து இப் பொழுது கேள்வி மழையில் இருவரையும் நனைய வைத்த மைத்ரேயியைப் பார்த்து சிரித்த சுரேஷ், ''ஓ! மை காட்! உன்னை மாதிரியே ஸ்டார்ட்டிங் தான் ட்ரபுல் போல உன் தங்கைக்கு. ஆரம்பிச்சுட்டால் மடைத் திறந்த வெள்ளம் தானா? என்னை மாதிரியே என் சகலையும் பாவம்!'' என்று விளையாட்டாக சுதர்சனுக்காகக் கவலைப்பட்டான்.

தாய்மையின் அழகுடன் இப்பொழுது தெரிய ஆரம் பித்திருந்த லேசான மேடிட்ட வயிறுடன் கிளுக்கிச் சிரித்த மாதங்கியைப் பார்த்த மைத்ரேயிக்குக் கண்கள் கனிந்து மனம் பூரித்தது.

வரலக்ஷ்மி செய்துக் கொடுத்தப் பலகாரங்களைத் தமக்கைக்கு எடுத்துக் கொடுத்தவள், ''நான் போகும் போது அக்காவை என்னோட அனுப்பி வைங்க மாமா. அம்மாவும் வேலைக்குப் போறாங்க இல்ல? அவங்களுக் கும் கஷ்டம் தானே? எங்க அத்தையும் உன்னைக் கூட்டிட்டு வரச் சொன்னாங்க அக்கா. போனில் கூட சொன்னாங்களே? அத்தை பத்தியச் சாப்பாடெல்லாம் நல்லா செய்வாங்கக்கா. உன்னை நல்லா கவனிச்சுக்கு வாங்க.'' என்று தன் மாமியாருக்கு சான்றிதழ் கொடுத் தாள்.

''பத்தியச் சாப்பாடெல்லாம் உன்னோடவே வைச் சுக்கோ மைத்ரேயி. எனக்கு வேண்டாம். இந்த வீக்-என்ட்

அம்மாவும் அப்பாவும் ஹைதராபாத் வரைக்கும் போயிருக்காங்க. வர நாலு நாள் ஆகும். இல்லைன்னா வீக்-என்ட் வந்து சமைச்சுக் கொடுப்பாங்க. அதோட எனக்கும் வேலையிருக்கே? அதை விட்டுட்டு எங்கே வரப் போக?''

அளவளாவிக் கொண்டே எல்லாவற்றையும் எடுத்து வைத்தவர்கள், பேசாத இத்தனை நாள் கதையையும் சேர்த்து வைத்துப் பேசினார்கள். அவர்களுக்குத் தனிமைக் கொடுத்து சுரேஷும் வெளியே வேலை இருப்பதாகச் சென்று விட, இருவரும் திருமண வாழ்க்கை, குடும்பம், அக்கம் பக்கம் என்று எல்லாவற்றையும் அலசிக் காயப் போட்டனர்.

''நாங்க உண்டு, எங்க வேலை உண்டுன்னு இருக்கோம் மைத்தி. சுரேஷோட அம்மாவும், அப்பாவும் நாகர்கோவிலில் இருக்காங்க. அவங்களால உதவியுமில்லை... உபத்திரவமும் இல்லை...'' என்று ஒரு கணம் இழுத்த மாதங்கி,

''ஆனால், அவங்களுக்கும் அவங்கப் பையன் தன்னோட இஷ்டத்திற்குக் கல்யாணம் செய்துக்கிட்டான் என்ற மனக்குறை இருக்கும் போல. என்னோட அத்தனை ஒட்ட மாட்டாங்க. நாங்களும் எப்போதாவது தானே அவங்களைப் பார்க்கிறது? அதனால நானும் அதைப் பெருசு செய்றதில்லை. சுரேஷும் ரொம்ப நல்ல மாதிரி. ரெண்டு வருஷம் யாருமில்லாமல் தனியா இருந்ததே எங்களை இன்னமும் பலமா இணைச்சிருக்கு. இப்போ ஜூனியரும் வரப் போறாங்க. நாங்க சந்தோஷமா இருக்கோம் மைத்ரேயி'' என்றாள்.

அவள் கரங்களைப் பிடித்துக்கொண்ட மைத்ரேயி, ''ரொம்ப சந்தோஷம்க்கா. கொண்டவன் துணையிருந்தால் கூரை ஏறி ஆடலாமே?'' எனச் சிரிக்க, அதோ இதோவென எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தக் கணவனின் நினைவு 'நான் இங்கே தான் இருக்கிறேன்' என உள்ளே நுழையவும், சுதர்சன் பற்றி மாதங்கி கேட்கவும் சரியாக இருந்தது.



''அத்தானும் ரொம்ப நல்ல மாதிரிக்கா. என்னை அங்கே, எங்க வீட்டில் எல்லோருமே தாங்கு தாங்குன்னு தாங்குவாங்க'' என்றவளுக்குப் பெருமையில் முகம் ஜொலித்தது.

''அத்தானுக்கு ரொம்ப பொறுமை. எதுக்கும் அத்தனை சீக்கிரத்தில் கோபம் வராது. அவருக்குக் கோபம் வந்தால் அவர் டென்ஷன் ஆகறதுக்குப் பதில், நான் தான் டென்ஷன் ஆகிடுவேன். ஏன்டா அவருக்கு நாம கோபத்தை வர வைச்சோம் என்று நம்மை நொந்து நூடுல்ஸ் ஆக்கிடுவார். ஆனால் இது எல்லாமே கத்தி ஆர்ப்பாட்டம் செய்யாமல்!'' அக்காவைப் பார்த்துப் புன்னகை சிந்தியவளின் முகம் மெல்ல வாடி, கண்கள் தரையைப் பார்த்தது.

இப்பொழுதும் அப்படித்தான் மௌனமாக தன் கோபத்தைக் காண்பிக்கிறானோ?

''சுரேஷ் அப்படியெல்லாம் இல்லை, மைத்தி. கோபம் வந்தால் சண்டை தான். ஆனால் எங்களுக்குள்ளே எல்லா சண்டையும் ஒரே மணி நேரத்தில் முடிஞ்சுடும். ஹ்ம்ம்.. ஆனால் இப்போ சண்டை போட கூட நேரம் இருக்க மாட்டேங்குது. அந்தளவிற்குப் பிசி ஆகிட்டார். ஏதோ இன்றைக்கு நீ வந்திருக்கே. கூடவே இது ஞாயிற்றுக் கிழமை என்பதால் தலைவர் வீட்டில் இருக்கார். இல்லைன்னா அய்யா எப்போதுமே பிசி தான்.

வெளியே வேலை தான்'' அலுத்துக் கொண்டாள் மாதங்கி.

தன் குழப்பத்தைப் பின்னுக்குத் தள்ளி ஏனென்று வினவிய மைத்ரேயியிடம், ''இப்போ புதுசா ஹார்ட்-வேர் பிசினஸ் ஒன்று தொடங்கி இருக்கார் உங்க மாமா. எப்பவும் செய்ற வேலையோட சேர்த்து, இந்த பிசினஸ் முழுசா அவரோட நேரத்தை எடுத்துக்குது. ஏதாவது கேட்டால் எல்லாம் நம்ம ஜூனியர்க்காகத் தானே என்று என்னை சமாதானம் செய்யத் தான் சரியா இருக்கு அவருக்கு. நைன் டு ஃபைவ் ஜாப் என்று தான் பெத்த பேரு! ஆனால் முதல்லேயே நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து ஒண்ணா இருக்கிறதே அபூர்வம். இப்ப அது குதிரைக் கொம்பா போச்சு. தப்பித் தவறி இருந்துட்டாலோ, ஏன் என்கூட நேரத்தைச் செலவழிக்க மாட்டேங்கிறீங்க என்று என்னோட நச்சரிப்பு வேற! பாவம் சுரேஷ்! மத்தளத்துக்கு ரெண்டு பக்கம் இடி என்றால் இவருக்கு நாலு பக்கமும் இடி தான்'' என்று புலம்பினாள் மூத்தவள்.

ஏதாவது ஒரு நகரத்தில் அலுவலக வேலைப் பார்த்தாலோ இல்லை ஏதாவது தொழிலை எடுத்து நடத்தினாலுமே தம்பதியர் சேர்ந்திருந்து நேரத்தைச் செலவழிப்பது என்பது இந்தக் காலச் சூழலில் அரிதான ஒன்று தானா?

சுதர்சனை திருமணமானப் புதிதிலேயே வற்புறுத்தி முட்டாள்தனமாக நகரத்திற்கு அழைத்து வந்திருந்தால்... தன்னுடையப் பாடும் இப்படித்தான் இருந்திருக்குமோ?

என்னது முட்டாள் தனமாகவா?

அன்றிரவுப் படுக்கையில் படுத்தபடி, எல்லாவற்றையும் யோசித்துக் கொண்டிருந்த மைத்ரேயிக்கு



உறக்கமே வரவில்லை. அவள் எண்ணங்களின் அடிப்படையே ஆட்டம் காணும் போன்றிருந்தது!

நொடிக்கு ஒரு தரம் கைப்பேசியைப் பார்த்தவண்ணமே இருந்தாள். ஏன் இன்னமும் சுதர்சன் அவளை அழைக்கவில்லை? நான் பேசியிருப்பதாக அத்தை சொல்லியிருப்பார் தானே என ஒன்றுக்கு ஒன்று தொடர்பில்லாத, பலதரப்பட்ட எண்ணங்களோடும் குழப்பத்தோடுமே நித்திரையில் ஆழ்ந்தாள்.

அடுத்த நாள் காலையில் அலுவலகத்தில் திடீரென்று முக்கிய வேலை வந்திருப்பதாகவும் விடுப்பு எடுக்க முடியாதென்றும் சொல்லிவிட்டு மாதங்கியும், சுரேஷும் சென்றுவிட வீட்டில் வேலையெல்லாம் முடித்துவிட்ட மைத்ரேயி, நான்கு சுவற்றையும் வெறித்தவாறு கொட்டு கொட்டென்று உட்கார்ந்திருந்தாள்.

திருமணத்திற்கு முன்னும் கல்லூரி விடுமுறை நாட்களில் பெற்றோர்கள் வேலைக்குச் சென்ற பிறகு இதே நிலை தான் என்றாலும், இப்பொழுது இந்த ஒரு வருடமாக தூய்மையான காற்றையும், திறந்த வெளியையும், பச்சைப் பசுமையையும் ரசித்துப் பழக்கப்பட்டவளுக்கு, திறந்திருந்த ஜன்னலின் வழியே தெரிந்த புகைப்படிந்த வானமும், வாகன நெரிசலும், காதைக் கிழிக்கும் வண்டிகளின் ஹாரன் ஒலியும் சகிக்க முடியாததாக இருந்தது.

இவள் எண்ணங்களைக் கலைக்கும் வகையில் 'டிங்' என்று அழைப்பு மணி சத்தம் ஒலிக்க, 'அக்கம்-பக்கத்தில் யாரோ ஒரு ஃபேமிலி இருக்காங்க என்ற அளவில் தான் தெரியும் மைத்தி. ஏதோ விசேஷ நாளுன்னா வடை பாயாசம் கொடுப்பதோட சரி. பத்திரமா இரு.'

என்று நூறு தடவை தமக்கை சொல்லிவிட்டுச் சென்றிருக்க, யாராயிருக்குமென ஒருவித பயத்துடனே 'ஸீ த்ரூ' கதவு வழியாகப் பார்த்தாள்.

வயதான பெண்மணி ஒருவர் நின்றிருந்ததைப் பார்த்து கதவை லேசாகத் திறந்த மைத்ரேயியிடம், ''ஒரு கப் சர்க்கரை இருக்குமா? நான் இதோ பக்கத்து வீட்டில் தான் இருக்கேன். நீ தான் நேத்து புதுசா வந்த பொண்ணா? என் மருமகள் சொன்னாள். நீ என்ன சுரேஷுக்குத் தங்கையா? முக ஜாடையைப் பார்த்தால் அவன் பெஞ்சாதிக்கு உடன்பிறப்பு போல தானிருக்கு. உங்க அம்மாவை நான் பார்த்திருக்கேன். சர்க்கரை கேட்டேனே?''என்று கேள்வி விசாரணையைத் தொடங்கியவர் இரவல் மட்டும் கேட்க வந்ததாகத் தெரியவில்லை.

அவரைத் தனியே ஹாலில் விட பயந்து தன்னோட அடுப்படிக்கு அழைத்துச் சென்றவள் சர்க்கரையை எடுத்துக் கொடுக்கும் முன், கண்களை எட்டு திசைக்கும் பரவவிட்டார் முதியவர்.

''யார் வந்தாலும் நீ பாட்டுக்குக் கதவைத் திறந்துடாதேம்மா. சைல்ட் லாக்கை போட்டுட்டே என்னன்னு கேளு. எல்லாரும் என்னைப் போல் நம்பகமானவங்களா இருக்க மாட்டாங்க'' என்ற இலவச அறிவுரையை வாரி வழங்கியவர்,

''இப்படித்தான் பாரு நம்ம தெருவிலிருக்கிற இன்னொரு அபார்ட்மெண்ட்டில் 'மார்க்கெட்டிங் ரெப்' என்ற பேரில் வீட்டில் தனியா இருந்த லேடிகிட்டே கொள்ளையடிச்சுட்டு போயிட்டாங்க. அந்த அபார்ட்மெண்ட் வாட்ச்மேனும் இதுக்கு உடந்தையாம்! யாரையும் நம்பாதடி



யம்மா.'' என்ற செய்தியுடன் சர்க்கரையை வாங்கிக் கொண்டு போகாமல், சட்டமாக ஹால் சோபாவில் கால் மேல் கால் போட்டபடி உட்கார்ந்தவரை ஆச்சரியத்துடன் பார்த்தவளிடம் தனது ஒருவழி சம்பாஷணையைத் தொடர்ந்தார்.

''புருஷன் கூட சண்டையா குழந்தே? அதான் இங்கே வந்துட்டியா? உங்க அம்மா-அப்பாவிற்கு தெரியுமா? எப்பவும் வாரா வாரம் வருவாங்களே? அவங்கக் கூட இந்த வாரம் வரக் காணோமே? தெரியாதா? இது மாதிரி சண்டை போட்டுட்டெல்லாம் வரக் கூடாதுடியம்மா. அப்புறம் டைவர்ஸ் அதிதுன்னு, கீழ் வீட்டு பொண்ணு மாதிரி ஆயிடும்.''

என்ன இவர்கள் பாட்டிற்கு வந்தார்கள்... ஏதேதோ பேசுகிறார்கள்? திறந்த வாயை மூடவே மாட்டார்களா?

''என்னங்க நீங்க? அதெல்லாம் இல்லைங்க...'' மைத்ரேயி சொல்லி முடிப்பதற்குள்,

''அதானே பார்த்தேன். என் மருமகளிடம் அப்பவே சொன்னேன். அதெல்லாம் இருக்காது... எல்லோரும் என்ன உன்னை மாதிரியேவா இருப்பாங்கன்னு. பாதி நாள் அவள்... அவங்க அம்மா வீட்டில்தான் இருப்பாள். ஏதோ நானா இருக்கிறதனால் அவளை சகிச்சுட்டு, வாயை மூடிகிட்டு இருக்கேன். இதேது வேற ஒரு மாமியார் அவளுக்கு வந்திருக்கணும். இதுக்குள்ள நாலு வீட்டுக்கு அவளைப் பற்றி தண்டோரா போட்டு சந்தி சிரிக்க வைச்சிருப்பாள்'' எனத் தன் அருமை பெருமைகளை அள்ளி வீசினார்.

அருகிலிருந்த ஜக்கிலிருந்து மடமடவென்று நீரைக் குடித்த மைத்ரேயிக்கு காதிற்குள் 'கொய்ங்' என்று சத்தம் கேட்டது!?

குரலைத் தணித்துக் கொண்ட முதியவர், ''ஆமா...! இப்பவெல்லாம் உங்க அக்கா புருஷன், வீட்டில் தங்குறதே இல்லையே? அவங்களுக்குள்ளே ஏதாவது சண்டை, சச்சரவா? அதைத் தீர்த்து வைக்கத் தான் வந்தியா?'' என்றார் கண்களில் விஷமத்துடன்.

'இப்படி பேசுபவர்களை விரட்ட செந்தாமரைக் குளத்தில் இருப்பது போன்று இங்கேயும் யாராவது பெரியவர்கள் இருக்க மாட்டார்களா?' என்ற எண்ணம் ஓங்க முகமும் குரலும் கடினமுற்ற மைத்ரேயி, ''எனக்கு நிறைய வேலையிருக்கு. நீங்க கிளம்புறீங்களா?'' என்றாள்.

கழுத்தை நொடித்துக் கொண்டு, ''எனக்கும் தான்மா வேலையிருக்கு. எனக்கென்ன வேலை வெட்டியில்லைன்னு நினைச்சுட்டியா? அச்சோ! மணி பதினொண்ணு ஆச்சா? டிவியில் சீரியலுக்கு நேரமாச்சு போ! நடுவிலேயே கரெண்ட் வேற கட் ஆகாமல் இருக்கணும். அந்த மாமியார் அவளோட மருமகளை என்ன செய்தாளோ தெரியலை...'' என்ற அதி முக்கியக் கவலையோடு அவர் கிளம்பிப் போக, புயலடித்து ஓய்ந்தது போன்றிருந்தது மைத்ரேயிக்கு.

இவர் மருமகள் பாதி நாட்கள் அம்மா வீட்டிற்கு சென்றாலும் அந்த மருமகளைத் தவறொன்றும் சொல்ல முடியாது போலேயே!?

* * *

அன்று இரவு மணி பதினொன்றுக்கும் மேல் ஆகியிருக்க, உறக்கம் மருந்துக்குக் கூட மைத்ரேயியின் அருகில் வருவேனா என்று அடம் பிடித்துக் கொண்டிருந்தது.



மாதங்கியின் வீடிருப்பது அடையார் என்பதால், கடல் பக்கம் தான். மைத்ரேயி அவளிருந்த அறை பால்கனியிலிருந்துப் பார்க்க, சற்று தூரத்தில் தெரிந்த கடல், முழு நிலவின் வெளிச்சத்தில் பளபளத்தது. ஆனால், அந்தக் கடலையோ, வானில் பவனி வரும் முழு நிலவையோ, சுகமாக வீசும் தென்றலையோ ரசிக்கும் மனநிலையில் தான் அவளில்லை.

பால்கனி கைப்பிடிச் சுவரைப் பிடித்தவாறு நிலவை வெறித்தவளுக்கு ஏக்கப் பெருமூச்சு சூடாக வெளி வந்தது. இவள் ஏக்கத்தை மேலும் பெரிதாக்குவது போன்று கீழ் வீட்டிலிருந்து சுதர்சனுக்கு மிகவும் பிடித்த பாடல் காற்றில் மிதந்து வந்து, இவள் செவிகளில் விழுந்தது.

''பால் போலவே... வான் மீதிலே....
யார் காணவே.. நீ காய்கிறாய்...?
நாளை இந்த வேளை பார்த்து ஓடி வா நிலா
இன்று எந்தன் தலைவன் இல்லை சென்று வா நிலா
தென்றலே என் தனிமை கண்டு நின்று போய் விடு
தென்றலே என் தனிமை கண்டு நின்று போய் விடு''

இந்தத் தென்றலையே தோக்கி கணவனைச் சென்றடைந்து விட்டாலென்ன?

அன்றொரு நாள் பௌர்ணமி இரவில் செந்தாமரைக் குளம் வீட்டு மொட்டை மாடியில் கணவனுடன் உல்லாசமாக இருந்தது நினைவில் வந்து, அவளது வேதனையை மேலும் அதிகப்படுத்தியது.

ஒரு வாரம் அக்கா வீட்டிலிருந்து விட்டு வருகிறேன் என்று சொன்னது என்ன கல்லில் செதுக்கிய

கல்வெட்டா? இல்லை அவன் தான், போதும் அங்கிருந்தது, 'வா' என அழைத்தால் தான் என்ன?

திருமணமான இந்த ஒரு வருடத்தில் அவள் ஒரு நாள் கூட அவனை விட்டுப் பிரிந்திருந்தது இல்லை. இந்த ஏக்கமும் தாபமும் எனக்கு மட்டும் தானா? அவனுக்கு இல்லையா?

நாள் முழுதும் மொட்டு மொட்டென்று நான்கு சுவற்றைப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தவளுக்கு இரவு நேரமாக ஆக, கணவனின் நினைவும், கூடவே அவன் தொடர்பான செந்தாமரைக்குளம் வீடும் மற்றதும் நிறை யவே நினைவு வந்தது. யாரை... எதை எடுத்தாலும் அங்கே சுற்றி, இங்கே சுற்றி அவள் நினைவெல்லாம் அவனிடமே வந்து நின்றது.

'மாமா மருந்து சாப்பிட்டாரா தெரியலையே? அத் தான் எடுத்துக் கொடுத்தாரோ இல்லையோ? அத்தை யோட மூட்டு வலி தைலம் நான் எங்கே வைச்சேன்னு அவங்களுக்கு நினைவு இருக்குமா? சுதர்சனுக்குக் கட்டாயமிருக்கும்.'

அத்தையும் மாமாவும் இத்தனை வயதிற்கு மேல் எப்படிச் சொந்த மண்ணை விட்டு வருவார்கள்? எனக்கே அவர்களின் நினைவாகவே இப்படியிருக் கிறதே? அவர்களில்லாமல் சென்னையில் வசிக்க சுதர் சனால் எப்படி முடியும்? பெற்றவர்களைப் பிள்ளையிட மிருந்து பிரித்தப் பாவம் எனக்கா?

'ம்க்கும்! ஆடு மாடு எல்லாத்தையும் கூட பார்த்துக்க ஆளே இல்லை தான்!' என்று அவனைக் குற்றம் சொன்ன எனக்கே ஐந்தறிவு பிராணியான பைரவன் கூட



சாப்பிட்டானா இல்லையா என்ற கவலைத் தோன்று கிறதே?

இப்படி எல்லோரையும் எல்லாவற்றையும் விட்டு விட்டு வேறு இடத்தில் போய் வசிக்க தன் கணவனால் மட்டும் எப்படி முடியும்? எனக்காக வந்தாலும் அவன் சந்தோஷமாக இருப்பானா? எனக்காக அப்படிக் காட்டிக் கொண்டாலும் உள்ளே நொறுங்கி விடமாட்டானா?

வாழைநார் தொழில் தொடங்கும் பொழுது, 'எதை யும் பாதியில் விட முடியாது' என்று அவன் சொன்னது எல்லாவற்றையும் சேர்த்து தானோ?

அவன் வேர் அது என்று தெரிந்த எனக்கு, என் வேர் எங்கே என்று ஏன் இத்தனை நாள் புரியவில்லை? புரிந் தாலும் அது எனக்குத் தெளிய, இந்தப் பிரிவு அவசிய மானதாகி விட்டதா என்ன?

கண்ணில் துளிர்த்த நீரோடு கணவனை அழைத்தவள் ஒரு அழைப்பிலேயே அது எடுக்கப்பட்டு, ''கண ணம்மா!'' என்று உருகிய விளிப்பில் முழுதும் உடைந் தாள்.

''ஹே மைத்தி! அழறியா என்ன?'' என்ற பதட்டமான குரலில், தன்னைச் சமன் செய்துக் கொண்டவள், ''இல்லை அத்தான். பால்கனியில் நின்னுக்கிட்டு இருக் கேன். அதான் குளிர் காற்றில் லேசா குளிருது'' என்றாள்.

''எப்படியிருக்கீங்க அத்தான்? சாப்பிட்டீங்களா? ஏன் இன்னமும் தூங்காம இருக்கீங்க?''

மைத்ரேயி மெல்லிய குரலில் கேட்க, ''நீ ஏன் இன்ன மும் தூங்காமல் இருக்கே?'' என்றான் பதிலுக்கு.

''எனக்கு இங்கே ரொம்ப போர் அடிக்குது. தூக்கமே வரலை அத்தான். முழு நிலவு காயுது. அதைப்

பார்த்துட்டே உட்கார்ந்துட்டு இருக்கேன்.''என்ற மனைவி யின் ஏக்கக் குரல் சுதர்சனை எட்ட,

''இங்கே ஒரே அமாவாசையா இருக்குடா!'' என்று பெருமூச்சு விட்டான் அவன்.

''இங்கே பௌர்ணமி என்றால் செந்தாமரைக் குளத்திலும் பௌர்ணமி தான் அத்தான். நீங்க என்ன வேறேதோ சொல்றீங்க?''

படுக்கையில் நன்றாக சாய்ந்து வசதியாக உட்கார்ந்து கொண்டு புன்னகைத்தவளின் செவியில், ''என் நிலவு நீ அங்கே சென்னைக்குப் போயிட்டே? அப்போ இங்கே அமாவாசை இருட்டு தானே கண்ணம்மா இருக்கும்...?'' எனக் கணவனின் கொஞ்சம் ஒலிக்க,

''சுதா! என்னை வந்து சீக்கிரம் கூட்டிட்டுப் போங்க! எனக்கு இப்பவே உங்களைப் பார்க்கணும். உங்க நெஞ்சில் சாய்ஞ்சுக்கணும்'' என்றாள் கண்ணீர் குரலில்.

''ஹே! கண்ணம்மா! ப்ளீஸ் அழாதேடா! என் செல்ல மில்லை? எனக்கு மட்டும் நீயில்லாமல் இங்கே இருக்கப் பிடிக்குதா? எப்படா உன்னைப் பார்ப்போம்ன்னு இருக்கு. ரெண்டு நாள் கூட முழுசா முடியலை. அதுக்குள்ள நீ அங்கேயிருந்து கிளம்பிட்டால், அப்புறம் உங்க அக்கா ரொம்ப ஃபீல் செய்வாங்க. இன்னமும் ரெண்டே நாள் பொறுத்துக்கோ. மூணாவது நாள் நான் அங்கே வந்துட றேன்'' என்று மேலும் சில மணித்துளிகள் மனைவி யுடன் பேசிவிட்டு, பேசியை வைத்தவனுக்கும் அங்கே இருப்புக் கொள்ளவில்லை.

எப்பொழுது மனைவியைத் தன் கையணைப்பில் இருத்திக் கொள்ளலாமென்ற ஏக்கத்துடன் அவளுடைய தலையணையில் முகம் புதைத்தான்.





# 18

சிந்தனையில் நினைப்பதெல்லாம் கணவனைப் பற்றித் தான்... எந்தப் பேச்சு யாரிடம் பேசினாலும் ஏதாவது ஒரு கட்டத்தில் சுதர்சனைப் பற்றிய பேச்சும் அதில் இடம் பிடிக்கிறது. ஆனாலும் மைத்ரேயியின் நெஞ்சிலிருந்த பிரிவு ஏக்கத்தை எந்தப் புற காரணியாலும் துளியளவு கூட சரிக்கட்ட முடியவில்லை.

அடுத்த நாள் மதியம் வினீத்-நீரஜாவுடன் உணவகத் திற்கு வந்தவள் இயல்பாகவே வளைய வந்தாலும், அவளின் அகத்தின் ஏக்கத்தை முகமும் பிரதிபலித்ததோ என்னவோ?

வினீத், ''என்ன மைத்ரேயி? தட்டில் சாப்பாட்டை வைச்சுட்டு என்னவோ யோசனையில் இருக்கே? எதுவும் பிடிக்காததை ஆர்டர் செய்துட்டியா?'' என்றான் அக்கறையாக.

''ப்ச்! அதெல்லாமில்லை வினீத். சுதர்சன் சாப்பிட் டாரா என்னன்னு தெரியலை. அதான் யோசிச்சுட்டு இருக்கேன்.''

நீரஜா, ''போன் செய்து கேட்க வேண்டியதுதானே மைத்ரேயி?'' என்றாள் தோழமையுடன்.

''இதுவரைக்கும் இங்கே சென்னை வந்ததிலிருந்து அவரிடம் சரியாவே பேசவே முடியலை...'' என்ற போது, 'ம்க்கும்! எத்தனை மணிநேரம் பேசினாலும் உனக்குப்

பத்தாதுன்னு சொல்லு...' என்று உள்ளிருந்து எழுந்த மனசாட்சியின் குரல் அவளுக்கு கேட்கவேயில்லை.

தொடர்ந்து, ''எப்போதுமே சுதர்சன் போனில் அவ்வளவா பேசவும் மாட்டார். கல்யாணத்திற்கு முன்னாடியும் கூட, அவசியமிருந்தால் மட்டும் அஞ்சு நிமிஷம் பேசுவார். அவ்வளவுதான். ஃபர்ஸ்ட் டைம் இப்படி நானும்.. அவரும் தனியா..'' என்று சொன்னவளுக்குக் கண்கள் கலங்குவதை மறைக்கப் பெரும்பாடாய் இருந்தது.

''ஓ!'' என்ற நீரஜா அவளது கரத்தை ஆறுதலாய் அழுத்த, மைத்ரேயி லேசான 'மோனாலிசா' வகை முறுவலுடன் மற்ற இருவரையும் ஏறிட்டாள்.

''என்னை விடுங்க. நீங்க ரெண்டு பேரும் எப்போ வர்றீங்க எங்க ஊருக்கு? ஏதாவது சாக்கு போக்கு சொல்லாமல் கட்டாயம் டைம் இருக்கும் போது வரணும். சுதர்சனும் சொல்லச் சொன்னார்'' என்ற மைத்ரேயியின் அழைப்பை ஏற்று கூடிய விரைவிலேயே செந்தாமரைக் குளத்திற்கு வினித்தும், நீரஜாவும் வருவதாகச் சொன்னார்கள்.

அப்பொழுதுதான் நினைவு வந்தவனாக, ''ஹே! உன் பேட்டியைப் படித்தோம் மைத்தி. அம்மணி பயங்கரமா பின்னி பெடலெடுக்கறீங்கப் போல? சூப்பர் மைத்தி. கங்கிராட்ஸ்!'' என்று வினித் வாழ்த்த,

நீரஜா, ''நானும் அதைப் படிச்சேன். எத்தனை விஷயங்கள் விவசாயத்தில் தெரியாமலே இருந்திருக்கேன்னு தோணுச்சு. இனிமேல் கட்டாயம் விவசாயத்தைப் பற்றியும் தெரிஞ்சுக்கணும். நம்மாலான வரையில் மண்ணோட வளத்தை குறைக்காமலிருக்க பிளாஸ்டிக் பையோ, கப்போ உபயோகிக்கக் கூடாதுன்னு நினைக்கிறேன். எந்த அளவுக்கு கடைப்பிடிக்கிறேன்னு பொறுத்திருந்து தான் பார்க்கணும்'' என்றாள்.



''தேங்க்ஸ் ஃபார் யுவர் விஷஸ். என்னை இந்த அளவுக்கு விவசாயத்தில் நாட்டம் வரவைச்சதில் பெரும் பங்கு சுதர்சனுக்குத் தான். அதனால் போற்றலும், தூற்றலும் அவருக்குத் தான் போகணும்'' என்று கணவனைப் பற்றிய பேச்சில் உள்ளம் துள்ள அதே உற்சாகத்துடன், ''ம். சொல்லு... டெல்லியில் இருந்து எப்போ வந்தே நீரஜா?''என்று விசாரித்தாள்.

''எங்கே என்னை எங்க அம்மா வீட்டில் இருக்க விட்டார் இவர்? மூணாவது நாளே என்னைக் கூப்பிட்டு வர டெல்லிக்கு அய்யா வந்துட்டார். எல்லாம் நீ மந்திரிச்சு விட்டதோட மகிமைன்னு அப்புறம் தான் தெரிஞ்சுது'' என்று கணவனிடம் நீரஜா கண் சிமிட்ட,

மைத்ரேயி, ''அப்படியெல்லாமில்லை! அய்யா அன்றைக்கு நான் பேசும் போதே மந்திரிச்சுவிட்ட மாதிரி தான் இருந்தான். நான் வேற அவன் மேலேயும் தப்பிருக்குன்னு சொன்னதும் உடனே டெல்லி ஃப்ளைட்டை பிடிச்சிருப்பான்'' என்று நண்பனுக்காகவும் பரிந்து பேசினாள்.

''ஹே மைத்தி! நீரு பேச்சை மட்டும் நம்பாதே! மேடம்கிட்டே நான் கிளம்பி வர்றதா போனில் சொன்னதும்.. 'நானே வந்துடறேன்-உனக்கெதுக்கு அலைச்சல்' என்று என்னையே திருப்பி கேட்டாள். இப்போ மட்டும் பேசறதைப் பார்த்தியா?'' என்ற வினித் மனைவியைப் பற்றிய பெருமிதத்தில் முகம் மலர்ந்தான்.

இருவரின் பேச்சிலும் முறுவலித்த மைத்ரேயி, ''இப்போ எப்படி இருக்கீங்க ரெண்டு பேரும்?'' என்றாள் அக்கறையுடன்.

''எங்கே? நாங்க ரெண்டு பேரும் போனும், கையுமா நல்லாவே குடித்தனம் நடத்தறோம்'' என்று சிரித்த படியே சொல்லிய வினீத், நீரஜாவிடம் பரிசாக இரண்டு இடிகளைப் பெற்றுக் கொண்டான்.

''ஏன் வினீத் அப்படிச் சொல்றே?''

ஒரு நீண்ட பெருமூச்சுடன், ''என்ன பண்றது? என் ராசிக்கு 'முன் தூங்கிப் பின் எழும் பத்தினி' வந்து வாய்ச்சு இருக்காள்'' என்று வினீத் சிரிப்புடன் சொல்ல,

நீரஜா போலியாக வருத்தம் தெரிவித்தபடியே, ''என் ராசிக்கு ஒரு நாளைக்கு இருபத்தஞ்சு மணி நேரம் வேலைப் பார்க்கிற புருஷன்...'' என்று வம்பிழுத்தான்.

மைத்ரேயி, ''உனக்கு இது தேவையா? இதைத்தான் வாய் கொடுத்து வம்பை விலைக்கு வாங்கறதுன்னு சொல்றது...'' என்று கமெண்ட் சொன்னாள்.

''ஒரு புது ப்ராஜெக்ட் வேலை போயிட்டு இருக்கு மைத்ரேயி. அதை நான் தான் லீட் செய்துட்டு இருக்கேன். அதனால் அய்யா கொஞ்சம் பிஸியா இருக்கேன். கிடைக்கிற நேரத்தில் நீரு கூட போனில் தான் பேச முடியுது. அதான் போனும், கையுமா குடித்தனம் நடத்தறேன்னு சொல்றேன்.''

''அச்சோ! உங்களுக்குக் கிடைக்கிறதே கொஞ்ச நேரம்... அதிலும் நான் வந்து லஞ்ச் ப்ளான் அதிது என்று தொந்தரவு செய்துட்டேனா?'' என்று நிஜமான வருத்தத்துடன் மைத்ரேயி கேட்க, ஒருமித்த குரலில் மற்ற இருவரும், ''அப்படியெல்லாமில்லையே!'' என்றனர்.



''நான் நம்பறதுக்கு நீங்க யாராவது ஒருத்தர் சொன்னாலே போதும்பா. அதுக்காக கோரஸ் எல்லாம் பாட வேண்டாம்.''

''நாங்க ரெண்டு பேரும் ஈருடல் ஒருயிர்ன்னு அப்போ அப்போ இப்படி நிரூபிச்சுப்போம்'' என்று வினீத் கூற, நீரஜா ''ஆமாம்.. ஆமாம்!'' என்று ஆமோதிப்பாகச் சொல்லி மறுப்பாகத் தலையாட்டினாள்.

நீரஜா மாதிரியே 'முரணான' செய்கையை செய்து காண்பித்தபடி மைத்ரேயி, ''ஓ! அப்போ அப்போ இப்படி ஆக்ஷனிலும் அதையே நிரூபிச்சிப்பீங்களா?'' என்று வினவ இப்பொழுது வினீத் 'இல்லை'யென்றும், நீரஜா 'ஆமாம்' என்று தலையாட்ட அங்கே சிரிப்பலை எழுந்தது.

''ஹே! மறந்தே போயிட்டேன் பாரு. இப்படி நீங்க ரெண்டு பேரும் தலையை ஆட்டும் போதுதான் ஞாபகம் வருது. உங்களுக்காக எங்க ஊரிலிருந்து வாங்கிட்டு வந்தேன்'' என்ற மைத்ரேயி, தஞ்சாவூர் ஓவியத்தையும், தலையாட்டிப் பொம்மையையும் அவர்களுக்கு பரிசாகக் கொடுத்தாள்.

வெகு நேர்த்தியாகவும், தத்ரூபமாகவும் இருந்த ராதை-கிருஷ்ணர் ஓவியத்தை வெகுவாக ரசித்தது போன்றே, மளிகை சாமான்களுடன் கடைப்பரப்பி வைத்து சிரித்த முகத்துடன் வடிவமைத்திருந்த செட்டியார்-ஆச்சி தலையாட்டிப் பொம்மையையும் வினீத்தும், நீரஜாவும் ரசித்தனர்.

தங்களது நன்றியை தம்பதிகள் மைத்ரேயியிடம் சொன்ன பிறகு, ''இந்தத் தலையாட்டிச் செட்டியார் பொம்மையும், ஆச்சி பொம்மையும் சூப்பர் க்யூட்டா

இருக்கு. இதில் ஒரு மெசேஜ் என்ன தெரியுமா வினீத்? கணவன் சொல்றதுக்கு மனைவி தலையாட்டணும்; மனைவி சொல்லுக்குக் கணவன் தலையாட்டணும் என்பது தான்'' என்று சந்தடிச் சாக்கில் தனக்குச் சாதகமான ஒன்றை எடுத்துவிட்டாள் நீரஜா.

''ஒய்! என்ன சந்தில் சிந்து பாடறியா? அப்படியெல்லாமில்லை. இங்கே பார் - செட்டியார் கணவனுக்கு உதவியாக, ஆச்சியும் சேர்ந்து வியாபாரத்தைக் கவனிக்கிறதாலே தான் கடையைப் பரப்பி ரெண்டு பேரும் சந்தோஷமா 'ஆமாம்' 'ஆமாம்' என்று சொல்லிட்டு இருக்காங்க.'' என்று அவனுக்கு சாதகமானக் கோணத்திலிருந்து ஒரு விளக்கத்தைக் கொடுத்தான் வினீத்.

''ஹப்பா! உங்களுக்காக இதை செலக்ட் செய்த அத்தானையும், என்னையும் தான் உதைக்கணும்'' என்று மைத்ரேயி சொன்ன கமென்ட்டுக்கு தலையாட்டிப் பொம்மை 'ஆமாம்! ஆமாம்!' சொல்வது போல் வீற்றிருக்க மீண்டும் மூவருக்கும் நடுவில் சிரிப்பொலி கிளம்பியது.

தொடர்ந்து மைத்ரேயியே, ''இதிலென்ன தங்கமலை ரகசியமா ஒளிந்திருக்கப் போகுது வினீத்? கருத்தொருமித்த் தம்பதிகள் என்றால் இருவரும் எந்தவித வேறுபாடுமின்றி மனம் ஒத்து வாழ முடியும்னு சொல்லாமல் சொல்றாங்களோ என்னவோ?'' தன் பங்கிற்கு அந்தத் தம்பதிகளைப் பற்றிய தன்னுடையப் பார்வையைச் சொன்னாள்.

நீரஜா, ''கருத்தொருமிக்க - கணவனும், மனைவியும் பொம்மைகளா மைத்தி? கண்டிப்பா கருத்து மாறுபடும். அப்படி மாற்றுக்கருத்து இருக்கும் போது சுமூகமா கலந்து



பேசி, இருவரும் ஆமோதிக்கும் விதமான தீர்வை அமைத்துக் கொண்டால் நல்லதுன்னு சொல்றாங்களோ...?'' என்ற மற்றவளுடைய கருத்திலிருந்து சற்றே மாறுபட்டாலும் அனைவரும் ஆமோதிக்கும் விதமான ஒரு தீர்வைச் சொன்னாள்.

'வெளிப்படையா பேசி முடிவுக்கு வரலாம் என்று கணவனும் இதைத்தான் குறிப்பிட்டானோ?' என்று குறுகுறுப்பு எழுந்த போது அவனது ஜீவனற்ற குரலும், ஒருவித எதிர்பார்ப்புடன் அவளை ஏறிட்ட கண்களும் நினைவில் ஆடின.

இமைக்க மறந்தவளாய் ஏதோ சிந்தனையில் மூழ்கியவளை, ''தேங்க்ஸ் டு யூ மைத்தி'' என்ற நீரஜாவின் பேச்சு மீண்டும் நிகழ்காலத்திற்கு அழைத்து வந்தது.

மைத்ரேயி, 'எதற்கு?' என்பது போல் ஏறிட,

நீரஜா, ''நீங்க ரெண்டு பேரும் பதினைஞ்சு வருஷத்துக்கு மேலே ப்ரண்ட்ஸ்... இப்போ புதுசா வந்த நான் உங்களைப் பிரிக்க நினைக்கிறேன்னு தப்பா புரிஞ்சுக்காமல் என்னுடைய நிலையை சரியா புரிஞ்சு வினீத் கிட்டே பேசினதுக்கு. எத்தனைப் பேர் இந்த அளவுக்கு சரியா எடுத்துப்பாங்கன்னு தெரியலை மைத்தி. உங்க பிரண்ட்ஷிப் வேற.. எனக்கும், வினீத்திற்குமான லவ் வேற என்ற மெச்சூரிட்டி இல்லாமல் நானுமே ரொம்ப சின்னப்பிள்ளைத்தனமா நடந்துக்கிட்டேனோன்னு இருக்கு. ஐ அம் சாரி!'' என்றாள் மனதார.

''ஹே! எதுக்கு இந்த நன்றி நடுவில் எல்லாம்? உன் மேல் எந்தத் தப்புமில்லை நீரஜா. வினீத்திடம் யாராவது ஒரு பையன் க்ளோஸா பழகியிருந்தாலும் கூட உனக்கு

முதலில் பொஸஸிவ்நெஸ் தான் தலைத் தூக்கியிருக்கும். நட்பு என்பது வேற, திருமண வாழ்க்கை என்பது வேற இல்லையா? அதை நாங்களுமே புரிஞ்சுக்க அது ஒரு சந்தர்ப்பம் தானே? நம்ம எல்லோருமே நமக்குள் இருக்கிற சின்னக் குழந்தைத்தனத்தை வெளியில் தெரியாமல் மறைக்கத் தான் முயற்சிப் பண்றோம், இல்லையா? அது வெளிப்படறதில் என்ன தப்பிருக்க முடியும்?''

''.........''

''ஒரு குழந்தைகிட்டே புதிதாக ஒரு பொம்மை கையில் கிடைச்சால் அது தனக்கே தனக்கு மட்டும்தான் என்று நினைக்கிறது இயற்கை. அதன் பிறகு தான் அந்த குழந்தை நம்பிக்கையான ப்ரண்ட்ஸ்கிட்டே பகிர்ந்து விளையாடவும் ஆரம்பிக்கும். அதே மாதிரியான பிஹேவியரைத் தான் நாமளும் வெளிப்படுத்தறோம்..''

''அடடா? என்னப்பா இன்றைக்கு எல்லாமே பொம்மை பற்றியே பேசிட்டு இருக்கோம்?''என்றவன் தீவிரமான பாவனையில், ''ஒரு வகையில் பார்த்தால் அதுவும் உண்மை தான்.. நானும், சுதர்சனும் நீங்க கீ கொடுக்கிற பொம்மைகளா தானே இருக்கிறோம்?'' என்று கண்ணடித்தாள்.

வினீத் சொல்லி முடித்த வினாடி, ''அப்படியெல்லாமில்லை'' என்று மற்ற இரு பெண்களும் ஒரே குரலில் சொல்ல மீண்டும் மூவரின் பேச்சும் களை கட்டினாலும் மைத்ரேயியின் மனதில் மட்டும், 'கீ கொடுத்த பொம்மையாய் சுதர்சனை நான் ஆட்டுவிக்கவா முயற்சிக்கிறேன்?' என்ற எண்ணம், சற்று முன் சிறிய அளவிலாய்



எழுந்த அவளது குறுகுறுப்பை இப்பொழுது விஸ்வரூபமெடுக்கச் செய்தது.

அதனாலோ என்னவோ சென்னையில் மேலும் ஒரு நாள் கூட தங்க விருப்பமில்லாமல் செந்தாமரைக் குளத்திற்கு அன்று இரவே கிளம்பிச் செல்வது என்ற முடிவிற்கு வந்தாள்.

அலுவலகத்திலிருந்து திரும்பிய மாதங்கி, தன் தங்கை அன்றிரவே ஊருக்குக் கிளம்புவதாகச் சொன்னதைக் கேட்டதும் அதிர்ந்தவளாய், ''ஏய்! என்னடி நினைச்சுட்டு இருக்கே? சுதர்சனே உன்னைக் கூப்பிட வர்றேன்னு சொல்லியிருந்தாரு இல்ல? இப்போ எதுக்கு நீயே கிளம்பி போறேன்னு சொல்றே?'' என்று கேள்விகளை அடுக்கினாள்.

''அக்கா! ப்ளீஸ்க்கா. சொன்னால் புரிஞ்சுக்கோ! நைட் நான் ராக்ஃபோர்ட் பிடிச்சு தஞ்சாவூர் வரைக்கும் போயிடறேன். காலையில் அத்தானை அங்கே வந்து அழைச்சுட்டுப் போக சொல்றேன்.'' என்று அடுக்கடுக்காய் விளக்கம் சொன்ன போது ஒலித்த குரல், ''எனக்கு அத்தானை உடனே பார்க்கணும் போல இருக்கு'' என்றபொழுது அவள் கண்கள் கலங்கியதாலோ என்னவோ சுருதி வெகுவாகக் குறைந்திருந்தது.

தங்கையின் கலக்கத்தைப் பார்த்த மாதங்கி அவளை ஆறுதலாய் அணைத்துக் கொள்ள அப்பொழுது எழுந்த கேவலைக் கட்டுப்படுத்திக் கொண்ட மைத்ரேயி, ''ப்ளீஸ்...ஸ்...ஸ்'' என்ற ஒரு வார்த்தையில் ஊருக்குச் செல்ல சம்மதம் பெற்றாள்.

பெட்டியில் துணிமணிகளை எடுத்து வைக்கத் தன் சகோதரிக்கு உதவி செய்தபடியே, ''மைத்தி! உனக்கொரு

விஷயம் தெரியுமா? உனக்கு விருப்பமேயில்லாத கல்யாணத்தைப் பண்ணி வைச்சு, நீ இல்லாத கொடுமையையெல்லாம் அனுபவிச்சுட்டு இருக்கிறதா நான் எத்தனை நாள் சுரேஷ்கிட்டே புலம்பியிருக்கேன்? என்னுடைய கற்பனையை நினைத்தால் எனக்கே பைத்தியக்காரத்தனமா இருக்கு'' என்றாள் கணவனுக் காகப் பாகாய் உருகுபவளைப் பார்த்து.

''ம். என்ன சொல்றே நீ? எனக்கொண்ணும் புரியலை'' குழப்பமான பாவனையுடன் மைத்ரேயி வினவ,

''என்னை வீட்டில் மறுபடியும் சேர்த்துக்கணும்ங்கற துக்காக நீ அப்பா - அம்மாகிட்டே ஒப்பந்தம் பேசினது எனக்கு உன் கல்யாணத்திற்கு முன்னாடியே தெரியும் மைத்தி. அதனால் தான் எனக்கு இந்த தேவையில்லாத கவலையெல்லாம்..'' என்று ஆதி முதல் அந்தம் வரையில் அவளது மனநிலையை விளக்கினாள் மாதங்கி.

''நல்ல ஜோக்! என்கிட்டே ஒரு வார்த்தை தெளிவாக் கிக்கக் கேட்டிருக்கலாமேக்கா?''

''எங்கே? நீ தான் அப்பா-அம்மாகிட்டே பேசின ஒப்பந்ததைக் கூட சொல்லாத பெரிய மனுஷியா ஆகிட்டியே? அப்புறம் உன்கிட்ட விளக்கம் கேட்டால் மட்டும் என்ன ஆகப் போகுது...?''

''அக்கா! பாஸ்ட் இஸ் பாஸ்ட். அதுவும் இப்போ ஜூனியர் வயிற்றில் இருக்கும் போது இப்படியெல்லாம் கவலைப்படவே கூடாது. சொல்லிட்டேன்'' என்று மிரட்டியவள்,

''அந்த ஒப்பந்தம் என்ன வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தியா-பாகிஸ்தான் ஒப்பந்தமா... பி-பி-சி வழியா அறிவிக்கிறதுக்கு? அப்பா-அம்மா எப்படியுமே



உன்னை மறுபடியும் சேர்த்துக்க ஒரு சந்தர்ப்பம் எதிர்பார்த்துட்டுத்தான் இருந்தாங்க. அது உனக்குத் தெரியுமா? என் கல்யாணத்திற்கு முன்னாடியே நீ ஒரு நல்ல செய்தியை சொல்லியிருந்தால் அந்த ஒப்பந்தத் துக்கு வேலையே இல்லாமல் போயிருக்கும்.''

தான் கூறிய விளக்கத்தைக் கேட்டு தமக்கையின் முகம் மலர்வதைக் கண்ட மைத்ரேயி, ''அதோட இல் லாமல் மனசார சொல்றேன் அக்கா - எனக்கு அத்தான் மாதிரி ஒரு துணை கிடைச்சதில் நான் ரொம்பவே பாக்கியசாலி தான்'' என்று கண்கள் காதலில் மிளிர மொழிந்தாள்.

''ஹேய்! சுதர்சன் மட்டும் என்னடி? அவரும் பாக் கியசாலி தான். என் தங்கச்சி மாதிரி ஒரு மனைவி கிடைக்க அவர் புண்ணியம் செய்திருக்கணும்'' என்று மைத்ரேயிக்காக அவளிடமே வக்காலத்து வாங்கினாள் மூத்தவள்.

மைத்துனி கிளம்புவதாகச் சொல்லவும், இந்த இரவு நேரத்திலா என்று தயங்கிய சுரேஷ், ''இந்நேரத்திற்கு ராக்ஃபோர்டில் டிக்கெட் கிடைக்காது மைத்ரேயி'' என்ற யோசனைக்குப் பிறகு, ''எனக்குத் தெரிஞ்ச நம்பகமான ட்ராவல்ஸ்சில் சொல்லி வண்டி ஏற்பாடு செய்யறேன். ஓகே'வா?'' என்றான்.

அதற்கு ஒப்பிய மைத்ரேயி தன் சகோதரி குடும்பத் தினரிடம் விடைபெற்றுக் கொண்டு தன் வசிப்பிடத் திற்குப் பயணிக்கலானாள்.

கணவனைக் கண் குளிர காண வேண்டும், அவன் கைக்கோர்த்து கதைகள் பல பேச வேண்டும், என்றுமே அலுக்காத குளக்கரையில் அலுக்கும் வரையில் நேரம்

செலவழிக்க வேண்டும், மொட்டைமாடி நிலா வெளிச்சத்தில் நனைய வேண்டும், யார் மூக்கு கூர்மையானது என்ற செல்ல சண்டையிட வேண்டும், அவன் வாசனை நுகர வேண்டும், கொட்டும் மழையின் இனிமையை அவனுடன் சேர்ந்து ரசிக்க வேண்டும் என்பது போன்ற சின்னச் சின்ன ஆசைகளை மாலையாகக் கோர்த்தபடி நெஞ்சம் முழுவதும் காதலை நிறைத்திருந்த மைத்ரேயிக்கு, அவளுடைய ஐ-பாடில் கேட்டுக் கொண்டிருந்த பாடலும் அவளுடைய மனநிலைக்கு ஒத்ததாய் இருந்தது.

அக்கம் பக்கம் யாருமில்லா பூலோகம் வேண்டும்
அந்தி பகல் உன்னருகே நான் வாழ வேண்டும்
என் ஆசையெல்லாம் உன் நெருக்கத்திலே
என் ஆயுள்வரை உன் அணைப்பினிலே
வேறென்ன வேண்டும் உலகத்திலே
இந்த இன்பம் போதும் நெஞ்சினிலே
ஈரேழு ஜென்மம் வாழ்ந்துவிட்டேன்



# 19

விடிந்தும் விடியாமலே வீட்டு வாசலில் என்ன வண்டிச் சத்தமென வாசலுக்கு வந்த வரலக்ஷ்மி அங்கே தன் மருமகளைக் கண்டு ஆச்சரியத்திற்குள்ளானார்.

அங்குமிங்கும் அலைபாய்ந்த விழிகளோடு நின்றவளை, ''வாடாம்மா. என்னம்மா மைத்ரேயி? திடுதிப்புன்னு



வந்துட்டே, வர்றேன்னு ஒரு வார்த்தை சொல்லவேயில்லை? தம்பிக்குத் தெரியாதோ?'' என மகிழ்ச்சியும் ஆச்சரியமுமாக வரவேற்றார்.

''உங்களையெல்லாம் பார்க்காமல் இருக்கவே முடியலை அத்தை'' சலுகையாக அவர் தோள்களில் சாய்ந்துக் கொண்டவள், நிமிர்ந்து, ''மூட்டு வலி தைலம் தடவுனீங்களா அத்தை?'' என்றாள் மறக்காமல்.

''நல்லப்பிள்ளை போ! மாமியார் தொல்லையில்லாமல் எப்படா பிறந்த வீட்டுக்குப் போய், ஹாய்யா கொஞ்ச நாள் இருப்போம்னு இல்லாமல்... வந்ததும் வராததுமா என்னை விசாரிக்கிறதைப் பாரு!'' சலிப்பாகச் சொல்வது போன்று இருந்தாலும் அவர் முகத்தில் அவள் உடனே வந்ததில் பெருமையே ஓங்கியிருந்தது.

பேசிக்கொண்டே வீட்டிற்குள்ளே வந்தவளின் கண்கள் தனக்கு வேண்டியவனை ஆவலாகத் தேடினாலும், நேரிடையாக அதைக் கேட்க, ஏதோ ஒன்று அவளைத் தடுக்க, ''மாமா எங்கே அத்தை? கிளம்பிட்டாங்களா?'' என்றாள்.

மருமகளின் பார்வைச் சுற்றி அலைவதையும், அவள் முகத்திலிருந்த எதிர்பார்ப்பும் மூத்தவருக்கு புன்னகையைத் தோற்றுவிக்க, ''மாமா இப்பத்தான் கொஞ்சம் நடந்துட்டு வர்றேன் என்று போனார். அப்புறம், சொல்லு. உங்க அக்கா, மாமா எல்லோரும் எப்படியிருக்காங்க?'' என்று வேண்டுமென்றே நேரத்தைக் கடக்க விசாரித்தார்.

''எல்லோரும் நல்லா இருக்காங்க அத்தை. உங்க எல்லோரையும் கேட்டதா சொல்லச் சொன்னாங்க. எனக்குத்தான் எப்படா உங்களை எல்லாம் திரும்பப் பார்ப்போம்ன்னு ஆயிடுச்சு!''

இந்த அத்தை வாயைத் திறந்து அத்தான் எங்கே யென்று சொன்னால்தான் என்ன? அதற்குள்ளாக அவனும் வெளியே கிளம்பிவிட்டானா என்ன?

மைத்ரேயியின் முகம் லேசாக வாடவும், அவளையே பார்த்துக் கொண்டிருந்த வரலக்ஷ்மி, '''எங்களை' என்றால்... எங்க எல்லோரையுமா? இல்லை உன்னோட அத்தானை மட்டுமா?'' என்று அவளைக் கேலி செய்து, அவளது லேசாகச் சிவந்த முகத்தை ரசித்துச் சிரித்தார்.

''தம்பி மாடியில் தான் இருக்கான்'' எனத் தகவல் கிடைக்கவும்,

''இதை முதலிலேயே சொல்லியிருக்கலாம் இல்ல அத்தை? அதுக்குள்ள என்னை எத்தனைப் பொய் பேச வைச்சட்டீங்க?'' என்று கண் சிமிட்டிச் சிரித்தவள், வரலக்ஷ்மி அதற்குக் கொடுத்தப் பதிலைக் கேட்க அங்கில்லை. கணவனைக் காண சிட்டாகப் பறந்திருந்தாள்!

சென்னைக்குக் கிளம்பப் பெட்டியில் உடைகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்த சுதர்சனுக்கு, அவன் பின் கழுத்தில் மயிர்கால்கள் சிலிர்த்து எழ, சட்டென எழுந்தப் பரபரப்பில், தங்கள் அறை வாயிலை நோக்கி மெதுவாகத் திரும்பினான்.

''மைத்ரேயி...!'' ஒருவர் பெயரைச் சொல்லும் பொழுதே, அதில் இத்தனை உணர்ச்சி பாவங்களைக் கொண்டு வரமுடியுமா?

மூடிய கதவில், மூச்சு வாங்கியபடி சாய்ந்திருந்த மைத்ரேயியைப் பார்த்து மில்லி மீட்டர் மில்லிமீட்டராக விரிந்த சந்தோஷச் சிரிப்போடு, சுதர்சன் கைகளை அகல



விரிக்க, கண்களில் லேசாகப் படர்ந்த நீர்த் திரையோடும் காதலோடும் அவனை ரசித்துக் கொண்டிருந்தவள், பெரிதாக விரிந்த புன்னகையோடு, ''சுதா...!'' என ஓடியே போய் அவனை இறுக்கிக் கட்டிக் கொண்டாள்.

கண்ணா.. என் கூந்தலில்... சூடும் பொன் பூக்களும்...
உன்னை உன்னை அழைக்க...
கண்ணே... உன் கைவளை... மீட்டும் சங்கீதங்கள்...
என்னை என்னை உடைக்க...
கண்களைத் திறந்து கொண்டு... நான் கனவுகள் காணுகிறேன்
கண்களை மூடிக் கொண்டு... நான் காட்சிகள் தேடுகிறேன்
உன் பொன் விரல் தொடுகையிலே... நான் பூவாய் மாறுகிறேன்

அவள் ஓடி வந்த வேகத்தில் கட்டிலருகே நின்றிருந்த சுதர்சன், ''ஹே கண்ணம்மா! மைத்தி!'' என்று அவளையும் தாங்கியவாறே அதன் மீது விழ, அது ஒன்றையும் அறியாத மைத்ரேயி, கணவனின் முகமெங்கும் முத்தங்களால் நிறைத்து, தானும் பதிலுக்குப் பரிசுகளை அவள் முகமும் அகமும் நிறையப் பெற்றுக் கொண்டாள்.

யாரும் சொல்லாமலும்... ஓசை இல்லாமலும்...
தீயும் பஞ்சும் நெருங்க...
யாரைப் பெண் என்பது... யாரை ஆண் என்பது...
ஒன்றில் ஒன்று அடங்க...
உச்சியில் தேன் விழுந்து... என் உயிருக்குள் இனிக்குதடி
மண்ணகம் மறந்து விட்டேன்... என்னை மாற்றுங்கள் பழையபடி
உன் வாசத்தை சுவாசிக்கிறேன்... என் ஆயுள் நீளுமடி

மைத்ரேயியின் நெற்றியோடு நெற்றியோடு வைத்து அழுத்தி, ஆழ்ந்த மூச்சுக்கள் எடுத்தவன், ''ஹே குட்டி!

கொஞ்சம் எழுந்துக்கோடா!'' என்று கண் மூடி நின்றிருந்தவளின் காதருகே ரகசியம் பேசினான்.

மனைவியை எதிர்பாராமல் இப்பொழுதே சந்தித்த மகிழ்ச்சி ஒருபுறமும், ஒருவரின் கையணைப்பில் மற்றவர் இருந்த நிலையும் அவனை திக்கு முக்காடச் செய்ய, அவன் குரல் காதலில் கரைந்திருந்தது.

அவன் கழுத்தில் முகத்தைப் புதைத்திருந்தவள், மேலும் அவனுள் அழுந்தப் புதைந்து, ''ம்ஹூம்! மாட்டேன் போ!'' என்று அவன் கழுத்தை மேலும் தன்னோடு இறுக்கினாள்.

''கண்ணம்மா! என் மேலே என்ன கோபம் உனக்கு? என்னால் நல்லாகூட சிரிக்க முடியலை. என் முதுகுப் போச்சு'' என்று மெல்லச் சிரிக்க,

சற்றே நிமிர்ந்து அவன் நெஞ்சில் கைகளை ஊன்றிக் கொண்டவள், ''நல்லா வேணும். என்னை மட்டும் தனியா சென்னைக்குப் போகச் சொன்னீங்க இல்ல? நல்லா வலிக்கட்டும்!'' என்றாலும்,

''உங்க முதுகுக்குக் கீழே பெட்டியிருக்குன்னு முதலேயே சொல்றதுக்கென்ன?'' என்று பரிவாகக் கடிந்துக் கொண்டே சற்று நகர்ந்தாள்.

அவளை மறுபடியும் தன் மீது நன்றாக இழுத்துக் கொண்டவன், ''காரியத்தையே கெடுத்தே போ! இப்போ அதுவா முக்கியம். இங்கேயே இரு. இது தான் வசதியா இருக்கு. நம்ம வேலையை நாம எதிலே விட்டோம்?'' என்று வாகாகக் கட்டிலில் சாய்ந்து உட்கார்ந்து அவள் கன்னத்தோடு கன்னம் வைத்து இழைந்தான்.

மைத்ரேயியின் கூந்தலை ஒதுக்கியவன், ''எப்படிடா இப்பவே வந்தே? நான் தான் வர்றதா சொல்லி



யிருந்தேனே? நைட்டா மைத்தி கிளம்பி வந்தே? நேற்று பேசும் போது கூட ஒன்றும் சொல்லவேயில்லையே?'' என்று விசாரித்தான்.

''ஐ மிஸ்ட் யூ சோ மச் சுதா! உங்களை உடனே பார்க்கணும் போல இருந்தது. அதான், நீங்க வர வரைக்கும் கூட பொறுமையில்லாமல் உடனே கிளம்பி வந்துட்டேன். உங்களுக்குத் தான் அப்படி எதுவுமேயில்லை. ஜாலியா இன்னமும் ரெண்டு நாள் கழிச்சு வரலாம்னு நினைச்சுக்கிட்டு இருந்திருப்பீங்க, இல்ல?''

தன் கன்னத்தை வருடிக் கொண்டே சிணுங்கியவளின் மூக்கைப் பிடித்து ஆட்டி, ''எதுக்குக் கட்டிலில் என் பெட்டியிருந்ததுன்னு நினைச்சே? உன்னைப் பார்க்க நேற்று நைட்டே நானும் கிளம்பியிருக்க வேண்டியவன். அம்மா தான் வடக்கே சூலம்னு சொல்லி, இன்றைக்குக் காலையில் கிளம்பச் சொன்னாங்க'' என்று சிரித்தான்.

''எனக்கு ஏற்கனவே என் அத்தையை ரொம்பப் பிடிக்கும். நம்ம ரெண்டு பேரும் எங்கேயாவது நடு வழியில் சந்திக்காமல் தடுத்த அவங்களை, இப்ப ரொம்ப ரொம்ப்ப பிடிக்குமாக்கும்'' கண்கள் விரிய அவனை நிமிர்ந்துப் பார்த்து சிரித்தவளின் அதரங்களை ஒற்றை விரலால் மெல்ல வருடியவன்,

''நியாயத்துக்கு... சொல்லாமல் கொள்ளாமல் நீ மட்டும் நைட் தனியா கிளம்பி வந்ததுக்கு உன் மேலே கோபப்படணும். ஆனால், நீ வந்து கவனிச்சக் கவனிப்பில் எங்கே கோபப்படறது?'' என மெல்ல அவள் முகம் நோக்கி ஆசையாகக் குனிந்தான்.

கணவனுக்கு வலிக்காமல் அவனது உதட்டைப் பிடித்து இழுத்து, ''ம்க்ஹ்ம்! இதுக்கு ஒண்ணும்

குறைச்சலில்லை! ஏன் எனக்கு நீங்க போன் செய்யவேயில்லை? நான் வந்து சேர்ந்ததை உங்களுக்குச் சொல்ல நான் கூப்பிட்டப்போ அத்தை தான் எடுத்தாங்க. உங்களைப் பேசச் சொல்லி அத்தைக்கிட்ட கூடச் சொல்லியிருந்தேன். ஏன் பேசலை?'' என செல்லக் கோபத்தில் சுதர்சனின் செவி மடலைக் கடித்தாள் மைத்ரேயி.

''ஓ! நீ பேசினியா? உனக்குக் கோபம் போல. அதுனால தான் அம்மிணி பேசலைனு நானா நினைச்சு, சுரேஷ் கிட்ட பேசி, நீ பத்திரமா வந்து சேர்ந்ததைத் தெரிஞ்சுக்கிட்டேன். அம்மா கூட மைத்ரேயியோட பேசினியான்னு கேட்டாங்க. நான் தான் கௌரவத்தை விட்டுக் கொடுக்காமல் தலையைத் தலையை ஆடி வைச்சேன்டா.''

அசடு வழிந்தவனின் கன்னத்தைப் பிடித்து ஆட்டி, ''அச்சோ! என் சமத்து அத்தான்!'' என்று சிரித்தவளைக் காதலுடன் பார்த்திருந்தான் சுதர்சன்.

முதல் நாள் மாலை எப்பொழுதோ இட்டு, அதுவும் இப்பொழுது லேசாக வழிந்து கொண்டிருந்த கண் மையும், இரவு பயணத்தில் கலைந்திருந்த கேசமும், தூக்கம் இன்னமும் லேசாக ஒட்டியிருந்த கண்களும், கசங்கியிருந்த உடையும் - சுதர்சனின் கண்களுக்கு வேறு எப்பொழுதும் மைத்ரேயி இதை விட அழகாய் தெரிந்ததில்லை.

''என்ன அத்தான் அப்படிப் பார்க்கிறீங்க?'' மைத்ரேயியின் குரல் முணுமுணுப்பாய் ஒலிக்க, புறங்கையால் அவன் கன்னத்தை மெதுவாக வருடியபடியே, ''என்



மனைவியை நான் இத்தனை அழகா பார்த்ததில்லையேன்னு யோசிச்சிட்டு இருந்தேன்'' என்றான் அவனும் ரகசியமாய்.

தான் இப்பொழுது எப்படியிருப்போமென அறியாதவளா அவள்? இப்பொழுதும் கணவனின் கண்களுக்கு அவள் அழகாகத் தெரிகிறாளா?

அவளின் முகம் நாணத்திலும் பெருமையிலும் சிவந்தாலும், ''அப்போ ஒரு வாரத்திற்கு முன்னாடி சொன்னது?'' என்று வேண்டுமென்றே சந்தேகமாகக் கேட்க,

''அப்பவும் நீ அழகு தான்!'' என்று அவள் கன்னத்தில் இதழ்ப் பதித்து சத்தியம் செய்தான்.

''அப்போ... நாளைக்கோ ஒரு வாரம் கழிச்சோ இதைவிட அழகுக் குறைஞ்சு போயிடுவேனா என்ன?'' என்று அடுத்த சந்தேகத்தைக் கொஞ்சலாக வினவினாள்.

''யார் சொன்னா? அப்பவும் இப்ப நான் சொன்னதையே தான் சொல்வேன். நீ அழகு தான்டா கண்ணம்மா!''

''எப்படி அத்தான் அது? புருடா விடறீங்க. முக்காலமும் அதே எப்படி உண்மையா இருக்க முடியும்?''

மனைவியின் மூக்கோடு மூக்கு உரசி, ''இன்றைக்கு ஒன்று, நாளைக்கு ஒன்று என்று பேசுறவனில்லை உன் அத்தான். எப்பவும் ஒரே வாக்கு தான். அப்பவும் 'ஹே! நீ ரொம்ப அழகா இருக்கே'ன்னு தான் சொல்வேன்'' என்று கண் சிமிட்டி சிரித்தான் சுதர்சன்.

''சரியான பஃப் மாஸ்டர் பா நீங்க!''

அவனுடன் இணைந்து சிரித்தவளிடம், ''அப்படிச் சொல்ல முடியாதே மைத்தி! எல்லாம், பார்க்கிற

என்னோட கண்ணோட்டத்தில் தானே இருக்கு. ப்யூட்டி லைஸ் இன் தி ஐஸ் ஆஃப் தி பிஹோல்டர். எனக்கு நீ எப்படியிருந்தாலும் அழகு தான்'' என்று கொஞ்சி இழைந்தான்.

'எல்லாம் நாம் பார்க்கும் பார்வையைப் பொருத்தது' என்ற அவனின் இந்தக் கண்ணோட்டம் தான் அவனை எதையும் பொறுமையாகக் கையாள வைக்கிறதா? தனக்கு அவன் சொன்னதும் இதைத்தானே?

அதுவரையிருந்த கலகலப்பு போய், கணவனின் தோளில் மெல்ல தலையைச் சாய்த்தவள், அவன் கைகளைத் தன் கைகளில் எடுத்துக் கொண்டு, ''புரிஞ்சது அத்தான். இந்த ரெண்டு நாளில் நீங்க சொல்ல வந்ததும் நல்லா புரிஞ்சது. எனக்கே தெளிவில்லாத விஷயமும் தெளிவா புரிஞ்சது. நாம சென்னைக்குப் போகலாம் என்று சொன்னது எத்தனை முட்டாள்தனமான ஒன்றும்ண்ணும் புரிஞ்சது. நம்மோட இடம் இது தான் என்றும் புரிந்தது அத்தான்'' என்றாள் உணர்ந்து.

தன் கரத்தோடு இணைந்திருந்த அவளது கரத்தை எடுத்து தன் கன்னத்தில் பொருத்திக் கொண்டு, ''என்னை நிமிர்ந்துப் பாரு மைத்தி!'' என்று அவள் தாடையைப் பிடித்து நிமிர்த்தியவன்,

''இதை நீ முழுசா உணர்ந்து, நிஜமாகவே தான் சொல்றியா? இல்லை எனக்காக சொல்றியா? எதுவானாலும் சொல்லு. தீர்வில்லாதப் பிரச்சனைகள் என்று எதுவுமே இல்லைடா'' என அவளைக் கூர்மையாகப் பார்த்தபடி கேட்டான்.



சுதர்சனின் கண்ணோடு கண் பார்த்தவள், ''இல்லை அத்தான். உங்களுக்காக மட்டுமில்லை. நமக்காகவும் தான் இந்த முடிவு. எனக்குத் தெரியும்... கிளம்பியே ஆகணும்னு நான் ஒரே பிடியா பிடித்தால்... நீங்க என்னோட எங்கே வேணும்னாலும் வருவீங்கன்னு தெரியும். ஆனால்... அப்படி வரும் நீங்க, முழு மனதோடோ, சந்தோஷத்தோடோ வர மாட்டீங்க. சந்தோஷத்தோட தான் இருக்கணும் என்று யாரும் உங்களைக் கட்டாயப் படுத்த முடியாது. என்னாலும் கூட! அது தானா வரணும். சந்தோஷமில்லாத இடத்தில் அன்பும் காதலும் எங்கேயிருந்து அத்தான் வரும்? இருக்கிறதும் குறைந்து விடாதா? எனக்கு உங்க காதல் எந்தளவு முக்கியமோ, அதே அளவிற்கு உங்க சந்தோஷமும் முக்கியம் அத்தான்'' என்று தனது இரு கரங்களாலும் அவன் முகத்தைத் தாங்கியவாறே தீவிரமாகக் கூறினாள்.

மனைவியை நினைத்துப் பெருமையும் காதலும் பொங்க, அவள் உள்ளங்கையில் தன் இதழ் பதித்தவன், ''எனக்காக இல்லைன்னு சொல்லிட்டுப்... பார்த்தால் எல்லாம் எனக்காக மாதிரி தானேடா தெரியுது? என் சந்தோஷத்திற்காக என்று உன்னுடைய சந்தோஷம்...?'' என்று சற்றே கவலையாகக் கேட்க,

அவன் கழுத்தை கட்டிக் கொண்ட மைத்ரேயி, ''இல்லை அத்தான். அப்படியில்லை. நீங்க வேற? நான் வேறயா? நீங்க சந்தோஷமில்லாமல் இருக்கும்போது நான் மட்டும் எப்படி சந்தோஷமா இருக்க முடியும்? ம்ம்?'' என்று அவனிடமே கேள்வி தொடுத்தாள்.

தொடர்ந்து, ''அதுவுமில்லாமல் நான் சென்னைக்குப் போயிருந்த போது, எப்படா இங்கே திரும்பவும்

வருவோம்னு ஆயிடுச்சு. உங்களை எந்தளவிற்கு மிஸ் செய்தேனோ அதே அளவிற்கு அத்தை, மாமா, நம்ம வீடு எல்லாத்தையுமே மிஸ் செய்தேன்'' என மைத்ரேயி சொல்லிக் கொண்டிருக்கும் போதே இடையிட்டு, ''என் அளவிற்கேவா?'' என்று புருவத்தை உயர்த்தி சுதர்சன் கோபம் போன்று வினவ,

அவன் கன்னத்தில் தன் மூக்கை வைத்து உரசி, ''ஹா ஹா... சரி! நோ ஃபீலிங்க்ஸ்! உங்க அளவிற்கு இல்லை. கொஞ்சம் நிறையவே குறைச்சலா... போதுமா கண்ணா?'' என்று குழைந்த மைத்ரேயியை தன்னோடு சேர்த்தணைத்தபடி சில்மிஷம் செய்து சிரித்தான் சுதர்சன்.

''ஷூ! சும்மா இருங்க கண்ணா! நான் சொல்லி முடிச்சுடுவேணாம். அப்புறம் மீதியை வைச்சுக்கலாம்!'' தனக்கு ஆசைக் காட்டியவளிடம், ''ம்ஹ்ம்ம்... ஏதோ சொல்றே? உன்னை நம்பி தான் நான் இருக்கேன்'' என்றான் பதவிசாக.

''நம்பியிருக்க ஆளைப் பாருங்கடா!'' என்று கூறி அவன் கன்னத்தைக் கடித்தவளுக்கு தண்டனையும், கடித்த இதழ்களுக்குப் பரிசும் வழங்கியவனின் கைகளில் பூ மாலையாகத் தொய்ந்தவள், மெல்ல விழி மலர் மலர்த்தி கணவனைப் பார்த்து புன்னகை பூத்தாள்.

மனைவியின் கலைந்திருந்த நெற்றி கேசத்தை ஒதுக்கி விட்ட சுதர்சன், ''ஏதோ சொல்லணும்ன்னு சொன்னியே? சொல்றதுக்கு உனக்கு சரியா பத்தே பத்து நிமிஷம் தான். அதுக்குப் பிறகு முக்கியமான ஒரு வேலையிருக்கு'' என கிசுகிசுப்பாக மிரட்டியவன், சிவந்த



மைத்ரேயியின் முகத்தைப் பார்த்து உல்லாசமாகச் சிரித்தான்.

தன்னைச் சீர் செய்து கொண்டு, சுதர்சனின் கை விரல்கள் ஒவ்வொன்றாகப் பிடித்து நீட்டி மடக்கி விளையாடிக் கொண்டிருந்தவள், ''நீங்க அடிக்கடி சொல்வீங்களே அத்தான்... 'நமக்கு ஏற்றபடி நம்மைச் சுற்றி இருக்கிறதையும், நம்மைச் சுற்றி இருக்கிறதுக்குத் தக்கபடி நம்மையும் மாற்றி அமைச்சுக்கிட்டால் தான் சந்தோஷமா வாழ முடியும்' என்று. அது சென்னையில் இருக்கும் போது எனக்கு முழுசா புரிந்தது. அங்கே சென்னையிலும் அக்கா வீட்டிற்கு பக்கத்தில் வம்பு பேசறவங்களைப் பார்த்தேன். நாம எங்கேயிருந்தாலும் நம்மைச் சுற்றியிருக்கிறதையோ, அங்கேயிருக்க மக்கள் நடந்துக்கும் முறையையோ ஓரளவுக்கு மேலே நம்மால் மாற்ற முடியாது என்பதுதான் அப்பட்டமான உண்மை. அப்படியிருக்கும்போது, மூட்டைப் பூச்சிக்குப் பயந்து போய், வீட்டையே கொளுத்தின கதையாய் ஏன் ஆகணும்?'' என்றாள் அவனைப் பார்த்து.

''....''

''ஒரே விஷயத்தை ஒவ்வொருத்தரும் அணுகும் முறையில் தான் வித்தியாசம். 'நீ என்ன வேணும்னாலும் பேசிக்கோ. எனக்கு காதே கேட்காது' என்பது ஒரு விதம். 'நீ பேசறே விஷயத்தைக் கேட்கும் தூரத்தில் நான் இருக்க மாட்டேன்' என்பது ஒரு விதம். ' நீ பேசும் விஷயத்தை நானும் சேர்ந்து பேசுவேன்' என்பது இன்னொரு விதம். இது வம்புப் பேசறதுக்கு மட்டுமில்லை... எல்லா விஷயங்களுக்கும் பொருந்தும், இல்லையா?'' என்று

அவனுக்கே பாடமெடுக்கும் அளவிற்கு மனைவி பேசு வதை ஆச்சரியத்துடன் செவி மடுத்துக் கொண்டிருந்தவ னிடம் மேலும்,

''தனக்கு வர சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கிற முறையிலேயும், ஒரு விஷயத்தை அணுகும் முறையி லேயும் தான் ஒரு மனிதன் மற்றவர்களிடமிருந்து மாறுபடறான். இல்லையா சுதா? அதையும் எப்படி மற்றவர்களுக்குக் கொஞ்சமாவது உபயோகமா பயன் படுத்துறது என்று பார்க்கலாமே?''

அவளே தொடர்ந்து, ''ஒருத்தங்களுக்குப் பிடிச்ச வேலையையே தொழிலா செய்றது எத்தனை பெரிய விஷயம் தெரியுமா அத்தான்? அந்தக் கொடுப்பினை உங்களுக்கு இருக்கு. அதுவுமில்லாமல் எந்த ஒரு சிட்டிக்குப் போனாலும், கடலில் போட்ட பெருங்காயமா தான் என்னால் இருக்க முடியும். ஆனால் இங்கே, என் னால் முடிஞ்ச அளவு நல்ல ஒரு வித்தியாசத்தைக் காட்ட முடியும்னு எனக்குத் தோணுது. என்ன அத்தான்...? அப்படிப் பார்க்கிறீங்க? ரொம்ப பேசறேனா?'' என்றாள் தயக்கத்துடன்.

''ச்சே.. ச்சே! நீ இப்படி பேசறதைக் கேட்டு நான் அப்படியே மலைச்சுப் போயிட்டேன் மைத்தி!'' என்று அவளின் கன்னத்தில் தன் கன்னத்தை வைத்து இழைந்த படி கொஞ்சியவன், ''ஆனால் எனக்கு ஒரு சந்தேகம் கண்ணம்மா! சென்னையில் உங்க அக்கா வீட்டில் எதுவும் போதி மரம் இருந்ததா? இப்படிப் பிச்சு உதறு றியே?'' மனைவியின் நெற்றியில் முட்டி அவனைக் கேலி செய்ய,



''ம்ம்ம்! என்னைப் பார்த்தால் உங்களுக்குச் சிரிப்பா இருக்கா? உங்களை...?'' செல்லமாய் சிணுங்கியவள், ''ஆனால் நீங்க சொன்னதும் ஒரு விதத்தில் சரி தான் சுதா. 'இக்கரைக்கு அக்கரை பச்சை' என்று எனக்கு முகத்தில் அடித்த மாதிரி தெரிவிச்சு, என்னைத் தெளிய வைச்ச இடம். வீட்டுக்கு வீட்டுக்கு வாசல் படி! என் னைச் சுற்றியிருக்க நல்ல விஷயங்களைப் பார்க்காமல், ஏதோ ஒரு பயம், ஒரு குழப்பம்'' என்று தன்னைத் தானே சாடிக் கொண்டவளின் குரலில் வருத்தம் மிகுந்து இருந்தது.

அவள் முதுகை ஆதுரமாகத் தடவி, ''ஏன் டா அப்படிச் சொல்றே? உனக்கு வந்த பயமும் ஒன்றும் தப்பில் லையே? நியாயமானது தானே?'' என்று அவளுக்காக அவளிடமே வக்காலத்து வாங்கியவனை அன்புடன் பார்த்து அவன் தாடையில் முத்தமிட்டு, அவனின் இடுப்பைச் சுற்றி கை போட்டு இறுக்கிக் கொண்டாள்.

''ஐ லவ் யூ டா கண்ணா!'' அவனைக் கொஞ்சிக் கொண்டு, அவன் தொண்டைக் குழியில் முத்தமொன் றைப் பதித்தவளிடம்,

''அப்படின்னா என்னைக் கட்டிக்கிறியா?'' என்று கண் சிமிட்டினான்.

''அடுத்த வாரத்தில் முதல் வருஷம் கல்யாண நாள் கொண்டாடப் போறோம். நினைவிருக்கா? இப்போ வந்து இப்படிக் கேட்டால்...?'' சிணுங்கினாலும் குறும் பாய், ''ஓடிப் போலாமா?'' என்று அவன் மூக்குடன் தன் மூக்கை உரசினாள் மைத்ரேயி.

''கன்னுக்குட்டி... இப்படியே உன் சப்பை மூக்கை உரசி... உரசி சாணம் பிடிச்சு ஷார்ப் மூக்கு ஆக்கிக்க

வேண்டியது...'' என்று மீண்டும் ஒருமுறை மூக்குடன் உரசினான்.

''ஓய்! இந்த ஓயாத சண்டையை அப்புறம் வைச்சுக் கலாம்...'' என்றவள் சற்றே தயங்கி,

முன்பு தாங்கள் பேசிக் கொண்டிருந்த பேச்சின் தொடர்பாக, ''கௌதம புத்தர், அவரோட சீடரை எந்த விதத் துன்பத்தையுமே சந்திக்காத வீட்டிலிருந்து கடுகு வாங்கிட்டு வரச் சொன்ன கதை தெரியும் தானே உங்களுக்கு? ஒரு ஜீவனோட ஜனனமும், மர...'' என்று தொடங்க, அவள் வாயைத் தன் கரத்தால் அவசரமாக மூடினான் சுதர்சன்.

அவன் கரத்தை எடுத்து தன் கன்னத்தில் வைத்து அழுத்திக் கொண்டு, ''ஒரு பேச்சுக்குத் தானே சுதா? நெருப்புன்னு சொன்னால் வாய் வெந்துடவா போகுது?'' என்றாள் கண்களோடு கண்கள் நோக்கி.

''நோ என்றால் நோ தான்! இந்த விஷயத்தில் அது மாதிரி பேசறது எனக்குப் பிடிக்கலை...'' என்று கோபத் துடன் அவளுக்கு முதுகைக் காட்டிப் படுக்க முயல, அவனைத் தன் பக்கம் இழுத்து அணைத்தபடியே, ''சரி... சரி... நாம் நல்லதையே நினைப்போமே அத்தான்! நல்லதே நடக்கட்டும்'' என்றாள் சமாதானமாக.

மனைவியைத் தோளோடு அணைத்து, அவள் உச்சி யில் தலையைச் சாய்த்தவன், ஒரு பெருமூச்சுடன், ''நீ ஊருக்குப் போன பிறகு, நானும் சிலரிடம் நம்ம ஊரில் மருத்துவ வசதிப் பற்றி பேசிப் பார்த்தேன் மைத்ரேயி. அவங்களும் தஞ்சாவூர் மெடிக்கல் காலேஜிலும், மற்ற ரிடையர்ட் மெடிக்கல் ப்ரொஃபசர்களிடமும் பேசறதா



சொல்லியிருக்காங்க. அட்லீஸ்ட் வாரத்தில் ஒரு நாளோ இல்லை ரெண்டு நாளோ வந்து அவங்களால மருத்துவ உதவியைச் செய்தால் கூட நல்லா இருக்கும். நம்மால் என்ன முடியுதோ, முயற்சி செய்யலாம்டா'' எனத் தன் மனைவிக்குள்ள பயத்திலும் அக்கறையிலும் தனக்கும் பங்கிருக்கிறது என்று சொல்வது போன்று, அவன் செய்த சிறு முயற்சியைப் பற்றி கூறினான்.

''தேங்க்ஸ் அத்தான்!''

''நம்ம குழந்தை மேலே எனக்கும் அக்கறையிருக் குமா'' மனைவியின் விரல்கள் ஒவ்வொன்றிலும் மெல் லிய முத்தங்களைப் பதித்து, உணர்ச்சிமயமான நிலையை இலகுவாக்கும் பொருட்டு, ''நான் உனக்குக் கொடுத்த பத்து நிமிஷம் கெடு முடிஞ்சு, பத்து மணி நேரமாச்சு. அதுக்கு உண்டான தண்டனை என்ன தெரியுமா?'' என் றான் அவன் மென் விரலை வலிக்காமல் கடித்தவாறே.

அவனின் முயற்சி புரிய, மெல்ல புன்னகைத்து, அவன் கழுத்தில் தன் கட்டை விரலால் லேசாய் கீறிய படி, ''நீங்க என்ன தண்டனை வைச்சு இருந்தீங்கன்னு தெரியலை... ஆனால்... நான் ஒரு பரிசு உங்களிடம் கேட்கவா?'' என்றவளின் குரல் கொஞ்சியது.

''பரிசு, தண்டனை எதுவானாலும் கேளு. அய்யா நிறைய ஸ்டாக் வைச்சிருக்கேன்'' என்று கண்களைச் சிமிட்டிய சுதர்சன் குறும்பாகக் கூற,

''அரை டஜன் குழந்தைப் பெத்துக்கலாம் என்று சொன்னேன் இல்ல? அதில் ஏழாவது குழந்தையை இப்ப பெற்றுக்கலாமா?'' என்று கிசுகிசுப்பாய் சொல்லி விட்டு, அவள் முகத்தை அவன் நெஞ்சிலேயே புதைத் தாள் அவன் மனைவி.

தன் மார்பில் தஞ்சம் புகுந்தவளை நிமிர்த்தி, ''கண்ணம்மா! உனக்குப் பரிசு வேணும்ன்னு சொல்லிட்டு இப்படி எனக்குப் பரிசைக் கொடுக்கிறியே டா?'' என்றவன், அவள் செவ்விதழ்களை மெல்ல வருடி, அங்கிருந்தே தன் பரிசைக் கொடுத்து, மறு பரிசையும் பெற்றுக் கொள்ளத் தொடங்கினான்.

பரிசுகளைப் பெற தயாரான சுதர்சன் - மைத்ரேயி இருவரின் நெஞ்சங்களும் இரண்டறக் கலந்து, அவர்கள் வாழ்க்கைப் பாதையை அன்பாலும் காதலாலும் நிறைத்தது. அவர்களின் வாழ்க்கை, அவர்களுக்கு மட்டுமல்லாது அவர்களைச் சுற்றியிருந்தவர்களுக்கும் சமுதாயத்திற்கும் பயனுள்ளதாகவும், நல்லதொரு எடுத்துக்காட்டாகவும் விளங்கியது.

**''நெஞ்சங்கள் கலந்தது.''**